
டாக்டர் ஜாகிர் உசைன்

குர்ஷித் ஆலம் கான்
பி. ஷேக் அலி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

டாக்டர் ஜாகிர் உசைன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

டாக்டர் ஜாகிர் உசைன்

ஆங்கிலத்தில் :

குர்ஷித் ஆலம் கான்
பி. ஷேக் அலி

தமிழில் :

த. சித்தார்த்தன்

சாகித்திய அக்காதெமி

Dr. Zakir Husain - Tamil translation by Tha. Siddharthan of Khurshed Alam Khan's and B. Sheik Ali's monograph in English, Sahitya Akademi, New Delhi 1998 Rs. 25

முதல் வெளியீடு : 1998

ISBN - 81-260-0579-3

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
ரவீந்தர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி - 110 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி - 110 001.
109, ஜே.ஸி.சாலை, பெங்களூர் - 560 002.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பார் சாலை, கல்கத்தா - 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் - 400 014.

விலை ரூ. 25.

அச்சிட்டோர் : Gee Bee Graphics, Chennai - 21.

பொருளடக்கம்

முகவுரை

ஜாகிர் உசைனின் ஒருங்கிணைந்த ஆளுமை, நேர்த்திமிக்க சால்பின் பன்முக ஆர்வங்களைத் தன்னுள்ளாக உட்செரித்துக்கொண்டு அமைந்தது. இந்திய மறுமலர்ச்சி, இந்திய தேசியம் இவற்றின் ஒரு குழந்தையான அவர் சீர்த்திமிக்க கல்வியாளராகவும், மனிதநல நாட்டம் உடையவராகவும் இருந்தார். அதே சமயம், இலக்கியக் கலையின் வழிகாட்டியாகவும்கூட அவர் இருந்தரரென்பதைப் புறக்கணித்து விட முடியாது. இலக்கியப் படைப்புகள் என்று திட்டமாக வரையறுத்துக் கூறக்கூடிய படைப்புகளை அவர் படைத்திராவிடினும், மானுட அனுபவத்தின் முழுவீச்சையும் உள்ளடக்கிய அவரது எழுத்துக்கள், இலக்கியக் கைத்திறத்தின் புதிய போக்கு ஒன்றின் வேகத்தைத் தூண்டுபவராக அவரைக் காட்டும்.

தலைசிறந்த இலக்கியங்களில் காணலாகும் மனிதனின் மென்மை உணர்ச்சி, மனக்கிளர்ச்சி, உணர்வுவேகம், மகிழ்ச்சி, இரக்கப்பண்பு, இலட்சியம், குறைபாடுகள் போன்ற அனைத்து வெளிப்பாடுகளும் ஜாகிர்சாகிப்பின் படைப்புகளிலும் ஒரே ஒரு வேறுபாட்டுடன் பிரதிபலிக்கின்றன. மனிதனை சிறந்தவனாக்கும் உளக்குறிப்போடு அவருக்கே உரித்தான மதிப்பீட்டு முறைகளின் ஊடே இவையனைத்தும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. இலக்கியம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்புதானே! வாழ்வின் ஆதாரக்கூறுகளில் ஜாகிர்சாகிப் முழுவதுமாகத் தோய்ந்திருந்த நிலையில் அவரது எண்ணம், சொல் எழுத்து அனைத்திலும் தவிர்க்கவியலாத பிரதிபலிப்பினை அவ்வாதாரக்கூறு ஏற்படுத்தவே செய்யும்.

வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள இந்த உள்ளார்ந்த பிணைப்பும், தனது அறிவாராய்ச்சிகள் அனைத்திலும் எல்லா நோக்கிலும் மனிதனை முதன்மை அக்கறையாகக் கொள்வதற்கு அவருக்கிருந்த முழுமையான ஈடுபாடும் நம் தேசத்தின் இலக்கியச்சிற்பிகள் மத்தியில் இடம்பெறுவதற்கும் நிச்சயம் அவரைத் தகுதியுடைவராக்கும். மேலும் அவருடைய கட்டுரைகள், உரைகள், பேருரைகள், நூல்கள். இவையன்றி மிகப்பலவான ஆய்வுப் பொருள்களில் அமைந்த அவரது எழுத்துக்கள் தம்மளவில், அவைகளுக்கிருக்கும் உரிமை வகையில் - நயமிக்க அழகுடைய மாணிக்கங்கள். அவை கவிதையின் செயலைப் போல மக்களின் மனதைத் தொட்டு எழுச்சியூட்டி இயங்கச் செய்து களிப்பூட்டிக் கற்பிக்கின்றன. ஆதலின், அவருடைய முக்கியமான பணிகளைப் பற்றிய பண்போவியத்தை வழங்கும் இந்த எளிய முயற்சி, அவருடைய நினைவிற்கு, இந்த தேசத்தின் இலக்கியப் படைப்பாளிகள் தம் நன்றிக் கரங்களால் வழங்கும் ஒரு பூங்கொத்தாக ஒரு வேளை மதிக்கப்படலாம்.

தன்னலவேட்டையும் தற்பெருக்கீடும் மனிதனின் குறிக்கோளாதல் கூடாது. தொண்டும் தியாகமுமே குறிக்கோளாக வேண்டும். போதுமான உறக்கம் கல்லறையில் காத்திருக்கிறது என்பதால் மக்கள் எழுந்துநின்று செயல்படத் தூண்டுவார் ஜாகிர்சாகிப்" ஒரு எதிரியின் குற்றங்குறை தெரிவிப்புகளுடன் உழைப்பாளது தன்மீது தானே தீர்ப்பளித்துக்கொள்ள அமர்கிறது. இந்த சோதனையை வெல்லும்போது இணையில்லாத விஞ்ச முடியாத ஒரு மகிழ்ச்சியை அது விளைவிக்கிறது. உழைப்பே வழிபாடு" என்று நமக்கு அவர் நினைவூட்டுவார்.

மனிதநலம் எனும் ஆய்வுப் பொருளைப்பற்றி நாம் ஒரு சிறிது சிந்திப்போம். குறிப்பிட்ட சில மதிப்பீடுகளை அது குறிக்கிறது. அவை மனித மேன்மையை வற்புறுத்துதல், பொது குறிக்கோள் நிலையான உலகளாவிய சகோதரத்துவ உளப்பாடு, மனிதனின் சுதந்திரமான வளர்ச்சிக்குரிய உரிமைகளின் அறிந்தேற்பு, அவனது உழைப்பினை மதித்தல், நம்பிக்கை வலிமை, அறிவாற்றல், மனிதனைக்காட்டிலும் பெரியது எதுவுமில்லை என்பதைப் புரிந்து கொள்ளுதல் ஆகியவை அவை. மனித குலம் முழுவதும் ஒரு பெரிய குடும்பம் எனும் நன்னெறியில் வாழ்கின்ற பரந்த எண்ணமே மனித நலத்தின் அடிப்படையாக இருக்கிறது. உலகின் அனைத்துப்பெரிய மதங்களின் சாராம்சமாக அது இருக்கிறது. அனைத்து அரும் தொண்டர்கள், சாதுக்கள், இஸ்லாமிய மறைமெய்ஞானியரின் உயிர்த்தத்துவம் அது, அனைத்து சிந்தனையாளர்கள், தத்துவவியலார், சீர்திருத்தவாதிகளின் போதனையும் அதுவாகவே உள்ளது. மரபு முறைமை, அடிப்படைவாதம் இவற்றிலிருந்து உலகளாவிய கோட்பாடு, மதச்சார்பின்மை இவற்றை நோக்கிய புடைபெயர்ச்சியாக அது இருக்கிறது ஒவ்வொரு பண்பாட்டிலுமுள்ள மேன்மையான கூறுகளை சேர்த்து இணைப்பதற்கான ஒரு முயற்சியாகவும் அது விளங்குகிறது. மனிதனின் சமூகவியல் நோக்கம், மனதின் தத்துவ சாராம்சம், வாழ்வின் உடல்தேவைகளின் இன்றியமையாமை, மதி நுட்பமுடையோரின் அறிவுத்திறம் நோக்கிய உந்தவா, மேலும் மனிதர்களின் ஒழுக்கத் தத்துவம், நெறிமுறை ஆன்மீகப்பிழிவு இவை ஒரு உயர்ந்த சமுதாயத்தை காணும் நம்பிக்கை எனும் மனிதனின் உருக்கு குகையில் கடைந்தெடுக்கப்படும்போது விளைவதுவே மனிதநலம். மனிதநல மண்டலத்துள் இந்தியாவிழிப்பும் கவனமும் கொள்ளவேண்டும் என்று ஜாகிர்சாகிப் விண்ணப்பித்துக் கொண்டார்.

அவரது மனிதநலம் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டுத்தோன்றியது. மனிதனின் சமூகவியல் நோக்கத்தில், ஆர்வ செயற்களத்திற்கு உரியதாய் இருப்பதுபோல நமது சமூகத்திலுள்ள நேர்மையற்ற செயல்களை நீக்க அவர் விரும்பினார். நாட்டில் அறிவு உழைப்பு, உடலுழைப்பு இரண்டுக்கும்

இந்தப் படைப்பின் தோற்றம் சாகித்திய அக்காதெமியின் முயற்சிக்குப் பொதுவாகவும், அதன் செயலாளர் பேராசிரியர் இந்திரநாத் சௌத்ரிக்குக் குறிப்பாகவும் கடமைப்பட்டது.

ஆகவே, ஜாகிர்சாகிப் எனும் ரோஜாவின் நறுமணத்தை நினைவு கூர்வதற்கு சாகித்திய அக்காதெமி மேற்கொண்ட இந்த முயற்சிக்கு இதன் ஆசிரியர்கள் தங்களது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கோவா

14 திசம்பர் 1990

குர்ஷித் ஆலம் கான்

பி. ஷேக் அலி

1. ஓர் ஊக்கம் மிகுந்த வாழ்க்கை

ஜாகிர் உசைன் உத்திரபிரதேசத்தில் பரூக்காபாத் மாவட்டத்திலுள்ள குவைம்கஞ்ஜ் எனும் சிறுநகரில் வாழ்ந்து கொண்டிருந்த சிறப்புமிக்க ஆப்ரிடி பதன்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் ஃபிதா ஹுசைன் ஹைதராபாத்திற்கு வந்து வழக்குரைஞர் தொழிலை வெற்றிகரமாக நடத்தி வந்தார். இவரது ஏழு குழந்தைகளில் ஜாகிர்உசைன் மூன்றாவது மகன் ஆவார். 1897 ஆம் ஆண்டு பிப்ரவரி எட்டாம்நாள் பிறந்த ஜாகிர்உசைன் மிக மென்மையாகவும், கவனத்துடனும், மேல்தட்டு வர்க்க இஸ்லாமிய குடும்ப பாரம்பரிய வழிமுறைப்படியும் வளர்க்கப்பட்டார். இவருக்கு ஆங்கிலம் கற்பிக்க ஒரு ஆசிரியரையும் நியமித்திருந்தனர். அவரது தந்தையார் ஃபிதாஹுசைன் நெடுநாள் வாழவில்லை. தனது 39வது வயதிலேயே 1907 ஆம் ஆண்டில் அவர் இறந்துவிட்டார். இதன்பிறகு தங்கள் மூதாதையரின் நகரமான குவைம்கஞ்ஜுக்கே அக்குடும்பம் இடம்பெயர நேரிட்டது. ஈட்டாவில் இருந்த பெயர்பெற்ற இஸ்லாமிய உறைவிடப் பள்ளிக்கு அவர் அனுப்பப்பட்டார். அங்கு அப்பள்ளியின் தலைமையாசிரியர் மௌல்வி அல்டாஃப் உசைனிடமிருந்து ஜாகிர் உசைன் பெற்ற பயிற்சி அவரது பிற்காலச் சாதனைகள் அனைத்திற்கும் வலுவான அடித்தளமாக அமைந்தது. தன்னுடைய பள்ளித் தலைமை ஆசிரியரும், மனத்திட்பமும் ஆற்றலும் உறுதியுமிக்கப் பெண்மணியான தனது தாயாரும் தனது முயற்சிகளை ஊக்குவித்து மாறுதல் உண்டாக்கியவர்கள் என்று ஜாகிர்சாகிப் ஒப்புக் கொண்டிருக்கிறார். துரதிருஷ்டவசமாக இவரது பதினான்காம் வயதிலேயே, அப்போது பயங்கரமாகப் பரவிய பிளேக் கொள்ளை நோயினால் 1911 ஆம் ஆண்டில் தாயாரும் இறந்துவிட்டார்.

ஜாகிர் உசைன் ஈட்டாவாவில் ஒரு கெட்டிக்கார குழந்தையாக உருவாகிவந்தார். 1907 முதல் 1913 வரை அங்கிருந்த ஆறு ஆண்டுகள் அவருக்குப் பயன்மிக்கனவாக இருந்தன. அவரது ஆசிரியர்கள், இவரது அறிவாற்றல், நேர்மை, கடும் உழைப்பு இவற்றால் பெரிதும் கவரப்பட்டனர். மேன்மையின் அறிகுறிகளை இவரிடம் கண்டுகொண்ட தலைமையாசிரியர் இவர்மீது வழக்கத்திற்கு அதிகமான கவனம் செலுத்தினார். அது பால்கன் போர்கள் நடந்து கொண்டிருந்த தருணம். துருக்கிநாடு மிகுந்த அலைக்கழிப்புக்கு ஆளாகி நின்றது. அந்த இளம்வயதிலும் ஜாகிர் உசைனின் மனிதநேய உணர்வு போர்நிதி வசூலிக்கவும், விடுதியில் இருந்தவர்களை புலால் உணவைக் கைவிடத்தூண்டி அதனால் சேர்ந்த பணத்தை துருக்கியர்களுக்கு அனுப்பி வைக்கவும் செய்தது. ஜாகிர் உசைனின் இளமைப் பருவத்தில் அவரது குணநலன்களை வடிவமைப்பதில்

ஹாசன்ஷா எனும் சூபி முனிவர் மிகப்பெரிய பங்காற்றிய மற்றொருவர். குடும்ப நண்பராக இருந்து ஜாகிர் உசைனின் ஆன்மீக போதகராக மாறிய இவரிடமிருந்து மதங்களிடையே இன்றியமையாது தேவைப்படும் ஒற்றுமை, மனிதகுலத்தை நேசித்தல், புத்தகங்களை விரும்பும் தணியாப் பேரார்வம் இவையனைத்தையும் கற்றுக்கொண்டார். ஹாசன்ஷா அனைத்து மதங்களையும் மதிக்கக் கற்றுக்கொண்டது கடுமையான வழி ஒன்றினால். நெற்றியில் திலகம் அணிந்திருந்த ஒரு இந்துவிடம் இது எதற்கு என்று வம்புபேசியதற்காக இவரது ஆன்மீக குருவான ஷாதாலிப் ஹுசைன் இவரை காஷ்மீரத்திலிருந்து இராமேசுவரம் வரை நடைப்பயணம் செய்ய வைத்தார்.

ஜாகிர் உசைன் கல்லூரிப்படிப்பிற்காக ஈட்டாவாவிலிருந்து அலிகருக்குச் சென்றார். அவருடைய வாழ்வின் ஒரு புதிய அத்தியாயம் அலிகரில் தொடங்கியது. தனது திறமைகளை மலர்விக்கும் பரந்தகளத்தினைப் பெற்றார். படிப்பில் மேம்பட்ட தகைமைபெற்று பி.ஏ வகுப்பில் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் முதலிடம் பெற்றார். மாணவர் அமைப்புகளில் நடைபெற்ற விவாதங்கள் அனைத்திலும் விஞ்சமுடியாத பேச்சாளராக அவர் வெளிப்பட்டார். சமூக வாழ்வில் பலரும் அறிந்த ஒரு நாயகனைப் போல இருந்தார். அவரது கூர்த்த மதி, நகைச்சுவை உணர்வு, தோழமைப்பண்பு, முயற்சிகள் ஒவ்வொன்றிலும் காட்டிய ஆர்வம் இவை மாணவருலகத்தில் அவரை ஒரு புகழ்மிக்கவராக ஆக்கின. ஆயினும், அவர் தேவையற்ற செய்கைகளில் தனது நேரத்தை வீணடித்ததில்லை. நூல்களைப் படிப்பதில் அவருக்கிருந்த பெருவேட்கை பொதுஅறிவில் ஒரு பலமான பிடிமானத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. உரையாடலில் வல்லுநராகவும் சிறந்த வாதத்திறமை உடையவராகவும் இருந்தது, இவரது திறமைகள் மேலும் கூர்மைப்பட்டு எண்ணங்களை ஆற்றலோடு வெளிப்படுத்த உதவிற்று. மனித வாழ்வின் சமூகம், அரசியல், மதம், பண்பாடு போன்ற எந்தக் கூட்டிணைப்பிலும் அமிழக்கூடிய ஆவலுடன் முனைப்பார்வம் கொண்ட ஆற்றலும் ஊக்கமும் மிக்க மனிதராக அவர் இருந்தார். இந்தத் தருணத்தில்தான், இத்தகைய நோக்குகளைப்பற்றி சிந்திக்கவும் எழுதவும் தொடங்கி தனது முயற்சிகளுக்காக பற்பல பாராட்டுகளையும், பரிசுகளையும் வென்றார். பிளாட்டோவின் குடியரசு எனும் நூலை உருது மொழியில் பெயர்த்தெழுத வேண்டும் என்று அலிகரில் யாருமே நினைத்திராத வேளையில் மிகக்குறுகிய காலத்தில் அச்செயலைச் செய்தார். அலிகர் பருவவெளியீட்டில் இவரளவுக்கு எழுதிக் குவித்தவர் எவருமில்லை. அனைத்திற்கும் மேலாக, "துறக்கவாழ்வு அல்லது வேடிக்கைப்பொருள்" என்ற தலைப்பில் பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலம் முஸ்லீம்கள் பயன்பெறமுடியும் என்றிருந்த மாயையை

நிர்மூலமாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்கக் கட்டுரையை எழுதும் நெஞ்சுரம் யாருக்கும் அப்போது இருந்திருக்கவில்லை. அன்றியும், மாணவர் தலைவராகி, அலிகர் கல்லூரியை பிரிட்டிசாரின் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒரு பகுதியாகச் செய்துவிடாமல் அதனை ஒரு தேசியக்கல்வி மையமாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதில் அவர் தேசியவாதிகளுடன் இணைந்தார்.

சுதந்திரப் போரிலும், காந்திஜியுடனும், ஒரு பொது ஏதுவிற்காக முன்வந்து இந்திய தேசிய காங்கிரசுடன் செயல்பட்ட மௌலானா முகமதலி, உறக்கிம் அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி போன்ற கிலாபத் இயக்கத் தலைவர்களுடனும் இணைவதில் ஜாகிர்சாகிப் முன்னணியில் இருந்தார். இந்த உடனிணைவு தந்த முதற்பயன் 1920 ஆம் ஆண்டு அக்டோபர் 29ஆம் நாள் நிறுவப்பட்ட ஜாமியா மிலியாவாகும். ஜாமியாவை உருவாக்க எடுத்துக் கொண்ட முயற்சி ஜாகிர் சாகிப்பின் உயிர் இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டுவிட்டது. ஜாமியாவை ஒரு தேசியக்கல்விமையமாக உருவாக்குவதற்காக தனது வாழ்வின் முக்கியமான காலத்தின் கணிசமான பகுதியை அர்ப்பணித்துவிட்டார். அது ஒன்றும் அவ்வளவு எளிய காரியமாக இருக்கவில்லை. அதனை வளர்த்தெடுப்பதற்கு தன்னிடமிருந்த அனைத்தையும் தியாகம் செய்யவும், துன்புறவும் நேரிட்டது. அவரது இனத்தினரே இதற்கு எதிராக இருந்தனர். அந்நாளைய அரசும் எதிராக இருந்தது. எங்கிருந்துமே ஆதரவு கிட்டவில்லையே என்ற எண்ணத்தில் ஜாமியாவை மூடிவிடவும் ஒரு தருணத்தில் முடிவு எடுக்கப்பட்டது. துணிவோடு தொடர்ந்த இவரது முயற்சியும் அர்ப்பணிப்புமே ஜாமியாவை அத்தகைய சூழலிலிருந்து காப்பாற்றிற்று. ஜாமியாவை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கவும், அதனை வளர்த்தெடுக்கவும் அவர் போராடிய விதம் நமது தேசிய இயக்க வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய அத்தியாயமாக என்றென்றும் இருக்கும்.

1920 அக்டோபர் முதல் 1925 மே வரை முதல் மூன்றரை ஆண்டுகள் அலிகர் கல்லூரிக்கு ஒரு போட்டி மையமாகவே ஜாமியா செயல்பட்டு வந்தது. ஜாமியாவில் இரண்டாண்டுகள் ஆசிரியப் பணியாற்றிய பின்னர், 1922 செப்டம்பரில் ஜாகிர்சாகிப் மேற்படிப்பிற்காக ஜெர்மனி சென்றார். பொருளாதாரத்தில் பிஎச்.டி பட்டம் பெறுவதற்காக அங்கு சொம்பர்ட் எனும் புகழ்மிக்கப் பேராசிரியரிடம் சேர்ந்தார். ஜெர்மனி, அவரது வாழ்க்கையில் மற்றுமொரு திருப்புமுனையாகும். ஐரோப்பிய நேர்த்திகள் அவர் கண்களைத் திறந்தன. ஜெர்மானியர்கள் கடும் உழைப்பினால் காழ்ப்பேறிய கைகளைக் கொண்டவர்களாக இருந்தது கடின உழைப்பை இவரது உடலணுவிலும் சிறிது சிறிதாக ஊட்டியது. ஜெர்மானியரின் முழுநிறை தீர்வும், திட்பநுட்பமும் நிறை நிலையை அடைந்திருந்தன. சிறந்த

வற்றைத்தவிர வேறெதிலும் எப்போதும் நிறைவுகொள்ளாத நிலையை இவை அவருக்குக் கற்றுத்தந்தன. ஜெர்மானியரின் மதிநுட்பம் அறிவுத்துறைகள் அனைத்திலும் அவர்களை உச்சநிலைக்கு உயர்த்தியது. அறிவு தாகத்தை ஜாகிர்சாகிப்பின் தீராப்பசியாக ஆக்கியதும் இதுவே. ஜெர்மானிய இசை, பண்பாடு, கருத்துநுட்பம் என்பன இவர் மனதில் ஆழப்பதிந்து அழகு, இசை, ஓவியம், நுண்கலைகளில் ஆர்வமிக்கவராக இவரை மாற்றின. இவையனைத்திற்கும் மேலாக கல்வித் தொழில்நுட்பம், உயர்சிந்தனை, தத்துவம், மதம், நன்னெறி இலக்கியம், புது கண்டுபிடிப்புகள், புதியன படைக்கும் படைப்புத்திறன் என்பன வாழ்நாள் முழுதும் ஜெர்மானிய ஆர்வலராக இருக்குமளவுக்கு அவரை மிகவும் கவர்ந்திழுத்திருந்தன. ஜெர்மானியரின் தன்னுறுதிகொண்ட நோக்குகளின் பெரும்பகுதியை –அவர்களின் கடும்உழைப்பு, நேர்மை, விடாமுயற்சி, வளஆதாரம், அறிவை ஆற்றலாக மாற்றும் திறம் போன்றவற்றை– தன்வயமாக்க அவர் முயன்றார். கல்விமுறையை ஒழுங்கமைத்தது, தங்களது பண்பாட்டு ஒழுக்க உயர்நிலைப் பண்புகளை வாழ்வின் அங்கமாக்கிக் கொண்டது என்ற இரு நோக்குகளில் ஜெர்மனியின் மேம்பாட்டை அவர் பாராட்டினார். பிற்காலத்தில் தனது வாழ்வை அவர் அர்ப்பணித்துக்கொண்டது இவ்விரு நோக்கங்களுக்காகவே.

ஜெர்மனியிலிருந்து திரும்பிவந்த போது ஜாமியா சீர்குலைந்திருப்பதை அவர் கண்டார். அவரது ஆற்றலின் ஒவ்வொரு துளியும், ஜெர்மனியில் அவர்பெற்ற அனைத்தறிவும், கைத்திறமும் அதற்கு உயிர்ச்சாயல் வழங்கத் தேவைப்பட்டன. சமாளித்து வெற்றிகாணவியலாத ஒரு செயலாக தொடக்கத்தில் அது தோன்றிற்று. ஆனால் அவரது பொறுமை, விடாமுயற்சி, நேர்மை, தொண்டு, அர்ப்பணிப்புணர்வு ஆகியன இறுதியில் பயன் நல்கின. ஜாமியா நிலைநிறுத்தப்பட்டது. காந்திஜியின் வார்தா அடிப்படைக்கல்வித் திட்டத்தில் ஜாகிர்சாகிப் உடனிருந்து உழைத்தார். ஜாகிர் உசைனின் கல்விபற்றிய அறிக்கையை தேசம் ஏற்றுக்கொண்டு உண்மையாக அதை செயல்படுத்தி இருந்தால், இன்றைய கல்விச் சிக்கல்களில் பலவற்றை எளிதில் நாம் தீர்த்திருக்கமுடியும்.

இந்தியா விடுதலை பெற்றபோது, தனக்குத் தானே சுமத்திக் கொண்ட இடர்ப்பாடுகள் சிலவற்றை நீக்குவதற்கு அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்திற்கு இவரது உதவி தேவைப்பட்டது. புலமை உலகில் அதன் தலையாய இடத்தைத் திரும்பவும் மீட்டுக்கொணர தனது அபரிமிதமான, சிறந்த உழைப்பை அவர் நல்கினார். இன்னும் ஏராளமாகப்பாடுபட அவர் விரும்பியிருந்தார். ஆனால், அவரது உண்மையான முயற்சிகளை ஊழியர்களில் ஒரு பிரிவினர் போற்றாத நிலை இருந்ததைக் கண்ணுற்று, எட்டு ஆண்டுகள் கடுமையாக உழைத்த பிறகு

விலகிக் கொண்டார். நாடு அவரை பீகார் மாநில ஆளுநராகவும், பிறகு இந்தியாவின் துணைக்குடியரசுத் தலைவராகவும் இறுதியாக குடியரசுத் தலைவராகவும் உயர்த்திற்று. எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அதில் அவரது நேர்த்தி, ஆழமான மனித நேயச்சுவடு, சீரிய இரக்கப்பண்பு, கருணை, நற்குணம் ஆகியவற்றின் அழிக்கவியலாத சுவடுகளைக் காணமுடியும். புது மனப்பான்மை, புதிய மதிப்பீடுகள் இவற்றின் பாதை கண்டவராகவும், புதிய மனித நலம், தாராள மனப்பாங்கு இவற்றின் தூதுவராகவும் இவர் இருந்தார். 1969 மே 3 ஆம் நாள் தேசப்பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே "நான் இன்னமும் பிறவாத ஒரு தோட்டத்துக்குயில்" என்று தனது கல்லறை வாசகத்தை ஒரு துண்டுச்சீட்டில் எழுதி வைத்துவிட்டு இவ்வுலக வாழ்வை அவர் நீத்தார்.

2. இலக்கிய நாட்டம்

ஜாகிர்சாகிப் மிக உயர்ந்த புலமையாளர். அறிவுத்துறைகள் பலவற்றோடும் தொடர்புடையது அவரது புலமை. இலக்கியமும் கூட அதன் கருத்தெல்லைக்குள் வந்தது. அவர் மனித மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இலக்கியமும் பெரும்பகுதி இதே நோக்கத்தோடு சார்புடையதாக இருப்பதால் அவர் தனது தகுதியின் அடிப்படையில் இலக்கியவாணர் எனும் இடத்தைப் பெற்றார். தனது பல்துறை அறிவெனும் மூலதனத்தால் இவ்வறிவுத் துறையை வளப்படுத்தியமையால் இத்துறைக்கு அவரது பங்களிப்பு தனிச் சிறப்பு வாய்ந்ததாயிற்று. ஒரு சிந்தனையாளராக, தத்துவ வியலாராக, கல்வியாளராக, தேசியவாதியாக, சீர்திருத்தக் காரராக, மனிதநலநாட்டங் கொண்டவராக, அரசியல் மேதையாக அவர் ஏராளமாக சிந்திக்கவும், பேசவும், எழுதவும் வேண்டியிருந்தது. ஆழமுடையனவாக வெளிப்படும் சிந்தனைகளும், அவருக்கே உரித்தான ஈடிணையற்ற நடையழகும், அழகான வடிவம் பெற்று அவை பொலியும் நிலையும், அறிவுச் செல்வத்திற்கு மட்டுமின்றி இலக்கியச் செல்வத்திற்கும் செறிவூட்டியுள்ளது. இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு. வாழ்க்கை ஜாகிர் சாகிப்பின் அக்கறைக்குரிய உட்கிடைப்பொருள், மனித அனுபவத்தின் முழுச்சுரவட்டத்தையும் உள்ளடக்கி மனிதனை ஆய்வின் மையமென அவர் ஆக்கிக் கொண்டார். சில வேளைகளில், மனித வாழ்க்கைக்கு அப்பாலும் சென்று தாவரங்கள், கற்களைப்பற்றியும் கூட ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார் அவர். தனது எண்ணங்கள் அனைத்தையும் மறுகட்டமைப்பு செய்து புலமைசான்றவகையில் எளிமையாக ஆற்றல் மிக்கதாக, தெளிவுடைய்தாக, மனங்கொள்ளத்தக்கவகையில் அவர் வெளிப்படுத்தும் போது, அந்த வெளிப்பாடு அழகுமிக்க இலக்கியக் கூறெனவே இலங்குகின்றது.

புதியன படைக்கும் மனிதப் பண்பாட்டு நோக்கே இலக்கியம். மனித வாழ்விதியின் சாரமும், அடிப்படையுமே பண்பாடாகும். பண்பாடுச்சரக்கு ஜாகிர்சாகிப் இலக்கியத்தில் அறிமுகப்படுத்திய புதிய கருத்துப்படிவம். மனிதனின் கற்பனைத்திறத்தில் பயனுள்ள அனைத்தையும் தொடுகிற கவர்ச்சிமிக்க களம் இது. மனிதனின் கலை, கட்டடப்பாங்கு, மொழி, மதம், தத்துவம், நடத்தைநியதி, ஒழுகலாறுகள், பற்றுறுதி, நம்பிக்கை, சமூக உயிருருவாக மனிதன் முயன்றுபெற்ற பிற செயல் வல்லமைகள் இவையாவும் இணைந்த ஒரு கூட்டுத்தொகையே பண்பாடு. இந்தப் பண்பாட்டைக் கல்வி மேம்படுத்துகிறது. இலக்கியமும் இதனுடன் செயல்தொடர்பு கொண்டுள்ளது. ஜாகிர்சாகிப் இவை இரண்டிலுமே ஆர்வம் கொண்டவராக இருந்து பண்பாட்டு மதிப்பீடுகளை மேம்படுத்துவதிலும்,

பாதுகாப்பதிலும், தேர்வுசெய்வதிலும் பரப்புவதிலும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். அவரது முயற்சிகள் இலக்கிய உருவைப் பெற்றன. புனைகதை, நாடகம், நாவல், கதைகள், கவிதைகள் போன்ற மரபுவழியான இலக்கிய வடிவங்களிலிருந்து அவை வேறுபட்டிருக்கலாம். இருந்தபோதிலும், சொற்கள், நடை, இயல்பு நிலை, அழகு இவற்றின் முற்றமுழுதான இலக்கிய அளவையில் அவரது எழுத்துக்கள் மேலான தனித் தகுதியைப் பெறுகின்றன. உருது மொழியில் புதுவகை இலக்கியத்தைப் படைத்துச் சேர்த்தது இவரது முக்கியமான பங்களிப்பாக இருக்கிறது.

கல்வி எனும் கன்னி நிலத்தை அதன்பல்லுரு நோக்கில் ஜாகிர்சாகிப்பிற்கு முன்னர் யாருமே தொட்டது இல்லை. அவர் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் வைத்திருந்தார். அதுவே மக்கள் அனைவர்க்குமான கல்வி. வெவ்வேறு வகை நுட்பங்கள் அதற்குத் தேவைப்பட்டன. இலக்கியமோ மிகவும் ஆற்றல் வாய்ந்த ஒரு நுட்பமாக இருந்தது. அறியாமையை அகற்றுவதற்கென மக்களுக்கு அவர் செய்தியை எடுத்துக்கூற வேண்டியிருந்தது. இந்த அற்புதத்தை ஆற்றல் மிக்க இலக்கியக்கலை மட்டுமே நிகழ்த்த முடியும். ஆகையால் அவர் தனக்கே உரிய நுட்பமொன்றை உருவாக்கிக் கொண்டார். அவருடைய 'தலிம்–இ–குத்பத்' தைப் படிக்கும் எவரும் அது கொண்டிருக்கும் எண்ணக்குவியலுக்கும் அப்பாற்பட்ட இலக்கிய நேர்த்திகண்டு வியப்படைவார்கள். அவருடைய 'அபுகான் கி பக்ரி' யில் உள்ள குழந்தைகளுக்கான கதைகள் பதினைந்தையும் கண்ணோட்டம் விடும் எவரும் குழந்தை இலக்கியத்தின் தந்தை என அவரை அழைக்கத் தூண்டும் எண்ணத்தைத் தவிர்க்கவியலாது. உண்மையில், அவர் இத்துறையில் முன்னோடியாக இருந்தார். அவரது கதைகள் அனைத்தும் அநேகமாக நீதியுணர்த்தும் கற்பனைக் கதைகளே. 'பாயம்–இ–தாலிம்,' எனும் ஜாமியாவின் பருவ இதழுக்காக ஒரு புனை பெயரில் இவைகளை முதலில் அவர் எழுதினார். முடிவில் இக்கதைகள் தொகுப்பாக வெளியிடப்பட்டன. திரட்சியிலும், அளவிலும் அவரது எழுத்துக்கள் கணிசமான பரிமாணத்தை அடைந்திராவிடினும். வெற்றிகொள்ள முடியாத தரம் கொண்டவையாக அவை உள்ளன. தீராப் பெரு வேட்கையுடைய நூலார்வம் கொண்டவராக அவர் இருந்த பொழுதிலும், எழுத்தாளர் என்ற முறையில் அவருடைய படைப்புகள் குறைந்த அளவினவே, ஆனாலும் அவர் எழுதிய எதுவும் அவ்வக்களங்களில் முதன்மை பெறும் தகுதியுடையன.

அவரது செயலாற்றும் ஆர்வம், எழுதுவதில் நம்பிக்கை கொள்ளவில்லை. வினையாற்றுவதில் நம்பிக்கை வைத்திருந்தது. வினை தேவைப்படும் சிந்தனையும் பேச்சும் மெய்ம்மைக்கு மாற்றப்படும் போது

மெய்ந்நிகழ்ச்சியாகின்றன. அவற்றின் சிதறலே அவர் உருவாக்கிய இலக்கியங்களாக இருந்தன. ஆயினும் கூட, அவை குறிப்பிடத்தக்க உருவளவும், பரப்பெல்லையும் உடையவை. இலக்கியவாணர்களின் பட்டியலில் மேலான ஒரு இடத்தை அவருக்கென உறுதிசெய்திட அவை போதுமானவை. அவர் பெரும் பொறுப்புகளை வகித்தார். ஆலோசனை கூறுவதும், வழிகாட்டுவதும், உதவுவதும், எச்சரிப்பதும், தேசத்தை அதன் பல்வேறு வாழ்வியல் பாதைகளிலும் அழைத்துச் செல்வதும் அவரது சிறப்புரிமைகளாக இருந்தன. இது மக்களைச் சந்தித்துப்பேசும் அரிய வாய்ப் புகளை அவருக்கு பற்பல வேளைகளில் வழங்கியது. அவரது செறிவுமிக்க வாழ்க்கை அனுபவம், அறிவு, ஆழ்ந்தகன்ற நுண்கல்வியறிவுத்திறம், கூரறிவு, நகைச்சுவை அனைத்தும் அவரது ஒருங்கிணைந்த ஆளுமை எனும் ஆய்ந்து பார்க்கும் இயல்புடைய கண்ணறையில் கடைந்தெடுக்கப்பட்டு, அவரது வானொலி பேச்சுக்கள், பட்டமளிப்பு உரைகள், தலைமை உரைகள் போன்ற பலவற்றிலும் வெளிப்பாடு கண்டன. அவரது இலக்கிய ஆக்கங்களில் பெரும்பகுதியை இவை ஆட் கொண்டுள்ளன. நல்லவேளையாக, அத்தகைய உரைகளில் பெரும்பகுதி வெளிவந்துவிட்டது. அவை இந்த தேசத்தின் வளமிக்க பாரம்பரியத்தை எப்போதும் நினைவூட்டிய வண்ணம் இருக்கும்.

இலக்கிய ஆக்கங்களை மேம்படுத்தியதே அவரது இரண்டாவது பெரிய பங்களிப்பாகும். அவரது படைப்புகள் பற்பல தொகுதிகளைக் கொண்டிராத போதிலும், ஆழமான இலக்கியப் படைப்புப் பணிகளுக்கான அவரது அடிஎடுப்பும், செயல்நோக்கமும், திட்டமிடலும், படைப்பிலக்கியச் செயல்பாட்டில் ஆழமூழ்கி முத்தெடுக்க ஜாமியாவிலிருந்த புலமையாளர்களை ஒன்று படுத்தியதும் இலக்கிய மேம் பாட்டிற்கு அவரளித்த சிறப்புமிக்க கொடையாக என்றுமே நீடித்திருக்கும். நல்ல வேளையாக, அந்தக்காலத்தில் அவர் விதைத்த சின்னஞ்சிறு விதைகள் இன்றளவும்கூட சிறந்த பயன்களை நல்கி வருகின்றன. மக்தாப்–இ–ஜாமியா ஒரு பெரிய அமைப்பாக வளர்ந்து உருது இலக்கியத்திற்கு ஆக்கநலம் சேர்க்கும் ஆற்றல்மிக்கத் தன்னார்வ ஆதரவுப் பணியையும் நல்கி வருகிறது. நாடகங்கள், நாவல்கள், புனைகதைகள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள், கவிதைகள், சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வுகள் என எண்ணற்ற படைப்புகளை வெளிக்கொணர்ந்துள்ளது. ஜாமியா எந்தக்கருத்தினைப் பற்றிக்கொண்டு வளர்ந்ததோ அதே இலட்சியங்களை நிறைவேற்றும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு கலைக்கழகமாக அது இப்போது வளர்ச்சி பெற்றுள்ளது. புலமையாளர்களின் படைப்புப்பணியால் சமூகத்தைத் திருத்துவதாக, அறிவுச்சுரங்கத்தை வெளிப்படுத்தி மக்களின் சிந்தனையில் வியக்கத்தக்க

மறுமலர்ச்சியூட்டுவதாக, மக்கள் குழுக்களிடையே ஒத்துப்போகும் எல்லைகளை மிகுவித்து ஒருமைப்பாட்டை உருவாக்குவதாக, கீழைநாட்டு சிறந்த கூறுகளையும் மேலைநாட்டு உயர்ந்த நோக்குகளையும் கலப்பதினால் மனிதப்பண்பாட்டுக் கூட்டிணைவாக, உருது மொழியின் மூலம் இஸ்லாமியக் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்துவதாக அது இருந்தது. ஜாகிர் சாகிப்பின் பெருந்திட்டம் அவரால் மிகுந்த எச்சரிக்கையுடன் வளர்த்தெடுக்கப்பட்டு அவரது கூட்டாளிகளால் தளராது நீடித்திருக்கச் செய்யப்பட்டன. இந்தச்செயல் அளவிலேனும் அவரை அவர்கள் ஏமாற்றம் அடையச் செய்யாதிருந்தனர். அவர் தொடங்கிய நல்ல பணிகள் ஜாமியாவில் இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது உண்மையில் பெருமைப்படவேண்டிய ஒன்றாகும்.

ஜாகிர்சாகிப்பன் மூன்றாவது பெரிய பங்களிப்பு நூல்களைப்பயிலும் ஆர்வத்தை மக்களிடையே தூண்டிவிட்டதாகும். நூல்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால்தான் புத்தகத் தயாரிப்பில் சிறிதேனும் பொருளிருக்கும். படிக்கும் பழக்கத்தை வளர்ப்பதே மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் முதற்படியாகும். அந்தச் சிறப்பங்காடி நுகர்வோர்க்கே உரித்தானது. எனவே அவர் எழுதுகிறார்: புத்தகம் நவீன மனிதனின் வாழ்க்கைத் துணைவன். உண்மையில், அதி அற்புதமான ஒரு துணைவன். பிறர் பேசினாலின்றி அல்லது பார்த்தாலன்றி அதுவாகப் பேசுவதில்லை, பார்ப்பதுமில்லை. நீங்கள் அணுகுவீர்கள் என்று நெடிதே காத்திருக்கும். ஒருநாளின் இரவு, பகல் எந்நேரமும் தன்னை யார் நாடினாலும் அவர்களுக்கு உதவியருளவும், தன்னிடமிருக்கும் சிறந்தனவற்றை நல்குவதற்கும் அது தயாராகவே இருக்கும். புத்தகம் கற்பிக்கிறது அறிவுறுத்துகிறது, எழுச்சியூட்டுகிறது, கண்டிக்கிறது, கடிந்துரைக்கிறது. ஆனால் இவற்றில் போதுமான அளவை நீங்கள் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் உடனே அவற்றை நிறுத்திக் கொள்கிறது. தூண்டுதல்களால் ஒருவர் சிலதருணங்களில் அற்பமான வினாக்களை எழுப்பினாலும் அது ஒருபோதும் எரிச்சல் அடைவதில்லை. மெலிதாக நகைத்தவண்ணம் மூச்சை அடக்கிக் கொள்கிறது. இந்நிலையிலும் கூட புத்தகம் ஒரு அற்புதமான துணைவனே. கற்கவிரும்புவோர்க்கு ஒரு சிறந்த ஆசான் ஆகவும் துய்த்து மகிழ ஒப்பற்ற தோற்றுவாயாகவும் இருக்கிறது. ஜாகிர்சாகிப் எத்துணை வியத்தகு ஆசிரியராக இருந்தார் என்பதையும், ஈர்த்துப் பற்றும் எப்படிப்பட்ட இலக்கியங்களைப் படைத்தார் என்பதையும் இந்தக்கூற்று காட்டுகிறது. ஒவ்வொரு சொல்லும் இதயத்தின் அடிஆழம் வரைச்சென்று நூல்கள் பற்றியும், அவற்றை விரும்புவதுபற்றியும், படிப்பதுபற்றியும் அவற்றிலிருந்து படிப்பினை பெறுவதுபற்றியும் ஆர்வத்தைத்தூண்டுகிறது. புத்தகங்கள்

அறிவின் அரும் பொருட்களஞ்சியம், அறிவுதான் வாழ்க்கை, அறிவே தெய்வீகம் எனும் சிந்தனைக்கு எப்படிப்பட்ட ஒரு உளவியல் நுட்பத்தை, வலிமையை, ஆர்வத்தை அவர் பொதிய வைக்கிறார்!

மக்களைப் படிப்பதற்குத் தூண்டும் இந்த வேண்டுகோள் எந்த அளவுக்கு யாவும் அளாவியதாக, ஈர்த்துப்பற்றுவதாக ஆர்வ மூட்டுவதாக, ஆழமிக்கதாக இருக்கிறது. முழுப் பொருளுடையதாக, தீட்டிக்காட்டும் முறையில் யாவற்றையும் அளாவியதாக, வேண்டுகோளில் ஆற்றல்மிக்க தாக, இயல்பில் ஆர்வமூட்டுவதாக, நடையினில் ஈர்த்துப் பற்றுவதாக இருப்பதுதான் ஜாகிர்சாகிப்பின் எழுத்துக்களின் தனிப்பண்பாகும்.

நான்காவதாக, ஜாகிர்சாகிப் குறிப்பாக கவிதையையும், உருது, பாரசீகம், ஆங்கிலம், ஜெர்மன் இலக்கியங்களையும் நேசித்தார். உறாபி ஸ், சாடி, ருமி, ஜாமி, உர்பி, நிஜாமி, காலிப், மிர், இக்பால் அனைத்துமே இவரது கவனத்தைக் கவர்ந்தன. ஜாகிர் சாகிப்பின் ஆன்மீக, ஒழுக்க வலிமைக்கு மூலாதாரமான தோற்றுவாய் குர்ஆனும், பாரசிகக்கவிதைகளுமே என்று முஜீப் சாகிப் கூறுகிறார். பாயாஸ் எனும் தனது குறிப்புச்சுவடியில் தனக்குவப்பான கவிஞர்களின் நூற்றுக்கணக்கான கவிதைகளை அவர் எழுதிவைத்துள்ளார். அவற்றில் சிலவற்றை நினைவில் வைத்திருந்து தனது எழுத்துக்கள், பேச்சுக்களில் பொருத்தமாக எடுத்துரைத்தும் இருக்கிறார். அழகுணர்ச்சி, அறிவுத்திறச்சால்பு இவற்றின் அடையாளமாகக் கவிதையைக் கொண்டிருந்த ஒரு சமூகத்தில் அவர் வளர்க்கப்பட்டார். மனிதனின் பண்பட்ட சுவையை வளர்க்கும் ஒரு ஊடகமே கவிதை. மனிதனின் மதிநலம், அறிவு நுட்பம், அன்பு, உயர்ந்த மதிப்பீடுகளின் வரையரை இவற்றை வெளிப்படுத்தும் உணர்வு நுட்பமிக்க ஒரு சிந்தனைஊர்தி அது. அன்பின் நலம், அது அழகின் பிரதிபலிப்பு, எண்ணக்களஞ்சியம், உணர்ச்சிகளின் நீருற்று, சிந்தனைக்கு உணவு, மறைஞானியின் ஊர்தி, மதிநுட்பமுடையவரின் ஆபரணம். கற்பனைத்திறம் கொண்டோரின் எழுச்சிமிக்க வெளிப்பாடு, உணர்வுமென்மை உடையவர்களின் உருநிழல், உவகையூட்டி கற்பிப்பதற்காக நெஞ்சத்தைத் தொட்டசைத்து எழுச்சியூட்டுகிறது அது. இயல்பாகவே உணர்வு மென்மை தொண்ட ஜாகிர்சாகிப்பின் நெஞ்சம், சமயம், தத்துவம், அறிவியல் கோட்பாடுகள், ஒழுக்கப்பண்பு, அறிவு, விவேகம் எனும் அவரது ஆர்வத்துறைகளை உள்ளடக்கியிருந்த கவிதை ஊடகத்தின் மீது மிகுந்த பற்றுகொண்டி ருந்தது. ஒவ்வொரு இயக்கமும், குறிப்பிடத்தக்க ஒவ்வொரு நிகழ்வும் கவிதையை உருவாக்கியது. எந்தகவிஞரின் சிந்தனைகள், அவை கருக்கொண்ட அந்தக் கணத்து அகத்தூண்டுதலின் புதுமைகுன்றாது தக்க வைத்துள்ளனவோ அக்கவிஞர்களின் கவிதைகளையே அவர் பெரிதும் விரும்பினார். மறைஞானி சர்மத்தின் மேற்கோள் ஒன்றினை,

எழுத்து வனப்புமிக்க கைத்திறத்தவர் உஸ்தாத் அலி முகமதுகானைக் கொண்டு அழகாக எழுதிவைக்கச் செய்துள்ளார்.

சர்மத், சோர்வூட்டும் நின்துயரங்களைச் சுருக்கிக்கொள்
இருவழிகளே ஆங்குள்ளன, ஒன்றில்தான் நீ
சென்றாகவேண்டும்,
அவனது விருப்பத்திற்கு உன்னை முற்றமுழுக்க
ஒப்படைத்துவிடு
அல்லது, அவன் உனக்கு இல்பொருள், நண்பனுமில்லை
எதிரியுமில்லை எனச்சொல்லிவிடு [1]

அறிவை எப்படி அடைந்திடவேண்டும் என்ற தனது வினாவிற்கு விடைதந்த மெய்யியல் கவிஞர் ஜலாலுதீன் ருமியின் மீது ஜாகிர்சாகிப் மிகுந்த விருப்பமுடையவராக இருந்தார்.

எங்கெங்குமுள்ள தண்ணீருக்கான தாகப்பார்வை அறியும்
தண்ணீரும் கூட தாகம் கொண்ட
ஆர்வலரைத்தேடுகிறது
என்பதை
தண்ணீர் வேண்டுமெனக் கேட்காதே மாறாக தாகத்தை
அடைந்திடு
எல்லா திசைகளிலும் தண்ணீர் உடைப்பெடுத்து வரப்பெறுவாய்
நீ [2]

மேலும்,

அறிவு ஒரு நாகம், அதன் உடலைத் தட்டினால்

அது உனது நண்பன், அதன் இதயத்தைத் தட்டினால்.

இந்திய, பாரசீகக்கவிதைகளை விரிவாகப் பயின்ற ஜாகிர்சாகிப்பிற்கு அகத்தூண்டுதலின் மூலாதாரமாகக் கவிதை இருந்தது. தனது அகஆன்மாவைப் பலப்படுத்த கூடியனவற்றை கவிதைகளில் இருந்து அவர் பெற்றுக்கொண்டார்.

ஜாகிர்சாகிப் இந்திய தேசியத்தின் குழந்தையாக இருந்தார். நேர்மையான தலைவர்கள் பலரின் சிந்தனை வழிமுறையில் குழப்பங்களை உண்டாக்கிய பரபரப்பான ஒரு காலகட்டத்தில் அவர் வாழ்ந்தார். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி அறிவார்ந்த இஸ்லாமியர் மத்தியில் ஒரு புதிய விழிப்புநிலை உருவாகி, அவர்களுக்கு உடமையான பண்பாட்டில் பெருமை உணர்ச்சியைக் கிளறிவிட்டது. அவர்களின் இலக்கியங்களைப்

புத்துயிர் பெறச்செய்து, மேற்கத்திய மினுமினுக்கும் ஒளிவண்ணத் தோற்றத்திற்கு இச்சமூகம் இரையாகிவிடக்கூடாது என எச்சரிக்கை யூட்டியது. அக்பர் அலாபதியின் காரசாரமான வசைப்பாங்கு, ஷில்பி நோவாமணி வெளிக்கொணர்ந்த வரலாற்றுக் கருவூலங்கள், ஆன்மாவைக் கலங்கவைக்கும் உறாலியின் முசாதஸ், நாசிர் அகமதின் வயப்படுத்தும் நாவல்கள், முகமது உசேன் ஆசாத்தின் எழுதுகோலில் இருந்து பெருக்கெடுக்கும் மட்டுமீறிய கிளர்ச்சியூட்டும் எழுத்துமலர்கள், இக்பாலின் கவிதைகளில் உள்ள தேசிய உணர்ச்சியின் வேகம், உறம்தர்த், காம்ரேட் அல்உறிலால், அல்–பலாஹி ஆகியோரின் உணர்ச்சியைத் தூண்டும் பத்திரிகைக் கட்டுரைகள் (இவை அனைத்தையும் தீர எண்ணிப் பார்க்கவும், மதிப்பிடவும் செய்திருந்தார் ஜாகிர்சாகிப்) இவற்றை யாரேனும் பார்வையிட நேர்ந்தால் இவை வெள்ளையர்க்கு எதிரான முழுவேக இலக்கியப் போரென அறிவர்.

1920 மார்ச்சுக்கும் ஆகஸ்ட்டுக்கும் இடையில் ஏதோ ஒரு தருணத்தில் அவரால் எழுதப்பட்டு அந்த ஆண்டின் அலிகர் மலரில் வெளியிடப்பட்ட "நிலைபேறுடைமை அல்லது வேடிக்கைப்பொருள்" எனும் அரிய கட்டுரையில் ஜாகிர்சாகிப்பின் தேசிய ஆர்வ எழுச்சியின் உடனடி வினாவைக் காண முடிகிறது. வெள்ளையரின் நம்பிக்கைக் குரியவர்களாக இருந்தால் முஸ்லீம்கள் பயனடைய முடியும் எனும் அலிகர் கொள்கைக் குழாமின் மாயையைத் தகர்த்தெறியக்கூடிய ஆற்றல் மிக்க சிந்தனையை மிகுதியும் தூண்டும் வரலாற்று நிகழ்வுகள் குறித்த ஒரு கட்டுரை அது. இங்கு கவனிக்க வேண்டிய நுணுக்கம் அந்தக்கட்டுரையின் அரசியல் உட்பொருளல்ல, மாறாக, சம்பவங்களை அதன் சரியான இயல்புருத்தோற்றத்தில் வழங்கியிருக்கும் ஆற்றல் கொண்ட இலக்கியத்திறன், மனிதர்களையும் நிகழ்வுகளையும் கவனத்தை ஈர்க்கும் சக்தி உடையதாக வார்த்தைகளில் பகுத்தாயும் விதம், அந்த நேரத்து அரசியல் சிந்தனைகளில் தீவிரமான மாற்றத்தைக் கொணர்வதற்கு அவர் கையாண்ட திறமை மிக்க நுட்பம் என்பனவே கவனிக்கப் படவேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகளை அலிகர் பொய்யாகி விட்டது. குறுகிய எண்ணம் கொண்ட, சுயநலமிக்க, முதிர்ச்சியற்ற ஒருசில மனிதர்களின் விருப்பத்திற்கு மட்டுமே அது உழைத்தது என்பதை மக்கள் நம்பச்செய்வதற்கு தனது இலக்கியக் கலைத்திறனை ஒரு கவிஞரைப்போல் அவர் பயன்படுத்தினார். தேசிய மலர்ச்சிக்கான முக்கியமான ஒரு கருவியை அரசு எந்திரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டிய தொழில் நிலைப் பிரிவினரை உருவாக்கும் ஒரு கருவியாக மாற்றுவது மக்களின் வாழ்க்கையோடு விளையாடுவ தாகும் என்று வலிவுமிக்க காரணகாரிய விளக்கத்தோடு அவர் வாதாடினார். தனது 23வது வயதில் அவர் பெற்றிருந்த ஆங்கில மொழிப்புலமையும்,

இலக்கிய நேர்த்தியும் அனைவரையும் வியக்கச்செய்தன.

அலிகரில் மட்டுமின்றி ஈட்டாவாவிலும்கூட எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போதே ஆங்கிலத்தில் அவர் வாதிடுவார். ஹிமாயத்–இ–இஸ்லாம் அமைப்பு ஆண்டுக்கொருமுறை நடத்தும் விழாவில் 13 அல்லது 14 வயதே நிரம்பிய அவர் அனைவரின் பாராட்டையும் பெறுமளவுக்கு அவ்வளவு ஆற்றலோடு பேசுவார். அதே ஆண்டில் 1911 இல், "ஒரு மாணவனின் வாழ்க்கை" எனும் தலைப்பில் ஒரு உரையினை எழுதி மாணவர் சங்கத்தில் வாசித்தார். மாணவரை அதில் இப்படி வரையறுக்கிறார்."தற்போதைய தன்னுடைய தகுதியை வளர்த்துக் கொள்ள விரும்புவன் யாரோ, தன்னுடைய வினைத்திறத்தை எவ்வளவு இயலுமோ அவ்வளவுக்கு வளர்த்துக் கொள்ள நினைப்பவன் யாரோ, ஆயிரக்கணக்கான ஆண்டுகாலமாக நூற்றுக்கணக்கான மக்கள் பின்வருமரபுக்கென பாரம்பரியாக விட்டுச்சென்றுள்ள அறிவு மற்றும் சிந்தனைக் கருவூலங்களிலிருந்து நன்மையடைய விரும்புகிறவன் எவனோ, தனது நேரியசெயல் முறைக்கு வழிகாட்டப்பெறுவதற்காக, மேன்மையான செயல்பற்றிய அறிவுக்காக, தான் அறிந்திராத இந்த உலகில் தனக்கு உதவக்கூடிய விவேகம் மற்றும் விழுமிய சிந்தனைகளுக்காக தன்னால் பெற இயலக்கூடிய அனைத்தையும் பெறவிரும்புகிறவர் யாரோ அவனே மாணவன். தன்னால் எதுவும் முடியாது என்ற சிந்தனையை அவன் இதயத்திற்குள் நுழைய விடவே கூடாது. ஏனெனில், இதை அவன் அனுமதித்துவிட்டானாயின் அவனால் எதையுமே சாதிக்கமுடியாது. தைரியத்துடன் செயல்படுவதை அவன் தொடரவேண்டும். அதை அவன் செய்தானாயின் தனது பெருமுயற்சிகளில் வெகுநிச்சயமாக அவன் வெற்றிபெறுவான். கல்வியறிவற்ற சகோதரர்கள் மத்தியில் கல்வியை தழைக்கச்செய்ய வேண்டியது அவனது கடமை. கல்வியைப் பரப்புவதை தனக்கு கற்பிக்கப்படும் கல்வியின் ஒருபகுதியாகவே அவன் கருத வேண்டும். அப்படி அவன் கற்பிக்கப்படாவிட்டால் அவன் ஒரு மனிதனே அல்லன். இந்த உலகில் உருப்படியான எதனையும் அவன் செய்யவியலாது"[3]

மிக இளம் வயதிலேயே இத்தகு உயர்இலட்சியங்களை தன் முன்னர் அவர் நிலை நிறுத்தியிருந்தார் என்பது வியப்பூட்டுகிறது. அவரது உரைகளில் இருந்து வெளிப்படும் நன்மாணாக்கனைப்பற்றிய அளவையானது, பயிலக்கூடிய மாணவர் எவரையும் ஒரு பெரும் மனிதநலநாட்ட முடையவராக்கக்கூடிய ஒழுக்கநியதிகளையும், கொள்கைகளையும் உள்ளடக்கி விளங்குகிறது.

அவரது செயல்திறன்கள் வளர்வதற்கு தங்குதடையற்ற பரந்த செயலுரிமையை அலிகர் கல்லூரி அவருக்கு வழங்கிற்று. கல்லூரியில்

சேர்ந்த முதல்நாளே மதிய உணவுக்காக உணவறைக்குச் சென்ற போது அவரை அதிர்வடையச் செய்த நாகரிக வகையைக் கண்டார். அங்கு உணவு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்த மூத்த சட்டாம்பிள்ளையைப் பற்றி வருணித்து அவர் எழுதுகிறார். "அறையின் மையமாக நின்று கொண்டிருந்த நன்மகன் ஒருவரைக் கண்டேன். ஏதோ ஒரு உபாயத்தினால் அவரது தாடி மறைந்து விட்டிருப்பினும், உடலமைப்பிலும் மீசையைக் கத்தரித்து செம்மைப்படுத்தி இருப்பதிலும் மிக மிக மூத்தவராக அவர் தோன்றினார். விலை உயர்ந்த ஆங்கில அங்கி ஒன்றை அவர் அணிந்திருந்தார். சலவை செய்த மடிப்புத் தடம் எதுவும் அவரது உடையில் எங்குமே தென்படவில்லை. சட்டையையும், கழுத்துக் கச்சையின் அணிமுடிப்பையும், தனது அங்கிக்குப் பொருத்தமாக அணிந்து கொள்வதற்குத் தனிப்பட்ட அக்கறை எடுத்திருந்தார். தனது கால்சராயின் ஒரு பையில் ஒருகையை அழுந்தச்செருகி யிருந்தார். சிலைபோல நின்றிருந்த அவரது பார்வை அவர்முன் இருந்த ஏதோ ஒன்றின் மீது நிலைத்திருந்தது. இந்த பொம்மை தன்னுடைய புதையடிகளில் இருந்து டக்டக் என்ற ஒலியை எழுப்பிக் கொண்டு சில நொடிகளில் நடக்க ஆரம்பித்தது. டக்டக் எனும் ஒலியின் அதிர்வு அந்த அறை முழுவதும் பெருகிப்பரவியது. சில தப்படிகள் நடந்தபிறகு இந்தச்சிலை நின்ற நிலைக்கு வரும். பிறகு மீண்டும் கிளம்பும். போலிப் பெருமை, அறிவற்ற தன்மை, தனக்கெனத் தனித்தன்மை ஏதுமின்றி கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிற நிலை இவற்றின் கலவையாகப் படைக்கப்பட்ட பயிற்சியற்ற கற்றுக்குட்டி சிற்பியின் சிலையைப் போலவும், யாரோ ஒரு ஆங்கில தையற்காரர் மலிவான விலைக்கு அதை வாங்கி எந்திரமயமாக இயங்கக்கூடிய கருவியுடன் மரக்கால்களை அதற்குப் பொருத்தி சாவிகொடுத்தால் டக்டக் என்ற ஒலி யுடன் நடைபோடக்கூடிய சிலையாக ஆக்கியது போலவும் அது தோன்றியது". [4]

மேற்கத்திய பாணி செயல்வகைபற்றியும், பல்கலைக்கழகத்தில் கற்போரின் உடையலங்காரம் பற்றியும் அவர் குறிப்பிடும் வழக்கிலில்லாதிருந்த இந்த எண்ணப்பதிவு, அவரது தேசிய மனஉரத்திற்கும் வந்தேறிகளைப்போல நடந்து கொள்ள முயல்பவர்களை எந்த அளவுக்கு அவர் வெறுத்தார் என்பதின் பிரதிபலிப்பாகவும் இருக்கிறது. ஒரு காட்சியை இத்துணை உயிரோட்டமுள்ளதாக உருப்படுத்தி எழுதிக் காட்டக்கூடிய அவரது இலக்கியக்கலையழகிற்கு குறிப்பு காட்டுவதாகவும் இது அமைகிறது. பகட்டு ஏதுமின்றி தூய உருது மொழியில் அமைந்த இந்த பத்தியின் ஆற்றல் அடிமை மனப்பான்மை, தன்மதிப்பை இழத்தல், பண்பாட்டுச்சிதைவு, ஆகியன உச்சநிலை

அடைந்துவிட்டன எனும் சிந்தனையைத் தெரிவிப்பதில் பன்மடங்கு வலுக்கொண்டு இருக்கிறது.

1915ல் இண்டர்மீடியட் வகுப்பு மாணவராக இருக்கும்போதே, பேராசிரியர் பிரௌனின் கட்டுரை ஒன்றை அவர் மொழிபெயர்த்தார். அல்-நாசிர் எனும் லக்னோ பருவ இதழ் ஒன்றில் இது வெளியானது. 1917 ல் முஸ்லீம் கல்விபற்றி எழுதிய கட்டுரை அவருக்கு முதல் பரிசைப் பெற்றுத்தந்தது. அவரது எதிர்கால ஆர்வச்செயல்பாட்டின் முன் உணர்வாக இது இருந்தது. அவரது, பிளாட்டோவின் 'குடியரசு'மொழிபெயர்ப்பே மிக முக்கியமானது. ஒரு மாதத்திற்குள்ளாக அதன் நான்கு இயல்களை அவர் மொழிபெயர்த்துவிட்டார். உருது மொழியில் அப்படியொரு ஆட்சித்திறம் அவருக்கிருந்தது. அவரது நண்பர் ரஷீத் அகமது சித்திக் மூலபாடத்தைப் படிக்க உருது மொழியில் அதனைத் துல்லியமாக மொழிபெயர்த்துக் கொண்டே செல்வார் இவர். அவரது இன்னொரு நண்பர் மௌலானா சுகைல் கூறுவார்: "பிளாட்டோவுக்கு உருதுமொழி தெரிந்திருக்குமாயின், அவர் இதனையே தனதாக ஏற்றுக் கொண்டிருப்பார்." ஜாகிர்சாகிப், ரஷீத் சாகிப் இருவருமே புனை பெயரில் எழுதினார்கள். ஜாகிர் சாகிப் "ரிப்" என்ற பெயரிலும், ரஷீத் சாகிப் "பொஹிமயான்" என்ற பெயரிலும் எழுதுவர். ஜாகிர்சாகிப் எழுதியவை "உறங்கிக்கொண்டிருக்கும் வெறுமையிலிருந்து" என்ற தலைப்பின் கீழ் வெளியாயின. இவர்களது அடுத்த கட்டுரை என்னவாக இருக்கும் என்று அறிந்துகொள்ள மக்கள் ஆர்வம் காட்டும் அளவிற்கு இவ்விரு இளம் எழுத்தாளர்களும் அவ்வளவு புகழ் பெற்று விட்டனர். ஜாகிர் சாகிப்பின் எழுத்துக்கள் அரிய சொல்நயமும், நகைச்சுவையும் செறிந்ததாக சமூகமாற்றத்தைக் கொணர விரும்பும் உள்ளடக்க முடையதாக இருந்தன. 1919 நவம்பரில் அலிகர் பருவஇதழில், அலிகர் கல்லூரிக்கு ஹர்கோர்ட் பட்லர் என்பாரின் வருகைபற்றிக் கசப்பான கருத்துரைகளை அவர் எழுதிவிட்டார். அந்நியரின் நலன்களுக்குத் தொண்டாற்றும் ஒரு கருவியாக பல்கலைக்கழகம் இருந்தாகவேண்டும் என்ற எண்ணத்தை ஜாகிர்சாகிப் ஏற்கவில்லை.

பிளாட்டோவின் "குடியரசு" தவிர, எட்வின் கெனானின் அடிப்படை அரசியல் பொருளாதாரம் எனும் நூலினையும் அலிகரில் அவர் மொழிபெயர்த்தார். 1922ல் அது ஜாமியாவில் இருந்து வெளியிடப்பட்டது. ஆரம்பகாலத்தில், பல்கலைக்கழகம் ஒன்றின் முக்கிய மூன்று பணிகளான கற்பித்தல், ஆராய்ச்சி, வெளியீடுகளின் மூலம் அறிவைப்பரப்புதல் ஆகியவற்றை ஜாமியா மேற்கொண்டது. 1921 மே ஜூன் மாத அலிகர் பருவ இதழில் "வாழ்க்கை அரங்கு ஊக்கமிக்க ஆன்மாவை வேண்டுகிறது" என்பதுபற்றி ஆர்வத்தைத்தூண்டும் கட்டுரையை அவர் எழுதினார். ஜாகிர்

சாகிப் அந்த இதழுக்காக எழுதியிருந்த இன்னொரு கட்டுரைக்கு மிகுந்த களிப்புடன் கூடிய அறிமுகவுரையைச் சேர்த்திருந்தார் இந்த இதழின் ஆசிரியர். ஜி.கே. செஸ்டர்மனின் "மரமும் காற்றும்" எனும் கட்டுரையை ஒரு மணி நேரத்திற்குள் மொழிபெயர்த்து சாதித்தார் ஜாகிர் சாகிப். முழுநிறைவுடைய ஒரு அழகிய இலக்கியப் படைப்பாக இந்த மொழிபெயர்ப்பு இருந்தது.

ஜாகிர்சாகிப் 1922 ல் மேற்படிப்புக்காக ஜெர்மனி சென்றபோது, ஜெர்மன் மொழியை மிகச்சிறப்பாகக்கற்றறிந்தார். 1964 ல் புனே பல்கலைக்கழக்கத்தில் ஜெர்மன் இலக்கியத்தோடு தனக்கிருந்த இடையறாத தொடர்பாலேயே தனது அறிவு த்திறம் வளர்ந்ததென முறைப்படி தெரிவித்தார். பொருளியலில் பி.எச்டி பட்டத்திற்காக ஜெர்மனியில் படித்துக் கொண்டிருந்தபோது காந்திஜியின் வாழ்க்கையைப் பற்றி ஜெர்மன் மொழியில் நூல் வெளியிடுவதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொண்டார். பணவீக்கம் உச்சநிலையை அடைந்திருந்த ஒரு அந்நிய நாட்டில் இருந்து கொண்டு, நிதி உதவி பிரச்சினைக்குரியதாக இருந்த நிலையிலும் ஆதாயம் ஏதும் எதிர்ப்பார்க்கவியலாத இத்தகைய திட்டமொன்றில் ஒரு மாணவர் இறங்குவது வியப்புக்குரிய ஒரு செயலாக இருந்தது. இந்திய சுதந்திரத்திற்காக தேசியவாதிகள் ஏற்று வந்த இன்னல்களைப்பற்றி ஜெர்மானியரை அறியச்செய்வது அவரது நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. ஜெர்மனியில் ஜாகிர் சாகிப் மற்றொரு செயலையும் செய்தார். 'திவான்–இ–காலிப்' பின் அழகிய பதிப்பை, காலிப்பின் பண்பட்ட சுவைத்திற உணர்விற்கு உவகையைச் சேர்க்கும் வகையில் வெளிக்கொணர்ந்தார். இந்தியாவிற்கு அப்பதிப்பு வந்தபோது உறக்கிம் அஜ்மல்கான் அதை மிகவும் விரும்பி திவான்–இ–காலிப்பின் பாரசீகமொழிப்பதிப்பை திவான்–இ–ஷாய்தா எனும் பெயரில் ஜெர்மனியிலேயே அச்சிட வகை செய்தார்.

1924 ல் ஐரோப்பியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, பீட்டர்சன் என்ற நண்பருடன் ஸ்வீடனுக்குச் சென்றார். ஸ்டாக் ஹோமில் தான் தங்கியிருந்த விடுதிக்குக் கட்டுவதற்குப் பணமில்லாத ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருவரும் சிக்கிக்கொண்டனர். காந்திஜியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுமாறு பீட்டர்சன் அளித்த யோசனையின் பேரில் ஜாகிர்சாகிப் மிக அரிய கட்டுரை ஒன்றை எழுதினார். ஸ்வீடன் நாட்டு நாளிதழ் ஒன்று அதற்கென அளித்த தொகை விடுதிக்குப் பணம் செலுத்தவும், பெர்லினுக்கு திரும்பிவரப்பயணச் செலவுக்கும் போதுமானதாக இருந்தது. ஜெர்மனியில் இருந்தவாறே ஜாமியாவிற்கும் புலமை சான்ற கட்டுரைகளை அடிக்கடி அனுப்பி வந்தார். பெட்ரண்ட் ரஸ்ஸலின் சமூக மீட்டுருவாக்கத் தத்துவங்கள் எனும் நூலினுடைய

இயல்களில் ஒன்றின் மொழி பெயர்ப்பான "ராஹ்—இ—அமல்" எனும் கட்டுரையை 1923 ஏப்ரலில் "ரிசால்—இ—ஜாமியா" இதழில் அவர் எழுதினார். அதன் பிறகு ஜூலை மாத இதழுக்காக பெட்ரண்ட் ரஸ்ஸலின் "விடுதலைக்கான பாதைகள்" என்ற கட்டுரையையும் அனுப்பினார். "ராஹ்—இ—அமல்" அல்லது 'செயல்தடம்' என்ற தனது கட்டுரையில் அவர் எழுதுகிறார்: மனிதர்களிடம் இருக்கும் "வாழ்க்கையை வழங்குகிற, வாழ்க்கையை மேம்படுத்துகிற, பலகீனமான கூறு கூட இக்காலத்தின் செயல் திறனற்ற அரசியல் வாதிகளை விடவும் வலுவானதாகவே தோன்றுகிறது. சிந்திக்கும் ஆற்றல் பெற்றோரும், சமூகப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் திறனுடையோரும் தங்கள் நோக்கங்களிலும், குறிஇலக்கிலும் ஒருநாள் நிச்சயம் வெற்றிகாண்பார்கள். வாழ்க்கையை மேம்படுத்துபவர் எவரோ அவர் தமக்காக வாழ்பவரில்லை பிறருக்காக வாழ்பவர். பரம்பொருளின் குணாம்சத்தைத் தமக்குள் தாமே அவர்கள் உருவாக்கிக் கொள்கின்றனர். பிறர் மீது அக்கறை காட்டும் வடிவில் அது வெளிப்படுகிறது. இது போன்ற செயல்கள் இல்லாது போன போதிலும், இதுபற்றிய நினைவுகளே கூட நமக்கு அளப்பரிய மகிழ்ச்சியைத் தருகின்றன". கல்வி பற்றிய ஒரு கட்டுரையில், ஜாகிர்சாகிப், கல்வி என்பது திணிக்கப்படுவதும் முயன்று பெறுவதுமான இரண்டினது கலவை என எழுதுகிறார். ஆசிரியர்கள் தங்களது சொந்தக் கருத்துக்களைச் சுமத்துவதற்கு குறைந்த முயற்சியே செய்ய வேண்டும். மாணவர்கள் சுயமாக முயன்று தங்கள் சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்கு அதிகம் உதவவேண்டும். நமது பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்கு, கட்டுப்பாட்டு விதங்கள் விரும்பத்தக்கனவாக இல்லை. ஒழுங்கு என்பது ஒருவரின் சுதந்திரமான விருப்பத்தினின்று தொடங்குவதாக இருக்கவேண்டுமேயன்றி, மேலிருந்து திணிக்கப்படுவதாக இருத்தலாகாது என்று ஜாகிர் சாகிப் கருதினார்.

ஜாகிர் சாகிப் ஜெர்மனியிலிருந்து திரும்பிய பிறகு, ஜாமியாவை கட்டியமைப்பது அவரது கவனம் முழுவதையும் ஈர்த்துக் கொண்டது. ஜாமியா பயிற்றுவிக்கும் ஒரு மையமாக மட்டும் அமையாது சமூக மாற்றத்தின் இயக்கியாகவும் உருவாக வேண்டி இருந்தது. இந்த நோக்கத்திற்காக பொறுப்புணர்வோடு கூடிய வெளியீட்டுத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஜாமியா என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது பற்றி மக்களுக்குத் தகவல் அளிக்கவும், பண்பாட்டுப் பாரம்பரியத்தை நோக்கி அவர்களின் கவனத்தை ஈர்க்கவும் "திஜாமியா" எனும் ஒரு இலக்கிய இதழ் 1923 லிருந்து தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியர் பொறுப்பை ஜாகிர்சாகிப் தானே ஏற்றுக்கொண்டார். பல மாதங்கள்வரை வெவ்வேறு பெயர்களில் அநேகமாக அவரே எல்லா

கட்டுரைகளையும் எழுதினார். "தி ஜாமியா" பின்னர் தரம் உயர்த்தப்பட்டு குழந்தை இலக்கியத்தில் தலைமை சான்றதாக பாயம்–இ–தாலிம் எனும் பெயருடன் உருவாயிற்று. இது, மாதமிருமுறை தொடர்ந்து வெளியானது. ஜாகிர் சாகிப்பின் அபுகான் கி பக்ரி தொடரும், வேறு பதினான்கு கதைகளும் குழந்தைகளின் கற்பனைத் திறத்தைத் தூண்டிவிட்டன, கடவுள் படைத்த உயிர்களில் இருக்கக்கூடிய இயல்பான குணங்களை குழந்தைகள் இயல்பாக உணர்ந்து நுகர்ந்தனர். நரியின் தந்திரம், நாயின் விசுவாசம், பூனையின் எளிதில் வசப்படும் தன்மை, செம்மறி ஆட்டின் பீதிகொள்ளும் இயல்பு, குதிரையின் துடிப்புமிக்க செயல்திறம், ஒட்டகத்தின் பொறுமை, மயிலின் அழகு அனைத்துமே கதைகளில் மிகுந்த கைத்திறத்தோடு வழங்கப்பட்டு அவற்றிடமிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியது எத்துணை முக்கியமானது என்பதை குழந்தைகள் கற்றறியும் வண்ணம் அந்தக் கதைகள் வழங்கின.

ஆனாலும், ஜாமியா சமுதாயத்திற்கு மிகப்பெரிய தொண்டு செய்தது மக்தாப்–இ–ஜாமியா எனும் பதிப்பகத்தை நிறுவியதன் மூலமே. இஸ்லாமியக்கல்வியைப் பரப்பியதில் இதன் சாதனையை வேறெந்தப் பல்கலைக்கழகமும் முறியடிக்க இயலவில்லை. சிறந்த புலமையாளரான அபித்சாகிபை செயலாளாராகக் கொண்டு உருது கழகத்தையும் ஜாமியா நிறுவியது. உருது மொழிக்கு மட்டுமின்றி இசுலாமியப் பண்பாட்டிற்கும் தன்னார்வத் தொண்டினை இது செய்திருக்கிறது. பல்வேறு பாடப்புத்தங்களையும், பயனுள்ள எண்ணற்ற படைப்புகளையும் வெளியிட்டு படைப்புத்திறன்மிக்க ஒரு சிந்தனைமையம் என்ற பெருமையை ஜாமியாவிற்கு வெகுவிரைவில் பெற்றுத்தந்தது. மக்தப்–இ–ஜாமியாவும், உருதுக்கழகமும் ஒன்று புத்தகங்களை உருவாக்குவதும் மற்றது அதனை வெளியிடுவது மாக அமைந்து இஸ்லாமியப் பண்பாட்டுப் பெட்டகங்களின் ஒவ்வொரு ஆரோக்கியமான நோக்கினைப் பற்றியும் பயனுள்ள, பொருத்தமான, சிந்தனையைத் தூண்டும் இலக்கியங்களை வெளிக் கொணர்வதற்கு மிகவும் பயன்படக்கூடிய செயற்பாட்டுக்களங்களாக, ஒன்றுடன் ஒன்று இணைந்து முழுமை பெறத்தக்கதாக அமைந்தன.

எனினும், ஜாகிர் சாகிப்பின் முயற்சிகள் அனைவராலும் போற்றப்படவில்லை. குழந்தைகளுக்கு அவர் எழுதிய கதைகளிலும் கூட ஜாகிர்சாகிப்பின் தேசியவாத கருத்துக்களைக் கண்டுபிடித்து அவற்றை எதிர்த்த திறனாய்வாளர்களும் இருந்தனர். 1936 ஜனவரியில் அலிகரின் சுகெய்லில் வெளியான ஒரு கட்டுரை, ஜாகிர்சாகிப்பின் கதையான "அபுகான் கி பக்ரி"யை கேலி செய்து டாக்டர் முகமது அஸ்ரப் எழுதிய கருத்துரைகளைத் தாங்கி வந்தது. முஸ்லீம்கள் இணக்கம் கொண்டிராத சமூக அரசியல் வாழ்க்கை யோடு ஜாமியா இருப்பதாகவும் இதில்

எழுதப்பட்டிருந்தது. இருந்த போதிலும், ஜாகிர் சாகிப்பின் இலக்கிய ஆக்கங்கள் மக்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டன. அதனால் அந்நாளைய பிரச்சனைகளை அவர்கள் அலசி ஆராய முற்பட்டனர்.

இந்திய மக்கள் அனைவர்க்குமான கல்வியின் வீறார்ந்த முன்மாதிரியை ஜாகிர்சாகிப் சோதித்துக் கொண்டிருந்தபோது மிகவும் பயனுள்ள பணிகள் செய்யப்பட்டன. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் வழங்கிய கல்வியைத் தொட்டுப்பேசுகிற உரைகள், பேருரைகளின் வெளிப்பாடாக அவருடைய 'தலிம்–இ–குத்பத்' இருந்தது.[5] தேசியக்கல்வி, நர்சரி கல்வி, அடிப்படைக் கல்வி, உயர்நிலைக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, பயிற்சித் திட்டங்கள், பண்புருவாக்கத் திட்டங்கள், நல்லாசிரியரின் இயல்புகள், முஸ்லீம்களின் கல்விப்பிரச்சினைகள். அலிகரின் பிரச்சனைகள் என்பவை பற்றி அவை இருந்தன. இந்த விரிவுரைகள் வெறுமனே தகவல் அளிக்கும் இயல்பினதாக இல்லாமல் தேசம் பயன்படுத்திக் கொண்டு மிகுந்த நன்மையடைந்திருக்க வேண்டிய கொள்கை விளக்கப் பொதிகளாக இருந்தன. இலக்கியக் கண்ணோட்டத்திலும் கூட அவை தனித்தன்மை கொண்டவையாக இருந்தன. இதன் நடை ஒரு எழுத்தாளரின் நடையாக இல்லாமல் பேச்சாளரின் நடையாக இருக்கிறது. அவர் தெரிவிக்கும் அனைத்துமே யாரோ ஒருவர் மெய்யறிவை நமது காதுகளில் துளையிட்டுச் செறிப்பதைப்போல இதயத்தின் அடிஆழம் வரை செல்கின்றன.

இவற்றில் பல, ஒருசில மணித்துளிகளுக்குள் மிகப்பரந்த அறிவுக் கருத்துக்களை வெளியிட்டாக வேண்டிய வானொலி உரைகள். அது ஒரு எளிய செயலன்று. இலக்கியக் கைத்திறத்தின் கலைவேலைப்பாடு அனைத்தும் அதற்குத் தேவைப்படுகிறது. அதன் நுவல்பொருள் எளிய மனிதரையும் இலக்காகக் கொண்டதனால், அதன் எளிமையும் துலக்கமும், இயல்புத்தன்மையும் படிப்போர்க்கு உவகையூட்டுகின்றன. தேசத்தின் தலைவிதியோடு தொடர்புடை ஒரு பொருள் பற்றி சான்று வலிமையோடு பேசக்கூடிய, கற்றுத்துறைபோன தேர்ச்சிமிக்க ஒருவரின் சரளமானத் தொடருரையாக அது இருக்கிறது. ஆன்மாவைத் தொடக்கூடிய சொற்களில், சமூகத்தை சீரமைக்கும் நோக்கத்துடன் அது அமைகிறது. நமது மண்ணிலிருந்து அறியாமையை அகற்றுவது எப்படி? தேசத்தின் கல்வி நடைமுறையுடன் பண்பாட்டை எப்படி ஒருங்கிணைக்கலாம் என்பவை பற்றியதாக அவருடைய உரைகளின் பிழிவு இருந்தது. கடந்த காலத்திலிருந்து மதிப்புமிக்க ஏதேனுமொன்றை நாம் மரபுரிமையாகப் பெற்றுள்ளோம். – அன்பு, மனிதநலம், அர்ப்பணிப்பு, மெய்யறிவு, படைப்பாற்றல் – அனைத்துமே மனிதனை சிறந்தவனாக்க வேண்டும்

என்பதற்கானவை. தத்துவம் இந்த தேசத்தின் ஆன்மாவாக இருந்து கொண்டிருக்கிறது. மதம் அதனுடைய அடையாளம். பக்தி அதன் உள்ளுரு. சகிப்புத்தன்மை அதன் நுட்பம். அறிவு அதன் மகிழ்வாதாரம், மனித நலம் அதன் பெருமிதம். அழகு, நாட்டத்திற்குரிய அதன் இலக்கு. கடவுள் வணக்கத்திற்குரிய அதன் அகவுணர்வு. ஜாகிர்சாகிப் மிகவும் போற்றிவளர்த்து வந்த மதிப்பீடுகள் இவையே. அவரது எழுத்துக்கள், பேச்சுகள் அனைத்திலும் இவையே விவரிக்கப்படுகின்றன. இலக்கிய வாணர் எவரும் கருத்தூன்றி விரித்துரைக்கூடிய ஆய்வுப்பொருள் இவையே. இலக்கியவாதிகள் மத்தியில் ஜாகிர்சாகிப்பிற்கு ஒரு இடமுண்டு என்பதை இதிலிருந்து நாம் நியாயப்படுத்தமுடியும்.

காசி வித்யா பீடத்துப் பட்டதாரிகள் மத்தியில் பேசியபோது நம்முடைய சமுதாய, அரசியல், பண்பாட்டு, உளவியல், பொருளியல், வலுக்குறைவுகள் அனைத்தையும் அவர் எண்ணிக்கையிட்டார். பசி, வறுமை, அநீதி, அறியாமை, இரக்கமின்மை, சோம்பல், செயலற்ற தன்மை, மதவெறி, தவறான உணர்ச்சிப் பெருக்கம், குறுகிய பார்வை, தன்னலம், போலி நாகரிகம், பிறர் பொருளை வெஃகும் ஆர்வம், இறுமாப்பு, அகந்தை போன்றவற்றால் நாம் எவ்வளவு தாழ்ந்துவிட்டோம் என்பதைப்பற்றி அவர் விளக்கமாக வருணித்தார். மேலும் ஒரு படி சென்று இந்தவலுக் குறைவுகளை நீக்குவதற்கான வழிவகைகளையும் அவர் தெரிவித்தார். இத்தகு குறைபாடுகள் நமது சமூகத்தில் இருப்பதாக அவர் கற்பனை செய்து கொண்டார் என்பதில்லை, மாறாக அவை ஏற்படுத்திய தீயவிளைவுகளை தனது தனிப்பட்ட வாழ்க்கையிலேயே அவர் அனுபவித்திருந்தார். பார்வையாளரின் ஆர்வத்தைத் தூண்டவேண்டும் என்பதற்காக கற்பனை செய்து கொள்ளப்பட்ட நாடகமல்ல அது. மாறாக, அழகிய மாபெரும் தேசம் ஒரு சிலரின் சுயநலத்தினால் அவதியுற்ற அந்நாளைய நிலையின் எதார்த்தம். எழில்மிகு தோற்றங்களை சிலர் வரைந்துகாட்டுவார்கள். ஆனால் இவரோ எதார்த்த நிலையையும் உண்மையையுமே விவரித்தார், பிறர், காட்சிகளை கற்பனை செய்திருக்கலாம், இவரோ நடப்பினைக் கண்ணுற்றார். எனவே, அவரது எழுத்துக்களில் மாபெரும் ஆற்றல் இருந்தது.

தலிம்—இ—குத்பத் குழந்தைகளின் தொடக்கக்கல்வி, உயர்நிலைக் கல்வி பற்றி பேசியதெனில் அவரது 'ஊக்கமிகு பல்கலைக்கழகம்' உயர்கல்விப் பிரச்சனைகளில் கவனம் செலுத்திற்று. ஊக்கமிகு பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பொருளை உள்ளடக்கிய பேருரைகளை இந்தியாவின் துணைக்குடியரசுத் தலைவர் என்ற நிலையில் பனிரெண்டு பட்டமளிப்பு விழாக்களில் அவர் நிகழ்த்தினார். இரண்டாண்டுக்கும் குறைவான கால அளவில், இருபத்து நான்கிற்கும் மேற்பட்ட பேருரைகளை

இந்தியக்குடியரசுத் தலைவர் எனும் நிலையில் நிகழ்த்தி இருக்கிறார். இந்த உரைகள் அவர் கல்விக்களத்தில் இல்லாமல், அரசியல் களத்திலிருந்த இறுதி பனிரெண்டு ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்டவை. கல்வித் துறையில் ஏறத்தாழ 40 ஆண்டுகள் அவர் ஆற்றிய ஆழமான அரும்பணிகள் அவரது பார்வையை விசாலமாக்கி மனித வாழ்வின் எப்பொருள் பற்றியும் பேசுவதற்கு இயலச் செய்தது. ஊக்கமிகு பல்கலைக்கழகம் எனும் நூலில் உயர்கல்விப் பிரச்சனைகளை அவர் தொட்டுக் காட்டி கல்வியானது தேசத்தின் கட்டுப்பாட்டிலேயே கட்டாயம் இருந்தாக வேண்டும். நம் கைகளை விட்டு நழுவி நம் மண்ணிலேயே ஒரு அந்நியக் குழந்தையாக அது மாறிவிடக்கூடாது என்று கூறியுள்ளார். நமது கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் உள்ள கலைஞர்களின் ஆன்மீகப்புதுவாழ்வு என்பது பற்றியும் அவர் பேசினார். உயர்கல்வியின் குறிஇலக்குகளை அவர் வரையறுத்தார். புலமையாளர்களின் சிந்தனையில் சுதந்திரச்சுடரை அவர் ஏற்றினார். நமது ஆன்மாவைப் பண்படுத்தக்கூடிய உண்மையான பல்கலைக்கழகத்தைப்பற்றி அவர் கனவு கண்டார். கல்வியின் முக்கியமான ஒரு அங்கமாக உடலுழைப்பை அவர் வலியுறுத்தினார். வகுப்பறையில் பயிலும் கோட்பாட்டியல் கல்விக்கும், வெளிஉலகில் நிலவும் எதார்த்தத்திற்கும் இடையில் உள்ள உறவின்மை அகற்றப்பட்டாக வேண்டும் என்று அவர் விரும்பினார். இத்தகைய உறவின்மை பிளவுறும் தன்மையை உருவாக்கி உயர்கல்வியின் நிகழ்முறையையும் இலக்குகளையும் சிதைவடையச் செய்துவிட்டது என்று அவர் கூறுகிறார். வாழ்வின் முதன்மைப் போக்கிலிருந்து துண்டித்துக் கொண்டு விட்ட நிலையில், கோட்பாட்டளவேயான நமது வாதங்கள் மனிதவாழ்வின் கடுமைகளிலிருந்து தொலைவில் ஒதுங்கி அவைகளுக்குரிய தனி இடத்தில் வதிகின்றன. சமுதாயத்துடன் செயல்விளைவு நிகழ்த்தக்கூடியதாக அவைகளை உருவாக்க வேண்டும். தங்களது பண்பாட்டுவேர்கள் மற்றும் பிணைப்பிடங்களி லிருந்து நீண்டகாலமாக அவை அந்நியப்பட்டு, புலனாகாத கருத்துப்படிவங்களுக்குள் அழமாகப்புதைக்கப்பட்டு தங்களது சமூகக்கடைமைகளை அவர்கள் உணரச் செய்யாமல் விட்டுவிட்டன. எனவே ஒருபக்கம் கல்விக்கும் மறுபக்கம் வாழ்கை நடப்பிற்கும் இடையே தொடர்புகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். இந்த நோக்கத்திற்காக அடிப்படைச் சுழல்வட்டம் ஒன்று படிப்படியாகத் தோற்றுவிக்கப்பட்டு அதன் வழியாக வெளிஉலகின் கொதிப்பான செயற்களத்தில் தங்களைப் பொருத்திக் கொள்ளும் வாய்ப்பை இளைஞர்கள் பெறுவார்கள். கல்வியானது அவர்களைப் பயனுள்ள குடிமக்களாக நிலைமாற்றம் செய்விப்பதுடன் எதார்த்த வாழ்வின் சவால்களைச் சந்திப்பதற்கு ஏதுவாக படைப்புச் சிந்தனைக்கும்,

முனைப்பான செயல்களுக்கும் தேவையான இயக்க ஆற்றலை அவர்களுக்கு வழங்கவும் வேண்டும்.

இந்த நோக்கு நிலையில், இத்தகைய உரைகள் தலைமைசான்ற முக்கியத்துவம் பெறுகின்றன. ஜாதவ்பூரில் செயல்முறை சார்ந்த அறிவின் தேவையை வலிவுறுத்திப் பேசிய போது அவர் சொன்னார் "மனித சமூகவாழ்க்கையில் பெருகி வரும் கடுஞ்சிக்கல் நிலையும், விரைவான அறிவுப்பெருக்கமும், சிலவகை வல்லமைகளை தவிர்க்கவியலாததாக ஆக்கியுள்ளன. மானிடவியலின் பரந்தகளங்கள், இயற்பொருள் அறிவியல், சமூக அறிவியல் ஆகியவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் அடிப்படை அறிவியல், முருகியல், நடத்தைப்பண்பாடு இவற்றில் சிறிதளவை வழங்கும் நோக்கத்துடன் கூடியதாக நமது பட்டப்படிப்பை வடிவமைப்பது இயலாததா?"[6]

வாழ்க்கையைப் பற்றிய தனது தத்துவத்தை இத்தகு சொற்களில் அவர் முன்வைக்கிறார்: "நண்பர்களே, வாழ்க்கை வார்த்தைகளைவிடக் கடுமையான சரக்கால் ஆனது. உள்ளீடற்ற சொற்களின் மயக்கும் வெற்றழகைவிட விஞ்சியது. பயனுடைய வாழ்க்கை சுழலும் அச்சு இன்பதுன்பங்களின் அச்சல்ல, வளர்ச்சி நலிவு இவற்றின் அச்சாகும், இலாப நஷ்டங்களின் அச்சன்று, தன்னை உணர்தல் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதல் எனும் அச்சாகும், தன்னல வேட்டை மற்றும் தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளும் அச்சல்ல, தொண்டு தியாகம் இவற்றின் அச்சாகும். மெச்சத்தகுந்தவர் பழிப்புக்கிடமானவர், போற்றத்தக்கவர் தகுதியற்றவர் எனும் அச்சைச்சுற்றியே அது சுழல்கிறது. வாழ்க்கை என்பது உயர்ந்த நோக்கங்களுக்காக என்றும் பாடுபட்டுக் கொண்டிருப்பதாகும். வாழ்க்கை குறிக்கோளுடைய ஒரு பணித்திட்டமாக இருக்கிறது. வாழ்க்கை ஒரு சேவையாக இருக்கிறது. வாழ்க்கை வழிபாடாக இருக்கிறது. வாழ்க்கை எனும் ஆலயத்தில் சிறப்பான வழிபாட்டாளராக விளங்குவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். இயற்கை உங்களுக்குப் பரிசாகத் தந்துள்ள திறமைகளை முழுமையான அளவு வளர்த்துக் கொள்வதற்கு நீங்கள் ஓயாமல் உழைக்கவேண்டும்."

அறிவைத் தேடுமாறு எப்போதுமே இளைஞர்களைத் தூண்டுவார். "ஒருபோதும் முடிவடையாத தொடர் நிகழ்ச்சியே கல்வி, சாரம்சத்தில் அது சுயகல்வியாகவே எப்போதும் இருக்கிறது. பண்புகளின் வாயிலாக தற்பற்றிலிருந்து சிறப்பியல்பை நோக்கி இட்டுச் செல்லும் பாதையில் மனஉறுதியோடும், மனிதப்பண்போடும் உறுதியாக ஒரு சீராக முன்னோக்கிச் செல்வாய்". "மந்தமான ஏற்புத்திற நிலையில் இருந்து தன்னியலாகச் செயல்படும் நிலைக்கு மாறிவருமாறும், வெறுமனே அறிவை

மட்டும் புகட்டும் மையங்களில் இருந்து அதன் சரியான பயன் பாட்டிற்குமாறி வருமாறும், தனிநபர் போட்டி புகழார்வ நிலையிலிருந்து சமூக ஒத்துழைப்பிற்கும் சேவைக்கும் தயாரான நிலைக்கு மாறுவதற்கும், ஒருபக்கமாக அறிஞர்களை சார்ந்திருப்பதை விடுத்து நடைமுறையிலுள்ள மனிதனின் பன்முகத்தன்மையை நோக்கி மாறிவருமாறும் இளைஞர்களை அவர் வற்புறுத்துவார்,"[7] "இயல்பான நிலையில் உள்ள எந்தவொரு இளைஞனும் நோய்க்கு மாறாக நலத்தையும் பலஹீனத்திற்கு மாறாக பலத்தையும், அருவருப்பான தோற்றத்துக்குப் பதிலாக அழகையும் அழுக்கிற்கு பதிலாக தூய்மையையும் தேர்ந்தெடுக்கத் தயங்கமாட்டான்" என்று அவர் நம்பினார். வெற்றியின் ரகசியத்தை இளைஞர்களோடு அவர் பகிர்ந்து கொண்டார். "முறையாக சிந்திக்கக்கூடிய, எதையும் உணர்ச்சி சாராமல் பார்க்கக்கூடிய ஒழுங்கமைதி கொண்ட சிந்தனை ஆற்றலை நீங்கள் பெற்றிருந்தால், நிலையான சுயமுன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தன்மதிப்பீடு செய்யும் பழக்கத்தை முயன்று பெற்றிருந்தால், பிறருடன் நம்பிக்கை கொண்டு வாழ்வதற்கு நீங்கள் கற்றிருந்தால், எடுத்துக் கொள்ளும் கடப்பாடுள்ள அதே நேரத்தில் கொடுப்பதற்கும் நீங்கள் தயாராக இருந்தால், நேர்மையான நீடித்த உழைப்பை நீங்கள் தரமுடியுமென்றால், சிறப்பாக செய்து முடிக்கப்பட்ட ஒரு வேலையால் இன்படைய நீங்கள் கற்றுக்கொண்டிருந்தால், செய்யும் செயலனைத்தும் சிறப்பாக அமையாத தருணத்தில் அதற்காக எளிதில் ஏமாற்றமடைய மறுத்தால், சாதுக்களையும் புனிதர்களையும் நினைவிற்கொண்டு எளிய மனிதரிடமும் பேசுவதற்கு உங்களால் இயலுமெனில் வாழ்க்கையில் நீங்கள் வெகு தொலைவு செல்ல முடியும். இந்தப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் தங்கியிருந்த காலம் இத்தகைய பண்புகளை உங்களுக்கு அமைவித்துத்தர வில்லை எனில் உண்மையில் அது இரங்கத்தக்கது".[8]

அவரது உதடுகளிலிருந்து மதிநுட்பம் பொருந்திய வார்த்தைகள் தடைபடாது தொடர்ந்து வெளிப்படும். இளைய மனங்களில் ஆழமான முத்திரை பதிக்கும் வண்ணம் ஒரு வண்ணமிகு மொழிநடையால் அவை அனைத்தும் ஒப்பனை செய்யப்பட்டிருக்கும். மனதைத் தொட்டு அசைவித்து இயக்குவதும், களிப்பூட்டிக் கற்பிப்பதுமே கவிதையின் நோக்கம். அவரது உரைகளின் விசைவலுவும் அது போன்றே இருந்தது. அவைகள் கவிதைகள் அல்ல, ஆனாலும் மனம்விட்டுப் பேசும் வலிவுமிகக் கொண்டவை. முதிர்ந்த, உணர்வு நுட்பமுள்ள, தத்துவப்பற்றுடைய ஆழ்ந்த அறிவாராய்ச்சி கொண்ட மனம் மட்டுமே இத்தகு உயர்ந்த சிந்தனைகள்ள இவ்வளவு நயமாகச் சுட்டிச் சொல்ல முடியும். "வரம்பின்றிப் பரந்தகன்ற சிந்தனைச் சுதந்திரத்தை" "உயிரியக்க வாழ்வின் அடிப்படைக் கருத்துக்களை" 'பிரபஞ்சத்தின் திட்டம்' 'உண்மைத் தோட்டம்' போன்ற பரந்த முக்கியத்துவம் கொண்ட பல்வேறு

வாதச் செய்திகளை .அவரது உரைகள் குவிமையப்படுத்துகின்றன. "வாழ்க்கை ஓர்மை, நேர்மையான தனிமனிதவாழ்வு, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள ஒத்திசைவு இவற்றை கல்வி பாதுகாக்க வேண்டும்" என்று அவர் நினைவூட்டுவார். அவருடைய கூற்றின்படி "நமது தேசிய நிலையை ஒரு அறமுறை இருப்பாக மாற்றுவதில் வெற்றிகாணாதவரை தேசிய ஒருமைப்பாடு இங்கு இருக்க வியலாது." அவர் கனவு கண்ட புத்துலகைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு "மேல் நோக்கிய பார்வையையும், மெய்யறிவையுமே" எப்போதும் அடையாளப்படுத்தித் தெரிவிப்பார். இது ஒரு கனவல்ல, மேம்பாட்டில் நிலையான நாட்டமும் ஈடுபாடும் கொண்டிருந்தால் இது நிகழக்கூடிய செயலே என்றும் அவர் கூறுவார்.

இவ்வாறாக கல்வியியல் மற்றும் அனுபவ மெய்ம்மைகளின் அசலான அரும்பொருட் புதையலாக 'ஊக்குமிகு பல்கலைக்கழகம்' இருக்கிறது. இது அவரது உழைப்பு, பழுத்த அனுபவம் இவற்றின் பயனாகும். அவர் இந்தியக் குடியரசுத் தலைவரான போது இன்னும் பரவலான பல்வகைத் தலைப் புகளில் பேச அழைக்கப் பட்டார். பல ஆண்டுகளாகத்தான் சேர்த்துவைத்த அறிவாற்றல் எனும் மாணிக்கக்கற்களை பலரறியக் காட்டுதற்கு மிகுதியான வாய்ப்பினைப் பெற்ற ஒரு பொற்கொல்லரைப் போல அப்போது அவர் இருந்தார்.

"இளைஞர்களின் தேவைகளையும் அவர்களின் இயல்பான திறமைகளையும் அன்பான பரிவுணர்வுடன் உணர்ந்து கொண்டு, மதிப்பீடுகளை செயலுருவாக்கிக் காணப்பெறுவதைப் பணியின் பிழிவாகக் கொண்டதே நல்லாசிரியர் ஒருவரது வேலை என்று அவர் வரையரை செய்கிறார். அவரது முக்கியமான முன்னீடுபாடு, இன்னும் முதிராது வளர்ந்து கொண்டிருக்கும் வாழ்நிலைகளுடனானதாக இருக்கிறது. மொட்டுப்பருவத்தில் இருந்தது போன்ற அதே ஆளுமையுடன் அவை முழுமையாக மலர்ந்திட உதவ முயல வேண்டுமெயன்றி தனது தற்போக்கு எண்ணத்தையும் கற்பனைகளையும் நிறைவேற்றும் காகிதமலர்களாக அவர்களை உருவாக்கி விடலாகாது".[9] நம்முடைய பல்கலைக்கழக வளாகங்களில் அமைதி ஏன் குலைந்திருக்கிறது என்பது பற்றிய காரணக்கூறுகளைப் பகுத்தாயும் வேளையில், தேசத்தின் மனச்சான்று மையங்களாக தொண்டாற்று வதற்கு பதிலாக அவை தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் மையங்களாகிவிட்டன. சமூகப் பொறுப்புணர்வு மனப்பாங்கை ஊட்டி வளர்ப்பதற்குப் பதிலாக வேலைகளில் ஈடுபடுத்தப்பட முடியாத இளைஞர்களை உருவாக்கும் உற்பத்தி மையங்களாக அவை ஆகத் தொடங்கி விட்டன, சமூகக் கொடுமைகளான வேலை நிறுத்தங்கள், சட்ட செயலாட்சி இல்லாத நிலை, வன்முறை, வகுப்புக்கலவரம், சாதிசமயக்

கோட்பாடு, இன வகுப்பு மத மொழி முரண்பாடுகள் போன்றவற்றிற் கெதிராகத் தடுப்பரண் அமைப்பதற்குப் பதிலாக "இந்தியா"என்பதையே மக்களிடம் மறக்கடிக்கச் செய்யும் கருவிகளாக அவை ஆகிவருகின்றன. என்று கருத்து தெரிவித்தார். நமது தேசத்தலைவர்கள் நிலைமைகளைச் சரிசெய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். "அப்படிச் செய்வதற்கு அவர்களால் இயலவில்லையெனில் பல்கலைக்கழகங்களையும் கல்லூரிகளையும் அமைதியாகச் செயல்பட விட்டுவிட்டு சொற்பகால குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஊட்டி வளர்க்கப்படும் அதிருப்தி நிறைந்த இடங்களாக அவைகளை மாற்ற முயற்சிப்பதைக் கைவிட்டு குறைந்தபட்சம் விலகி இருந்து கொள்ளட்டும்".[10]

இவ்வாறாக, ஜாகிர்சாகிப் தனது அறிவு, விவேகம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் எண்ணற்ற வாய்ப்புகளைக் கண்டார். குடியரசுத் தலைவராக அவர் எங்கெங்கும் மிகவும் விரும்பப்பட்டார். அவர் தொட்ட எதனுக்கும், பேசியவற்றிற்கும் மிகுவனப்பையும், இனிமைப்பண்பையும் சேர்ப்பித்தார். உறுதுணையாகக்கூடிய அவரது அறிவுரைகள், தத்துவப் பிரதிபலிப்புகள், குறிக்கோள் நேர்மை ஆகியன அவர்க்கு எல்லா இடங்களிலும் மதிப்பையும் அன்பையும் பெற்றுத்தந்தன. குடியரசுத் தலைவர் எனும் வகையில் அவர் அனைத்துவகை சமூகவாழ்க்கைத் தரத்தவரையும் சந்தித்துப் பேசவேண்டியிருந்தது. அந்நாளைய வெளிப்படையான தேவைகள் குறித்து தெரிவிக்க வேண்டியும் இருந்தது. ஆகையால் குடியரசுத் தலைவர் என்ற முறையில் பேசிய அவரது பேச்சுகளின் இயல்பு, அறிவுத்திறமிக்க விமானத்திலேறி உயரஉயரப்பறந்த அவருடைய முற்காலப் பேச்சுகளிலிருந்து வேறுபட்டிருந்தது. அவரது சிந்தனைகளின் அழகும் ஆழமுடைமையும் உணர்ந்து பாராட்டப் பெறும் பட்டமளிப்புவிழாப் பேருரைகள் அல்ல அவை. சிந்தனை மேம்பாட்டிற்கென இதயத்தின் சின்னஞ்சிறிய மூலையைக்கூட ஒதுக்க முடியாமல் அன்றாடப் பிரச்சனைகளை ஏராளமாகக் கொண்டிருந்த மண்ணுலகு சார்ந்த சமூகத்தின் மத்தியில் இப்போது அவர் இருந்தார். அவர்களை அவர் நயமாகக் கண்டிக்க வேண்டியிருந்தது. புகழ்ச்சியாகப் பேசி வசப்படுத்த வேண்டியிருந்தது. விவேக முத்துக்களை உருட்டிவிடாமல் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் அன்றைய அடிப்படைப் பிரச்னைகளை அவர்களுக்கு விளக்க வேண்டி இருந்தது. குடியரசுத் தலைவராக அவர் ஆற்றிய உரைகளைக் கண்ணுறும் எவரும் தேசம் கீழ்நோக்கிச் சரிந்து கொண்டிருக்கிறது, அதனை இன்னும் அதிகமாகச் சரிந்திடாமல் அவர் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார் எனும் ஒருவித மனச்சோர்வை அவற்றில் காணமுடியும். தனது சிந்தனை எனும் மலர்த்தோட்டத்தை அவர்

வளர்த்துக்கொண்டிருந்த நாள்கள் கழிந்துவிட்டன. கடந்த காலங்களில் மிக மென்மையான கவனத்துடன் தான் வளர்த்து வந்த பழுத்த அனுபவம் எனும் தோட்டத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட மலர்களைக் கொண்டு வெறும் "மலர்க்கொத்து" ஒன்றை புத்திசாலித்தனமாக செய்து கொண்டிருக்கிறார் என்ற உணர்வையும் கண்ணுறுவோர் பெறுவர்.

ஒரு மாறுபட்டத்தன்மையாக, 1927 மார்ச் மாதத்திலேயே ஜாமியா பருவ இதழில் "கிழக்கும் மேற்கும்" என்ற ஒரு கட்டுரையில் அவர் தேசிய நடைமுறைப் பிரச்சனைகளை மிக அழகாகப் பகுந்தாய்ந்து, இந்த தேசத்தின் விடுதலை அந்த தேசத்தின் விடுதலை என்பதல்ல. அது ஒட்டுமொத்த மனிதகுலத்தின் பிரச்சனையாகும் என எழுதினார்.[11] இயற்கையிலுள்ள ஒவ்வொரு தனிப் பொருளும் காடுகளிலுள்ள விலங்குகளாயினும், மரத்திலுள்ள பறவைகளாயினும், கடலிலுள்ள மீன்களாயினும் அனைத்துமே விடுதலையைத் துய்த்து மகிழ்கின்றன. ஆனால் இந்தியாவிலிருக்கும் மனிதனோ உண்ண உணவற்ற, உடுத்த உடையற்ற இருக்க வீடற்ற அளவுக்கு உதவியற்றவனாக இருக்கிறான். கிழக்கிலிருக்கும் நிலைமையின் படப்பிடிப்பு இது வாயின், எளிய மனிதன் ஒருவனுக்கு மேற்கும் கூட சிறந்ததாக இல்லை. அங்கு தொழிலக ஊழியர் ஒருவர் எந்திரம் ஒன்றுக்கு எண்ணெய் விடுவதிலேயே ஆயுள் முழுவதையும் கழித்துவிடுகிறார். மனிதன் தனது விடுதலையை ஏன் இழந்துவிட்டான் என்பதற்கான காரணங்களை ஜாகிர்சாகிப் பகுத்தாய்ந்தார். மக்கள் தொகைச் செறிவால் உண்டாகும் அழுத்தம், வானிலை மாற்றம் எனும் இரண்டு காரணங்கள் இதற்குண்டு. இத்தகைய இடர்ப்பாடுகளை வெற்றி கொள்வதற்கு நான்கு உபாயங்களைப்பற்றி மனிதன் சிந்தித்திருக்கிறான். முதலாவதாக குளிர்ப்பிரதேசங்களிலிருந்து வெப்பப்பகுதிகளுக்கு அவன் இடம் பெயர்ந்தான். இந்தியாவுக்குள் வந்த புலப்பெயர்வுகள், இந்தியாவின் மீது நடந்த படைஎடுப்புகள் பலவும் குளிர்ப் பிரதேசங்களிலிருந்து வந்தவையே. இரண்டாவதாக தடைகளை வெற்றிகொள்ள உடல் வலிமையை மனிதன் பயன்படுத்தினான். இதன் விளைவே போர்கள், மூன்றாவதாக, அறவழியிலும் ஆன்மீக வழியிலும் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது பற்றிச் சிந்தித்தான், நோன்பு வாழ்விற்குள் பின்வாங்கினான். நான்காவதாக அவன் தனது கலை, கைத்தொழில், தேர்ச்சித்திறம், தொழில்நுட்பம் அனைத்தையும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தினான். மக்கள் தொகை உயர்ந்தால் உற்பத்தியும் உயர்ந்துவிடுகிறது. மனிதன் பெருமுயற்சியும் புதியனபுனைந்துருவாக்கும் ஆற்றலும் உடையவன் ஆனான். மக்கள் செறிவு, வானிலை இவை தரும் சவால்களை சந்திப்பதற்கு முதலிரண்டு உபாயங்களும் ஒன்றுக் கொன்று தொடர்புடையனவாக இருந்து உதவின.

தனக்குச் சொந்தமான இருப்பிடத்தை விட்டு வெளியேறி வெகு தொலைவு செல்வதும், வெற்றி பெறுவதும், ஆதிக்கம் செலுத்துவதும், எல்லோராலும் இயலக்கூடிய செயலன்று. ஆனால் மற்ற இரண்டு உபாயங்களும் அறநீதியிலும் பகுத்தறிவு நீதியிலும் முழுமையான முக்கியத்துவம் உடையன. ஒழுக்க நியதி மனப்பாங்கு நமக்குள்ளிருக்கும் சிறந்தனவற்றை வெளிக் கொணர்கிறது. புத்தரைப் போல ஒருவன் ஞானம் பெறவும் செய்கிறான். மனிதனின் திறமையும், புதியன படைக்கும் ஆற்றலும் இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு புதிததாக ஏதேனுமொன்றை உருவாக்கும். இந்த உபாயங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து முழுமை தரவல்லவை. சரியான இசைவுப் பொருத்தத்தில் அவைகளை ஒருங்கிணைக்க வேண்டும். நிலப்பகுதியை விட்டு நீங்குவதோ, இரக்கமற்ற முறையில் வலிமையைப் பயன்படுத்துவதோ விரும்பத்தக்கதன்று என்பது ஜாகிர்சாகிப்பின் கருத்தாகும். அறிவாற்றல் மற்றும் புனைவுத்திறத்துடன் இணைந்த நிலையில் உள்ள வாய்மை ஒழுக்கங் கொண்ட உபாயங்களையே காலத்தின் சோதனையை வெல்வதற்கு மனிதன் பயன்படுத்தவேண்டும்.

இந்தக்கட்டுரை மிகுந்த ஈர்ப்புடையதாக இருக்கிறது. மனிதப்பண்பாட்டின் தோற்ற முறையையும் அதன் வளர்ச்சிக்கும் சிதைவுக்கும் பொறுப்பாகும் காரணக் கூறுகளையும் கட்டுரை தொகுத்துரைக்கிறது. படைப்புத்திறன் கொண்ட இத்தகைய சிந்தனைகள் பீகார் மாநில ஆளுநராகவும், துணைக்குடியரசுத் தலைவராகவும், குடியரசுத் தலைவராகவும் ஆனபிறகு அவரிடம் காணப்படவில்லை. ஒளிவிளக்கம் செய்விக்கும் இக்கட்டுரையில், வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து இன்றைய குடியேற்ற ஆட்சி, பேரரசுக்கொள்கை வரை மனிதகுலம் கடந்து வந்த பல்வேறு படி நிலைகளைப் பற்றிய முழுமையான பரந்தகாட்சியொன்றை வரைந்து காட்டியுள்ளார். இந்தியாவின் பெருமை ஆன்மீகத்திலும், ஐரோப்பாவின் பெருமை தொழில் மயத்திலும் இருப்பதாக அவர் சொன்னார். ஆன்மீகபலத்தினால் ஆசியாவும், இயற்பியல் வலுவால் ஐரோப்பாவும் அறியப்படுகின்றன. ஆசியா மக்கள் பெருக்கப் பிரச்சனையையும், ஐரோப்பா ஒவ்வாப் பருவநிலைப் பிரச்சனையையும் கொண்டுள்ளன. தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதாலும், அறமுறை சார்ந்த தனது அமைவடக்கத்தாலும் ஆசியாவும்; செயல்திறம், புதியனபுனைதல், தொழில்மயம் இவற்றால் ஐரோப்பாவும் மக்கள் பெருக்க சவாலுக்கு மறுமொழி பகர்ந்தன. ஆசிய காலச்சாரங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மை உடையவை. ஐரோப்பிய கலாச்சாரமோ தொழில் மயத்திற்குப் பிந்தைய இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுப்பழமையே உடையவை. நியட்ஷேயின் காலத்திலிருந்து

கிறித்தவ எதிர்ப்பியக்கம் ஐரோப்பாவின் ஆன்மீகக் கொள்கையை அழித்து உலோகாதயத்தை நோக்கித் தள்ளிற்று. உடல் தேவைக்கான பொருள் வகைகளை மிகையாக உற்பத்தி செய்ததில் ஐரோப்பாவும், பின்வாங்கிக்கொள்ளும் ஆன்மீக நோக்கில் ஆசியாவும் தம்மை இழந்தன. இவை இரண்டுமே ஆபத்தானவை என்பது ஜாகிர்சாகிப்பின் பகுப்பாய்வாக இருந்தது. இவை இரண்டிற்குமிடையே ஒருசமநிலை நிச்சயம் தேவைப் படுகிறது. கிழக்கு, மேற்கு இரண்டும் எங்காவது ஓரிடத்தில் நிச்சயமாக சந்தித்தாக வேண்டும். கிழக்கு தனது மனத்தின் சிறப்பியல்பையும், மேற்கு தனது அறிவாற்றலையும் வழங்க வேண்டும். மறுமலர்ச்சி, சீர்திருத்தம், செயலீடுபாடு கொண்டிருந்து நிலவுடைமையை முடிவுக்குக் கொண்டுவந்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்திய ஐரோப்பா, இந்த வழிமுறையில் தனது ஆன்மாவை தவறவிட்டு விட்டது. பிறருடனான அன்பிணைப்பை அழித்துக் கொண்டுவிட்டது. பண்பாட்டு மதிப்பீடுகள் அனைத்தையும் நீர்க்கச்செய்துவிட்டது. அழகியது அருவருப்பானது என்பதிலிருந்து விலை மதிப்புள்ளது விலைமதிப்பற்றது எனும் நிலைக்கு மதிப்பீடுகள் இடம் பெயர்ந்து விட்டன. மெச்சத்தகுந்தோர் பழிப்பிற்கிடமானோர் என்றில்லாமல் பணக்காரர் ஏழையென்று மனித இனம் பிளவுபடுத்தப்பட்டு விட்டது.

கிழக்கும் கூட சிறந்ததிருக்கவில்லை. நான் எனும் சுயஉணர்வை மிதமிஞ்சி விலக்கிக்கொள்ளளுதல், பின்வாங்குதல் என்பன படைப்புத்திறனுடைய நுட்பமான ஆற்றல்களை அழித்துவிட்டன. மந்த நிலையும், சோம்பலும் சிறந்த பண்புகளாயின. ஜாகிர்சாகிப்பின் முடிவுகள் ஆர்வமூட்டுபவை. வரலாற்றின் இடைக்காலத்தில் கிறித்தவ செல்வாக்கிற்கு அடிபணிந்து ஐரோப்பா இருந்தபோது, ஆசியா பாதுகாப்பு உடையதாக இருந்தது. மாறாக, சீர்திருத்தமும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டதும் ஐரோப்பா பிறர்மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. தேசியம் எனும் புதிய செலாவணிக்குப்பலியாக நேர்ந்து வீழ்ந்த வேளையில் ஆசிய நாடுகளும் ஒன்றன் மீது ஒன்று ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. ஜப்பானியரின் பேரரசுக் கோட்பாடு இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. ஆசியா இரட்டை பாதிப்பிற்கு உள்ளானது. ஆற்றல்மிக்க ஐரோப்பியா ஒருபுறம். சக்திகொண்ட. ஆசியர்கள் மறுபுறம். இருவரிடமிருந்து அச்சுறுதல் தொடர்ந்து இருந்து வந்தது. ஆசியாவை ஆசியாவே கொலை செய்து கொண்டிருந்தது. "ஐரோப்பியரின் வெறித்தனமான உழைப்பு ஆன்மீக அறவழி மறுமலர்ச்சியினால் சீர்திருத்தம் பெறாவிடில், ஒரு போரின் துயரத்திலிருந்து மீளும் முன்னரே மற்றொரு போரில் ஈடுபட நேரிடும்"[12] என்று ஜாகிரிசாகிப்பின் கூரிய புலனுணர்வு, மிகுந்த தீர்க்கதரிசனத்தோடு 1927ல் அறிவிக்கச் செய்தது. அவர் உய்த்துணர்ந்ததை மெய்யாக்குவது போல ஐரோப்பாவை பனிரெண்டே ஆண்டுகளில் மற்றொரு அழிவினில் ஹிட்லர்

மூழ்கடித்தார். கிழக்காயினும், மேற்காயினும் தேசியக்கோட்பாடானது சமூக நன்மை எனும் இலட்சியத்தை கொண்டதாக இருக்கவேண்டும் என்று ஜாகிர்சாகிப் மேலும் கூறினார். ஐரோப்பா தனது வலிமையைப்பற்றி பெருமைப்படுகிறது. ஆசியா தனது சார்பில்லாத சிந்தனையைப்பற்றி பெருமை கொள்கிறது. ஐரோப்பா உடலாயின் ஆசியா ஆன்மாவாகும். கிழக்கு மேற்கு இரண்டினது பின்னிப்பிணைந்த ஆரோக்கியமான செயல் விளைவு இருக்கவேண்டும் என்று ஜாகிர்சாகிப் விரும்பினார். அவரது மனிதநல உணர்வு, தேசியத்திற்கு ஒரு புதிய கருத்துவிளக்கத்தை அளித்தது. அவரது ஆய்திறத்தின் விளைவே இது. படைப்புத்திறனுள்ள இத்தகைய சிந்தனைகள் அரசியல் ஏணியில் அவர் உயர்ந்தெழுந்த பிற் காலத்து பேச்சுக்களில் காணப்படவில்லை.

ஜாகிர்சாகிப்பின் எழுத்துக்களின் மேன்மையான ஆக்கவளப் பகுதி அவர் ஜாமியாவை எழுப்பியபோது, அங்கு குழந்தைகளுக்கு பயிற்சியளித்துக் கொண்டிருந்தபோது உருவானது. குழந்தையை மனிதனின் தந்தையாக்குவதும், இவ்வுலகை மரபுரிமையாகப் பெறுதற்குத் தகுதியுடையோராக்குவதும் அவரது உயர்நோக்கங்க ளாக இருந்தன. கடவுளின் பிரதிநிதியாக குழந்தை பூமியில் செயலாற்றுவதற்கு இயற்கை உளங்கொண்டுள்ளது, ஆனால் பெற்றோரும் ஆசிரியரும், சூழந்திருக்கும் அனைத்தும் இந்த நோக்கத்திற்கு உதவுவதில்லை. தேவயில்லாத போதெல்லாம் தட்டிக் கொடுப்பதன் மூலம் குழந்தைகளைப் பதனழியச் செய்கின்றனர் பெற்றோர். தேவையின்றி பிட்டத்தில் அடித்தே சீர்குலைக்கின்றனர் ஆசிரியர்கள். "கடவுளின் பிரதிநிதியாக ஆதிக்கம் செலுத்த இவ்வுலகில் நுழையும்போது ஆரோக்கியத்துடனோ, உணர்ச்சி ஆர்வத்தோடோ, நெஞ்சுரத்துடனோ, தீர்மானத்தோடோ அவன் இருப்பதில்லை. எடுத்ததற்கொல்லாம் பயந்துகொண்டு, ஐயம் கொண்டு, யாரையும் நம்பாமல் யாரோடும் ஒட்டாமல் வேலையைச் செய்யும் ஆர்வமின்றியும், அயர்வகற்றும் பொழுதுபோக்கு என்றால் என்னவென்று அறியாமலும், அவன் இருக்கிறான். ஏதேனும் ஒன்றை அவன் செய்வானாயின், அது தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தாலோ அல்லது வெகுமானம் கிடைக்கும் என்ற பேராசையாலோ ஒரு அடிமை செய்வதுபோல இருக்கும். சுற்றிலுமிருக்கும் எதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமலும் அவற்றோடு செயல் தொடர்பு கொள்ளும் ஆற்றலற்றுமே அச்செயல் இருக்கும். பகற் கனவாலும், பயனற்ற திட்டத்தாலும் வாழ்வை இழந்து வாழ்வின் கடுமையான எதார்த்தத்தால் ஒவ்வொரு தப்படியிலும் நடுக்குற்று வாழ்க்கை பயனற்றதெனக் கருதிக் கொண்டு இருப்பார்கள் அவர்கள். வாழ்க்கை அவர்களுக்கு வெறுப்பானதாக இருக்கும். இந்த

உலகம் அவர்களுக்கு ஒருசிறைச்சாலை, உலகிற்கு அவர்கள் ஒரு வாதனை!"

குழந்தைகளைப்பற்றிய மிகைப்பாடு இல்லாத பரிதாபகரமான இத்தகைய சித்திரம் ஒன்றை ஜாகிர்சாகிப் வரைந்து காட்டினார். இந்தியா விடுதலை பெற்று நாற்பதாண்டுகட்கு மேலாகியும் அறுபது விழுக்காடுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் அறியாமையிலேயே விடப்பட்டுள்ளனர். ஜாகிர் தீவிரமாக சிந்தித்து, ஆற்றலோடு பேசி, செயலூக்கத்தோடு எழுதி பெருக்கமுற்றிருக்கும் பலகோடிக் கணக்கான இந்தியர்களுக்கு அறிவு புகட்டுவதற்கு தன்னால் இயன்றதை உண்மையாகச் செய்தார். இந்தச் செயல்வழியில் இலக்கியப்படைப்பு எனும் மதிப்புமிக்க மூலமுதலை அவர் பின்தங்க விட்டுவிட்டார். மனிதர்களின் அறியாமையை அகற்றுவதற்கு கை கொடுத்து உதவுவதைக் காட்டிலும் எழுது கோலைப் பிடித்து எழுதுவதை குறைவாகவே அவர்செய்ததால் அவை அளவில் பெருத்ததாக இருக்கவில்லை. கொள்கைகளைக்காட்டிலும் செயலில் அதிக நம்பிக்கை கொண்டு, ஒருங்கு குவிக்கப்பட்ட போர்க்களத்தில் அவர் நின்றார். இதன் விளைவாக, அவரது இலக்கிய வெளிப்பாடுகள் ஆராய்ச்சிக்கட்டுரைகளின் வடிவைப்பெறாமல் செவியறிவுறுஉக்களாக, புத்தகங்களாக அன்றி உரைகளாக; புனைகதைகளாக இல்லாமல் உண்மை நிகழ்வாக, போலிப்புனைவு வேடிக்கைகளாக இல்லாமல் நிலைமையை மேம்படுத்த, தேசத்திற்கு விழிப்பூட்ட, செயல் விரைவளிக்க, எழுச்சியூட்ட– "போதுமான உறக்கம் அங்கே கல்லறையில் இருக்குமென்பதால்"–எழுந்து நின்று செயலாற்றச் செய்ய வடிவெடுத்தன.

அவர் கூறியன, எழுதியன அனைத்தும் மிகுந்த மதிப்பு வாய்ந்தவை. அவரது எழுத்துக்கள் ஒரு மேதையின் அடையாளங்களைச் சுமக்கின்றன. தலைமைசான்ற சிந்தனையின் உயிர்க்குருதியோட்டமாகக் காணக்கிடக்கின்றன. ஒவ்வொன்றுமே பயனுள்ளதாக, வீறார்ந்ததாக, தொடர்புடையதாக, இதயம் ஏற்கும் தன்மையதாக ஆன்மாவைக் கிளறுவதாக இருக்கின்றன. அழகிய நடையில், எளிமையான சொற்களுடன், கவர்ந்திழுக்கும் பாணியில், நெஞ்சோடு நெஞ்சம் பேசுவதுபோல அனைத்துமே உள்ளன. புதுமையும் தூய்மையுமான எண்ணங்களோடு இடையறாது ஒழுகிச்செல்லும் ஓடைபோன்றவை வாழ்வளிக்கும் ஆற்றல் பெற்ற அவரது சிந்தனைகள். இந்த ஓடையின் ஒவ்வொரு துளியும் பெருக்கமுற்றிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் மேன்மையை விரும்பும் மதிப்பீட்டு முறைமைகளினால் செறிவூட்டப்பட்டு இருந்தது. கல்வியை அடித்தளமாகக் கொண்டு ஆளுமை முழுவதையும் மாற்ற அவர் விரும்பினார். கடந்தகாலத்தின் சிறப்புகளையும் நிகழ்காலத்து மேன்மைகளையும் ஒருங்கிணைத்து இக்காலத்திய சிக்கல்களுக்குத்

தீர்வுகண்டு ஒளிமயமான எதிர்காலத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஒருகவிஞரைப்போல அவரும், ஒரு புதிய உலகத்தையும், புத்துயிர்பெற்ற மனிதனையும்பற்றி கனவுகண்டு கொண்டு இருந்தார். ஆனாலும் அதனுடன் அவர் நிறைவடையவில்லை. அறப்போர் வீரரைப்போல மாற்றத்தைக் கொண்டு வரும் ஒரு போர்வினையில் அவர் ஈடுபட்டிருந்தார். அவரது இதயம் தேசத்திற்காக உதிரம் சிந்தும். அவரது சிந்தனை அழிவைத்தவிர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என ஆலோசனை கூறும். வெது வெதுப்பான இரத்தம் கழுத்துக்களில் இருந்து வழிந்தோடுவதை நமது தேசம் வேண்டவில்லை. நமது கடும் உழைப்பின். உண்மையான உழைப்பின், இடையறாத உழைப்பின், கருத்தூன்றிய உழைப்பின் வியர்வையையே அது வேண்டுகிறது என்று அவர் கூறினார். உழவர்கள், கைவினைஞர்கள், ஆசிரியர்கள் ஆகிய மூவரை நிலையான மதிப்புடைய அளபுருவாகக் கொண்டு அவர்களைச் சூழ்ந்ததாக தமது சமூக சித்தாந்தத்தை அவர் உருவாக்கினார். ஆனால், அவரது கவனத்தின் முக்கியமான குவிமையம் ஆசிரியர்களே. மனிதகுலம் முழுவதையும் ஒரு சகோதரநிலையில் ஒன்றுபடுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. இறைத் தூதர்கள், முனிவர்கள், தத்துவஞானிகள், கவிஞர்கள், இலக்கிய வாதிகள் அனைவரின் நோக்கமும் அதுவேயாகும். இலட்சியங்களை அடைய எடுத்த முயற்சியில் நமக்கு சில இலக்கிய வெளிப்பாடுகளை அவர் விட்டுச் சென்றிருக்கிறார். நமது தேசத்தின் மாபெரும் இலக்கியவாணர்கள் பட்டியலில் உயர்ந்த ஒரு இடத்தைப் பெறும் தகுதியை அவை நிச்சயம் அவருக்கு ஏற்படுத்தும்.

3. கல்விப் பெருமுயற்சிகள்

ஜாகிர் உசைன் மேன்மை வாய்ந்த கல்வியறிவாளர், எழுத்தாளர், ஆசிரியர், அறவுரையாளர், சிந்தனையாளர், அரசியல் மேதகை, தத்துவ வித்தகர். கல்வி, சமூக தத்துவத் துறைகளில் இந்திய நவீன சிந்தனை வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பு செய்துள்ளார். மெய்மை சார்ந்த குறிக்கோளை அடையவிரும்புகிற, அழகுணர்ச்சிமிக்க, கொண்டது விடாத, பயன் நாட்டமுடைய, அறிவுத்திறம் வாய்ந்த போக்குகள் அனைத்தையும் தனக்குள் இரண்டற ஒன்றுபடச் செய்து கொண்ட கல்வித் தத்துவத்தினுடைய மனித நேயப் போக்கின் தந்தையாக அவர் கணிக்கப்படுகிறார். மனிதனின் ஒழுக்க நிலையை உயர்த்தி, பெருமைமிக்க வாழ்க்கை நடத்துவதற்கு அவனுக்கு உதவக் கூடிய வகையிலான ஒரு முறையாக கல்வியை உருவாக்கும் உறுதியே இந்த மனிதநல நாட்டப்போக்கின் பிழிவாகும். உண்மையான கல்வி அறிவியலையும், அறவியலையும் ஒருங்கிணைத்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அவர் எழுப்பினார். மதிப்பீடுகளை நாடிக் காணும் முயற்சியை அது தூண்டவேண்டும். உண்மையைத் தேடிக்காணும் முற்றார்வத்தை வளர்க்கவேண்டும். முழு நிறைவாக்கலையும், சால்பினையும் குறியாகக் கொண்டதாக அது இருக்கவேண்டும். சமூக மாற்றத்திற்கும் தேசிய வளர்ச்சிக்கும் ஒரு கருவியாக அது மாறத் தொடங்க வேண்டும். தனி மனித ஆளுமை வளர்ச்சிக்குத்தனது பங்களிப்பினை அது ஆற்றலோடு வழங்க வேண்டும்.

இலக்கியத்திற்கு ஜாகிர்சாகிப்பின் முக்கியமான பங்களிப்பு கல்விச் செயற்களத்தில்தான் இருக்கிறது. கல்வியைப் பற்றி அவர் பேசியவை எழுதியவை அனைத்தும், "நிலைபேறு மற்றும் இம்மைவாழ்வு, உளப்பாங்கு மற்றும் செயல்திறனுள்ள பயனை விளைவிக்கும் ஆற்றல், உண்மை மீது பற்றுறுதி மற்றம் சாதனை எனும் துருவங்களுக்கிடையில் இயங்குபவை"[1] வெறுமனே மூளை, உடல், ஆன்மாவிற்கு மட்டும் பயிற்சி தருவதாக இல்லாமல் ஒருவன் தன் சக மனிதர்களுடன் ஒத்திசைவோடும், நிறைந்த கருணையோடும் வாழும் வாழ்க்கைக் கலையை மேம்படுத்துவதற்காக கனவு கண்ட ஒரு இலட்சியத்தை அவரது எழுத்துக்கள் வெளிப் படுத்துகின்றன. அவருடைய கல்விக் கட்டமைப்பு வெறும் தகவல்களையும் அறிவையும் வழங்குவதை எதிர்நோக்கி இருக்கவில்லை. மாறாக சமூகப் பொறுப்புணர்வு மனப்பாங்கு, தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பெருமையும், ஆர்வமும், நம்பிக்கையும் கொண்ட ஒரு மனப்பாங்கு, மனிதனது மேன்மை, அவனது நம்பிக்கை, கோட்பாடு, மதம், வாழ்க்கை, உழைப்பு, அறிவாற்றல் ஆகியவற்றை மதிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை

உயர்த்தும் எழுச்சிமிக்க மனப்பான்மையைப் பயிற்றுவித்துப் பழக்குவது ஆகியவற்றை அவரது கல்விக்கட்டமைப்பு விரும்பிற்று. பகுத்தறிவுப் பார்வையை, அறிவியல் மனநிலையை, உழைப்பு நன்னெறிக் கோட்பாடுகளை, படைப்புச் சிந்தனையைக் கல்வி வளர்க்க வேண்டும். தேசத்தின் வளர்ச்சி இதனைச் சார்ந்தே இருக்கிறது. கல்வி, மனித முன்னேற்றத்திற்குத் தேவைப்படக்கூடிய ஒழுக்கம், அறிவு, உடலுழைப்புத்திறன்களையும், முற்போக்கு எண்ணம், வாழ்க்கைத் தொழில், அறி வியல், மனித நலநாட்டப் பயிற்சிகள் போன்றவற்றையும் கூட வளர்க்க வேண்டும். அறிவையும், பண்பாட்டையும், அமைதியையும் கூட்டுப் பொறுப்புணர்வையும், ஒற்றுமையையும் ஒத்திசைவையும் மிகுவிக்கக்கூடிய புதிய மனப்பான்மைகள், மதிப்பீடுகளையும் கூட கல்வியானது ஊட்டி வளர்க்க வேண்டும். உண்மையும், அழகும் கடமையுணர்வும், பேராண்மையும் நீதியும், துணிவும் கொண்ட வாழ்க்கையின் தரத்தை உயர்த்தக்கூடிய புதிய மனித நேயத்தை, புதுப்புது படைப்புத் திறன்களைத் தேடித் திரிவதில் ஆழ்ந்த கவனம் கொண்டவர்களாக நமது இளைஞர்களை மாற்றி சமூகமாற்றத்திற்கான இயக்கியாக கல்வி இருந்திருக்க வேண்டும்.

தன் வாழ்நாள் முழுவதையும் இந்திய மக்களுக்குக் கல்வி புகட்டும் வழிமுறை பற்றிய சிந்தனையில் ஜாகிர்சாகிப் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். நவீன இந்தியாவின் மாபெரும் கல்வியாளர்களில் ஒருவராக அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டதில் வியப்பேதுமில்லை. அவரது ஆழ்ந்த நுண்ணறிவு, நமது தேசத்தின் அறியாமையை அகற்றும் களத்தில் நமக்கோர் உரம் வாய்ந்த, பயன் நாட்டமுடைய, முற்போக்கான, இந்திய நிலைமைக்குப் பொருத்தமான கல்வி முறையைப் பரிசளித்திருக்கிறது. அறியாமையை எப்படி அகற்றுவது? கல்வி முறையில் நமது பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளை ஒருங்கிணைப்பது எங்ஙனம்? செயல்முறை அறிவை நமது கல்வியின் அடிப்படையாக ஆக்குவது எப்படி? கைத்திறத்தையும், தொழில்களையும் படைப்புச் சிந்தனைக்குப் பாதகமின்றி வழங்குவது எப்படி? மூளை உழைப்பையும், உடலுழைப்பையும் சரியான இசைவுப் பொருத்தத்தில் சமநிலையடையச் செய்வதெப்படி? என்பவை பற்றிய தனது சிந்தனைகளை செயல்முறையில் கொணர்ந்து பரிசோதித்துப் பார்க்கும் ஒரு தேசிய சோதனைக் கூடமாக ஜாமியாவை அவர் உருவாக்கினார். மனிதனின் பிறப்பு தொடங்கி இறப்பு வரை எங்கும் நிலவியதாக அவரது கல்வித்திறன் இருந்தது. சமூக நன்மையைக் கல்வியின் இலக்காகவும், மனித நலத்தை மனிதனின் ஊழ்விதியாகவும் அவர் நிர்ணயித்தார். பொருத்தமுள்ள கல்வி முறையால் நமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று அவரது எழுத்துக்கள் அனைத்தும் சுட்டிக்காட்டுகின்றன. அந்நியரின் மேலாட்சியிலிருந்து இந்த மண்ணை

மீட்கும் அரசியல் விழிப்பு நிலை; வாழ்க்கையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள், கட்டிறுக்கம், உடைமைப்பங்கீட்டில் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை நீக்குவதற்கான விழிப்புணர்வு; மதிப்புமிக்க வாழ்க்கையொன்றை பெறுவதற்கான பண்பாட்டு மறுமலர்ச்சி இவை அனைத்துமே மனிதன் அறிவினாலும், விவேகத்தினாலும் செறிவடையும்போது சாத்தியப்படும்.

அறிவு நாட்டமும், அறிவு பரப்பலும் அவரது வாழ்வின் முக்கியமான குறிக்கோள்களாக இருந்தன. அலிகரில் மாணவனாக இருந்தபோதே, பிளாட்டோவின் குடியரசு நூலை மொழிபெயர்க்க அவர் கொண்டிருந்த ஆர்வத்திலிருந்து இதனை அறிய முடியும். தத்துவவியலாளர் ஒருவரின் தலைசிறந்த படைப்பின் மொழிபெயர்ப்பு அவரது சிந்தனைப் பிழிவில் தன்னையும் மறந்து இவர் ஈடுபட்டதைக் காட்டுகிறது. கல்வி என்பது எதையும் யாருக்கும் கற்பிக்கும் வழிமுறையல்ல. மாறாக நமக்கு நாமே அனைத்தையும் கற்பித்துக் கொள்ளும் வழிமுறையேயாகும் என்று நெடுங்காலத்திற்கு முன்பே கூறியவர் பிளாட்டோதான். ஆசிரியர் முதலில் தனக்குத்தானே கற்பித்துக் கொண்டு, பிறர்க்கு வழிகாட்ட மட்டுமே செய்கிறார். அறியாமை எனும் இருள் குகையில் குழந்தை இருக்கிறது என்பதால் அதனால் எதையும் பார்க்கவே முடியாது என்பதில்லை. பார்ப்பதற்கு வெளிச்சமேதும் அங்கில்லை. சூரியனின் கதிர்கள் குகைக்குள் நுழையக்கூடிய திறப்பினை நோக்கி அந்தக் குழந்தையின் பார்வையை ஆசிரியர் திருப்புகிறார். அதன்பின்னர் அக்குழந்தையால் உலகைக் காணமுடிகிறது. குழந்தை பார்ப்பதற்கு ஆசிரியர் கண்களைத் தரவில்லை. மாறாக வெளிச்சத்தை நோக்கி வழிகாட்ட மட்டுமே செய்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவோமாயின், ஆசிரியருடனும், சூழ்நிலையுடனும் பின்னிப் பிணைந்து செயலாற்றிக் கொண்டு தாமாகவே கற்றறியும் வழிமுறையே கல்வியாகும். தகவல்களை அவனிடம் கொட்டுவதைக் காட்டிலும், உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றல், புரிந்து கொள்ளுதல், பாங்கறிதல் எனும் மாணவர்களின் அகம் சார்ந்த வல்லமைகளே முக்கியமானவை. நோயாளியின் பிணியை நீக்கும் உள்ளார்ந்த தடுப்பு சக்தியைப் போன்றது இது. "மருத்துவக் கலையின் திறமை நோயாளியை மகிழ்ச்சியாக வைத்திருப்பதிலேயே இருக்கிறது, நோயை இயற்கை குணப்படுத்துகிறது" என்று வால்டெர் மிகவும் பொருத்தமாகவே கூறுகிறார்.

மனிதனை இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும் இட்டுச்சென்ற மனித நல நாட்டக் கல்வியின் இலட்சியம் பற்றி பிளாட்டோ விவாதித்தார். சிறந்த ஆசிரியர் ஒருவர் மாணவனைத் தூண்டி அவனது வினவும் திறனை எழுப்ப மட்டுமே செய்கிறார். தூண்டப்பட்ட மாணவன்

தனது பிரச்சினைகளைத் தானே தீர்த்துக் கொள்கிறான். அவனது கண்டுபிடிப்பு அவனுக்கு சிலிர்ப் பூட்டும். அவனுக்குள் இருக்கும் சிறுபொறி சுடரொளியாவதற்கு அவன் தானாகவே சிந்திக்கவேண்டும். இந்த வகைக் கல்வியில், மெய்ப் பொருளையும் எதார்த்தத்தையும் உணரும் விழிப்பு நிலைக்கு போராட்டமோ, துன்பமோ இன்றி மனிதன் இட்டுச் செல்லப்படுகிறான். பிளாட்டோவின் "குடியரசு" மொழி பெயர்ப்பு அடிப்படையான மூன்று பொதுக்கருத்துக்களை ஜாகிர்சாகிப்பை உணர்ந்து கொள்ளச் செய்தது. சமுதாயம், நாடு, கல்வி இவை மூன்றும் அவரது அறிவாற்றல் வளர்ச்சியின் மதிப்பு மிக்க மூன்று உறுப்புக்களாயின. இவை மூன்றனுள்ளும் உயிர்நாடியாக அமைந்த கருத்து, மற்ற இரண்டு கருத்துக்களுக்கு அடிப்படையாகவும் ஆன்மாவாகவும் அமைய நேர்ந்த கல்வி எனும் கருத்தாகும். கல்வி மனிதப் பண்பூட்டும் வழிமுறை என்ற குறிப்பை பிளாட்டோ அளித்தார். ஜாகிர்சாகிப் அதனை ஏராளமாக விரிவு செய்தார்.

பிளாட்டோவைத் தவிர, துவே, கெர்செனஸ்டீனர், காந்திஜி ஆகிய வேறு மூன்று மாபெரும் ஆசிரியர்களின் செல்வாக்கும் இவரிடத்தே இருந்தது. இஸ்லாமிய சிந்தனை எனும் அவரது அமைந்தாய்கிற மட்கலத்தில் உருகிக் கலந்தகிரேக்க, ஜெர்மானிய, அமெரிக்க, இந்தியச் சிந்தனைகளின் மகிழ்வான ஒரு கூட்டுக்கலவையாக அது இருந்தது. ஒவ்வொன்றிலிருந்தும் சிறந்தவற்றை அவர் தெரிந்தெடுத்தார். மனித நல நாட்டம் எனும் தனது திரையில் அவற்றை சலித்தெடுத்து வடிகட்டினார். வெளிப்பட்ட உயர்ந்த சிந்தனைகளை எடுத்துக்கொண்டு தானே படிப்படியாக ஒரு மதிப்பீட்டு முறையை உருவாக்கினார். அவரது எழுத்துக்கள், பேச்சுகள், சிந்தனைகள், செயல்களில் அவை வெளிப்பட்டன. பல்வேறு மூலாதாரங்களிலிருந்து ஊட்டம் பெற்ற அவரது சிந்தனை ஓடை குறுகிய, விரைப்பான கல்வி நோக்கங்களை நிலைநிறுத்து வதினின்றும் அவரைத் தடுத்து நிறுத்திற்று. பிரபஞ்சத்தைப் போன்று பரந்து விரிந்ததாக அவர் அதனை ஆக்கினார். அவர் கூறினார்."தனிமனித மனம் வளர்ச்சி பெறுவதற்கான வழிமுறையே கல்வி, வாழ்க்கையின் பிரதிபலிப்பான இலக்கியத்தின் செயலைப் போன்று, வாழ்வின் பல்வேறு வகைப்பட்ட பண்புச் கூறுகளில் நிறைந்து வாழ்க்கை முழுவதும் அளாவி இருக்கவேண்டியது கல்வியாகும். கல்வியை அவர் ஒரு சிறைக்கிடங்காக ஆக்கவில்லை. மானுடம் முழுவதின் மீதும் கவிந்திருக்கக் கூடியதாக அதன் செயற்பரப்பை அவர் மிகுவித்தார்.

1922 முதல் 1926 வரை உயர்கல்வி பயில்வதற்காக ஜெர்மனியில் இருந்த நான்கு ஆண்டுகளில் கல்வி பற்றிய ஜாகிர்சாகிப்பின் கருத்துக்கள் முதன்முதலில் வடிவம் பெற்றன. அச்சமயத்தில், ஜெர்மனியில் மிகச் சிறந்த அறிவார்ந்த கல்வியாளர்கள் குழாம் ஒன்று இருந்தது. கெர்செனஸ்டீனர்,

ரிக்கர்ட், டில்தே, ஸ்கிலர் மேச்சர், ஸ்பிராங்கர் இன்னும் பிறரும் கல்வித் தத்துவதத்திற்கு புதிய ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தனர். இந்த புதிய தத்துவத்தின் தலைமை குருவாக கெர்சென்ஸ்டீனர் இருந்தார். அவரது "செயற்பள்ளி", "பண்பாட்டுப் பெட்டகங்கள்", இரண்டும் நடைமுறையில் உள்ள கல்விக் கொள்கைகளில் உருமாறுபாடுள்ள மாற்றத்தைக் கொணரும் உறுதி பூண்டவையாக இருந்தன. செயல்முறை அறிவு பற்றிய அடிப்படைகளை குழந்தையின் மன வளர்ச்சியுடன் ஒருங்கிணைப்பதும், எந்த ஒரு சமூகத்தின் அடிப்படை மதிப்பீடுகளையும் புரிந்து கொண்டு செயலாற்றுவதும் கல்வித் திட்டங்கள் அனைத்தின் ஆக்கப்பகுதியாக வந்தாக வேண்டும் என்பதை குறி இலக்காகக் கொண்டதாக இந்தப் புதிய சிந்தனை இருந்தது. பண்பாட்டுக் கூறுகளுடன், சிந்தனைக்கு உணவளிக்கும் அறிவாற்றலை கூட்டிணைப்பதே கல்வி என்பது. கல்வியின் அந்தச் செயல்பாடு தலை, நெஞ்சம், கைகள் எனும் மூன்றனது வினைத்திறங்களின் பயன்பாட்டையும் உள்ளடக்கியது எனும் கெர்சென்ஸ்டீனின் கல்விச் சிந்தனையால் அவர் பெரிதும் ஆர்வம் தூண்டப் பெற்றார். இந்தியாவில் இந்த நெறியில் ஒரு முன்மாதிரிக் கல்வியை படிப்படியாக மலரச் செய்வதற்கு தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொள்ளும் அளவுக்கு இவ்வகையான சிந்தனையை ஜாகிர்சாகிப் மிகவும் போற்றினார்.

ஜாகிர்சாகிப்பின் மனதில் ஆழமான முத்திரை பதித்துச் சென்ற மற்றொரு மாபெரும் சிந்தனையாளர் எட்வர்ட் ஸ்ப்ராங்கர் என்பவர். புரிந்து கொள்ளும் ஆற்றல் பற்றிய தத்துவத்தில் புதிய போக்கினைத் தொடங்கிவைத்த திறமைமிக்க கல்வி உளவியல் முன்னோடி இவர். தனிமனிதரின் பண்பாட்டு அடித்தளத்திலிருந்து உருவாகவேண்டியவைகளான மெய்மை, அழகு, உணர்ச்சிமென்மை, மனத்தின் விழிப்பு நிலை, உணருந்திறன், மதிநலம் ஆகியவற்றில் பேரார்வத்தைத் தூண்டுவதைக் குறியாகக் கொண்டது அவரது கல்வித் தத்துவம். அத்தகைய ஒரு செயல்பாடு மனித குலத்திற்கு சேவை செய்வதன் மூலமும் அன்பு காட்டுவதன் மூலமும் யாவர்க்கும் மேலானதும் விழுமியதுமான இறைவிருப்பத்திற்குக் கீழ்படிதலாலும் ஆளுமையின் ஒரு சீரான வளர்ச்சியைத் தளராது நீடிக்கச் செய்கிறது. வாழ்க்கைக்கு உலகப் பொருட்களும் உடலின் துணையும் தேவைப்படுவது போலவே, அறிவுத் துணையும், அழகியல், பண்பாட்டு, சமுதாய, மதவலிவும் தேவைப்படுகிறது என்ற கருத்தை ஸ்பிராங்கர் வலியுறுத்தினார். இரண்டாவது குழுவினைச் சேர்ந்த மதிப்பீடுகளே மிகவும் முக்கியமானவை. அவையே வாழ்க்கைக்குப் புதுப்பொலிவும், அமைவு நோக்கும் வழங்கக் கூடியன. சமூகப் பண்பாட்டில் நன்கு வேரோடியிருக்கும் ஒழுக்க நியதி மதிப்பீடுகளை குழந்தைகள்

தனதாக ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு கல்வி ஒரு ஊடகமாக உருவாகியுள்ளது. மதிப்பீடுகள் பற்றிய ஜாகிர்சாகிப்பின் கருத்து, தனி மனிதர்கள் குழுக்களின் மீது மதிப்பீடுகளின் தாக்கம், சமூக மெய்ம்மைகளுடன் மத நம்பிக்கைகளை ஒருமைப்பட செய்வதற்கான அவரது அணுகுமுறை, ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுப் பாங்கத்தின்மீது கடவுள் பற்று, நம்பிக்கைகள் இவற்றின் தாக்கம் இவை பற்றிய அவரது சிந்தனைகள் அனைத்தும் ஸ்பிராங்க்லர் சிந்தனைகளின் செல்வாக்கு பெற்றவை.

ஒரு மனிதர் உண்மையில் கற்றவரா, கல்லாதவரா? என்பதை வரையறுக்க ஐந்து வரையறைகளை நிலை நிறுத்தினார். முதலில், கற்றறிந்த ஒருவர் மனிதர்கள் செயல்களின் மதிப்பீடுகள் பற்றிய தனிப்பட்ட ஒரு கருத்துக் கோணத்தைக் கொண்டிருப்பர். கண்களை மறைக்கும் கடிவாளத்தை அவர் அணிவதில்லை. இரண்டாவதாக, புதிய மதிப்பீடுகள், புதிய பொதுக்கருத்துக்களை அவர் முழுமனதுடன் ஏற்கிறார். மரபுகள், உள்ளார்ந்த தடை உணர்வுகளால் அவர் தளைப்படுத்தப்படுவதில்லை. மூன்றாவதாக ஒழுக்க நியதிகளுக்கான அகத்தூண்டுதலை அவர் பெற்றிருப்பார். நல்லது என்ற நிலையிலிருந்து சிறந்தது எனும் நிலை நோக்கி அவர் நகர்ந்து கொண்டிருப்பார். மனநிறைவடைந்தவராகவோ, தான் முழுமையானவன் எனும் உணர்வு கொண்டவராகவோ அவர் இருக்க மாட்டார். நான்காவதாக, அவர் ஆணவ வீராப்பானவராகவோ, குருட்டுப் பிடிவாதமான மதகுரு போன்றோ, அதிகார மனப்பான்மை மிக்க ஆட்சியாளர் போலவோ இருக்கமாட்டார். பிறரது கருத்துக்களுக்கு இடம்தரும் நெகிழ்வுள்ளவராக இருப்பார். ஐந்தாவதாக, நுண்ணாய்வு சார்ந்த நுட்பத் திறமைகளின் மீது தனது மதிப்பீடுகளை எழுப்பிக் கொள்வார். தனது சிந்தனைகள், செயல்கள், உணர்வுகளை ஒளிரச் செய்யக்கூடிய தன் சுயத்தின் மீதான ஐயங்களைத் தெளிவிப்பதற்காக அவர் கடுமையான முயற்சிகள் செய்வார். குழப்பம் கொண்டு அலைந்து திரிபவராக அவர் இருப்பதில்லை. 1958ல் தனது படேல் நினைவு சொற்பொழிவில் இந்த சிந்தனைகளை ஜாகிர்சாகிப் விளக்கமாக எடுத்துரைத்தார்.

இன்னும் பல்வேறு களப்பகுதிகளிலும், ஜாகிர் சாகிப்பின் மீதான ஜெர்மானிய செல்வாக்கு வெளிப்படையாகவே தெரிந்தது. பண்பாட்டுப் பெட்டகத்தில் உள்ளடக்கி வைக்கப்பட்டிருக்கும் மதிப்பீடுகளை மேல் தளத்திற்குக் கொணரும் இன்றியமையாத வழிமுறையே கல்வி என்று அவர் கருதினார். உணவு தரும் ஊட்டத்தால் உடல் வளர்வது போலவே, சிறந்த பண்பாட்டுக் கூறுகளால் மனமும் வளர வேண்டும். உடலானது எப்போதும் ஒரே வகையான உணவை நுகர்ந்து மகிழ்வதில்லை. அதைப் போன்றே

மனமும் ஒரு மாற்றத்தை நாடுகிறது. தொடர்ந்த கடைபிடிப்பிலிருந்து ஒரு சுமைத்தணிவாக உடலுழைப்பு அமைகிறது. சிந்தனைகளுக்கு உருவம் தரப்பட்டது போல் இருக்கும் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் கடந்த காலங்களில் சிறந்திருந்த இலக்கியம், இசை, தத்துவம், மதம் ஒழுக்க நியதி, புற ஒழுகலாறுகள், கலைகள் கைத்தொழில் ஆகிய துறைகளிலிருந்து மரபுரிமையாக பெறப்பட்டவை. கடந்த காலத்தில் சிறந்திருந்த மனித மெய்ம்மைகளின் விளைவாக அவை உள்ளன. இத்தகையப் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக் கொண்டு அவற்றைத் தனி மனித மனத்தின் இயக்க ஆற்றலாக கல்வி மாற்றுகிறது. இந்தச் செயல்முறை எளிதானதன்று. தனிமனிதன், கடந்த காலத்துடன் ஒரு தொடர்பை நிலைநிறுத்த வேண்டியுள்ளது. கடந்த காலத்தின் தூதுரைகளை உருமாற்றம் செய்வித்துத் தனக்குப் புரியும் விதத்தில் அமைத்துக் கொள்வதற்கு அதன் அலை நீளத்திலேயே இருக்க வேண்டியிருக்கிறது. பண்பாட்டுப் பெட்டகத்தை உருவாக்கியிருக்கும் பழங்காலச் சிந்தனையுடன் அவன் ஒரு உறவைக் கொண்டடேக வேண்டியிருக்கிறது.

ஜாகிர்சாகிப் மீது துவேயின் செல்வாக்கு சில நோக்குகளில் காணப்படுகிறது. மனித அனுபவங்கள் அவற்றின் மறுசீரமைப்பு, மறு கட்டமைப்பு இவற்றின் முழுமையை ஏற்றுக் கொண்டதிலும், அத்தகைய அனுபவங்களில் புதிய அர்த்தம் காணும் அதன் திறத்திலும் அடுத்தடுத்து நேரிடக்கூடிய அனுபவங்களைச் சேர்ப்பிக்கவும், வழிகாட்டவும் கூடிய அதன் திறமையிலும் ஜாகிர்சாகிப் முதலாவதாக நாட்டம் கொண்டார். இரண்டாவதாக, தனி மனிதன் அவனது தான் எனும் அகந்தையைக் கீழ்ப்படியச் செய்து மேன்மைப்படுவதை எதிர்பார்க்கும், பரம்பொருளுடன் முழுமையாக இணையும் ஆன்மீக அனுபவமாக அமையும் இஸ்லாமியப் பண்பாட்டு உயர் நிலை ஒழுக்கவியல்புகளுக்கு வெகு நெருக்கமாக துவேயின் "கற்றலில் சமூகப் பெருமானம்" வந்ததால் அது ஜாகிர் சாகிப்பின் மனதை வெகுவாகக் கவர்ந்தது. பிரபஞ்சத்தைப் பிரதிபலிப்பது மனித இலட்சியம். மனிதப் புரிதலுக்கான ஒரு புறப்பொருளாக இயற்கையை ஏற்றுக் கொள்வதும், மிகப் பெரிய எந்திரத்திலுள்ள சிறிய பிணைப் பூசியாக தனி மனிதனைக் கருதி, பிணைப்பூசி எந்திரத்தின் ஒரு பாகமாக மட்டுமே இருக்கிறது எனும் அடையாளத்தை நிறுவுவதாகவும் தெரிவிக்கக்கூடிய சமய சொற்றொகுதியாக இது இருக்கிறது. தனிமனித மனத்தை ஒரு தனி அலகாக அல்லாமல் சமூக வாழ்வின் ஒரு செயல்பாடாகவே துவே எண்ணிப் பார்த்தார். சமூகப் பணியாற்றுபவர்களின் இடையறாத ஒத்துழைப்பு அதற்குத் தேவைப்பட்டது. ஜாகிர்சாகிப் தனது எழுத்துக்களிலும், பேச்சிலும் இத்தகைய சமூக மதிப்பீட்டு நோக்கை வலியுறுத்தினார்.

மூன்றாவதாக, சமூக வாழ்க்கை அனுபவத்தை குழந்தைகள் ஈட்டக்கூடிய இடமாக, சமூக வாழ்வின் இன்றியமையாத ஒரு பகுதியாக பள்ளிகளை துவே கருதினார். உண்மையில் சமூக வினைச் செயல்களின் சிறந்த மாதிரியை உருவாக்கக் கூடிய ஒரு ஆய்வுக் கூடமாக பள்ளிகளை உருவாக்க ஜாகிர்சாகிப் விரும்பினார். நான்காவதாக, கல்வியின் பயன்பாட்டு அங்கத்தை துவே வலியுறுத்தினார். இந்த வழியில் இந்தியாவில் பரிசோதனை நடத்திய முதல் மனிதர் ஜாகிர்சாகிப் ஆவார். அவருடைய கல்வித் திட்டத்தில் உழைப்பனுவத்திற்கு மிகப் பெரிய முதன்மை தரப்பட்டிருந்தது. ஜாமியாவில் உழைப்புப்பள்ளி பற்றிய சிந்தனைகளை அவர் முறைப் படுத்தியதில் கெர்சென்ஸ்டீனர், துவே, காந்திஜி ஆகிய முப்பெரும் சிந்தனையாளர்களின் செல்வாக்கும் இடம்பெற்றிருந்தன. கெர்சென்ஸ்டீனிடமிருந்து அவர் "செயற்பள்ளி" பற்றிய கருத்துப் படிவத்தையும், துவேயிடமிருந்து உழைப்பனுபவம் பற்றிய எண்ணங்களையும், காந்திஜியிடமிருந்து செயல்திறம், கைவினை பற்றிய சிந்தனைகளையும் இன்றியமையாத நோக்குகளாக அவர் பெற்றார் ஆயினும் இந்த பயன்பாட்டு அங்கத்திற்கு ஆற்றுப்படுத்தும் புதிய பயிற்சியை ஜாகிர்சாகிப் அளித்தார் என்பதே உண்மை. அடிப்படைக் கல்வி பற்றிய அவரது அறிக்கை தேசத்தின் கல்விச் சீர்திருத்தத்திற்கு அவரளித்த சிறப்பான கொடையாகும். கோட்பாட்டியல் அறிவின் செய்முறை அங்கமானது அனுபவத்தின் ஒரு பகுதியாக மாறும் விதத்தில் அறிவியலை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் எனும் துவேயின் பரிந்துரை ஜாமியாவில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது. துணி வெளுத்தல், சாயமிடல், சோப் தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்றவற்றைக் குழந்தைகள் பயின்றால் எண்ணெய், கொழுப்பு, அமிலங்கள் போன்றவற்றின் வேதியல் தன்மைகளை அவர்கள் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஐந்தாவதாக, பயிற்றுமுறை கலைக்கு ஜாகிர்சாகிப் மிகுந்த பங்களிப்பு செய்துள்ளார். குழந்தையின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைந்து உதவக்கூடிய நிலைமைகளுக்கு வசியப்படுவபராக அவர் இருந்தார். ஆசிரியத் தொழிலின் ஆற்றலை மேம்படுத்தக்கூடிய கல்வி உளவியலில் ஆழமான அகப்பார்வையை இயல்பாகவே அது ஏற்படுத்தியது. ஜாமியாவில் ஆசிரியர் பயிற்சிக் கல் லூரி ஒன்றையும் அவர் நிறுவினார். மேம்பட்ட பயிற்சி முறைகளை அதில் சோதித்தும் பார்த்தார். ஒரு ஆசிரியர், நிரம்பி வழியும் அளவுக்கு நிறை நிலையுடையவராகத்தான் இருப்பது போல தனக்குத்தானே முதலில் கற்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறந்த ஆசிரியர் எனும் கருத்தைப் பற்றி அவர் பேசும்போது "நல்லாசிரியர்" ஒருவர் எப்படி ஒழுக்கமுறை, சமயநெறி மதிப்பீடுகளுள்ள ஒரு சமூக வகையைச்

சார்ந்தவராக இருக்கிறார், குழந்தைகளிடம் சால்பு பற்றி எண்ணங்களை எப்படி ஊ ட்டி வளர்க்கிறார், மனிதர்கள், பொருட்களில் உள்ள அழகை குழந்தைகளைக் காண வைப்பதற்கு எப்படி அவர் முயற்சிக்கிறார், பிறரிடமுள்ள சிறந்த தன்மைகளைப் பாராட்டும் இயல்புடையவர்களாக அவர்களை எப்படிமாற்றுகிறார், தன்னைத் தானே பயனுள்ள ஓர் உயிருருவாக முதலில் மாற்றிக் கொண்டு குழந்தைகளையும் அவ்வாறு உருவாக்குவதற்கு எப்படி எல்லாம் முயற்சிக்கிறார் என்பன போன்ற பல்வேறு நோக்குகளில் கருத்தூன்றி நீடித்து அவர் பேசுகிறார். நல்லாசிரியர் ஒருவரின் வாழ்க்கைத் திரளுருவின் மீதுள்ள அடையாள முத்திரை "அறிவு" என்பதல்ல, "அன்பு" என்பதே. மனித குலத்தை அவர் மிகவும் நேசித்தார். அழகையும் நன்மையையும் நாடியவர்களை அவர் விரும்பினார். முழு உலகமும் அவர் மீது நம்பிக்கை குலைந்திருந்த நிலையில், இரண்டு ஆன்மாக்கள் மட்டுமே அவரோடு திடமாக ஒட்டிக் கொண்டிருந்தன. ஒருவர் அவரது தாயார். இன்னொருவர் அவரது ஆசிரியர்.

ஆசிரியர் தொழில் பற்றிய தனது எண்ணங்களை ஜாகிர்சாகிப் விரித்துரைக்கிறார். கூலிக்காக வேலை செய்யும் ஒருவர் ஆசிரியரல்லர். கல்வி ஒரு வணிகமோ, தொழிலோ அன்று. எதிர்காலத்தைக் கட்டியமைக்கும் பொறுப்பாட்சி நிலையம் அது. நிலைமைகளை மேம்படுத்துவதற்கான ஒரு அறைகூவலே கல்வி. சமூகத்திற்கும், நாட்டிற்கும் தனது கடமைகளை வெற்றிகரமாகவும், பயன்தரும் வகையிலும் நிறைவேற்றுவதற்குத் தனிமனிதனை இயலச் செய்யும் வகையில் மனிதனின் நுட்பத் திறமை வளர்ச்சிக்கு துணையிருந்து உதவும் பயனுடையது ஆசிரியர் தொழில். டாக்டர் குன்னார் மிர்தால் எனும் சிறந்த பொருளியல் வல்லுநர் தனது ஆசிய நாடகம் : தேசங்களின் வறுமை பற்றிய ஒரு விசாரணை எனும் நூலில், போதுமான பரவலின்மையும், தரத்தில் குறைபாடும் ஊறுபாடுள்ள உள்ளடக்கமும் கொண்ட "ஒவ்வாத கல்வி" முறையாலேயே ஆசியாவில் வறுமை விளைந்தது என்று கூறும் நோக்கினை இவரும் ஆதரிக்கிறார். எனவே கல்வியில் அடிமூலந்துருவிய நிலைமாற்றம் அவசரத் தேவையாக இருக்கிறது. அதற்குப் பெரிய முதலீடும் தேவைப்படுகிறது. நாடு எவ்வளவுக்கெவ்வளவு வறுமையுடையதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு முதலீடு மிகுதியாகத் தேவைப்படுகிறது. ஆசியாவிலுள்ள வறுமை மிகுந்த நாடுகள் சுற்றிச்சுற்றி ஒரே இடத்தில் கொணர்ந்து விடும் செக்குப் பாதையிலேயே சுழல்கின்றன. வறுமை மிகுந்திருப்பதால் சிறந்த கல்விக்கு வாய்ப்பில்லை. பொருத்தமான கல்வியில்லாமல் வறுமை மறையாது. இந்தியா விரைவான முன்னேற்றம் காணவே ண்டுமெனில், இத்தகைய நச்சுச்சூழலைத் தகர்த்தெறிய

வேண்டும். "சிறப்பான திட்டமிடல், மிகுதியான மனித முயற்சி, அர்ப்பணிப்பு, இலட்சிய மனப்பாங்கு, எளிமை, கிடைக்கக் கூடிய வளங்கள் அனைத்தையும் தீவிரமாகப் பயன்படுத்திக் கொள்ளுதல்" ஆகிய இவற்றின் மூலமே இவ்வறுமையைத் தகர்க்க முடியும்.

ஜாகிர்சாகிப்பிற்கு ஏற்பட்ட மூன்றாவது தாக்கம் காந்திஜியிடமிருந்து வந்ததா ம். ஜாமியாமிலியா தேசியக்கல்வி மையம் காந்தியக் கனவின் விளைவாகும். வார்தா திட்டத்துடன் சேர்ந்து அப்போதுதான் வெளிப்பட்டது எனக் கூறவியலாத காந்தியக் கல்வித் தத்துவத்தின் மீது ஜாகிர் சாகிப் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அதனுடையவேர்கள் தென் ஆப்பிரிக்காவில் டால்ஸ்டாய் பண்ணையில் பதிந்திருந்தன. சபர்மதி ஆஸ்ரமத்திலும் சேவா கிராமத்திலும் பின்னாளில் அது வெளிப்பாடு கண்டது. 1937ல் மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைந்த கையோடு, கல்வித் துறையில் தேசிய சிந்தனைகளைப் பெயர்த்துப் புகுத்தும் நம்பிக்கையை வளர்த்த வார்தா திட்டம் அரங்கேறியது. கல்வி அதுவரை, வாழ்க்கையின் மெய்ம்மைகளுடன் பொருத்தப் பாடுடையதாக, கற்போரின் அன்றாட வாழ்வோடு தொடர்பு கொண்டதாக இல்லாமல் புத்தக மையக் கல்வியாக மட்டுமே இருந்து வந்தது. மக்களின் பண்பாட்டுப் பொதுப்பண்புகளின் மீது அது பிணைப்பைப் பெற்றிருக்கவில்லை. ஒருவன் தனது அன்றாட உணவை ஈட்டுவதற்கான கருவியாக மட்டுமே அது இருந்தது. அப்படிப்பட்ட ஒரு முறையால் மிக அதிகமான காலவிரயமும், பணவிரயமும், சக்தி விரயமும் விளைந்தன. தேசத்தின் முன்னுள்ள பிரச்சினை கல்வியை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துவதும், மக்களின் அறியாமையை அகற்றும் விதத்தில் அதனைப் பரவலாக்குவதுமே.

ஏட்டறிவை நிராகரிக்கும் ஒரு திட்டத்தைத் தயாரிப்பதிலும் நாட்டின் பயனுள்ள குடிமக்களாக வருவதற்கு குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதிலும் ஜாகிர்சாகிப் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். கல்வியானது மனதை, உடலை, ஆன்மாவைப் பயிற்றுவிப்பதைக் குறிப்பதாக இருக்குமாயின் தலை, கை, இதயம் ஆகிய அனைத்துமே முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கக்கூடிய கைவினைக்கலையொன்றின் மூலமாகவே கைகளுக்கான பயிற்சி கிடைத்தது. காந்திஜி உற்பத்திக் கூறினை மிகுதியாக வலியுறுத்தினார். ஜாகிர்சாகிப் உற்பத்திக் கூறினை அறிவாற்றல் பகுதியுடன் ஒருங்கிணைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். கல்விக்காகும் செலவுகளில் ஒரு பகுதியை உற்பத்திச் செயல்பாடுகள் மூலம் ஈடுகட்டாத வரை கல்வியை அனைவருக்கும் உரியதாக்குவது கடினம் என்று காந்திஜி கருதினார். காந்திஜி கருத்தில் கொண்டிருந்த மற்றுமொரு கூறு குழந்தையின் பிற்காலவாழ்வில் அதன் பிழைப்பிற்குப் பயன்படக்கூடிய ஒரு

திறனைப் பயிற்றுவிப்பதாகும். பெருக்க முற்றிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் தேவைகளை நிறைவேற்ற உழைப்பாளர்கள் எப்போதும் தேவைப்படுகிற சிறந்த வாழ்க்கைத் தொழில்களாக நெசவும், நூல் நூற்பதும் இருக்கும். இந்தியாவில் குடிசைத் தொழில்களுக்கான வித்தினையும் அவை ஊன்றும்.

இந்தக் கருத்தை ஜாகிர்சாகிப் ஏற்றுக் கொண்டார். ஆனால், இதனை மிகுதியாக வலியுறுத்துவதால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்தவராக அவர் இருந்தார். குழந்தைகளை ஆலைத் தொழிலாளர்களாக மாற்றுவதற்கானதாக இல்லாமல் அவர்கள் ஒருங்கிணைந்த ஆளுமை பெற்று வளர்வதற்கு உதவக்கூடிய வகையில் அறிவு, ஒழுக்கம், உடல் ஆகிய மூன்றின் தனிப்பட்ட நுட்பத்திறமைகள் அனைத்தையும் சரியாகப் பயன் படுத்திக் கொள்வதை அவர் ஆதரித்தார். குழந்தைகள் அதுநாள்வரை எழுத்தர்களாக்கப் படுவதற்காக பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு வந்தனர். இப்போது அவர்கள் வெறுமனே திருப்புளியைத் திருப்புவதற்கு பயிற்சி தருதல் கூடாது. இந்த இரண்டு தொழில்களில் எழுத்தர் தொழிலே கௌரவமானது என்று பெற்றோர் நினைப்பதால் அதனையே அவர்கள் தேர்ந்தெடுப்பர். உற்பத்தித் திறனை வலியுறுத்துவது காந்திஜியின் கொள்கை. ஆனால் தனது குழந்தைகளின் எதிர்காலத்துடன் தொடர்புடைய இந்த முன்மொழிதலை தேசம் ஏற்குமா? தங்களின் ஆதாயங்களுக்கு அச்சுறுத்தல் தருகிற சூழ்நிலைக்கு பெருவணிகமும், தொழிற்சாலைகளும் எப்படி எதிர் வினையாற்றும்? இந்தியாவின் திட்டங்கள் முழுவதும் குடிசைத் தொழிலை மையமாகக் கொண்டிருக்கும் போது வலிமையான ஒரு பொருளாதார சக்தியாக அது எப்படி உருவாக முடியும்? ஜாகிர்சாகிப் இந்தப் பிரச்சினைகள் மீது நிறைய சிந்தனைகளைச் செலுத்தினார். தன்னுடைய அடிப்படைக் கல்வித் திட்டத்தில் பொருத்தமான யோசனைகளையும் தெரிவித்தார். அவரது பல பரிந்துரைகள் எதார்த்தவாதிகளின் உளங்கொள்வதாக இருந்தன. இன்னும்பல, காந்தியவாதிகளை மனவருத்தம் கொள்ள வைத்தன. வேறுபல, அதிகாரிகளைக் கலக்கம் கொள்ளச் செய்தன. காங்கிரஸ் அமைச்சரவைகள் ஆட்சியில் இருந்தவரை இத்திட்டத்தை அதிகாரிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு புகழ்ந்துரைத்தனர். ஆனால் காகிதத்திலோ எதையுமே செயல்படுத்த முடியாது என்று எழுதி சூழ்ச்சி வலை பின்னினர். 1939 ல் காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகியபோது இந்தத் திட்டத்தின் மீது மிகுந்த எதிர்ப்பு உணர்வு கொண்டவர்களாக அதிகாரிகள் மாறிவிட்டனர். ஆலோசனைக் குழுத் தலைவர் பதவியில் இருந்து 1948ல் ஜாகிர்சாகிப் கடும் சீற்றம் கொண்டு விலகினார்.

வார்தா திட்டம் தேசிய அளவில் செயல்படுத்தப்படாவிட்டாலும், ஜாகிர் சாகிப் இந்தத் திட்டத்தில் தொடர்ந்து ஆர்வம் கொண்டிருந்தார். செயல்வினைப்பள்ளி ஜாமியாவில் சிறிதும் தளராது நடித்தது. இந்தப் பிரச்சினை பற்றி அவர் ஆழமாக எதிரொலித்ததோடு தீர்வுக்குரிய முக்கியமான சில யோசனைகளையும் வெளியிட்டார். முதலாவதாக, எந்தக் கல்விச் செயற்பாடும் மனித மனத்தின் விளைவேயாகும். இரண்டாவதாக, மனிதன் பயனுள்ள குடிமகனாக வாழ உதவுவதே அதன் நோக்கம். மூன்றாவதாக உடலுழைப்பானது மூளை உழைப்பின் ஒரு பகுதியே. நான்கு, வெவ்வேறு மூளை செயற்பாடுகளை உள்ளடக்கி இருப்பதால் கல்வி உழைப்பு நோக்கி உடலுழைப்பு செல்கிறது. என்ன செய்யப்படவேண்டும் என்பது பற்றிய தெளிவான சிந்தனை முதலில் தேவைப்படுகிறது. ஒரு இடுபணியை நிறைவேற்றுவதற்கான சரியான திட்டமிடல், தேவையான பொருள் வகைகளை முயன்று பெறுதல், கால நிரலை நிர்ணயித்தல் ஆகியன மூளை உழைப்பை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள செயல்கள். இறுதியாக, எண்ணத்தில் கருக்கொண்டது எதுவோ அதன் வெளிச்சத்தில் முடிவுகளை மதிப்பிடுவதும் கூட மன கவனத்தை வேண்டுகிறது. இப்படி, ஒன்றைப் பற்றி எண்ணுதல், திட்டமிடல், செயற்படுத்துதல் மதிப்பிடுதல் என்பன குழந்தைகளின் வினைத் திறங்கள் பலவற்றையும் கோருகிற விதத்தில் அவர்களுக்குக் கற்பிக்கின்றன. சிந்தனைத் திறத்தை, படைப்பாற்றலை, உழைப்பு நெறிமுறைகளை, பொறுமையை, செயல்திறத்தை மேம்படுத்துவதால் இந்த வழிமுறை அனைத்துமே பயிற்றுவிப்பாகிறது.

காந்தியடிகள் முன்வைத்து, ஜாகிர்சாகிப்பால் சீர்திருத்தப்பட்டதன்படி கட்டாயக் கல்வி, தொழில் தொடர் பிணைவு எனும் இருமையக் கருத்துக்களை வார்தா திட்டம் கொண்டிருந்தது. இரண்டுமே இன்றியமையாத கூறுகளாக இருந்தன. நெசவு, பூத்தையல், தையல், கத்தரித்தல் புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், தச்சுத்தொழில், நூல் நூற்பு ஆகியன அப்போது நினைக்கப்பட்ட கைவினைத் தொழில்களாக இருந்தன. செய்து பார்த்தல் மூலமாகவே உண்மையான கல்வி என்பது வழங்கப்பட முடியும் என்று ஜாகிர்சாகிப் உறுதியாக நம்பினார். உடலுழைப்பை கல்வியின் மையமாக பல்வேறு கல்வியாளர்கள் ஆக்கியிருந்தனர். அமெரிக்காவில் இந்த முறை திட்டமுறைமை என்றும், ரஷ்யாவில் பல்கூட்டுமுறைமை என்றும் அழைக்கப்பட்டது. "செயல்வினைப் பள்ளி" எனும் கருத்துப்படிவம் ஜெர்மனி முழுவதிலும் ஆர்வத்தை எழுப்பி இருந்தது. சில கைத்திறன்களை பள்ளியளவில் கட்டாயமாக்கும் முயற்சி இந்தியாவிலும் கூட மேற்கொள்ளப்பட்டது. ஜாகிர்சாகிப் தயாரித்த திட்டம் தேசிய அளவில் ஏழு வயது வரை கட்டாயக் கல்வி என்ற நோக்கம் கொண்டதாக இருந்தது. குழந்தையின் தாய்மொழியே பயிற்றுமொழியாக

இருக்க வேண்டும். கல்வியின் அனைத்து நிலைகளிலும் சிலவகை உடலுழைப்பும், உற்பத்திச் செயலும் கட்டாயமானதாக இருக்க வேண்டும். வேண்டிய போதனைகள் பயிற்சிகள் அனைத்தும் குழந்தையின் சூழலுக்கு உகந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மையக் கைவினைத் திறனுடன் ஒருங்கிணைந்த உறவுடையதாக இருந்தன. இப்படி வழங்கப்படும் கல்வியும் பயிற்சியும் பள்ளியை நடத்துவதற்காகும் செலவுகளில் ஒரு பகுதியை மட்டுமாவது ஈடுகட்டுவதை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் கருத்துக்கோள்களை ஜாகிர்சாகிர் முன்பே ஜாமியாவில் அவர் நிறுவிய உழைப்புப் பள்ளியில் செயல்படுத்திப் பார்த்திருந்தார். குழந்தைகளை எந்திரமாக்கும் மனனப் பயிற்சி தரும் புத்தகப்பள்ளிகளிலிருந்து வேறுபட்டதாக இது இருந்தது. புதிய உழைப்புப் பள்ளியிலோ, செயல்முறை சார்ந்த பகுதியானது குழந்தைகளின் அறிவாற்றல், கைத்திறன் இரண்டையும் முன்னேற்றும் வகையில் உருவாக்கி அமைக்கப்பட்டிருந்தது. இத்தகையதொரு பயிற்சி அவனுள் ஆர்வத்தைத் தூண்டிவிடும். கடமைப் பொறுப்பு ஒன்றை தனது கைகளால் நிறைவேற்றும்போது அது அவனுக்கு மகிழ்ச்சியைத் தரும். தனது உழைப்பின் பயனைக் கண்ணுறும்போது அவன் மிகுந்த அகமகிழ்வு கொள்வான். தனக்குச் சொந்தமான செயல்முறை ஏற்பாடு ஒன்றிற்குத் திட்டமிடுபவனாக இருக்கக்கூடிய வாய்ப்பையும் அவன் பெறுவான். தனது சுற்றுப்புறத்தில் தன்னோடு பரிச்சயமுள்ள ஒரு கலையையோ கைவினைத் தொழிலையோ அவன் கற்றுக் கொள்வான். இத்தகையதொரு பயிற்சி தனக்கு சரி இணையானவர்களோடு இணைந்து வாழவும் உழைக்கவும் உதவும். சமூக மதிப்பீடுகளை குழந்தைகளின் மனதில் ஆழப்பதிய வைக்கும். உழைப்பின் பெருமையை அக்குழந்தை போற்றும். ஒரு குறிப்பிட்ட அளவில் உழைப்பு நெறிமுறைக் குறைபாடுகளின் காரணமாகவே இந்த தேசத்தில் வறுமை ஏற்பட்டது. எனினும், இத்தகைய பள்ளிகள் நாட்டின் வேலையின்மை, வறுமைக் கொடுமைகள் அனைத்திற்கும்சர்வ சஞ்சீவியாக இருந்து மருந்தளிக்கின்றன என்று ஜாகிர்சாகிப் ஒருவரிடமும் உறுதியளிக்கவில்லை. உழைப்புப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பயனுடைய எந்த வேலையையும் விரும்பத்தக்கதாக, பெருமை தரத் தக்கதாகவே பார்ப்பார்கள் என்பதால் இம்மாணவர்கள் வேலையில் ஈடுபடுத்துவதற்கு அதிகம் உகந்தவர்கள். ஒப்பிட்டு பார்க்கும்போது, தங்கள் சொந்தக் கால்களில் நிற்கும் நாட்டம் அதிகம் கொண்டவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்று மட்டுமே அவர் சொல்வார்.

இந்தப் பரிசோதனை தேசிய அளவில் வெற்றி பெறவில்லை. இத்தகையதொரு திட்டம் சமய போதனைகளைப் புறக்கணிக்கிறது, முற்றிலும் சமய சார்பற்றதாக இருக்கிறது என்று அச்சத்தால் இடப்பட்ட

கூப்பாடு ஒன்று எழுந்தது. சிக்கலான ஒரு சமூக அமைப்பில் சமய போதனையை இடம்பெறச் செய்வது எண்ணற்ற இடர்ப்பாடுகள் நிரம்பியதாகும். ஆனாலும், இந்தத் திட்டத்தின் முதன்மையான மெய்க்கோள்களில் ஒன்று எல்லா சமயங்களையும் மதிப்பது என்பதாகும் என்று ஜாகிர் சாகிப் விளக்கினார். சரியான கல்வி முறையின் மூலம் தேசத்தை ஒன்றுபடுத்தி தேசிய ஒருமைப்பாட்டைக் கொணர்வது அவரது சிந்தனையில் முதன்மையான நோக்கமாக இருந்தது. வேற்றுமையின் மீதன்றி இணக்கத்திற்கான சக்திகளுக்கு உரம் தருகிற வழிமுறை பள்ளி அளவிலேயே தொடங்கப்படலாம். அனைத்து சமயங்களைச் சார்ந்த குழந்தைகளும் பயிலக்கூடிய பலவின் ஆக்கம் சேர்ந்த பள்ளியைப் பெறுவதே அவரது எண்ணமாக இருந்தது. காந்திஜி ஆர்வம் காட்டினார் என்பதற்காக மட்டுமின்றி, இவரது ஆர்வத்திற்குரிய பகுதியாகவும் அதுவே இருந்ததால் அடிப்படைக் கல்வியில் ஜாகிர் பேரார்வம் காட்டினார். அதைப் பற்றி சிறப்பான அளவுக்கு அவர் சிந்தித்தார். அதனுடைய செயல்பாட்டை ஜெர்மனியில் அவர் கண்டிருந்தார். அதன் பரீட்சார்த்தம் பற்றிய ஆய்வொன்றை இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவில் அவர் செய்திருந்தார். இந்தியாவிலுள்ள மக்கள் திரளுக்குக் கல்வி புகட்டுவதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். தனது வயதைக் காட்டிலும் அதிக ஊக்கமாக அவர் இருந்ததும், அவருடைய சிந்தனை ஆற்றொழுக்கினை மக்கள் பற்றிக் கொள்ளவியலாததும் இடை யூறுகளாகும். காலம் செல்லச் செல்ல மக்கள் அவரை நன்றாகப் புரிந்து கொள்ளவும், போற்றவும் செய்வார்கள் என்பதால் ஒரு வகையில் அவர் வரு மரபைச் சார்ந்தவராகிறார்.

வேலையனுபவம், செயல்வினைப்பள்ளி பற்றிய கருதுகோள் இவற்றைத் தவிர நமது கல்வி முறையில் ஜாகிர்சாகிப் உட்செலுத்த நினைத்த இரண்டாவது பெரிய சீர்திருத்தம் பண்பாட்டு நெறிமுறைகளைக் குழந்தைகளுக்கு வழங்குவது தொடர்பானதாகும். நம் மண்ணில் அளப்பரிய வகையில் பண்பாட்டுச் செல்வங்கள் இருக்கின்றன என்று அவர் வாதிட்டார். அவை மத, சமூக, இலக்கிய, தத்துவ, கலை, தொழில்நுட்ப வகையின. பல்வேறு வகைச் சிந்தனைகளின் விளைபயன்கள் அவை. ஆழ்ந்த ஆராய்ச்சியின்பாற்பட்ட, பயன்நாட்டமுடைய, முருகியல் சார்ந்த தன்முனைப்புள்ள பிறர்க்கென உழைக்கும் உழைக்கும் கோட்பாடுடைய, சமுதாயப் பொதுமுறையான சிந்தனைகள் அவை. ஒரு சிறந்த ஆசிரியர் இந்த எண்ணங்களை முதலில் உளங்கொள்ள வேண்டும். அதன்பிறகு அவைகளை மாணவர்களின் மனம் ஏற்குமாறு செய்ய வேண்டும். பயிற்றுவிக்கும் தொழில் திறத்தின் மூலமாகவும், அறிவாராய்ச்சித்திறம், வாதமுறை, விளக்கமளித்தல் ஒப்புமை மூலமாகவும், அனைத்திற்கும்

மேலாகத் தன்போதனைக்குத் தானே ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதன் மூலமும் இந்தப் பண்பாட்டுச் செல்வங்களை ஆர்வமுள்ளதாக, அறிவூட்டத்தக்கதாக, பயனுள்ளதாக ஆசிரியர்கள் ஆக்கவேண்டும். யாருக்குப் பயிற்றுவிக்கிறோம் என்பதையும் கூட ஆசிரியர் உணர்ந்தாக வேண்டும். அழகிய பொருட்களில் ஆர்வமுள்ள ஒரு மாணவன் எந்திர விந்தைகளைப் பாராட்டமாட்டான். எந்திர நுட்பத்தை விரும்பும் ஒரு குழந்தை சிந்தனை வாழ்வின் சாதனைகளை விரும்பாது. வணிக மனமுடைய குழந்தை நன்னெறி, நீதிமுறைமைகளில் ஆர்வம் காட்டாது.

ஜாகிர்சாகிப் கொணர விரும்பிய மற்றொரு மாற்றம் பண்புருவாக்கும் செய்யும் கருவியாகப் பள்ளியை உருவாக்க விரும்பியதாகும். ஜாமியாவில், அர்ப்பணிப்பு மனப்பாங்கு கொண்ட ஆசிரியர் குழாமைப் பெறும் நல்வாய்ப்பு அவருக்கு இருந்தது. புத்தமைவு காணும் இவரது பெரு முயற்சிகள் அனைத்திலும் அவர்கள் அதிகமாக உதவினார்கள். வெறும்புத்தக அறிவைப் பெறுவதினின்றும் விலகி ஒரு சமூக அரசியல் பொறுப்புணர்ச்சி இள நெஞ்சங்களில் ஊட்டப்படுகிற கூட்டு செயல்பாட்டு மையங்களில் இருப்பதற்கு குழந்தைகளுக்கு தாராளமாக இடமளித்தார்கள். சொந்த வாழ்விலும் தேச வாழ்விலும் நமது குழந்தைகளை மேம்பாடுறச் செய்கிற இலட்சியங்களை நாம் தந்தாக வேண்டும் என்று ஜாகிர் சாகிப் எதிர்நோக்கினார். ஜாமியாவும், இந்த நோக்கத்திற்காகவே உருவாக்கப்பட்டது. வல்லமையும், கடமை உணர்வும், உண்மையும் அழகும், நீதியும், நேரிய செயல்பாடும், தியாகமும் தொண்டும் ஆகிய இலட்சியங்கள் அனைத்துமே அறிவுத்தீ கொளுத்தப்பட்ட ஒரு மாளிகையை எழுப்புவதற்கு அடிப்படையான செங்கற்கள். கூட்டு செயல்பாட்டு இலட்சியங்களை நமது கல்வி நிறுவனங்கள் தனதாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நாளையும், ஆரோக்கியமான மனமும், உடலும், ஆன்மாவும் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் நாளையும் ஜாகிர்சாகிப் எதிர்பார்த்திருந்தார். வழுவற்ற திறனாய்வு முடிவும், நேரிதான உள்ளுணர்வும் பெறும் உறுதியான மனத் திட்பத்திற்கு அவர்கள் பயிற்றுவிக்கப் படுவார்கள். நேர்மையாகவும், வெளிப்படையாகவும், ஐயுறவு மனப்பான்மை அற்றவராகவும், நம்பிக்கைக்கு பாத்திரமானவராகவும், சகிப்புத் தன்மையும் பரந்த மனப்பாங்கும் உள்ளவராகவும் வளர்வதற்கு அவர்கள் அறிவுறுத்தப்படுவார்கள். ஆக, ஜாகிர்சாகிப் நம்முடைய கல்வி நிறுவனங்கள் தனிப்பட்ட சுயநாட்ட இடங்களாக இருப்பதிலிருந்து மாறி சமூக நன்மைக்கான உண்மையான உழைப்பிடங்களாக வேண்டும் என்று விரும்பினார். கோட்பாடுகளைப் பயிலும் இருக்கைகளாக வேண்டும் என்று விரும்பினார். கோட்பாடுகளைப் பயிலும் இருக்கைகளாக இருப்பதைவிட்டு மனித மதிப்பீடுகளின் பல்திறப்பண்புகள் நிறைந்த செயல் முறைசார்ந்த பயனுள்ள பயிற்சி

மையங்களாக வேண்டும் என்று ஆசை கொண்டார்.

கல்விக்கு ஜாகிர்சாகிப்பின் பங்களிப்பை மூன்று முக்கியமான பகுதிகளாக வகைப் படுத்தலாம். மதிப்பீடுகள் பற்றிய அவரது எண்ணங்கள் சமூகத்திலும் தனி மனிதரிடத்தும் அவை ஏற்படுத்தும் தாக்கம், மதிப்பீடுகள் சிறந்த சமூகப் பயன்களை விளைக்கச் செய்வதற்கான அவரது அணுகுமுறை, அவரது தத்துவங்களுக்கான அடிப்படை கூறினை நல்கும் அவரது சிந்தனையிலுள்ள மனித நேயக்கூறு. முதலில், அவரது தத்துவம் முழுவதிலும் உச்சநிலையில் நிற்பது மதிப்பீடுகள் பற்றிய வினாக்குறி. நிகழ்வுகளும் தொகைப்படுத்தலும், தகவல்களும் கற்போரின் மனப்பான்மை, ஒழுகலாறு, ஒழுக்க நியதிகளைப் போன்று கல்வியில் அவ்வளவு முக்கியமானவை அன்று. கல்வியானது "தனித்தனியாக ஒழுங்கமைதி செய்யப்பட்ட மதிப்பீடுகளின் உணர்வுத்திறத்தையே" குறிப்பாகச் சுட்டுகிறது என ஜாகிர்சாகிப் உணர்ந்தார். ஒவ்வொரு குழந்தையும் மதிக்கப்பட்டாக வேண்டிய ஒரு தனித்தன்மையைப் பெற்றுள்ளது. கற்பிக்கப்பட்ட ஒருவர் சீரான பரப்பு கொண்ட அறிவாற்றல் சார்ந்த தொடுவானத்தைக் கொண்டவராகத் திகழ்கிறார். மதிப்பீடுகள் அதன்மீது உடுக்கள் போல மின்னுகின்றன.

ஜாகிர்சாகிப் மதிப்பீடுகள் பற்றிய கருது கோளை உருவாக்குவதற்கு அதிகமாகத் துன்புற்று உழைத்தார். மனித விருப்பத்தை எடையிடுவதே மதிப்பீடு ஆகும். மனித விருப்பத்தை நிறைவேற்றும் அனைத்து சாதனங்களுமே மதிப்பீடுகளைக் கொண்டு இருக்கின்றன. அதனால் அவை சிறந்திருக்கின்றன. ஆனால், கீழான புலனுணர்வை விருப்பம் எனக் கருதிவிடக் கூடாது. சிறந்ததும், உயர்ந்ததுமான ஏதோ ஒன்றை நோக்கிய உள்மன உந்தவாவாக அது அமைய வேண்டும். கல்வி மேல்நோக்கிய ஒரு இயக்கம். மதிப்பீடுகளை அது தாழ்த்திவிடக்கூடாது. வாழ்க்கையைப் பேணக்கடிய ஒன்றாக, வாழ்க்கைக்கு வாய்ப்பு நலம் தருவதாக; வாழ்வை உயர்த்திப் பாதுகாக்கிற அமைதியை, ஒழுங்கை, பெருமையை, அழகை, பண்பை ஊட்டி வளர்க்கிற ஒன்றாக மதிப்பீடு ஆகத் தொடங்கியிருக்கிறது. மனிதனின் மகிழ்ச்சியும் கௌரவமும் மிக்க வாழ்க்கை அமைய சுய உணர்தலையும், ஊழ் அமைவையும் பெறுவதற்கு மதிப்பீடு உதவுகிறது. சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கான இயல்பான ஆற்றலை குழந்தை பெற்றுள்ளது. அந்த ஆற்றலும் உள்ளார்ந்த நிலையில் அதனுள் இருக்கும் மதிப்பீடேயாகும். இதனை மேல்தளத்திற்குக் கொணர்வதே ஆசிரியரின் பணியாகும்.

வகுப்பறைகள் அல்லது விளையாட்டு மைதானங்களில் மட்டுமே மதிப்பீடுகள் கற்பிக்கப்படவேண்டும் என்ற கட்டாயமில்லை. எந்த

இடத்திலும் அதனைக் கற்பிக்கலாம். அவரது கல்விச் சிந்தனைகளில் எட்டு வகைப்பட்ட மதிப்பீடுகளை நாம் அணுகி அறிய முடியும்; பொழுது போக்கு மதிப்பீடுகள். தோழமை மதிப்பீடுகள், பண்புரு மதிப்பீடுகள், பொருளாதார நடைமுறை வகை சார்ந்த மதிப்பீடுகள், முருகியல், அறிவாற்றல், மத, உடற்பண்பு மதிப்பீடுகள். அனைத்து உழைப்பிற்கும் தூண்டுதல் அளிக்கத் தேவையான ஆக்கக்கூறாக இருக்கிற பருப்பொருள் மதிப்பீடுகள் பொருளாதார மதிப்பீடுகளே. பொருளாதார ஆக்கக்கூறுகளில் ஜாகிர்சாகிப் அறநெறிக்கூறுகளையும் உட்புகுத்தினார். மனிதன் தன் வாழ்க்கையை சிறந்த வழிவகைகளின் மூலம் ஈட்டிக் கொள்ள வேண்டும். ஜாகிர் சாகிப்பின் செயல்திட்டங்களில் இந்திய மக்களுக்குக் கல்வியளிப்பது என்பது வாழ்வில் அவரது முன்னுரிமைகளை முடிவு செய்வதற்கு உதவக் கூடியதாக இருக்க வேண்டும் என்று பொருள்பட்டது. தனது உழைப்புப் பள்ளிகளும், உடலுழைப்பும், கைவினைத் திறமும் தேசப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சரியான முயற்சிகள் என்று அவர் கருதினார்.

இரண்டாவதாக, தனிமனித மதிப்பீடுகள் பற்றிய அவரது கருதுகோள் உடல் நலம், வலிமை, தூய்மை, குழந்தைகளை மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் வைத்திருக்கும் உடலோம்பல் போன்ற தேவைகளைக் கவனித்துப் பேணுவதாக இருந்தது. நல்ல பழக்கங்கள் ஒழுங்கு முறைமை, உடற்பயிற்சி, உணவூட்டம், ஓய்வு, பொழுது போக்கு ஆகிய அனைத்துமே ஆரோக்கியமான வாழ்விற்கு அவசியமானவை. இவையன்றி, கட்டுப்பாடுகளை மதித்து நடக்கும் பண்பு, தகைமை, நயத்தக்க நாகரிகம், பெருமைக்குரிய ஒழுகலாறு, கட்டுப்பாடு, பெருந்தன்மை, உதவும் தன்மை, இரக்க உணர்ச்சி ஆகிய பிற மதிப்பீடுகளையும் தங்கள் கல்வியின் ஒரு அங்கமாகக் குழந்தைகள் முயன்று பெற வேண்டும். இவற்றோடு நடத்தை மேம்பாடு, குறிக்கொண்ட கருத்தில் நாணயம், காலந்தவறாமை, ஒழுங்கு முறைமை, சிக்கனம், தன்னடக்கம், நேர்மை, பணிவு ஆகியவற்றையும் சிறந்த கல்வியின் அவசியமான கூறுகள் என அவர் சேர்த்தார்.

மூன்றாவதாக, தனி மனித மதிப்பீடுகளுடன், பிறர்க்கு வழங்கும் கடப்பாடுள்ள பொறுப்புணர்வு, ஏழைகளுக்காக இரக்கமும் கருணையும் கொள்ளும் உணர்வு, மனித மேன்மை உணர்வு, எல்லா மதங்களுக்கும் மதிப்பளிக்கும் உணர்வு, ஒதுக்கப்பட்ட மற்றும் சோர்வுற்றோரின் கடுந்துன்பத்தைப் புரிந்துகொள்ளும் உணர்வு ஆகியவற்றைக் குறிக்கும் சமூக மதிப்பீடுகளையும் அவர் பரிந்துரை செய்தார். சமூக மதிப்பீடுகளின்கீழ் சேவை, தியாகம், சகிப்புத் தன்மை, அன்பு, தேசபக்தி, தேசியம், மனிதநேயம், கூட்டுப் பொறுப்பு, ஒற்றுமை, ஒத்திசைவு மற்றும் கூட்டுறவு போன்ற கருது கோள்களை ஜாகிர்சாகிப் பரிந்துரைப்பார்.

நான்காவதாக, சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை ஜாகிர்சாகிப் மிக உயர்வாக மதித்தார். மனித இனத்தின் முடிவுகள், மனிதனின் அறிவாற்றல், சிறந்த வாழ்முறைகளைக் கண்டறியவும் ஒழுங்கமைதியுடைய சமூகங்களைக் கட்டமைக்கவும் அவற்றை அவன் எப்படிப் பயன்படுத்துகிறான் என்பதுமே பண்பாடு என்று அழைக்கப்படுகிறது. அறிவு, நம்பிக்கை, கோட்பாடு, கலை, ஒழுக்க நியதிகள், நடத்தை முறைகள், செயல்வழக்காறு, இன்னபிற செயல் வல்லமைகள் அல்லது சமூகத்தின் ஒரு அங்கத்தினராக மனிதன் பெற்றுக்கொண்ட பழக்கங்கள் அவற்றை உள்ளடக்கிய சிக்கலான முழுமையே பண்பாடு என்பது. மனித முன்னேற்றத்தை வடிவமைக்கும் சமூக, அரசியல், பொருளாதார, சமய, தத்துவ, இலக்கிய மற்றும் உளவியல் ஆற்றல்களை பண்பாடு கவனித்துப் பேணுகிறது. இந்தப் பண்பாட்டுச் சிறப்புப்பண்பு தேசத்தின் பெரு மிதத்திற்குரிய செழிப்பானதொரு புதையலை உருப்படுத்துகிறது. கல்வித்துறையில் இதனுடைய முக்கியமான பங்கை ஜாகிர்சாகிப் அதிகம் வலியுறுத்தினார். கல்விக் கட்டுமானம் முழுவதும் இந்த அடித்தளத்தின் மீதே நிற்க வேண்டும் என்று விரும்பினார்.

ஐந்தாவதாக, ஆன்மீக மதிப்பீடுகளை ஜாகிர்சாகிப் புறக்கணிக்க வில்லை. பண்பாடுகள் சமயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. அவை பெரும்பாலும் சமயங்களின் விளைபயனாகும். சிறந்த வாழ்க்கைக்கு அவசியமான ஒழுக்கநியதிகளை, நடத்தை விதிகளை சமயங்கள் வழங்குகின்றன. சமயச்சத்து, அறிவியல் மனநிலை இரண்டுமே மனிதனின் முன்னேற்றத்துக்குத் தேவைப்படுகின்றன. அறிவியலற்ற சமயம் குருடானது, சமயமற்ற அறிவியல் முடமானது என்று சரியாகவே சொல்லப்பட்டுள்ளது. இந்தியாவில் மதங்கள் சில தனிமுறைச் சிறப்பைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் பூஜை அறை ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு இஸ்லாமியரின் வீட்டிலும் தொழுகை விரிப்பொன்று இருக்கிறது. ஒவ்வொரு கிறித்தவரின் வீட்டிலும் இயேசு நாதரின் உருவப்படமிருக்கிறது. ஒவ்வொரு சீக்கியரும் சமய அடையாளம் தரித்துள்ளனர். பூஜை அறையில் கடவுளே தலைமை விருந்தினர். இஸ்லாமியத் தொழுகையில் கடவுள் உயர்ந்த சுடரொளி, கிறித்தவ சமய உரையில் கடவுள்தான் ஆதாரப் பொருள். இந்து, முஸ்லீம், கிறித்தவர், சீக்கியர், பார்சி, ஜெயின் எதுவாயினும் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள யாவும் கடந்த மெய்ப்பொருள், இயலுலக அண்ட அமைப்பு பற்றிய உணர்வு நிலை, ஒப்புயர்வற்ற விழுமியம் ஆகியவற்றை நாடும் உணர்வுகள் ஒன்றே யாகும். அதனால், சமய மதிப்பீடுகள் நமது கல்வித் திட்டத்தில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக அமையவேண்டும் என்று ஜாகிர்சாகிப் விருப்பம் கொண்டிருந்தார்.

ஆனால், இது உணர்வு மென்மையின் உச்சநிலையான பகுதி. மதங்களின் பொருட்காட்சி சாலையான இந்தியாவில் சமய போதனை கட்டாயமாக்கப்பட வேண்டுமெனில் பிரச்சினை தலையெடுக்கும். நமது நாட்டில் மதம் ஒன்றிணைக்கும் சக்தியல்ல. மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கக்கூடிய அத்தகு ஆற்றலுள்ள ஒரு பிரிவினை சக்தியாக அது இருந்திருக்கிறது. ஒவ்வொரு அணுவிலும் சமய உணர்வு கொண்டவராக இருந்த ஜாகிர்சாகிப், பெருமைக்குரிய அனைத்து மதங்களையும் பற்றிய தவறான கருத்து விளக்கங்கள் எழுந்ததே நமது சிக்கல்கள் அனைத்திற்கும் காரணம் என்று நினைத்தார். ஆதலால், சமய மதிப்பீடுகளுக்கு அவர் ஒரு வேறுபட்ட பண்பைக் கொடுத்தார். அனைத்து மதங்களின் போதனையுமான அன்பு, வாய்மை, சகோதர உணர்வு, சமத்துவம், சகிப்புத்தன்மை, பொறுமை, அஹிம்சை மற்றும் உண்மை ஆகிய மதிப்பீடுகளை விளங்கும்படி அவர் எடுத்துரைத்தார். சமயத்தில் உள்ள நம்பிக்கை எனும் பகுதியை ஒழுக்கப் பகுதியினின்றும் அவர் வேறுபடுத்தினார். முதல்பகுதியை அவர் தொடவில்லை. இரண்டாவது பகுதியையே வலியுறுத்தினார். சாதி, சமயத் தடைகளைக் கடந்து சென்று உயர்வு தாழ்வகற்றுகின்ற மனிதம் என்ற அடித்தளத்தில் நிலைத்து நிற்கின்ற அன்பும், தாராள மனப்பான்மையுமே மதங்களின் உண்மையான பிழிவாகும்.

இத்தகைய ஒழுக்க மதிப்பீடுகளை விளக்கமாக சிந்தித்து விரிவுபடுத்தினார், ஜாகிர்சாகிப். மனிதனை உருவாக்கம் செய்தல், பண்புகளைக் கட்டி வளர்த்தல், மதிப்பீட்டு மையக்கல்வி ஆகியவற்றை அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தன்னுடைய எலும்பிலும், மஜ்ஜையிலும் பதிக்கப்பெற்றிருந்த ஒழுக்க மதிப்பீடுகளைப் போலவே மனித ஊழமைவையும் அங்கேயே நிலைப்படுத்தினார். நமது தேசிய வாழ்வில் அதிகாரத்தை ஒழுக்கநியதியுடனும், தொழில் நுட்பத்தை அறவியலோடும், செயலை அர்ப்பணிப்போடும் இணைவு செய்ய அவர் விரும்பினார். காந்தியடிகள் பட்டியலிட்ட தேசியப் பண்பின் ஏழு பாபங்களை அவர் அறிந்திருந்தார். கொள்கையற்ற அரசியல், உழைப்பில்லாத செல்வம், மனசாட்சியற்ற இன்பம், பண்பில்லாத அறிவு, ஒழுக்கமற்ற வணிகம், மனிதத்தன்மையற்ற அறிவியல், தியாகமில்லாத வழிபாடு என்பவை அவை. ஒழுக்க நியதிகளை அறவுரையாகச் சொன்னதோடு ஜாகிர்சாகிப் நின்று விடவில்லை. அவற்றைக் கடைபிடிக்கவும் செய்தார். வாழ்க்கை எனும் கட்டுமானத்திற்கு உட்பட்டே அனைத்து வளர்ச்சிகளும் அமைய வேண்டும். அது நன்னெறியிற் சிறந்ததாகவும் இருக்க வேண்டும். ஒழுக்கமுறையில் சரியானதாகவும், ஒவ்வொன்றிலும் இயலுலக முழுநிறைவுத் திட்ட அமைப்பை அறியக்கூடிய ஆன்மீக விழிப்பு கொண்டதாகவும் எந்த

வளர்ச்சியும் இருக்க வேண்டும் என்ற தன்னுடைய கொள்கையிலிருந்து ஒருபோதும் அவர் விலகியதில்லை.

ஜாகிர்சாகிப்பின் கல்வித்தத்துவம் இவ்வாறாக நிறை நலம் கொண்ட மதிப்பீட்டு முறையை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது. அவரது பருப்பொருள் மதிப்பீடுகள் உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படுவதால் அவை உயிராக்க விளைவு சார்ந்த இயல்பின. அவரது, சமூகப் பண்பாட்டு மதிப்பீடுகளோ, மனிதனை மனிதனாக்கத் தேவைப்படும் ஆன்மீகப் படிநிலையைத் தொட்டன. உயிராக்க மதிப்பீடுகள் உயிரியல் சிக்கல்களைக் கொண்டவை. பண்பாட்டு மதிப்பீடுகளோ நெறிமுறைப்பண்பு உடையவை. உள்ளடக்கத்தில் தத்துவம் சார்ந்தவை, இயல்பில் ஆன்மீகமானவை. உயிராக்க மதிப்பீடுகள் உறவுடைய முக்கியத்துவம் உடையவை. சமூக மதிப்பீடுகளோ அவை நிலைபேறுடைய வாய்மைத் தகுதியுடன் இருப்பதால் வரம்பற்ற முழுமை உடையவை. சமூக மதிப்பீடுகளின் அமைவு நோக்கத்தை அடையும் ஒரு வழியாக ஜாகிர்சாகிப் உயிராக்க மதிப்பீடுகளைக் கருதினார். குறுகிய வெறிகொண்ட நாட்டுப்பற்று, குறுகிய கோட்பாடு, உட்குழு மனப்பான்மை, மொழிவாரி உணர்வு, பிராந்திய உணர்வு, ஜாதிவெறி, மதவெறி இவற்றிலிருந்து முழு தேசமும் விடுதலைபெற்றுத் திகழ வேண்டும் என்று அவர் விரும்பினார்.

ஜாகிர் சாகிப்பின் கல்விச் சிந்தனையில் மற்றொரு மிக முக்கியமான நோக்கு சமூகத்தில் தனி மனிதரின் கடமைக் கூறாகும். தனி மனிதன், சமூகம் இரண்டுமே ஒருவருக்கொருவர் தொடர்புள்ள பொறுப்பினைப் பெற்றுள்ளனர். தனி மனித நலன், சமூக நோக்கம் என்ற சூழ்நிலைப் பொருத்தத்தில்தான் சிறப்பாக நிறைவேற்றப்பட முடியும். சமுதாயச் சூழலில் இருந்து வெளியே இருப்பவன் நீரிலிருந்து வெளியில் எடுத்துப்போடப்பட்ட மீனுக்கு ஒப்பாவான். தனி மனிதன், சமூகம் இரண்டுமே தத்தமக்குரிய நிறைவேற்ற வேண்டிய பொறுப் புகளைப் பெற்றுள்ளன. எனவே, அவை வரம்புக்குட்பட்ட ஆரோக்கியமான வழிகளில் ஒன்றன் மீதொன்று செயலாற்ற வேண்டும். இருவரும் பின்பற்றிட வேண்டிய சரியான வழிகாட்டுதலைக் கல்வி வழங்குகிறது. அதன்படி செயல்பட்டால் உயர்ந்த பண்பாடு எனும் தவிர்க்கமுடியாத அமைவை அவை சென்றடைய முடியும். மனித சுதந்திரத்தின் வளர்ச்சி பண்பு சார்ந்த நிலையிலும், அளவு சார்ந்த நிலையிலும் மனிதனின் ஊழ்விதி அமைவாகவும் கூட இருக்கிறது. ஜாகிர்சாகிப்பின் கல்வி பற்றிய படைப் புச் சிந்தனையின் பெரும்பகுதி இந்தியா விடுதலை பெறாதிருந்த காலமான 1947ம் ஆண்டுக்கும் முற்பட்டது. வரலாறுகள் மனித சுதந்திர நாடகத்தின் மடிப்பவிழ்வே தவிர வேறில்லை என்பனபோன்ற சிந்தனைகள் ஜாகிர்சாகிப்பின் மனதில் பளிச்சிட்டபோது, கல்வி எப்படி விடுதலைப் போருக்கு உதவியாக

இருக்கக்கூடும் என்பது பற்றி ஆழமாக நிழலுருப்படுத்திக் காட்டினார். மனித உயிர்த்தத்துவத்தின் பிழிவாக விடுதலை இருக்கிறது என்ற சித்தனையில் அவர் எழுச்சியூட்டப் பெற்றார். தன்னளவில் அது, சட்டம் அரசியல் சமூகம் சமயம் ஆகிய நிறுவனங்களின் திரளுரு வடிவில் வெளிப்பட்டுத் தோன்றியது. விடுதலையை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு பருவமும் ஒரு அடிச்சுவடாகும். சமூகம் மற்றும் தனிநபர் தத்தமது பங்கிற்குரிய சரியான வினையாற்றுதலுக்குக் கிட்டும் வெகுமானமே விடுதலை என்பது. வந்தேறிகளின் உணர்வு நிலையை நமது சிந்தனை, உளச்சான்று இவற்றினின்றும் அகற்றிடவும், பெருமைமிக்க தேசமாக நாம் நிலைத்திருப்பதும் வெறுமனே அரசியல் சுதந்திரத்தை வென்றெடுப்பதில் மட்டுமில்லை, மாறாக பொருளியல் சமூகவியல் பண்பாட்டு விடுதலையைப் பெறுவதிலும் இருக்கிறது என்ற உணர்வு நிலையை நம்முள் செலுத்திடவும் ஜாகிர்சாகிப் விரும்பினார்.

தனிநபர் சுதந்திரம் பற்றி மிக அதிகமாக அவர் சிந்தித்தார். தனிநபரின் விடுதலை உரிமை நாகரிக உலகின் நன்கொடையல்ல என்று சிக்மன் பிராய்டு கூறிய கருத்தோடு ஏற்புடையவர் போன்று இவர் தோன்றுகிறார். முற்றிலும் இயல்பான சூழுறவு நிலையிலேயே மனிதன் இருந்தான். நாகரிகம் மெள்ள மெள்ள அவன்மீது சிறைக்கட்டுகளைப் புகுத்திக் கொண்டே சென்றது. தீங்கின்மை, பாதுகாப்பு இவற்றைப் பெறுவதற்காக அவன் தனது விடுதலை உரிமைகளை ஒன்றன்பின் ஒன்றாக இழக்க நேர்ந்தது. சட்டத்திற்கு அவன் அடிபணிய வேண்டியிருந்தது. அவ்வாறின்றி, ஒவ்வொருவரும் சட்டத்தைத் தத்தமது கைகளில் எடுத்துக் கொள்வதாக இருந்தால் குழப்பங்களே விளையும். நவீன ஜனநாயகக் குடியரசு விடுதலையின் சொர்க்கபுரியல்ல. மாறாக, பேறுபெற்ற ஒருசிலரின் கைகளில் இருக்கும் தன்னிச்சையான ஆட்சியே ஜனநாயகம். சட்டம், ஒழுங்கு எனும் சாக்குப்போக்குகளின்கீழ் தாம் விரும்புவனவற்றை செய்துகொள்வதற்கான உரிமத்தை குறிப்பிட்ட காலத்திற்கு அவர்கள் பெற்றிருப்பர். அத்தகைய ஒரு நிலையானது, வலிமை கொண்டவை ஆட்சி செலுத்தும் மாற்றமுடியாத அமைவை எப்போதும் பெற்றுள்ளன எனும் டார்வினின் இயற்கைத் தெரிவு விதிக்கு வெகு நெருக்கமாக வருகிறது. நவீன அரசாங்கங்கள் மக்களைக் கட்டாயப்படுத்திப் பணியவைக்குமளவுக்கு ராணுவரீதியான முழுவலிமையைப் பெற்றுள்ளன. இராணுவ வலிமையும், செல்வ வளமும் மக்கள் தங்களது வேற்றுமைகளை மண்டைகளை உடைத்துக் கொண்டு தீர்த்துக் கொள்வதைக் காட்டிலும் தலையை எண்ணித் தீர்த்துக் கொள்ளலாம் என்பதைத் தவிர வேறு வாய்ப்பெதையும் நல்கவில்லை.

மகிழ்ச்சியின் இலக்கு எப்போதும் ஒரே நிலையில் மாறாமல் இருந்ததில்லை, நேரத்திற்கு நேரம் மாறுபட்டுக் கொண்டே போகிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் தனி மனித உரிமையைக் காப்பது எப்படி? என்ற சிந்தனை ஜாகிர் சாகிப்பின் மனதைக் கலக்கியது. தனிமனித சுதந்திரத்தை அழிக்கக்கூடிய அரசாங்க ஆபத்தைத் தடுக்கக்கூடிய வல்லரணாக அறிஞர்கள் செயல் பட்டாக வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறினார். பண்பு பெறப்பழக்கும் ஆற்றல்மிக்க சமூக இயக்கிகளுள் ஒன்றாகக் கல்வி இருக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார். ஆனால், கல்வி முறையில் அடிப்படைக் கட்டமைப்பு மாறுதல்களைக் கூட அறிமுகம் செய்யவியலாமல் போன நிலையில் தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குக் கல்வி கைகொடுக்கும் என்று எதிர்பார்ப்பது மிகையானது என்று அறிய நேர்ந்தபோது மிகுந்த வருத்தத்துடன் கூடிய ஏமாற்றத்தை அவர் அடைந்தார். மனிதன் இயற்கைச்சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த காலங்களில் விடுதலை என்பதற்கு எவ்வித மதிப்பும் இருந்திருக்கவில்லை என்பதை நினைவில் கொண்டாக வேண்டும். வலிமைமிக்க விலங்குகளுக்கு எளிய விலங்குகள் அடிபணியும் காட்டு நியதிகளே அப்போது நடப்பிலிருந்தன. மனிதனைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு அடக்குமுறைகளையும், ஒடுக்கு முறைகளையும் நாகரிகம் சிறிது சிறிதாகப் பயன்படுத்தத் தொடங்கியது. சிறந்த வாழ்க்கைக்கான இடரிலா நிலை, பாதுகாப்பு வாய்ப்பு இவற்றிற்கான சுதந்திரத்தை எந்த அளவுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொருவரையும் உணரச் செய்யவே கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மனிதரிடையேயுமான ஆரோக்கியமான சமூக உறவும், அதிகாரக் குழுவினருடன் அரசியல் உறவும் நிலவக்கூடிய சுருக்க விதி முறைகளை நவீன அரசுகள் உழைத்து உருவாக்கும் என்று ஜாகிர்சாகிப் நினைத்தார். "அந்நியமாதல் எனும் நிலை நமக்காகக் காத்திருக்கக் கூடிய உலகத்தில் நாம் பிறந்திருக்கிறோம்" என்று கூறிய அறிஞர் ஒருவரின் சிந்தனையோடு இவரும் உடன்படுகிறார். கொடுத்து வாங்குதல் என்ற பரிமாற்றம் மட்டுமே நம்முடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற உணர்வு விழிப்புள்ள தெரிநிலையால் மட்டுமே இந்த அந்நியமாதலை முடிவுக்குக் கொணரமுடியும்.

இவ்வாறு, பயன்மதிப்பு சுடர்விடுகின்ற ஜாகிர்சாகிப்பின் கல்வித்தத்துவம் மனிதனைச் சிறந்தவனாக்கும் உறுதியைக் கொண்டிருந்தது. பிரபஞ்சத்தை அதன் மெய்யான இயலுருத் தோற்றத்தில் காண்பதற்கான ஒளியைத் தருவதால் அறிவை ஒருவன் பெற்றாகவே வேண்டும். அறிவாற்றலை சமூக நோக்கங்களுக்காக அவன் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் கடந்த காலத்திலிருந்து மரபுரிமையாக அவன்

பெற்றுள்ள நன்மைகளுக்கு உயிர்ப்பைச் சேர்க்கும் படைப்பாற்றல் வழிமுறை அதுவேயாகும். புத்திக்கூர்மையுடன் அமைதியாக இடைவிடாது அவன் செயலாற்ற வேண்டும். ஏனெனில் கல்வியின் மிகப்பெரிய நோக்கம் செயலேயன்றி அறிவல்ல. ஜாகிர்சாகிப்பின் கல்விச் சிந்தனை முழுவதும் இன்னமும் உருவாகாமலிருக்கும் புதிய சமுதாயத்தைப் படிப்படியாகத் தோற்றுவிக்கும் கனவைச் சுற்றியே இயங்குகின்றது.

அவரது கனவு நனவாகும் வழியில் நவீன வாழ்வின் எதார்த்தங்கள் குறுக்கிட்டு நிற்கின்றன. ஒழுக்கநியதிகளைப் பற்றி அவர் பேசினார். ஆனால், அவற்றைச் செயலாக மாற்றுவதோ கடினமானதாக இருந்தது. செல்வந்தர்கள் மென்மேலும் செல்வந்தர்களாகவும், ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகவும் மாறி வந்தனர். செல்வப் பெருக்கம் ஒப்பின்மையை மிகுவித்துவிட்டது என்ற விக்டோரியன் ஊழியில் வாழ்ந்த ஜான்ரஸ்கின் எனும் உயர்ந்த மனிதாபிமானியின் கருத்தொடு ஜாகிர்சாகிப் உடன்பட்டார். எவ்வளவுக்கெவ்வளவு தேச உற்பத்தி மிகையாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு தேசத்தவரின் வருவாய்ப்படிநிலையிலும் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கிறது. நடப்பிலிருக்கும் சமூக அமைப்பில் உடைமையில் சமமின்மையைக் குறிப்பவர்களாகப் பணக்காரர்கள் விளங்குகின்றனர். எல்லோரும் ஒரு நிகராக வசதியுடன் இருக்க நேர்ந்தால் பணக்காரர் என்ற கருது கோள் எழாது. ஒருசிலர் அதிகம் பெற்று வாழ்வதற்காக பலர் மிகவும் குறைவாகப் பெற்று வாழவேண்டியிருக்கிறது. ரஸ்கின் கூறுவார்: "உங்கள் பையில் இருக்கும் நாணயத்தின் வலிமை முழுவதும் உங்கள் அயலவரின் பையிலுள்ள நாணயத்தின் செயல் தவறைப் பொறுத்ததே. அவர் அதை விரும்பாவிட்டால் உங்கள் நாணயத்தால் ஒரு பயனும் இல்லை".[2] உரிமைப்பேறு பெற்றோர், உரிமையில் குறைந்தோர் எனும் வேறுபாடு கல்வியின் ஆட்சி எல்லையையும் கூட பாதித்துவிடுகிறது. உயர்ந்தோர் குழாம் தங்கள் குழந்தைகள் மேலான ஆற்றலைப் பெறும்வண்ணம் கல்வியளிப்பதற்கு உகந்த நிலையில் உள்ளனர். ஏழைகளுக்கோ அத்தகைய வாய்ப்பு மறுக்கப்படுகிறது. தேசத்தின் வளமானது, அது பெற்றிருக்கும் ஆற்றல்மிக்க மேலான அறிவினைக் கொண்டே அளக்கப்படுவதால் உயர்ந்தோரல்லாத வர்கள் உயர்ந்தோர் குழாமுடன் ஒருபோதும் போட்டி போடவே முடியாது. இத்தகைய சூழ்நிலை சமூகப் பதற்றங்களை உருவாக்குகிறது. கல்வியை தேசியமயமாக்கவேண்டும். கூம்பு கோபுரம் ஒன்றின் அடித்தளத்தில் அனைவரும் சமமானவராக இருக்கும் வண்ணம் 14 வயது வரை அனைவருக்கும் அடிப்படைக் கல்வியைப் போதிக்க வேண்டும் என்பது ஜாகிர்சாகிப்பின் ஆலோசனையாகும். தொழில் நுட்பமாயினும் சரி, தொழிற் கல்வியானாலும் சரி, கட்டற்ற கல்வியாயினும் சரி, கல்வியின் மேலடுக்குகள் அனைவருக்கும் பொதுவான போட்டிக்கு

திறந்து விடப்பட வேண்டும். அவ்வத்துறைகளில் மிகச்சிறந்த தகுதி பெற்றிருப்போரின் படிப்பிற்கு அரசு துணைநின்று உதவிடவேண்டும்.

கல்வித்திசை நோக்கிய மக்களின் மனப்பாங்கு, வெற்றியை நோக்கிய தனது செயல்திட்டப்பாதையில் ஜாகிர்சாகிப் சந்தித்த மற்றொரு பிரச்சனையாக இருந்தது. நம்முடைய கல்வியின் பயன்மதிப்பானது கற்போர்க்கு அவர்களின் பிற்கால வாழ்வில் வாழ்வாதாரம் வழங்கக்கூடிய அதன் இயல்திறத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அறிவைப்பெறும் விருப்பம் மீதூறி நிற்பதால் மாணவ மாணவியர் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்வதில்லை. வேலைகளைப் பெறுவதற்காக மட்டுமே செல்கின்றனர். இப்படிக் கிடைக்கும் வேலைகளும் மதிப்புக்கேடான வகையினதாகவே உள்ளன. கல்வி இன்பத்தை ஈட்டித்தருகிறது. எனவே அதனை முயன்று பெற்றாக வேண்டும் என்ற பயனீட்டுக் கொள்கையாளர்களின் கருதுகோள் ஜாகிர்சாகிப்பை கவர்ந்திடவில்லை. பயனீட்டுக் கொள்கைச் சிந்தனை சீடர்குழாமின் தந்தையான ஜான்ஸ்டுவர்ட்மில்லும்கூட எல்லா இன்பங்களும் சமமான மதிப்புடையவை என்ற கருத்தினை நம்பவில்லை. ஒரு கவிஞனின் மனநிறைவு ஒருகுடிகாரனின் மனநிறைவினின்றும் வேறுபட்டிருக்கும். ஆகவே, கல்வியியல் பிரச்சைனைகள் சமூகப் பிரச்சனைகளோடு தொடர்புடையன. மனமாற்றம், சரியான மனப்பான்மைகள், குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிய சரியான அணுகுமுறை என்பன எத்தகைய கல்விச் சீர்திருத்தத்திற்கும் முன் நிபந்தனைகளாகும்.

சமூகத்தினுடைய பகுத்தறிதல், ஒழுங்குமுறை நியதி, ஆன்மீக ஆற்றல்களை வழிகாட்டி வளர்க்கும் செயல்முறை கல்வி தனிமனிதனே என்று ஜாகிர்சாகிப் கருதினார். கல்வியானது தனிமனிதனின் சிந்தனை, பண்புநலன், தோற்றம் ஆகியவற்றின் மீது உருவாக்கம் சார்ந்த விளைவைக் கொண்டிருக்கும். பண்பாட்டுப்பாரம்பரியம், மதிப்பீடுகள், கைவினைத்திறம், அறிவாற்றல், மெய்யறிவு இவற்றைப் பள்ளிகள் கல்லூரிகள் பிற முகமைகள் வாயிலாக கல்வி கையளித்துக் கொண்டுள்ளது. கலை, அறிவியலை வழித்தோன்றல்களுக்கு ஒப்பிடைப்பதுடன் இத்தகைய திறன்களை வளர்த்தல், மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்குதலுக்கும் இந்தச் செயல் முறை இட்டுச்செல்கிறது. கல்வியானது நோக்கமுள்ள ஒரு செயல்பாடாக, பயனுள்ள ஏதோ ஒன்றைமுயன்று பெறும் உட்கோள் கொண்டதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் சமூகம் விரும்பும் இலட்சியங்களில் இருந்து மாறுபட்ட ஒருமுறையில் மனிதகுலம் கற்பிக்கப்படலாம் என்ற பிளாட்டோவின் குறிப்புரையை ஜாகிர்சாகிப் ஆழமாகப் பிரதிபலிக்கிறார். உயர்ந்தோர் குழாம் தங்களின் குழந்தைகளுக்கு எந்த வகையான கல்வியை நிர்ணயிக்கின்றனரோ

அதற்கு மாறான இலட்சியமுடைய கல்வியை மக்கள் வெள்ளம் பெறும் ஒழுக்கச் சிதைவில் ஊறித் தேர்வுற்ற ஒரு சமூகத்திலிருந்து, பொதுவான மனிதகுலத்திற்கு உயர்நிலை மதிப்பீடுகள் போதிக்கப்படும் என்று ஒருவர் எதிர்பார்க்கமுடியாது. ஆகவே பூதக்கண்ணாடி ஒன்றினாலன்றி புலப்படாத நுட்பமுடைய கற்றறிந்தோர் குழாம் தங்கள் சந்ததிக்கென தனி ஏற்பாடுகளைச் செய்துகொள்கிறது. சமூகத்தின் ஒரு சிறு பிரிவை வெளிநாட்டுப் பட்டங்களின் ஆர்வவெறி பற்றிக்கொண்டபோது இந்தியாவிலும் கூட அது நிகழ்ந்து கொண்டிருந்தது. திட்டமிடுவோர் மக்களுக்கென ஒருவகை விதிமுறைகளையும், தங்களது குழந்தைகளுக்கென வேறுவகை விதிமுறைகளையும் புனைவார்கள். கல்வியில் இந்த இருபிளவு முறையை ஜாகிர்சாகிப் கடும் துயரத்துடன் எதிர்த்தார். அனைவர்க்கும் ஒரே வகையான கல்வியை மும்முரமாக அவர் ஆதரித்தார். அனைவர்க்கும் கொடையளிக்கப்பட்டிருக்கும் அறிவாற்றலில் மேற்குடியாக இருப்பதை அவர் வெளிப்படையாகப் பரிந்துரைத்தாரேயன்றி சிலர்மட்டும் வாய்ப்புகளை பறித்துக் கொள்ளும் மேற்குடிப் பண்பை அவர் ஆதரிக்கவில்லை.

மனிதத்தன்மை இழந்த, பொருத்தப்பாடில்லாத, அந்நியப்படுத்துகிற கல்விக்கு எதிராக ஜாகிர்சாகிப் மும்முரமாகப் போராடினார். கல்வியை மனிதத்தன்மை உடையதாக்குவதையே அவர் முழுவதுமாக ஆதரித்தார். மனித இனத்திற்காக, மனித இனத்தால் நடத்தப்படும் மனிதஇனத்தினுடைய கல்வி என்று அவர் அதைக் குறிப்பிடுவார். கல்வியானது சார்பை அல்லது விரும்பத்தக்க ஒழுங்கமைதியை ஊட்டிவளர்த்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஒழுங்கமைதிகள் சமூகநன்மைக்கு உதவவேண்டும். இதனைச் செய்யும் கல்வியே மனிதப்பண்பூட்டப்பட்டக்கல்வி. மனிதவளர்ச்சிக்கு உதவாத கல்வி மனிதப்பண்பற்ற கல்வியாகும். கல்வியைப் பொருத்தமுடையதாக்கும் வகையில் சில இலட்சியங்கள், சில கட்டளைச்சட்டங்கள், சில தரங்கள் அவசியம் இருந்தாகவேண்டும். இந்தப்பார்வை இல்லையெனில் கல்வியானது, நான் ஒரு பி.ஏ அல்லது ஒரு எம்.ஏ என்று ஒருபட்டதாரி பெருமையடித்துக் கொள்ளவும் இதைக்கேட்கும் விவேகமுள்ள ஒருமனிதர், "இளைஞரே அமருங்கள் அகரவரிசையில் மீதிமிருக்கும் எழுத்துக்களையும் கற்றுக் கொள்ளுங்கள்" என்று தரக்குறைவாக எதிருரை கூறவுமென ஒரு நிலைக்கு கல்வி மதிப்பிழந்துவிடும்.

ஜாகிர்சாகிப் கல்வியை மனிதத்தன்மையுடையதாக மட்டுமின்றி பொதுநலம் சார்ந்ததாகவும் செய்திடவிரும்பினார். ஒரு சமூகத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை இயன்றஅளவுக்கு மிகுதியான மக்கட் பிரிவுகளுக்குள் விதைத்திடவும், செலுத்திடவும் கருதிய வழிமுறை இது.

இதனால், மரபை உணர்ந்தறியச் செய்யும் உபாயத்தின் மூலமாக மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தவும், கருத்தில் தோய்விக்கவுமான வழிமுறை கல்வி என்று பொருள்படாது. நற்குணம் எங்கிருந்தாலும் அதனைப் போற்றக் கூடிய நடுநிலையான, பற்றற்ற, பகுத்தறிவு மனநிலைச் சார்பை வளர்க்கக் கூடியதையே கல்வி குறிக்கும். தத்துவத்தை, மாற்றுவகைகளை வளர்த்தெடுக்கும் கலை என்று வர்ணித்துள்ளதை ஜாகிர்சாகிப் ஏற்றுக்கொள்கிறார். தனது துறையில் ஒருபோதும் அவர் ஆணவ வீறாப்புடன் இருந்ததில்லை. காந்திஜி, ஒருவகையான உழைப்புப்பள்ளியைப் பரிந்துரைத்தபோது அவற்றின் அடிப்படைகளை மனதிற்கொண்டு அதற்கான மாற்று வகைகளை ஜாகிர்சாகிப் வளர்த்தெடுத்தார். விடுதலை என்ற கருதுகோளை மனதிற் கொண்டு சிறந்தவகை மாதிரிகளை முடிவில்லாமல் தேடுவதும், நிலையான சிந்தனை வழிமுறையும் மனித முன்னேற்றத்தில் ஒளிமயனான பயன்களை விளைவிக்கும்.

ஜாகிர்சாகிப்பின்கல்வித்தத்துவம் வேறொரு வகையில் சமய ஒழுக்கத்துறைகளில் நடை முறையிலுள்ள நம்பிக்கை கோட்பாடுகள், அனைத்தையும் மறுக்கும் கொள்கையான "நிகிலிசம்" எனும் தத்துவத்தோடு நெருக்கமுடையதாகிறது. பொருட்களை அவை ஒளிவிளக்கம் பெறும் வகையில் சூனிய நிலைக்கு நாம் எதிர் மறுப்பு செய்யவேண்டும். ஏதேனுமொன்றின் உளதாம் தன்மை, நன்மை கருதியோ, தீமையை நோக்கியோ அதில் ஒரு மாற்றம் வேண்டும் எனும் ஒரு உணர்ச்சியைக் கிளறிவிடுகிறது. உயர்ந்த உளப்பாங்குள்ள மனிதர்கள் சிறந்ததை நோக்கிய மாற்றத்தையும், வேறுசிலரோ மோசமான மாற்றத்தையும் விரும்புகினறனர். மாற்றம் என்பது இயற்கையின் நியதி. நிலைத்திருத்தல் என்பது மரணமே. மனித முன்னேற்றத்திற்கான வித்தினை பல சமயங்களில் விதைத்தது, பொருள்களை அவை இருக்கும் நிலையிலிருந்து மாற்றும் மனிதனின் மனப்பாங்கேயாகும். அழகிய பொருட்களை உருவாக்கும் உந்தவாவை நாம் பெற்றிருப்போமாயின், அருவறுப்பு தருவனவற்றை நாம் புறந்தள்ளிவிடவேண்டும். இந்தக் கொள்கையின் சிறப்பை ஜாகிர்சாகிப்பின் வாழ்க்கை விளக்கிக் காட்டுகிறது. 1920 ல் அவர் அலிகர் சீர்குலைந்திருக்கக் கண்டார். அந்த அமைப்பு முறைக்கெதிராக அவர் கிளச்சி செய்தார். புதிதாக ஏதேனுமொன்றை உருவாக்க சார்த்தரின் நிகிலிசத்திற்கு நெருக்கமாக அவர் வந்தார். அதன் விளைவே ஜாமியா. வெளிநாடுகளில் பயில அவர் விரும்பினார். மற்றவர்கள் பிரிட்டனை விரும்பிய போது, இவருக்கு பிரிட்டிஷ் கல்விமுறைமீது வெறுப்புணர்ச்சி பிறந்தது. ஜெர்மனிக்குச் சென்றார். கல்விக்கும் கூட அதன் அடி மூலத்தைத்துருவுகிற அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது, என்பது கருத்தாக இருக்கிறது. இந்தியாவுக்குப்

புதியதான சிந்தனைகளை தனது அடிப்படைக் கல்வித் திட்டத்தில் அவர் கூட்டிணைவு செய்தார். எதிர்மறுப்புக்கொள்கை சிலசமயங்களில் ஆக்கமுறையான கருது கோளாகவும் இருக்கிறது. ஒரு பொம்மை எப்படி இயங்குகிறதுஎன்பதை அறிந்துகொள்ள குழந்தை அதனை உடைத்துப்பார்க்கிறது. எனவே, இதனால் பழைய மாதிரிகளிலிருந்து மேம்பட்டதை பொருத்தமான தருணத்தில் அதனால் படைக்கமுடியும். அத்தகைய ஒரு கருதுகோள் டாயின்பீயின் திரும்பப் பெறுதலும் மீள்வரவும், வேறுபாடறிதலும் முழுமையாக்கமும், அடிப்படுத்தலும் வலுப்படுத்தலும், உறுதித்தனிமையும் இணக்கப்படுதலும் என்பன போன்ற வளர்ச்சிக்கு உதவக்கூடிய கொள்கைகளுக்கு வெகு அண்மையில் வந்தது. ஹெகலும் கூட இதனையே தனது புனைவு கோள், எதிராய்வுரை, கருத்துக் கூட்டாக்கங்களில் விளக்கிக்காட்டினார். யாவற்றையும் மறுக்கும் நிகிலிச வாதத்தை இயற்கையிலும் கூட நாம் காண்கிறோம். விதை செடியாவதற்கு தன்னைத்தானே அழித்துக் கொள்கிறது. மலரானது பழமாவதற்காக வாடிவதங்குகிறது. கன்னித்தன்மை நீங்காதவரை பெண்மை தாய்மையாவதுமில்லை.

கல்வியில் "நிகிலிசம்", பொருளின் ஆக்கமாறுபாடு என்ற உட்கருத்தோடு புரிந்து கொள்ளப்படவேண்டும். குழந்தையின் உளவியலைப் புரிந்து கொள்வதற்கு ஒரு குழந்தையாகவே மாறாதவரையிலும் ஒருவர் ஜாகிர்சாகிப் குறிப்பிடும் நல்லாசிரியராக ஆக மாட்டார். தொடக்கம் முதல் முடிவுவரை கட்டுப்பாடுகளை எதிர்ப்பவராகவே ஜாகிர்சாகிப் இருந்தார். ஜாமியாவை உருவாக்குவதற்காக அவர் அலிகருக்கு சென்றார். பொருளியியல் பயில ஜெர்மனிக்குச் சென்றவர் இறுதியில் கல்வியாளரானார். வார்தாவுக்குச் சென்றார், ஆனாலும் காந்திய மாதிரியான சர்க்கா பள்ளியை எதிர்க்கும் துணிவைப் பெறுகிறார். தன்னைத்தானே ஒரு ஆசிரியர் என்று சொல்லிக்கொண்ட போதிலும் தோட்டப்பயிரிடுவதை அவர் மிகவும் விரும்பினார். ஜாமியாவின் நிர்மாணப்பணியை விட்டு அலிகருக்கு ஒருநிர்வாகியாகத் தாவினார். குடியரசுத் தலைவர் தேர்தலில் அவர் வென்றார். எனினும் தனக்கு எதிராக களத்தில் மூர்க்கமாக இறங்கியிருந்த சங்கராச்சாரியாருக்கு நன்றி கூற அவர் செல்கிறார். பிறர் மனத்தில் வாழ்வதற்கு தன்னைத்தானே ஒருவன் மாய்த்துக் கொள்வதை வரவேற்கும் நிகிலிசத்தால் தானே இவையனைத்தும். ஜலந்தர் புகைவண்டி நிலையத்தில் கிட்டத்தட்ட அவர் மிக கடுமையாக தாக்கப் பட்டார். அப்படியொரு நிலையிலும் எல்லைக்கப்பால் நடைபெறும் நடப்புகளை அறிந்திருந்த அவர் இதற்காக வியப்படையவில்லை. இந்தியக் குழந்தைகளுக்கு அவர் வழங்க விரும்பிய கல்விவகையும் அதுவேயாகும்.

நாம் எதைக்காண்கிறோமோ அதற்கு மதிப்பளிப்பதற்கு நிகிலிசம் தேவைப்படுகிறது. அளித்தலும், கண்ணுறுதலும் விடுதலைக்கும் கல்விக்கும் தொடர்புடையதாக இருக்கிறது. சிறைக் கைதிகள் சுதந்திரமாக இல்லை யாருக்கும் எதையும் அளிப்பதற்கு. காண்பதற்கான ஒளியும், காட்சிக்கான நுண்ணோக்கும் நாம் பெறாதவரை எதையுமே நம்மால் காணமுடியாது. காட்சியைக் கண்கூடாகக் காண்பது அகநோக்கோடு தொடர்புடையது. அகநோக்கே அறிவு, அறிவே கல்வி அந்தக்கல்வியே மதிப்பீடுகளைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு கல்வி, விடுதலை, பயன்மதிப்பு ஆகியவை அகஇணைப்பு கொண் டுள்ளன. ஒரே எந்திரத்தின் முனைப்பான பகுதிகளாக இவை இருக்கின்றன. நிகிலிசம் அதற்கு எண்ணெய் ஆக இருக்கிறது. விடுதலை அதன் முதன்மையான பெரிய அச்சாணி; பயன்மதிப்பு செயல் தூண்டுதல் அளிக்கும் ஆற்றல்; சமூக நன்மை அதன் அமைவு நோக்கம். ஜாகிர்சாகிப் கூறுவார்: கல்வி ஒருவனது வாழ்க்கையின் அங்கமாக வேண்டுமெனில் தன் வாழ்வின் சிலபகுதிகளை அவன் தியாகம் செய்திட வேண்டும். ஒரே சமயத்தில் ஒரேஇடத்தில் இரண்டு குதிரைகளின் மீது சவாரி செய்ய முடியாதே. ஜாகிர்சாகிப்பின் தத்துவம் பழங்கால அறிவர்களின் மதிநலத்தால் செறிவிக்கப் பட்டிருக்கிறது.

முடிவாக, ஜாகிர்சாகிப்பின் கல்வித்தத்துவம் மிகுதியான ஈர்ப்புள்ளது, தடங்காணா ஆழம் கொண்டது, நல்லறிவு கொளுத்துவது என்பதை நாம் கூறியாக வேண்டும் தனது கல்விக் கூம்புருவில் அறிவு, பயன்மதிப்பு, விடுதலை ஆகிய மூன்றும் உருவளவைகளாக இருக்கும் விதத்தை; தலை, இதயம், கைகள் தனது கல்வியமைப்பிற்கு உயிர்ப்பொருட் கூறுகளாக எப்படி இருக்கின்றன என்பதை, தன் கல்வி மாளிகையில் எதார்த்தவாதம், இலக்கியல்வாதம், பயனீட்டு வாதம் என்பன எப்படி அழகாக ஒருங்கிணைக்கப்படவியலும், தனது கல்வி முக்கோணத்தில் அரசு, சமூகம், தனிமனிதன் மூவரும் மூன்று பக்கங்களாக எப்படி அமைகின்றன என்பதையும் அவர் காட்டுகிறார். அனைத்திற்கும் மேலாக, அன்பு, நற்குணம், மனிதப்பண்பு, உண்மை, அழகு, நீதி, நன்மதிப்பு ஆகிய பண்பாட்டுச் செல்வங்கள் தனது கல்விச் சிறப்பங்காடியில் நிரம்பி இருக்கக்கூடிய விற்பனைப் பொருட்களாக எப்படி இருக்கமுடியும் என்பதையும் காட்டினார்.

ஜாகிர்சாகிப், கல்வித்துறையில் மிகச்சிறந்த படைப்புத் திறனுள்ள நமது காலத்திய சிந்தனையாளர். அவரது ஆழ்ந்த நுண்ணறிவுத்திறமும் அகலவிரிந்த பார்வையும், உச்சநிலைப் பயனுடைய முற்போக்கான செயல்விரைவுடைய இந்தியநாட்டின் பொதுப் போக்கிற்குப் பொருத்தமான கல்வி அமைப்பை நமக்குப் பரிசளித்தபோது, மனிதனின் ஒழுக்க உணர்வை மேம்படுத்தும் ஒரு வழிமுறை கல்வி என அவர் மெய்விளக்கம் தந்தார்.

ஒவ்வொரு தனிமனிதனையும் தன்னைப்போலவே மதித்துப் போற்றும் உணர்வைத் தூண்டும் மனித அமைவுநோக்கு பற்றிய மேலானபார்வை அவருக்கு இருந்தது. தேசிய வளர்ச்சிக்கும் சமூகமாற்றத்திற்கும் கருவியாக இருந்து செயல்படக் கூடிய ஆழ்ந்த ஒப்படைப்புடன் கூடிய ஒரு சமூகசெயல்படாக கல்வி இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். மனிதனின் செயல்கள் அனைத்திலும் முழு நிறைவையும், மிகுநலத்தையும் குறிக்கொண்டதாக கல்வி இருந்திடவேண்டும்.

கல்வியியல் சிந்தனைக்கு ஜாகிர்சாகிப்பின் மேலான பங்களிப்பு உழைப்பு பற்றிய அவரது தத்துவமாகும். "வெறும் கல்வி போதனைக் கொடுமையிலிருந்து உழைப்பு உளவியல் ரீதியாக குழந்தையை விடுவிக்கிறது, சமூகரீதியாக உடலுழைப்புக்கெதிரான தப்பெண்ணத்தை அது தகர்க்கிறது, பொருளியல் ரீதியாக, உற்பத்தியை அதிகரிக்க அது உதவுகிறது. கல்வியியல் ரீதியாக, உயிர்த்தோற்றம் குன்றாதிருக்க செய்கிறது" என்று கருத்துரைக்கிறார். "இந்தப் பொருள்பற்றி நான் பல்லாண்டுகள் சிந்தித்தபிறகு, உழைப்பு ஒன்றே ஆற்றல்மிக்க கல்விக்குதவும் கருவியாகும் என்ற மறுக்கமுடியாத உண்மையைக் கண்டுள்ளேன். சிலசமயங்களில் அது உடலுழைப்பாகவும், வேறு சந்தர்ப்பங்களில் உடலுழைப்பு சாராததாகவும் அது இருக்கலாம்". தனது உழைப்புப்பள்ளியின் கைத்திறனுக்கான கருது கோளில் நியாயமான அளவு உழைப்பை வகுத்தளித்த எதார்த்தவாதியாக ஜாகிர்சாகிப் இருந்தார். பள்ளியை நிர்வகிக்க ஆகும் செலவை ஈடுகட்டக்கூடிய அளவுக்கு உற்பத்திசார்ந்ததாக உழைப்பனுபவம் இருந்தால்போதும் என்று காந்திஜி விரும்பினார். ஆனால் ஜாகிர்சாகிப், இந்தக் கருத்திலிருந்து மாறுபட்டார். குழந்தையின் உள்ள வளர்ச்சிக்குத் தேவையான அளவுக்கு உழைப்பைக் கணக்கிட்டு விடைகண்டார். சிந்தித்தல் செயல்படுதல், செயல்செய்தல் சிந்தித்தல் என்ற அடிப்படையான சுழல் வட்டத்தை தனது திட்டமுறை மூலம் அவர் பரிந்துரைத்தார். "வாழ்தல், கற்றல் இவற்றில் ஒரு சமூக அணுகுமுறையை வளர்ப்பதற்கு, மாணவர்களிடையே தன்னாட்சிக்கு ஊக்கமூட்டுவதற்கு, பொறுப்புள்ள குடிமக்களாகும் வண்ணம் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு, சாதாரண பள்ளிகளில் ஒருவகையிலும் இடம்பெற்றிராத கலைகளில் ஆர்வத்தை எழுப்புவதற்கு அனைத்திற்கும் மேலாக மாணவரிடத்தும் ஆசிரியரிடத்தும் இலக்கியம், சமூக, தேச உணர்வை மனத்தில் பதியவைப்பதற்கு என இந்தத்திட்டமுறையை செயல் படுத்திப்பார்க்க முதலில் முயற்சித்த முன்னோடிகளில் ஒன்று ஜாமியா. பட்டம் அல்லது சான்றிதழ் பெற்றபின்னர் அரசாங்க அலுவல்களைப் பெறுவதைத் தவிரவும் வேறான பல நோக்கங்கள் கல்விக்கு உண்டென்பதை மாணவர்கள் உணரக்கற்றுக்கொண்டனர்"[3] என்று கே. ஜி. சைதன்யன் சரியாக நுணுகிக்கண்டுரைக்கிறார்.

ஜாகிர்சாகிப் உயர்ந்த அறநெறியாளர், ஒரு சீர்திருத்தக்காரர், மனிதாபிமானி, தேசியவாதி. அனைத்திலும் நன்மையையே காண்பவரான அவர், ஆன்மீகமறுமலர்ச்சி எனும் அமைவு நோக்கத்திற்கு இட்டுச்செல்லும் சமூக நோக்கத்திற்காக தனது சிந்தனைகள் அனைத்தையும் இணைத்து உருவாக்கியவர். இந்தவகையில் நிறைவாக்கத்தில் குறையுடையோர் அடையவியலாத மிகஉயர்ந்த இலக்கை நிர்ணயித்த இலட்சியவாதியாக அவர் இருந்தார். அவரது இலக்கியல் வெற்றி பெறவில்லை ஆயினும் பண்பாட்டுப்புத்துயிர்ப்புபற்றிய அவரது கருதுகோள் ஆழமான பதிவினை ஏற்படுத்திவிட்டது. தேசம் அதற்குரித்தான பாரம்பரியத்தின் விளக்கத்தினால் எழுச்சியூட்டப்பட்டது. உணர்வு நுட்பமுள்ள எந்த மனிதரும் பெருமையுடன் கிளர்ச்சி யூட்டப்படுவதற்குப் போதுமானவை அதில் இருந்தன. கலை, தத்துவம், இலக்கியம், மொழி, இசை, அறநெறிகள், நடத்தை முறைகள், மேம்பட்ட சிந்தனைகள் இவைகளில் இத்தகைய பண்பாட்டு அரும்பொருட்குவையை தேசத்தின் மதிப்புமிக்க சொத்துக்களாக வெளிப்படுத்திக்காட்ட ஜாகிர்சாகிப் முயற்சிகள் செய்தார். சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வியின் விளைவே மதிப்பீடுகள். இவை தனிமனிதரிடம் அறநெறி, சமூகப் பொறுப்புணர்வுகளை வலிந்து ஒப்படைக்கின்றன. மனிதனின் மனச்சான்றினைத் தூண்டக்கூடியவை மதிப்பீடுகள். அப்படிப்பட்ட மனச்சான்று மனிதர்க்கு ஒளியூட்டும். ஒளியூட்டப்பட்ட ஓர் உயிரானது சமூகத் தொண்டாற்றும். அதுவே கல்வியின் நோக்கமுமாகும். மனிதனின் உழைப்பு, அறிவு, விவேகம் ஆகியவற்றிலிருந்து ஊட்டப்பண்பைப் பெற்று வளர்ந்து வரும் பண்பாட்டின் அடிப்படை அங்ககங்களாக எண்ணங்கள், மதிப்பீடுகள், தனிமனிதர்கள், சமூகம், அரசுகள், தேசம் ஆகியவை இருக்கின்றன. சுருங்கக்கூறின், மதிப்பீடுகள் அல்லது பண்பாட்டுக் கூறுகளே ஜாகிர்சாகிப்பின் கல்வியியல் சிந்தனைகளை வகுத்தமைக்கும் அச்சுருவார்ப்புகள் எனலாம்.

ஜாகிர்சாகிப்பிற்கு கல்வி ஒரு வாழ்க்கைப் பணித்திட்டம். கல்விக் குறிக்கோளுக்காக வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றுவது என மனமார்ந்த முடிவு ஒன்றை இளமையிலேயே அவர் மேற்கொண்டார். வளரும் நாடுகளிலிருக்கும் மக்களை முன்னேற்றுவதற்கான முக்கியமான காரணி கல்வியே என்று அவர் கருதினார். அறியாமையைக் காட்டிலும் பெரிய வறுமை ஏதுமில்லை. அறிவைக் காட்டிலும் மிகப்பெரிய சொத்து வேறில்லை என்று அவர் உண்மையாக நம்பினார். இந்தியாவின் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது கூட தான் ஒரு ஆசிரியர் என்பதை மனதிற்கொண்டு தேசம் தன்னை இவ்வளவு பெரிய பதவிக்கு உயர்த்தியிருக்கிறது என்றே கூறினார். தேசத்தின் தலைவிதி வகுப்பறையில் தான் உருவமைக்கப்படுகிறது என்றும், அந்த ஊழ்விதியின்

சிற்பி ஆசிரியரே என்றும் அவர் நம்பினார். பீகார் மாநில ஆளுநராக அவர் இருந்தபோது மாநில அரசாங்கம் ஒரு சட்டமுன் வடிவைக் கொணர்ந்தது. வரையப்பட்டிருந்த. நிலையிலேயே அது ஏற்கப்பட்டிருக்குமாயின் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் சுயாட்சியைப் பாதித்திருக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஜாகிர்சாகிப், முதலமைச்சருக்கு அதனை எடுத்துக்கூறி பல்கலைக்கழகங்களின் சுயாட்சியைப் பாதுகாக்கும் வண்ணம் சட்டமுன் வரைவில் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டுவர வகைசெய்தார்.

கல்விமீது அவர்கொண்டிருந்த ஆர்வஅன்பு, தேசப்பிரிவினைக்கும் முந்தைய விதிவசப்பட்ட நாட்களின்போது காரியங்கள் உருப்பெற்றுவந்த முறைகளின் மீதான அவரது ஆழ்ந்த கருத்து இவற்றை எவையுமே சிறப்பாக வெளிக்கொணர்ந்து காட்டியிருக்கவில்லை. 1946 நவம்பரில் ஜாமியாவின் வரலாற்றுச் சிறப் புமிக்க வெள்ளி விழா நிகழ்ச்சியில் குழுமியிருந்த அனைத்து பெரிய அரசியல் தலைவர்களின் மத்தியிலும் உரையாற்றிய போது அவர் சொன்னார் :

"நீங்கள் அனைவரும் அரசியல் வான்மண்டலத்து விண்மீன்கள். உங்கள் மீது மதிப்பும் அன்பும் கொண்டுள்ள இதயங்கள் ஆயிரமல்ல பல இலட்சங்கள். கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளோரின் ஆழ்ந்த வருத்தத்தையும் எண்ணப்போக்குகளையும் உங்களுக்குத் தெரிவிக்க, இங்கு நீங்கள் குழுமியிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். இந்த நாட்டில் கொழுந்துவிட்டுள்ள, ஒருவருக்கொருவர் பரிமாற்றமாகும் வெறுப்புத்தீயானது தோட்டங்களை அமைவித்தல் அவற்றைப் பேணிக் காத்தல் ஆகிய நம்முடைய செயலைப்படுமோசமான பைத்தியக்காரத் தனமெனத் தோன்றும்படி செய்துவிடுகிறது. இந்தத்தீ மேதகைமையும் மனிதப்பண்பும் விளைவித்த மெய்ம்மூலமான பூமியையே பொசுக்குகிறது. நல்லொழுக்கமும் நடுவுநிலையுமுள்ள மனிதர்கள் எனும் மலர்கள் அதன்மீது எப்படி வளரமுடியும்? நடத்தைப்படி நிலையானது, நான்குகால் விலங்குகளை விடவும் தாழ்ந்து கிடக்கையில் மனிதனின் அறவியல்புகளுக்கு நாம் எப்படி ஒப்பனை செய்யவியலும்? காட்டுமிராண்டி வாழ்க்கை நீடித்து இயங்கி எங்கெங்கும் பிடித்தாட்டி ஆட்சி செய்யும் நிலையில் நாம் எப்படி பண்பாட்டைக் காப்பாற்ற முடியும்? பண்பாட்டுச் சேவைக்கு மனிதர்களை எப்படி பயிற்றுவிக்கமுடியும்? காட்டுவிலங்குகளின் உலகில் மனித மதிப்பீடுகளைப் பாதுகாத்திடல் எங்ஙனம்? இந்த வார்த்தைகள் உங்களுக்குக் கடுமையானதாகத் தோன்றக்கூடும். ஆனால் நம்மைச்சுற்றிலும் மேலோங்கி நிலவும் நிலைமைகளை வருணிப்பதற்கு இதைவிடக் கனிவுடைய சொற்கள் வேறு இல்லை. நம்முடைய வாழ்க்கைத் தொழிற் தேவைகளுக்கு உதவியருள்வதற்காக நாம் குழந்தைகளுக்குப்

பயபக்தியைப் பேணி வளர்க்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்த விலங்கு நடத்தையின் பொங்கி எழும் எழுச்சியில் அப்பாவிக் குழந்தைகளும் கூட விட்டுவைக்கப்படுவதில்லை என்று கேட்கநேரும்போது கடும்வேதனையால் நாம் உறும்துயரை உங்களுக்கு நான் எப்படி விளக்குவேன்? பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் மனித இனத்தின் மீது கடவுள் முற்றிலுமாக மனக்கசப்பு அடைந்து விடவில்லை என்ற செய்தியைக் கொண்டுவருகிறது என்று இந்தியக் கவிஞர் ஒருவர் சொன்னார். ஆனால் இந்த மலர்களை அவற்றின் இதழ்திறக்கும் முன்பே கசக்கி எறிந்துவிடும் அளவிற்கு இந்ததேசத்தின் மனித இயல்பு தன்னிலேயே நம்பிக்கை இழந்துவிட்டதா? கடவுளின் பொருட்டு உங்கள் தலைகளை அணிசேர்த்திடுங்கள். இந்தத்தீயை அணைத்திடுங்கள். யார் இந்தத்தீயை மூட்டியது? எப்படி இது மூட்டப்பட்டது? என்று புலனாயவும், வரையறுக்கவும் இது நேரமல்ல. தீ பட்டாங்கமாகத் தெரிகிறது. அதனை அணைத்தாக வேண்டும். இந்த தேசம் அல்லது அந்த தேசத்தின் உய்வு என்பது பற்றிய கேள்வியல்ல அது. நாகரிகமான மனிதவாழ்க்கை, காட்டுவிலங்குகளின் பண்பாடற்ற நிலை இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்து கொள்வது பற்றிய வினாவே அது. இந்த தேசத்தின் நாகரிக வாழ்க்கை அடித் தளங்கள் இப்போது அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுபோல எப்போதும் அழிந்துபோக, கடவுளின் நிமித்தம் அனுமதித்து விடாதீர்கள்."[4]

4. தணியாத தேசப்பற்று

ஜாகிர்சாகிப் ஒருமாபெரும் தேசியவாதி, ஆனால் அவரது தேசியக் கோட்பாடு சம்பிரதாயமான படிவத்தைப் பின்பற்றிச்சென்றதில்லை. தேசத்தை அறிந்துகொள்ளுதல் தேசத்தை நேசித்தல், தேசப்பணி செய்தல் இவற்றிற்கப்பாலும் அது சென்றது; அவரது நாட்டுப்பற்று, அதற்கே உரித்தான ஒரு தகைநேர்த்தி ஒழுங்கைப் பெற்றிருந்தது. அதன் அடித்தளம் அறிவாராய்ச்சி வாதமாக இருந்தது. அதன் கொள்குறி சமூக நன்மையாக இருந்தது. அதன் குறிக்கோள் நிலை ஐயந்தெளிவித்து அறிவு கொளுத்துதலையும், ஒருபடித்தாயுள்ள மக்களை முழுமையாக ஒன்றுபடுத்துவதையும், பெரிய குடும்பமான ஒட்டுமொத்த மனிதஇனத்தின் ஒருங்கிணைந்த ஒருபகுதியாக மக்களை உருவாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்த அவரது கல்வி, சமூகத் தத்துவங்களின் பக்கக்கிளையாக அவரது தேசியக்கோட்பாடு இருந்தது. பரந்த மனப்பான்மையுள்ள பார்வையும், சமயச் சார்பற்ற பண்பு, அறிவார்ந்த அணுகுமுறை, சகிப்புத்தன்மையுள்ள ஒழுகலாறு, ஜனநாயகச் செயல்பாடு கொண்ட சமுதாயத்தை உருவாக்க உதவும் ஒருகருவியாக தேசியக் கோட்பாடு இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். குறுகிய பார்வை, தன்னலமனப்பாங்கு, கொடுங்கோன்மை, சர்வாதிகாரம், அடிப்படைவாதம், சமயப்புத்தெழுச்சி இயக்கம் போன்ற எதிர்க் கூறுகளை நீக்குவதாக அவரது தேசியக்கோட்பாடு அமைந்திருக்கிறது. மனிதநலம், முற்போக்குக்கொள்கை, மதச்சார்பின்மை, சமதர்மம், உலகளாவிய மீட்சிக் கோட்பாடு, ஜனநாயகம் போன்ற ஆரோக்கியமான சக்திகளைக் கொண்ட புதிய ஊழியின் விடியலை இது முன்னறிவிக்கிறது.

பொதுவான மரபுவழியையும், பொதுவான பாரம்பரியத்தையும், முதன்மையாகக் கொண்ட, ஒரு அரசின் கீழ் ஒரு சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு வரையறுக்கப்பட்ட எல்லைகளால் சூழப்பட்ட நிலப்பகுதியில் வழக்கமாகத் தங்கி வாழும் ஏராளமான எண்ணிக்கை யிலான மக்களை 15 ஆம் நூற்றாண்டிலிருந்து ஒன்று படுத்திய ஒரு மேற்கத்திய கோட்பாடே தேசியமாகும். இந்தியாவில் தேசியத்தின் விதைகள் பிரிட்டிசாரால் ஊன்றப்பட்டன. மெக்காலேயின் கல்வி மசோதா 1835ல் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மில்லினுடைய 'விடுதலைஉரிமை' பயிலப்பட்டதற்குப்பிறகுமே தேசியம் பற்றிய புதிய உணர்வு நிலை எழுந்தது. 1947 ம் ஆண்டில் இந்தியப் பேரரசு முழுவதையும் இழக்கும் நிலைக்கு வெகு அருகில் ஆங்கிலேயர் வந்தபோது நடந்த நிகழ்ச்சிகள் தேசிய உணர்வால் உள்ளுக்கம் தரப்பட்டு நடந்தவையா என்பது விவாதத்திற்குரியது. தேசியத்தின் விடியல் இந்தியாவில்

நேர்ந்ததற்கான கால வரையறையை ஐயத்திற்கிடமின்றி நாம் பெற்றுள்ளோம். 1884 ல் இந்தியதேசிய காங்கிரஸ் பிறந்தபோதே இதுவும் பிறந்தது. தேசியத்தின் விதைகளை விதைத்த காங்கிரஸ் இயக்கத்தின் தந்தை ஓர் இந்தியரல்லர். ஏ.ஓ. உற்யூம் எனும் ஆங்கிலேயர் இந்தியாவின் ஆன்மாவில் தேசியம் பற்றவைக்கப்பட்ட மாத்திரத்தில் அது நகரங்களையும் கிராமங்களையும், பணக்காரர்களையும் ஏழைகளையும், இளையோரையும் முதியவர்களையும், ஆண்களையும் பெண்களையும், அறிவாளிகளையும் அறியாமையில் உழல்வோரையும், வணிகரையும் விவசாயிகளையும் விழுங்குகிற கொழுந்துவிட்டெரியும் அனற்கொழுந்தானது. இந்திய தேசியவாதம் விரைவில் இடர்ப்பாடுகள் பலவற்றைக் கண்டது. விடுதலையை வென்றெடுத்த முக்கியமான செயல் இயக்கமான காங்கிரஸ், அனைத்து வகையான சாயல்களும் கொண்ட கருத்துரைகளைச் சுமந்து சென்ற ஒரு பேருந்துக்கலமாக இருந்தது. அந்நியரை விரட்டவேண்டும் என்ற நோக்கத்தில் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டிருந்தனர். ஆனால் எந்தவழி வகைகள் மூலம் இலக்கை அடைவது என்பதில் பெரிதும் கருத்து மாறுபட்டிருந்தனர். சிலர் மிதவாதிகள், சிலர் தீவிரவாதிகள், சிலர் சமதர்ம வாதிகள், சிலர் புரட்சியாளர்கள், வேறுசிலரோ பிற்போக்கானவர்கள். அவர்கள் அனைவருமே தங்கள் முடிவே மேலோங்க வேண்டுமென்று விரும்பினர். இது பிணக்குகளை உருவாக்கிற்று. அதைவிடவும் மோசமாக, காலனியாதிக்கக் காரர்கள் ஆட்சிமாற்றத்தைத்தாமதப்படுத்துவதற்கும் சாக்குப் போக்குகள் கூறுவதற்கும் ஒரு காரணமாக இது அமைந்தது. விடுதலையை வென்றெடுப்பதற்கு மிதவாதிகள் அரசியல் சட்டரீதியான முறைகளைக் கைக்கொள்ள விரும்பினர். தீவிரவாதிகள் தாக்குதலுக்கு முன்னுரிமை தந்தனர். தந்திக்கம்பிகளை அறுத்தல், புகைவண்டித்தடங்களைத் தகர்த்தல், வெடிகுண்டுகளை வீசுதல், பிறவகை வன்செயல்கள் யாவும் இவர்கள் இன்னும் முதிர்ச்சியடையாமல் இருக்கின்றனர் என்று பிரிட்டிசாரை சொல்லவைத்தன. வன்முறையற்ற அமைதியான சத்தியாகிரக உத்தியை காந்திஜி புகுத்தியபோது, அனைவருமே கொள்கை அளவில் அதனை ஏற்றுக் கொண்டனர், மதித்தனர். எனினும், மனத்தளவில் வேறுபாடு இருக்கவே செய்தது. சுயராஜ்யக்காரர்கள் அவர்கள் வழியில் செயல்பட விரும்பினர். சமதர்மக்காரர்கள் பொது உடமையாளர், சமயப் புத்தெழுச்சி இயக்கத்தவர் அனைவருமே தத்துமது வழியில் செயல்படவே விரும்பினர். ஜமீன்தார்களின் ஆதரவாளர்களும் சக்திமிக்கவர்களாக இருந்தனர். அரசுப்பணிகளில் இருந்தோர்க்கு அவர்களுக்கே உரிய தனித்த ஆர்வங்கள் சில இருந்தன. மேலை நாடுகளில் கல்வி கற்ற இந்தியர்கள் வேறொரு திசையில் இழுத்துச் செல்லப்பட்டனர். பெரும் வணிகர்களும், தொழில் அதிபர்களும் தங்களது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள

விரும்பினர். பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட வகுப்பினர் வேறுவகையான நெருக்கடிகளைத் தரும் குழுவினராகச் செயல்பட்டனர். தத்தமது அக்கறைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற ஒவ்வொரு குழுவினரின் பற்றார்வமும், முதன்மை நோக்கமான தேசவிடுதலைக்கான பற்றுறுதி பிளவுபட்டிருக்கிறது என்ற கருத்துப்பதிவை உருவாக்கியது.

ஆனாலும், இவையனைத்திலும் எளிதில் கையாள முடியாத ஒரு பிரச்சினை முஸ்லீம் சிறுபான்மையினர் பற்றிய கருத்து வேறுபாடாக இருந்தது. அகில இந்தியஅளவில் அவர்கள் மூன்றில் ஒரு பகுதியினராக போதிய அளவில் இருந்தனர். நான்கு அல்லது ஐந்து மாகாணப்பகுதிகளில் அவர்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். தனிப்பட்ட சிலவகையான சிக்கல்களினால் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். தங்களுக்கென தனித்த அடையாளம் ஒன்றைப் பெறவேண்டும் என்ற ஏக்கத்தின் காரணமாக முதன்மை நீரோட்டத்தில் முழுமையாக இணைவது அவர்களுக்கு ஒரு பிரச்னையாக இருந்தது. தேசத்தினுள்ளாக ஒரு தனிதேசம் போன்று அவர்கள் செயல்பட்டனர். அவர்களது ஒத்துழைப்பு இல்லாமல், அவர்களது பிரச்னையைத் தீர்க்காமல் விடுதலை அடைவது என்பது இயலாததாக இருந்தது. ஜாகிர்சாகிப்பின் தேசிய சிந்தனைகளை இந்த கண்ணோட்டத்தில்தான் மதிப்பிடவேண்டும்.

காலனியாதிக்கக் காரர்கள் நமது தேசத்திலிருந்து முதலில் வெளியேற்றப் பட்டாக வேண்டும் என்பதில் ஜாகிர்சாகிப் உறுதியான பற்றுக்கோள் கொண்டிருந்தார். இந்த நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டுகளில் அலிகரில் அவர் மாணவராக இருந்த போதிலிருந்தே இந்த எண்ணம் அவரது மனதை ஆட்கொண்டிருந்தது. அதன் காரணமாகவே தான் 1920 வாக்கிலேயே சிந்தனையைத் தூண்டும் "நிலைபேறுடைமை அல்லது வேடிக்கைப்பொருள்" எனும் கட்டுரையை அவர் எழுதினார். அலிகர் இயக்கத்தோடு தொடர்புடைய அரசியல் சிந்தனைக்கு அது ஒரு நேரடியான எண்ணமாக இருந்தது. ஆங்கிலேயர்களின் முகவர்கள் போல செயல்பட்ட முஸ்லீம் தலைவர்களுக்கு எதிராக அவர் கிளர்ந்தெழுந்ததற்கு அதுவே காரணம். அலிகரை தேசியக்கல்வி மையமாக மாற்றவேண்டும் என்று விரும்பிய காந்திஜி, ஹக்கிம் அஜ்மல்கான், டாக்டர். அன்சாரி, மௌலானா முகமது அலி ஆகியோரின் அழைப்பினை ஏற்றுக்கொண்ட இஸ்லாமிய இளைஞர்களுள் முதன்மையானவர்களில் ஒருவராக இவர் இருந்ததற்கான காரணமும் அதுவே. அந்த நோக்கம் நிறைவேறாமல் போனபோது ஜாமியாவை நிர்மாணித்தவர்களின் முன்னணிப்படையில் அவர் இடம் பெற்றார். ஜாமியாவை தேசிய சிந்தனைகள் வளரும் விளைநிலமாக மாற்றியவர் அவரே. இந்தியாவின் தேசிய வாழ்க்கை முதன்மை

நீரோடையில் முஸ்லிம்களை இணையச் செய்வதற்கு தன்னாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் அவர் செய்ததும் இங்குதான்.

ஜாகிர்சாகிப் தேசியப் பாதையிலிருந்து ஒருபோதும் விலகிச்சென்றதில்லை. வகுப்புவாதக்காரர்களுடன் ஒருபோதும் சமரசம் செய்துக் கொண்டதில்லை. எந்தவித தடையுணர்ச்சியுமின்றி விடுதலைப்போரில் அவர்களாகவே ஈடுபடுமாறு வெளிப்படையாகப் பேசிட ஒருபோதும் அவர் தயங்கியதில்லை. மனிதகுல வரலாறு, விடுதலைக்கான மனிதப் போராட்டத்தின் பதிவேயன்றி வேறில்லை என்று அவர் உண்மையாகவே நம்பினார். ஆனால் சுதந்திரம் பற்றிய அவரது கருதுகோளுக்கும், இந்தியப் பொதுமக்கள் பற்றிய கருது கோளுக்கும் இடையே ஒரு பெரிய வேறுபாடு இருந்தது. ஆகையால், அரசியல் சுதந்திரத்தை வென்றெடுப்பது மட்டுமே தேசிய பிரச்னைகள் அனைத்திற்கும் முடிவு என்று இந்தியப் பொதுமக்கள் எண்ணியிருக்க, இது ஒரு தொடக்கமே, எண்ணற்ற பிற தளைகளிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்வதற்கு இது ஒரு முதல்படிதான் என்று ஜாகிர்சாகிப் எண்ணினார். அரசியல் விடுதலையை மட்டுமின்றி பொருளியல், சமூகவியல், அறிவாற்றல், பண்பாட்டு விடுதலைகளையும் அவர் இலக்காகக் கொண்டிருந்தார். நமது நாட்டின் கல்வித் துறை மீது அணிவிக்கப்பட்டிருந்த காலனியாதிக்க விலங்குகளை அகற்றக்கூடிய முன்னேற்றத்திட்டம் ஒன்றைக் கொண்டதாக அவரது செயல்திட்டம் இருந்தது; அறியாமை எனும் கொள்ளை நோயைப் போக்க அவர் கொண்டிருந்த அக்கறையும் கூட சுதந்திரப்போரின் ஒரு கூறாக இருந்தது. அகலாதாரம் கொண்ட கல்விமுறையை இந்திய மக்களுக்காக அவர் உருவாக்கினார். அவரது ஆர்வச் சுறுசுறுப்பே கூட தேசப்பற்றின் முனைப்பான கவர்ச்சி கூறு; தனது மக்களின் நம்பிக்கைகள், விழைவுகள் இவற்றோடு தன்னை அடையாளப்படுத்தி கொள்ளும் அவரது உணர்வு வயமான நிலையும்கூட அவரது தேசியக் கொள்கையின் ஒரு குறிப்பிடத்தக்க அங்கமாக இருந்தது. முதலிலும் முடிவிலும் அவர் ஒரு இந்தியரே. அவரது வாய்மை, பற்றுறுதி இவற்றை ஒருவரும் சந்தேகிக்க இயலாது. இந்தியாவை அவர் உணர்ச்சிப் பூர்வமாக விரும்பினார். ஆனாலும், அது கண்டறியாதப் பொருளின்மீது அறியாதவர் கொண்டுள்ள கண்மூடித்தனமான விருப்பம் போன்றதல்ல. மாறாக, ஐயம் தெளிந்த ஆன்மாவின் நம்பிக்கை, அவரது, அன்பு, விவேகம், அறிவு, செயற்காரணம், தர்க்க நியாயம் ஆகியவை குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு நிற்பது எப்படி அவசியமாக இருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டமைந்தது. ஒவ்வொரு இடர்ப்பட்ட கண்களிலிருந்தும் கண்ணீரைத்துடைப்பதற்கும், ஒவ்வொரு மனித

ஆன்மாவினின்றும் அறியாமையை நீக்குவதற்கும் தான் ஒரு செயல் இயக்கியாக இருந்தாக வேண்டும் என்ற விருப்பம் மீதூர்ந்த நம்பிக்கையை அவரது தணியாத தேசப்பற்று மறையடக்கமாகக் கொண்டிருந்தது.

ஜாகிர்சாகிப், கட்டுப்பாடற்ற, ஜனநாயக, மத சார்பற்ற பலவின் ஆக்கம் சேர்ந்த பண்பாட்டிற்காக நின்ற முஸ்லீம் தலைமைக் கூறினைச் சேர்ந்தவர். முஸ்லீம்கள் இந்துக்களுடன் பல நூற்றாண்டுகளாக ஒரு நிலத்துச் சகோதரர்போல் ஒன்று பட்டு வாழ்ந்தவர்கள், இப்போது ஏன் அவர்கள் தனி மாகாணம் கேட்கவேண்டும் என்று அவரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. முஸ்லீம்களுக்குத்தனி மாகாணம் அமைப்பதை அவர் ஏற்கவில்லை. இத்தகைய கருத்துக்களைப் பரப்பிய வட்டாரங்களில் தன்னலம் இருந்ததை அவரால் உணரமுடிந்தது. மதத்தின் அடிப்படையில் தனிநாடு அமையவேண்டும் என்ற வாதங்களையும் அவர் மறுத்துரைத்தார். மதத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை. மதம் அரசியலுடன் கலக்கப்பட்டால் அது ஒரு ஆபத்தான விளையாட்டாக இருக்கும். அரசியலில் உணர்ச்சிகள் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றன. நீண்டகால ஆதாயங்களைக் காட்டிலும் உடனடி நலன்களே முன்னுரிமை பெறுகின்றன. இந்த கணத்தின் அவசரத் தேவைகளே பார்வையை மறைக்கின்றன; உன்னதமான நோக்கங்களைத் தடைப்படுத்தி விடுகின்றன. வற்புறுத்தல்களும், செல்வாக்குகளும் விவேகத்தையும் பொருளறி திறனையும் மூலையில் தள்ளி விடுகின்றன. இந்தியாவில் அதுவே நடந்துவருகிறது. ஒரு சிறந்த ஆசிரியர் என்ற வகையில் ஜாகிர்சாகிப் தனது சமூகத்திற்கு ஜனநாயகம், தேசியம் பற்றிய அடிப்படைப் பாடங்களைக் கற்பிக்க தன்னாலியன்ற உச்ச அளவு முயற்சியில் ஈடுபட்டார். ஏற்க மறுத்த அச்சமூகம் அவர் கூறியதை கவனிக்கவே இல்லை. விட்டுக்கொடாத தனது பண்பிற்காக அது கடுமையான விலை கொடுக்க நேர்ந்தது.

ஜாகிர்சாகிப்பின் தேசியக்கொள்கை அவரது முதிர்ந்த சிந்தனையின் வெளிப்பாடு. ஒரு பகுத்தறிவாளராக, கல்வியாளராக, தத்துவஞானியாக, மனிதாபிமானியாக இந்தக் கருதுகோள் பற்றி அவர் ஆழமாக எதிரொலித்தார். அதன் கூறுகள் அனைத்தையும் பகுப்பாய்வு செய்து தனது சொந்தக் கருத்துக்களை அவர் உருவாக்கினார். தேசியம் அவரது தத்துவத்தின் முக்கியமான ஒரு கொள்கையை உருவாக்கியது. ஒரு தனி மனிதனின் முதல் கடமை அவன் சார்ந்துள்ள நாட்டின் குடிமகன் என்ற வகையில் தனக்குத் தானே கட்டுப்பாடு கொண்டிருந்து தேசத்திற்குப் பற்றறுதியோடிருப்பது என்று அவர் நினைத்தார். அவர் பெருமிதத்தோடு கூறினார். "இந்த தேசத்தின் நிலஎல்லைக்கு அப்பால் வெளியில் புது நடை உடைபாணி உடையவராக இருந்தோமாயினும் இந்த மண்ணுக்கே நாம்

திரும்பி வந்தாக வேண்டும்". அவரது தேசியக் கோட்பாடு அவரது ஆய்வறிவுக்கோட்பாட்டினில் ஆழமாக வேருன்றி இருந்தது. மெய்ப் பொருளின் சாரமே விடுதலை என்பது. உலக வரலாற்றின் ஆய்வுப் பொருள் விடுதலை. மனிதனை விட்டுவிட்டுப் பார்த்தாலும் விலங்குகளும் விடுதலையையே விரும்புகின்றன என்ற ஆழமிக்க சிந்தனையில் இவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். எந்தப் பறவை, எந்த விலங்கு கூண்டிற்குள் அடைப்பட்டுக் கிடக்க விரும்பும்? விடுதலையை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு வயதும் ஒரு காலடியாகும். தனி மனித மனத்தை சமூக வாழ்வின் ஒரு வினைச் செயலாக அவர் கருதினார். சமூக வாழ்க்கை சுதந்திரமான சூழலில் மட்டுமே மலருமேயன்றி கட்டுண்டு கிடக்கும் போதல்ல. சமூக நன்மைக்கு தனிமனிதன் ஆற்றல்மிக்க வகையில் ஏதேனும் பங்களிக்கவேண்டுமெனில், அனைத்து ஆற்றலையும், தனி மனிதனுக்குள் நிரப்பும் ஒரு இயக்கும் சக்தியாக செயல்படக்கூடிய மிகவும் தனித்தன்மை வாய்ந்த, மிகவும் அரிதான, மிகவும் உள்ளார்ந்ததான ஏதோ ஒன்றை அவன் பெற்றிருக்கவேண்டும். அது அவனது சுதந்திரமாகும். அரசியல், சமூகவியல், பொருளாதார, பண்பாட்டு அனைத்து வகையிலுமான சுதந்திரமாகும். சிறைக்கைதி படைப்புப் பணிக்குத் தகுதியற்றவனாகச் செய்யப் படுகிறான். சமூகத்தில், தனிமனிதனுடைய கடமைக்கூறு, தேசத்தில் சமூகத்தின் கடமைக்கூறு, மனிதகுலத்தின் சூழ்நிலைப் பொருத்தம் இவை பற்றிய நுண்ணாய்வின் விளைவாக ஜாகிர்சாகிப்பின் விடுதலை மற்றும் தேசியக்கோட்பாடு அவருடைய சிந்தனையிலும், மனசாட்சியிலும் ஆழ வேர்விட்டிருந்தது.

ஜாகிர்சாகிப்பின் வாழ்க்கையின் மிகச் சிறந்த பகுதி—புதியன படைக்கும் திறனுள்ள பகுதி, தேசம் அடிமைத்தன அந்நிய ஆட்சியின்கீழ் இருந்தபோது செலவாயிற்று. மனிதனின் விடுதலை உருவளவையை விரிவாக்கிய காரணிகள்மீது அவரது எண்ண அலைகள் ஐயத்திற்கிட மின்றி குவிமையப்பட்டன. நெருக்கடியின் போது அறிவு கடினமாகவும் விரைவாகவும் வேலை செய்கிறது என்று சார்த்தர் சரியாகவே குறிப்பிட்டிருக்கிறார். ஒரு நோயாளி மனிதன் ஆரோக்கியத்தின் பெருமையையும், ஒரு சிறைக்கைதி விடுதலையின் மதிப்பையும், ஒரு பிச்சைக்காரன் சொத்தின் மதிப்பையும், உணர்ந்து பாராட்ட முடியும். இந்தியா முழுவதும் அப்போது ஒரு பெரிய சிறைச்சாலையாக இருந்தது. அந்நியரின் ஒடுக்குமுறை ஆட்சியின் கீழ், அதிலும் குறிப்பாக விடுதலை கோரியபோது இந்தியர்கள் திக்குமுக்காடச் செய்யப்பட்டனர். ஆகையால், ஜாகிர்சாகிப்பின் கல்வித் தத்துவத்தோடு, இணைந்த தேசியக் கொள்கை, விடுதலைக் கருதுகோள் அனைத்துமே காலனி ஆதிக்க ஆட்சி யில் அவர் பெற்ற மோசமான அனுபவங்களின் விளைவே. அவை அவரது

எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் வெளிப்பட்டன. அவருடைய கல்வித்தத்துவத்தில் அறிவு, மதிப்பு, விடுதலை ஆகியவற்றை தனது சிந்தனை வழிமுறையின் முப்பரிமாணங்களாக அவர் ஆக்கினார்.

வாழ்க்கையைப் பற்றிய ஜாகிர் சாகிப்பின் ஆழமான ஆராய்ச்சி, அவரது சிந்தனையின் முக்கியமான உந்துகை கல்வி மற்றும் விடுதலை பற்றியதாகும். அதுவே ஜாமியாவின் தாரக மந்திரமாக இருந்தது. ஜாமியாவே அவரது வாழ்வின் இதயமும் ஆன்மாவுமாக இருந்தது. இந்திய தேசியத்தின் குழந்தை அவர். 1947 க்கு முன்னர் நமது தேசியம் அனைத்தும் விடுதலைப்போர் பற்றியதாக இருந்தது. அவரது கல்வியியல் சிந்தனைகள் தேசிய இயக்கத்திலிருந்து ஊட்டப் பண்பைப் பெற்றன. அவரது அடிப்படைக்கல்விக் கொள்கை உழைப்புப்பள்ளி, குழந்தையின் சிந்தனைச் சுதந்திரம் என்ற இரு அடிப்படைக் கருதுகோள்களைச் சுற்றிச் சுழன்றது. தானே சுதந்திரமாக இல்லாத நிலையில் குழந்தைகளுக்கு அவன் சுதந்திரத்தை வழங்க முடியாது. தத்துவ ரீதியாகப் பேசும்போது, கல்வியும் சுதந்திரமும் உலகின் படைப்பாற்றல்கள் அனைத்திற்கும் இன்றியமையாத அடிப்படையான தகுதிகளாக இருக்கின்றன. முன்னேற்றச் சக்கரத்தை இயக்கும் மனிதனின் ஒவ்வொரு செயலும் தனித்தன்மை வாய்ந்தவை. அப்படிப்பட்ட ஒவ்வொரு வினையும் செயல்புரிந்திட சிந்தனைச் சுதந்திரம் தேவைப்படுகிறது. விடுதலையற்ற கல்வியானது கூண்டுக்குள் இருக்கும் பறவையைப் போன்றது என ஜாகிர்சாகிப் கருதினார். நயநுட்பமும், விடுதலையுமுடைய கல்வியானது நாம் அணிவகுத்து முன் செல்வதற்கான தூண்டுவிசை. விடுதலை இன்றேல் மனிதன் கம்பங்களில் கட்டுண்டு நகர வியலாமல் இருப்பான். சிந்தனையின் வினைத்திறம் எவ்வளவுதான் சுடர்விட்டபோதிலும் வெளியிலிருந்து வரும் வற்புறுத்தல்கள் படைப்புச் சிந்தனையின் ஆன்மாவைக் கொன்றுவிடும்.

மனிதனின் படைப்பு வளத்திற்கான சுதந்திரம் உள்ளார்ந்த ஆற்றல் வளத்தையும் வேண்டுகிறது. இல்லையெனில், மனிதன் திசையறியாமல் நடைபோட்டுச் கொண்டிருப்பான். திசையை அறியும் அறிவே கல்வியாகும். திசையையும், பயணமுறையையும் தெரிவு செய்யும் விடுதலையே சுதந்திரம். சிலர் பாதையின் அழகைத் துய்த்தவாறே நடந்து செல்லலாம். வேறு சிலரோ கணநேரப் பாய்ச்சலில் பயணத்தை முடிக்கலாம். ஆனால், தத்தமது சிறப்புத்தன்மைகளுக்குப் பொருந்தக்கூடிய பயண முறையைத் தேர்ந்தெடுப்பதற்கு அனைத்திற்குமே விடுதலை தேவைப்படுகிறது. விடுதலை இல்லாத நிலையில் கல்வி, 1947 க்கு முன்னர் அரசுப் பணியொன்றைப் பெறுவது மட்டுமே கல்வியின் நோக்கம் என்று தாழ்ந்து போயிருந்ததுபோல, ஏதுமற்ற நிலைக்குப் படியிறக்கம் கண்டுவிடும் என்று ஜாகிர்சாகிப் உணர்ந்தார். அதன் காரணமாகவே, காந்திஜி அரசு

கட்டுப்பாடுகள் அற்ற தேசியக் கல்விமையங்களைப் பற்றி சிந்தித்தார். ஜாகிர்சாகிப் இந்த யோசனையால் உடனடியாக ஆர்வமெழுப்பப் பெற்று, ஜாமியாவை ஒரு வெற்றிகரமான அமைப்பாக உருவாக்குவதற்கு கடுமையாக உழைத்தார். கல்வியையும், விடுதலையையும் பற்றி சோதித்தறியும் ஒரு தேசிய ஆய்வுக்கூடமாக அது மலர்ந்தது. குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவது உட்பட எண்ணற்ற வழிகளில் தனது கல்வி, விடுதலைச் சிந்தனைகளைப் பொருத்தமும் பயனும் ஆர்வமும் உள்ளதாக ஆக்குவதற்கு ஜாகிர்சாகிப் முயற்சித்தார்.

இந்தியா விடுதலைபெறும் வரையில் ஜாகிர்சாகிப் அரசியலில் இல்லை என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். அதன் பிறகு கூட அவர் குறைந்த அதிகாரமும் அதிக கௌரவமும் உடைய மரபு சார்ந்த சில பதவிகளை மட்டுமே அவர் வகித்தார். அவரொரு அறிவு ஜீவியே தவிர அரசியல் வாதியல்லர். ஜாகிர்சாகிப்பிற்கு அரசியல் ஒரு ஆபத்தான விளையாட்டு. இடரற்ற, பழக்கப்பட்ட சூழலில் இருப்பதுபோல ஒருபோதும் அவர் உணர்ந்ததில்லை. அரசியலானது தந்திரங்களோடு நடைமுறைத் தொடர்பு கொண்டிருக்கிறது. தந்திரம் என்பது "எதிர்பாராத ஒன்றிடமிருந்து ஏமாளிமீது ஏவப்படும் அச்சுறுத்தல்". நல்லறிவுடைய எவரும் அதனை ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சலிப்பூட்டக்கூடிய கூரறிவற்ற தன்மைகளில் அவர் ஒருபோதும் சுறுசுறுப்பாக ஈடுபட்டதில்லை. ஆனால் எல்லாக் கூறுகளையும் அறிவுத்திறத்தோடு ஆராய்ந்து முஸ்லிம்கள் தனி அமைவுநிலைவேண்டி தனி நாட்டை அமைக்கமுடியாது என்று குறிப்பிட்டார். தேசிய மற்றும் மதச்சார்பற்ற லட்சியங்களுக்கு அவரது அர்ப்பணிப்பு, நெருக்கடியான புயல்வீசிய கால கட்டங்களிலும் கூட ஒருபோதும் தடுமாறியதில்லை. இந்தியாவில் மதச்சார்பின்மை ஊட்டமும் வாழ்வாதாரமும் பெறுவதற்கு அவர் முயன்று உண்டாக்கிய ஒருமைப்படுத்தும் இயக்க விளைவு அவரது மிகப் பெரிய தொண்டாகும்.

ஜாகிர்சாகிப்பின் வாழ்க்கை வீச்செல்லை இந்திய தேசியத்தின் உயிர்த்துடிப்பான படிநிலையை உள்ளடக்கி இருந்தது. காந்திஜி தனது ஆயுதமான சத்தியாக் கிரகத்தை முதன் முதலில் பரிசோதித்தபோது அரசியலில் மன எழுச்சிபெறும் அளவுக்கு இவர் முதிர்ச்சி பெற்றார். அந்த இயக்கத்தின் துணை விளைவே தேசியக்கல்வி மையங்கள் என்பதாக இருந்தது. ஜாமியா அதன் பலனே. நம்முடைய பண்பாட்டுப் பெட்டகங்களில் சிறந்தனவும் உயர்ந்தனவுமாகிய அனைத்திற்குமான மையமாக ஜாமியா வளர்ந்தது. மனித நலம் கோலோச்சி வந்த பல நூற்றாண்டுகள் பழமையுடைய நமது பண்டைய பண்பாட்டு ஒழுக்க உயர்நிலை இயல்புகளுக்கு நமது தேசியம் ஒரு புதிய பெயராக இருக்க நேர்ந்தது. அந்த

மனித நலத்தின் தலைமை குருவாக, பிரிவினை எண்ணங்களின் பழக்கத் தொடர்பிலிருந்து முஸ்லீம்களை விடுவிக்க ஜாகிர்சாகிப் உருவானார்.

தேசிய வாழ்வின் முதன்மை ஓட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு ஒரு சில ஒவ்வாமை உணர்வுகளை முஸ்லீம்கள் கொண்டிருந்தனர். நமது தேசத்தின் பண்டைய வரலாற்றில் வேர்விட்டிருந்தவை அவை. ஆட்சியாளர்களாக இருந்து அனுபவித்திருந்த அரசியல் ஆதாயங்களை முஸ்லீம்கள் மறக்கவில்லை. புதுவித அமைப்பொன்றுடன் ஒத்துப் போவதற்கு அவர்களுக்கு சில பிரச்னைகளை அது உண்டாயிற்று. இருதலைக்கொல்லி எறும்பின் நிலையில் அவர்கள் அகப்பட்டுக் கொண்டனர். ஒன்றுப்பட்ட இந்தியாவிற்குத் தங்களைத் தாங்களே இணக்குவித்துக்கொண்டால் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தங்களின் பின்தங்கிய நிலையினால் அவர்கள் பாதிப்படைவார்கள். இல்லையெனில், தேசப்பற்றில்லாதவர்கள் பிரிவினைவாதிகள் குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்று அவர்கள் பட்டம் சூட்டப் பெறுவார்கள். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுச்சென்ற பிறகு தங்கள் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என்று ஐயுற்று அஞ்சிய முஸ்லீம்களுக்கு ஒரு அச்சவுணர்வு பற்றிக்கொண்டது. உரிமைவகையில் பாதுகாப்பளிக்க வேண்டும் என்று கோரினர் அவர்கள். அதனை பிரிட்டிஷார் ஏற்றுக்கொள்ளவும், காங்கிரஸ் அதற்கு உத்திரவாதம் அளிக்கவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதனை ஒரு தவறான வாதமென்று ஜாகிர்சாகிப் கருதுகிறார். இடருண்டாக்கும் வழுக்கள் உடையதாக அந்தக் கோரிக்கை இருந்தது. இது இந்துக்கள்மீது முன்னர் ஏற்பட்ட அவ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சோதித்தறியும் முன்பே எடைபோட்டுவிடுவது அழகற்ற செயலாகவே இருந்தது. இரண்டாவதாக, ஒருவனுக்கு நேர்மையாக அளிக்கப்படவேண்டியதைவிட மிகவும் அதிகமாகக் கோருவதும் அழகற்றது. ஜனநாயகத்தில் அனைவருமே சமமானவர்கள். யாரொருவரும் உயர்ந்தவரில்லை. மூன்றாவதாக, நாட்டுப்பிரிவினை என்பது அவலமாகக் கருதப்பட வேண்டிய ஒன்று. இந்தியாவில் விட்டுச் செல்லப்பட்டிருக்கும் முஸ்லீம்களுக்கு இது மேலும் இடும்பை சேர்க்குமே தவிர அவர்களது இடரைக் குறைக்காது. பாகிஸ்தானில் போதிய அளவு இந்துக்கள் இருப்பது இந்தியாவிலிருக்கும் முஸ்லீம்கள் நல்லவிதமாக நடத்தப்படுவதற்கு உத்தரவாதமளிக்கும் என்பது ஜின்னாவின் விசித்திரமான தர்க்கமாகும். பிரிவினையைத் தொடர்ந்து வந்த தலைதடுமாற்றத்தை அவர் கற்பனை செய்திருக்கவில்லை. நான்காவதாக, முஸ்லீம்களுக்காக தனிமாநிலத்தைக் கோரும் முன்பாக சிறந்த முஸ்லீம்களாக அவர்கள் இருந்து காட்டவேண்டும் என்று ஜாகிர்சாகிப் உளமாறப் பரிந்துரைத்தார். ஒரு சிறந்த

முஸ்லீம் சிறந்த இந்தியனாகவும் இருப்பான் என்பதால், பாகிஸ்தானை ஒருபோதும் அவன் கோரமாட்டான் என்ற சிந்தனையில் உறுதி கொள்ளச் செய்தது, அவரது அறிவாற்றல். சிறந்த மு ஸ்லீம் ஒருவனும் சிறந்த இந்தியன் ஒருவனும் ஒரு நிகர் என்று அவர் கருதினார். உண்மையான சமயம் உண்மையான தேசியத்திற்கு எதிரானது அல்ல. இரண்டுமே ஒத்த உருவம் கொண்டவை. சிறந்த முஸ்லீம்கள் பலரும் காங்கிரஸ் முகாமில் இருந்தனர். மௌலானா ஆசாத் ஒரு காங்கிரஸ் தலைவராக இருந்தார். ஜின்னாவே கூட ஒரு காலத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமையின் புகழ்மிக்க தூதராக மதிக்கப்பட்டார்.

ஜாமியாத்–உல்–உலீமா–இ–ஹிந்த், அகில இந்திய ஷியா மாநாடு, அகில இந்திய மொமின் மாநாடு மற்றும் மஜிலிஸ்–இ–அஹ்ரார் போன்ற முஸ்லீம் அமைப்புகளின் ஆதரவை காங்கிரஸ் கோரிப் பெற்றது. முஸ்லீம்களையும் கூட தான் பிரதிநிதித்துவப்படுத்தி இருப்பதாக காங்கிரஸ் உரிமை கொண்டாடியது. ஆனால், இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள ஜின்னா மறுத்துவிட்டார்.

ஜின்னாவின் சிந்தனையில் என்ன இருந்தது என்பதை ஜாகிர்சாகிப்பின் தேசிய கோட்பாடு அறிந்துகொள்ளவில்லை. 1921 முதற்கொண்டு ஜாகிர்சாகிப் காங்கிரஸ் பண்பாட்டில் ஊறிச் செறிய வைக்கப்பட்டார். காந்திஜி அவரது இலட்சிய நாயகர், நேருஜி அவரது நாயகன். இவர்களை நவ இந்தியச் சிற்பிகளாக அவர் மதித்தார். சூபிக்களின் தத்துவம், சாக்ரடீஸ் முதல் காந்திஜி வரையான அறிவுத்திறம் உடைய பலரின் தத்துவங்கள் இவற்றினால் செறிவூட்டப்பட்டிருந்த ஜாகிர்சாகிப்பின் பண்பட்ட சிந்தனைகள் ஜின்னாவின் அதிகாரப் போட்டி விளையாட்டைப் போற்றிட வில்லை. ஜின்னாவின் முன்னிருந்த வினா, இந்தியா முழுவதும் இருக்கும் முஸ்லீம்களின் நலன்களைப் பாதுகாப்பது பற்றியதன்று, மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் இந்திய தேச வரைபடத்தை மாற்றுவதுமே. அவரது உள்நோக்கத்தைத் தோல்வியுறச் செய்வதற்கு காங்கிரஸ் உறுதி மேற்கொண்டிருந்ததால் அவருக்கு இது ஒரு எளிய பணியாக இருக்கவில்லை. சிறப்பாக, ஒழுங்கமைக்கப்பட்ட முதிர்ச்சியுள்ள, ஆற்றல்மிக்க, அறிவுத்திறம், ஆற்றல்வாய்ந்த தலைமையையும் கொண்ட ஒரு அமைப்பாக காங்கிரஸ் இருந்தது. சக்திமிக்க செய்தி இதழ் ஒன்று அதன் ஆதிக்கத்தில் இருந்தது. வளப்பம் மிக்க நடுத்தர வர்க்கம், பணக்கார தொழில் அதிபர்கள், பெருந்தொழில்கள், பொதுப்பணியில் உயர்பதவிகளில் இருந்த அதிகாரிகள் என்றிவ்வாறு பலரது ஆதரவும் அதற்கிருந்தது. ஜின்னாவின் ஒரே சொத்து அவரது மூளை. ஏற்கக்கூடியதைவிடவும் மிகையான பங்கைக் கோரினால் ஒழிய கிடைக்கக்கூடியதுகூட கிடைக்காமல் போய்விடும் என்று அவர்

நினைத்தார். இந்திய தேசப்படத்தை மாற்றியமைக்க நடந்த அதிகாரப்போட்டி விளையாட்டில் இறுதியில் கிடைத்தவெற்றியோடு அவர் அமைதி கொண்டார். ஜின்னாவின் மனதைப் புரிந்துக் கொள்ள முடியாதிருந்த, உன்னத இயல்புமிக்க ஜாகிர்சாகிப்பிற்கு இவைஅனைத்துமே கொடுங்கனவாக இருந்தன.

மேற்கத்திய சட்டங்களில் கற்றுத்துறை போனவராக மேற்கத்திய வாழ்க்கை முறை மேற்கத்திய சிந்தனைகளின்படி நன்கு பேணி வளர்க்கப்பட்டவராக இஸ்லாம் பற்றி கற்றறிந்து கொண்டதில் ஜாகிர்சாகிப்பிற்கோ, மௌலானா ஆசாத்திற்கோ, முகமதலிக்கோ எந்தவிதத்திலும் நெருக்கமாக வரமுடியாத அளவுக்கு இருந்த ஜின்னா இஸ்லாமியப் பண்பாட்டிற்கு மிகப்பெரிய சார்புரிமை கொண்ட பேச்சாளராக ஆனது மிகவும் விசித்திரமானதாக இருந்தது. அவர் ஒரு சிறந்த வழக்குரைஞர். சிறந்த வழக்குரைஞர் ஒருவரின் தொழில் வழக்கில் வெற்றி காண்பதுதான். எந்தவிதமான தர்க்க திறமைகளை அவர் பயன்படுத்தினார் என்பது முக்கியமாகாது. புனை சுருட்டுகளைத் தவிர்க்கவியலாத ஒரு சமூகக் கட்டமைவே சட்டம் என்பது. ஆனால், ஜாகிர்சாகிபோ தனக்கே உரித்தான மதிப்பீட்டுத் தொகுதிகளை மனதார ஏற்றுக்கொண்ட ஒரு ஆசிரியர். அவருடைய அறவியல் சிந்தனை, பொதுவான பண்பாட்டால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தியாவை இருகூறாகப் பிளவுபடுத்த அனுமதிக்காது.

பாகிஸ்தானியர்களாக ஆக நேர்ந்தவர்களே கூட பாகிஸ்தான் வேண்டுமென்று மன்றாடவில்லை என்பது மேலுமொரு விசித்திரமாகும். இந்துக்கள் பாகிஸ்தானை விரும்பவில்லை. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்த முஸ்லீம்கள் பாகிஸ்தானைக் கோரவில்லை. பிரிட்டிஷாரும் பாகிஸ்தானுக்கு ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. பாகிஸ்தானை விரும்பிய ஒருவர் ஜின்னா மட்டுமே. மௌலானா ஆசாத் இஸ்லாமியக் கல்வியில் ஆழம் காணவியலாப் பெரும் புலமைக்குக் குறியீடாக இருந்தபோது, இஸ்லாமியநாடு உருவாவதை எதிர்த்து இஸ்லாமிய மனதிற்கு எடுத்துக்காட்டாக ஜாகிர்சாகிப் விளங்கிய போது, இஸ்லாமிய இனத்தின் பண்புகளுக்கு மிகவும் குறைவான அளவில் ஒத்திசையக்கூடிய வாழ்க்கை உடைய ஒருவர் இஸ்லாமிய நாட்டின் தந்தை என்று ஆனார். ஆட்சிமன்ற அறைகளிலும், அரசப்பிரதிநிதிகளின் உறைவிடங்களிலும், வட்டமேசை மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், பத்திரிகைகளிலும் என அந்தநேரத்து நெருக்கடிகள் எங்கெங்கெல்லாம் முதன்மைபெற்றதோ அங்கெல்லாம் இந்திய தேசியம் தீர்மானிக்கப்பட்டு வந்தநிலை மேலும் விசித்திரமானதாக இருந்தது. வருங்காலத்திய வல்லமைமிக்க நடைமுறைகள் பேச்சாளர்களின் அறிவாற்றலைக்கொண்டு தீர்மானிக்கப்

படக்கூடிய நிலையில் நமது தேசியம் வாதத்திறமைக்குரிய ஓர் ஆய்வு பொருளானது. பெருக்கமுற்றிருக்கும் கோடிக் கணக்கான மக்களின் தலைவிதியை அரசியல் கூர்மதி முடிவுசெய்கிற ஒரு மற்போர்க்களமாக ஆயிற்று நமது தேசியக் கொள்கை. தேசத்திற்கு கிடைக்கக்கூடிய மூலாதாரமான நன்மையைப்பற்றி யாரும் அக்கறை கொள்ளவில்லை. எது நியாயம் எது சரி என்று கூறுவதற்கும் ஒருவரும் நாட்டம் கொள்ளவில்லை. சீற்றமிக்க விவாதங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் கிளர்வூக்கமுள்ள முடிவை விளைவிக்கவில்லை. இயல்பாகவே அறிவுத்தெளிவுடைய, முதிர்ந்த, ஆய்ந்து பார்க்கும் இயல்புடைய ஜாகிர்சாகிப் போன்ற மனிதர்கள் அரசியல் செயல்பாடுகள் மிகுந்துள்ள வட்டரங்கில் நுழையமாட்டார்கள். தனது அறிவுரைகளுக்கு இந்த தேசம் செவிசாய்க்காது என்று அவருக்கு நிச்சயமாகத் தெரியும். யாருடைய சட்டம் மற்றும் அரசியல் கைத்திறம் அமைதியைக்காட்டிலும் போரை உருவாக்கும் சூழலுக்கு சார்பானதாக இருந்ததோ அந்த அரசியல்வாதிகள் தேசத்தின் தலைவிதியை முடிவுசெய்தபோது சிந்தனையாளர்கள், தத்துவவியலார், ஆசிரியர்கள் யாருமே அங்கு இல்லாமற்போனது பரிதாபத்திற்குரிய ஒன்றாகும்.

ஜாகிர் சாகிப்பின் தேசியவாதம் மிக உயர்ந்த வகையைச் சார்ந்ததாக இருந்தது. அவரது மதிப்பீட்டு முறையின் ஒரு கூறாக அது இருந்தது. அந்த வகைமுறை மனிதனின் மன, உடல், ஆன்ம வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருந்தது. மக்களைப் பொருளாதாரச் சுரண்டல், அரசியல் தரக்குறைவு, சமூகத் தடைக்கட்டுகள், பண்பாட்டு மதிப்பிழப்பு ஆகியவற்றிலிருந்து விடுவிக்கும் முகமையாக நமது தேசியம் இருக்கவேண்டும் என்ற அகக்காட்சியை அவர் கொண்டிருந்தார். உழவர்களைப் பெருநிலக்கிழார்கள் ஒடுக்காத, கடன் வாங்கியோரை வட்டித்தொழில் செய்வோர் அச்சுறுத்தாத, சாதாரண பொதுமனிதனை அதிகாரிகள் அலைக்கழிக்காத நிலை உள்ள சமூக மாற்றத்திற்கு அது ஒரு கருவியாக இருக்கவேண்டும். தேசியம் மனிதனின் சுதந்திரத்தோடு தொடர்புடையதாக இருக்கவேண்டும். சுதந்திரம் வெறும் அரசியல் மட்டுமல்ல, மாறாக வாழ்க்கையின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கக்கூடிய அளவுக்குப் போதுமான அகல விரிவுடையதுமாகும். ஜாகிர்சாகிப்பின் தேசியவாதம் நிலக்கிழார்களையும், நிலபிரபுத்துவ மூலதத்துவங்களையும் ஒழிப்பதைப் பொருளாகக் கொண்டது. தங்களுடைய அதிகார நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக லீக்குடன் தொடர்பு கொண்டிருந்த உயர்நடுத்தரப்பிரிவு முஸ்லீம்களின் செல்வாக்கு மிக்கத்தன்னலக் குழுவுடன் இங்குதான் அவர் மோதினார். பிற்போக்கு சக்திகளை எதிர்த்துக் கொண்டிருந்த அதே வேளைகளில் சீர்திருந்ததவாதிகளையும், சமரசம் செய்துகொள்ளும் வகைப்பட்ட

கிளர்ச்சிகளையும் கூட எதிர்த்த புரட்சிக் குழுக்களையும் அவர் ஆதரிக்கவில்லை. பண்டிட்ஜி, சுபாஷ் சந்திரபோஸ், ஜெயபிரகாஷ் நாராயன் மற்றும் பலரால் வழிநடத்தப்பட்ட இடதுசாரி காங்கிரஸ் பாணியிலிருந்து மாறுபட்ட காந்திய அஹிம்சை வழியை அவர் ஆதரித்தார். பொதுவுடமையாளர்களால் போதிக்கப்பட்ட இடதுசாரிகளின் அணுகுமுறை புரட்சிகரமானதாக இருந்தது. வெளியில் லீகிற்கும் காங்கிரசிற்கும் ஒரு மோதல் இருந்ததெனில் காங்கிரசிற்குள்ளேயே உள் முரண்பாடுகளும் இருந்தன. காந்திஜியை ஒரு குழுவும், மற்றொன்று நேருஜியையும், மூன்றாவது குழு சுபாஷ் சந்திரபோஸை யும், நான்காவது குழு ஜெயபிரகாஷ் நாராயணையையும் பின்பற்றின. குழப்பமுண்டாக்கும் கருத்துமோதல்களில் குறுக்கிடாமல் இருப்பதற்கு ஜாகிர்சாகிப் முதன்மை தந்தார். அவர் ஒரு மிகச் சிறந்த அறிவாளி. பின்வாங்காத பற்றுறுதி கொண்ட ஒரு தேச பக்தர். மாபெரும் மனிதநல விரும்பி. ஒவ்வொருவருக்கும் உவப்பானதாக இருக்கும் ஒவ்வொரு கொள்கையிலுமுள்ள இருண்ட பகுதிகளை பிறர் காணக்கூடிய வகையில் வெளிச்சமிட்டுக்காட்டுவது அவரது முதன்மையான அக்கறையாக இருந்தது.

ஜாகிர்சாகிப்பின் தேசியக்கோட்பாடு காலனி ஆதிக்கக் காரர்களுக்கும், தாயகத்திலேயே இருக்கும் ஒடுக்குமுறையாளர்க்கும் எதிராக இந்தியர் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தும் நோக்கம் கொண்டது. உறிந்து, முஸ்லீம் நிலக்கிழார்கள் இருவருமே தேசிய இயக்கத்திற்கு ஒரு இடையூறாக உருவாகினர். ரஷ்யாவில் நிகழ்ந்தது போன்ற நிலஉடைமை மறுபங்கீட்டுப் புரட்சி இங்கும் நிகழுமோ என்று அவர்கள் ஐயுற்று அஞ்சினர். நிலக்கிழார்கள், அரச மரபினர், வட்டித் தொழிலாளர்கள் ஆகியோர் காலனியாதிக்கக்காரர்களை ஆதரித்தனர். வகுப்புவாதக் கடும் சிக்கல் அந்த நேரத்தில் கடுமையாக இருந்த பிரச்னையாகும். இந்து, முஸ்லிம் ஒற்றுமை பற்றிய வினாக்குறி அது. 1937 ல் காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைந்தபோது, முஸ்லீம்களை தேசிய இயக்க முதன்மை ஓட்டத்தில் இணைய வைப்பதற்காக உத்திரபிரதேசத்தில் அது பொதுமக்கள் சந்திப்பைத் தொட ங்கியது. ஆனால், இந்தத் திட்டம் நல்ல பலன் அளித்திடவில்லை.

ஜாகிர்சாகிப் நவீன காலத்தின் மற்றொரு கூறினையும் ஆழ்ந்து சிந்தித்தார். இந்தியாவில் தொழில்மயம் கடுமையான பிரச்னைகள் சிலவற்றை எழுப்பின. நவீன அறிவியல் தொழில் நுட்பமும், ஜனநாயகமும், தேசியமும் பழைய மதிப்பீடுகளை நிலை குலையச் செய்தன. பிரிட்டிஷாரின் பெரும்போக்கான மனப்பான்மை, ஜெர்மானியரின் கருத்தியல் கோட்பாடு, பிரான்சின் சமதர்மத்தத்துவம், ரஷ்யாவின் பொதுவுடமை, அமெரிக்காவின் முதலாளித்துவம் அனைத்துமே இந்தியாவிற்குள் நுழைந்துவிட்டன.

ஆனால், இந்தியாவிற்குப் பொருத்தமான ஒரு வழியைத் தோற்றுவிக்க இயலவில்லை. மேற்கத்திய சிந்தனையின் தாக்கம் இந்திய மனத்தை நெருக்கடியால் செயலற்றதாக்கி மிகுந்த குழப்பத்தை உண்டாக்கிற்று. பிரிட்டனின் குடியாட்சி சார்பான எண்ணங்கள், சமதர்மப் போக்குகள் தொழிலாளர் கட்சியின் தோற்றத்தில் உறுதி பெற்றன. ஆனால், அந்த முற்போக்கு சக்திகள் இந்தியாவிற்குள் நுழைந்தபோது மிகுந்த குழப்பங்களை உண்டாக்கும் போக்குகளாகத் தம்மைத்தாமே அவை வடிகட்டிக்கொண்டு வலம் வந்தன. வளர்வதற்கு இசைவான இடத்தை காணவியலாதபோது எண்ணங்கள் விரும்பிய விளைவுகளை உண்டாக்குவதில்லை. ஜாகிர்சாகிப்பிற்கு கலக்கமுண்டாக்கிய மற்றொரு கூறாக இது இருந்தது. பாரம்பரிய மதிப்பீடுகளின் மேன்மை கருதி இந்நிய சிந்தனைகளை ஒட்டுதல் செய்யும்போது நமக்கே உரித்தான ஒழுக்கநியதி, பண்பாட்டு, ஆன்மீக வலிமைகள் உரம் குன்றிடாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும் என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார்.

இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகிய இருவரது சமயப் புத்தெழுச்சி இயக்கத்தையுமே ஜாகிர்சாகிப் எதிர்த்தார். பிற்போக்கான சக்திகள் தலைஎடுப்பதை அவரது பரந்த எண்ணம் அனுமதிக்கவில்லை. இந்து சமய உணர்வின்மீது தேசியத்தை உருவாக்க இந்துக்களும், முஸ்லீம் சமய உணர்வின்மீது தேசியத்தை உருவாக்க முஸ்லீம்களும் முயற்சித்தால் மோதல் தவிர்க்கவியலாததாகிவிடும். இந்த கணிப்பின் அடிப்படையில் தேசம் ஏற்கனவே துன்பம் அனுபவித்துள்ளது, மிகுதியாக தண்டம் செலுத்தி இருக்கிறது என்று அவர் கூறுவார். இனியேனும், சுவர்மீது எழுதப்பட்டிருப்பதை நாம் படித்துப் பார்ப்போம். கடந்த காலத்தின் தவறுகளைத் தவிர்ப்போம். பிரிவினைக்கு முந்தைய காலத்தில் முஸ்லீம் சமயப் புத்தெழுச்சி இயக்கத்தால் நாட்டில் கேடான முடிவொன்று வந்தெய்தியது. வரலாறு கற்பிக்கும் பாடத்தைப் புறக்கணிப்பவர்கள் மீண்டும் அதை வாழ்ந்து அனுபவிக்கத் தீர்ப்பளிக்கப்படுவார்கள் என்பதை அவர் நமக்கு நினைவூட்டுவார். தேசநிர்மானத்திற்கான சக்திமிக்க ஒரு ஆயுதமாக அரசியல் சுதந்திரத்தைப் பாவிப்பது அவரது எளிய வாய்பாடு. இந்துவோ, முஸ்லீமோ எவராவினும் ஒவ்வொருவரும் இதனால் பலனடைவார்கள்.

சமூகத்தின் அனைத்து நிலைகளிலும், அதன் அனைத்து பிரிவுகளிலும் சிறந்தது கருதிய மாற்றத்தின் ஒரு இயக்கமாக நமது தேசியம் அமையவேண்டும் என்று கல்வியாளரான ஜாகிர்சாகிப் விரும்பினார். சமூகத்தின் பிரிவுகள் அனைத்திலும் முஸ்லீம் பிரிவே மாற்றப்படுவதற்கு கடினமானது. அவர்கள் சம்பிரதாய முறைமையில் ஆழ்ந்து தோய்வுற்ற

வர்கள். தேசியமோ புதுப்பாணியில் அமைந்த கருதுகோளாக இருக்கிறது. சர். சையத் அகமத்கான் காலம் முதலாகவே முஸ்லீம்களின் மத்தியில் நவீனத்துவம், பாரம்பரியம் பற்றிய ஒரு கடுமையான விவாதம் நடந்து கொண்டிருந்தது. சர். சையத் அகமத்கான் மதம், கடவுட்பற்று, நம்பிக்கை போன்றவற்றிலும்கூட முஸ்லீம்களின் மனதை நவீன மயத்திற்கு இணக்குவிக்க முயற்சித்தார். சமயக் கொள்கைகள், தெய்வீக அற்புத நிகழ்வுகளைக் களைந்துவிட்டு பகுத்தறிவுக்கும், அறிவியல் கண்ணோட்டத்திற்கும் தொடர்புடையதாக இருப்பதே நவீனத்துவம் என்பதாக அவர் எளிமைப்படுத்தினார். முற்றிலும் ஒருங்கிணைக்கப்பட்ட மனித ஆளுமை வேண்டுமென நவீனத்துவம் வலியுறுத்துகிறது. அகவியல்பு மதிப்பீடுகளுக்கும், கருவியாகப் பயன்படுகின்ற மதிப் பீடுகளுக்கும் இடையில் ஒரு வேறுபாட்டை அது ஏற்படுத்துகிறது. அது மதிப்பீடுகளைப்பாதுகாப்பதைக் காட்டிலும் மதிப்பீடுகளின் வரம்பற்ற படைப்புத் தன்மையை வளர்க்கிறது. நவீனத்துவம், புதிய எண்ணங்கள் சலசலக்க ஓடிக்கொண்டிருக்கும் நீரோடைமீது நம்பிக்கை கொள்கிறது. வடிகுட்டையைப் போலத்தேங்கிக் கிடக்கும் பழஞ்சிந்தனைகளைக் காட்டிலும் சிந்தனை வழிமுறையில் இந்தவகை நவீனத்துவத்தையே ஜாகிர்சாகிப்பின் தேசியக்கோட்பாடு சார்ந்து நின்றது. ஆனால், பழைய சிந்தனைகளில் ஆழ்ந்து தோய்வுற்றிருந்து இஸ்லாமிய சமூகம் சிறந்ததை நோக்கி மாறவில்லை.

தேசியமானது, புதிய மதிப்பீடுகள் உறுதிப்பெறுவதற்கு சமூகத்திற்கு உதவியாக இருக்கவேண்டும் என்று ஜாகிர்சாகிப் விரும்பினார். நம்முடைய மதிப்பீட்டு முறைமைக்குள் ஊடுருவிக்கொண்டிருக்கும் மேற்கத்திய நாகரிகத்தின் தொழில் நுட்ப முறைகளுக்கு நமது தேசியம் உதவிகரமான ஒரு மறுமொழியைத் தந்தாக வேண்டும். அவற்றிலுள்ள அனைத்துமே சிறந்தவையல்ல, எனினும் ஏராளமான நல்ல தன்மைகளும் இருந்தன. சிறந்தவற்றை எடுத்துக்கொள்வதிலும், மோசமானவற்றைப் புறந்தள்ளுவதிலும் தெரிந்தெடுக்கும் பாங்குடையவர்களாக நாம் இருக்கவேண்டும். இந்த நோக்கில் முஸ்லீம் சமூகம் மிகுந்த தடையுணர்ச்சியைக் கொண்டிருந்தது. அதன் காரணமாகவே, அவர் ஒரு தனிப்பட்ட தீவின் இயல்புடைய ஒதுக்க நிலை சமூகத்தை விரும்பவில்லை. முஸ்லீம்களுக்கான தனி மாகாணம் அவர்களை மிகவும் தனி ஒதுக்கமானவர்களாக ஆக்கிவிடும். அனைவர்க்குமான பொது நன்மைக்காக சந்திக்கவும், கலந்து பழகவும், பங்கிட்டுக் கொள்ளவும், இணைந்து உழைக்கவுமான ஒரு அரிய வாய்ப்பை தேசியம் இந்தியர்களுக்கு வழங்கியது என்று அவர் நினைத்தார். தேசியக் கோட்பாடு, சமயப் புத்தெழுச்சி, அடிப்படை வாதம் ஆகியவற்றாலன்றி மனித

நலம், மதச்சார்பின்மை ஆகிய பரந்த கண்ணோட்டத்தில் ஒருங்கிணைக்கப்படவேண்டும். வளர்ந்துவரும் மதச்சார்பின்மை உணர்வு மனிதர்களுக் கிடையே மதம் உருவாக்கிவரும் பிரிவினையைப்போக்கும். பலவின் ஆக்கம் சார்ந்த பண்பாட்டிற்கு மதச் சார்பின்மை ஒரு திறவுகோல். இந்திய நிலைமைகளுக்கு ஏற்ற பொருத்தமுடையது அது. பல்வேறு பண்பாட்டுக் குழுக்களும் தத்தமது உடைமைகளைப் பற்றி பெருமைக்கொண்டு அவற்றின் அடையாளங்களை உறுதியாகக் கைக்கொள்ள நினைக்கின்ற, ஒருபடித்தான முழுமையாக அவற்றை ஒன்றுபடுத்தி திறம்படக் கையாளும் இணைப்புக்காரரையாக தேசியம் இருக்கும். பழைய மதிப்பீடுகளைப் பாதுகாப்பதற்கும், புதிய மதிப்பீடுகளுக்கு உயர்வளிப்பதற்கும் மதச்சார்பின்மை செயல்துணையாக இருந்தது. அனைவரது நன்மைக்குமாக நிற்கக்கூடிய இருவகை மதிப்பீடுகளும் நிலவியிருக்கவேண்டியதன் நோக்கம் மனிதநலமே. இவ்வாறு, தேசியம், மதச்சார்பின்மை, மனிதநலம் ஆகியவற்றை தனது புதிய மதிப்பீட்டுமுறை எனும் ஒரு சங்கிலியின் வெவ்வேறு அலகுகளாக ஜாகிர்சாகிப் இணைத்தார். நவீனத்துவம் மற்றும் மரபு நிலையின் கலவையாக இருந்த இத்தகைய புதிய மதிப்பீடுகளிலிருந்து சிறந்த பயனைப் பெறுவதற்கு நிலைபேறுடைய புத்திசாலித்தனமான விழிப்புநிலை தேவைப்பட்டது.

ஜனநாயகம், இறைமையாட்சி, மதச்சார்பின்மை, அடிப்படைவாதம், நவீனத்துவம் மற்றும் மரபுநிலை இவற்றின் இழுவிசைகளைப்பற்றி சிந்திக்கும்போது அதேதன்மையுடைய உறுதியாக்கும் வழிமுறை ஜாகிர்சாகிப் மனதை அசைவித்தது. சராசரி இந்திய மு ஸ்லீம், அவருக்கு உட்கீறல்கொண்ட ஒரு தனிமனிதனாகத் தென்பட்டான். அவன் தன்னைத்தானே ஒருங்கிணைத்துக் கொள்வதற்கு உதவிட அவர் விரும்பினார். இந்திய தேசியத்தில் முஸ்லீமும் இடம்பெறவேண்டும் என்று விரும்பினார். அவரது அழைப் புக்கு பலர் பதில்குறிப்பு தெரிவிக்கவில்லை. ஆனாலும், ஒருங்கிணைந்த ஆளுமைகொண்ட ஒருவன் இந்திய தேசியத்தின் மதிப்பை உணரவேண்டும் என்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். அறிவியலின் அழுத்தவிசையும், மெய்யறிவின் இழுப்புவிசையும், தேசத்தின் மீதுள்ள நேசமும் அனைவரிடத்தும் புது மனப்பாங்கை எழுப்பிக்கொண்டிருந்தன. ஆனால், முஸ்லீம்கள் தங்களுக்கே உரிய பழம்பெருமை எனும் மாய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர். பொழுதின் ஒளியை காணச்செய்ய முஸ்லீம்களின் கண்களைத் திறப்பதற்கு தன்னாலியன்ற அனைத்தையும் அவர் செய்தார். ஆனால், அவர்களோ காண மறுத்து விட்டனர்.

முஸ்லீம்கள் இணங்காமைக்கு சில வரலாற்றுக் காரணங்களும் இருந்தன. தேச எல்லைகளை இஸ்லாம் ஏற்காததால் தேசியம் என்ற

கருத்துப் பாங்கோடு ஒத்துப்போவதில் சில பிரச்னைகள் இருந்தன. தேசவிடுதலைக்கான அழைப்பை விடவும், கிலாபத் அழைப்பு அவர்களுக்கு மிகையான உணர்ச்சியை ஊட்டியது. இந்த உள்ளுணர்வுப் பாங்கினை பெரும்பான்மையினர் பாராட்டவில்லை. முஸ்லீம்கள் தங்கள் வசிக்கும் தேசத்தின் எல்லையையும் தாண்டி பற்றுறுதி கொண்டிருக்கவேண்டும் என்ற கருத்தில் அவர் ஆர்வம் காட்டவில்லை. அவருடைய பேச்சுக்கள் எழுத்துக்களில் எங்குமே முஸ்லீம்களின் நலன்களுக்கானது என்று வாதாடிய குறிப்புகளைப் பெறமுடியவில்லை. அவரது தேசியக் கோட்பாடு முற்போக்கு இலட்சியங்களுக்கானது. முஸ்லீம்கள் அறியாமையில் ஆழ்ந்து தோய்வுற்றிருந்ததை கண்டபோது அவர் தனது நேரம் அனைத்தையும் அவர்களின் கல்விக்கு உதவுவதற்காகவே அர்ப்பணித்தார். தேச சேவையின் முக்கியமான ஒரு கூறாக அதனை அவர் கருதினார்.

முஸ்லீம்களின் விடாப்பிடி குணத்தை வேறு சில பிரச்னைகளின் துணைகொண்டும் பார்க்க வேண்டும். முதலில் அவர்கள் இந்திய தேசிய முதன்மை நீரோட்டத்தில் சேர்ந்து கொண்டு காலனி ஆதிக்கக்காரர்களை அகற்றுவதற்கு அனைவரோடும் சேர்ந்து போராடிய பிறகு பெரும்பான்மை சமூகத்துடன் தங்களுக்குள்ள பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதா? அல்லது தங்களது பொருளாதார, சமூக, பண்பாட்டு, கல்விநிலைகளை மறுசீரமைப்பு செய்துக் கொள்வதற்காகவும், பெரும்பான்மை சமூகத்தாருடன் சரிநிகர் நிலைக்கு வருவதற்காகவும் ஒரு சிறிது காலத்திற்கு முதன்மை நீரோட்டத்திலிருந்து விலகி நின்றிருந்து பிறகு அரசியல் களத்தில் புகுவதா? என்ற கடுமையான விவாதம் முஸ்லீம்கள் மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பெரும்பான்மையான முஸ்லீம்களின் மனதை ஈர்த்துப் பற்றியிருந்த அலிகர் சிந்தனைக் குழுமம் பிந்தைய வழிக்கு முன்னுரிமை தந்தது. மாறாக, ஜாகிர்சாகிப் வழிநடத்திய ஒரு முஸ்லீம் குழாமோ முந்தைய வழியைவிரும்பின. இரண்டு முகாம்களுக்குமான போட்டியில் பெரும்பான்மையோரின் கருத்தே மேலோங்கியது வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், அலிகருக்கும் ஜாமியாவுக்கும் இடையே ஒரு வரலாற்றுப்பகை உணர்ச்சி தேசப்பிரிவினைக்காலம் வரை நீடித்தது. இரண்டுமே ஒட்டாத இரு துருவங்களாகத் தென்பட்டன. ஜாகிர்சாகிப் ஒரு பயிற்சி பெற்ற வழக்குரைஞராகவோ, அரசியல்வாதியாகவோ இல்லாமல் ஒரு கல்வியாளராக மனிதநல ஆர்வலராக இருந்ததால் அலிகர் முகாமின் சூழ்ச்சிகளை சமாளித்து நிற்க இயலவில்லை.

முஸ்லீம்களின் விட்டுக்கொடாப்பண்பிற்கு ஒரு காரணமும் இருந்தது. இந்துக்களைப் போலன்றி, இஸ்லாமியர்கள் வலிமையான வரலாற்றுணர்வு கொண்டிருந்தனர். அதில் சாதக பாதகம் இரண்டுமே

இருந்தன. முஸ்லீம்கள், இந்தியாவில் தங்களது கடந்த காலத்தை மறந்துவிடவில்லை. வலிமை மிக்க, மையப்படுத்தப்பட்ட, ஒன்றுப்படுத்தப்பட்ட அரசாங்கம் எனும் கொள்கையை அளித்தவர்கள் அவர்கள், சாதிமுறையின் கடுமையைக் குறைத்து கலை, கைத்தொழில் மேம்பாடு, நகரவாழ்வின் வளர்ச்சி இவற்றிற்கு ஊக்கமளித்த ஒரு புதிய சமூக ஒழுங்கை அவர்கள் கொணர்ந்தனர். பண்பாட்டு வாழ்விற்கு அவர்கள் மொழி, இலக்கியம், மதம், தத்துவம், குறித்த மிகையான பங்களிப்புகளை செய்துள்ளனர். எண்ணற்ற அரண்மனைகள், கல்லறைகள், மசூதிகள், தோட்டங்கள், கோட்டைகள், நீர்வீழ்ச்சிகள், சாலைகள், பாலங்கள், கட்டுவதற்கும் இன்னோரன்ன பல செயல்களுக்கும் அவர்கள் காரணமாக இருந்தனர். இத்தகைய பங்களிப்புகளை செய்தமைக்கு அவர்கள் பெருமித உணர்வு கொண்டவர்களாக இருந்தனர்.

இவை அனைத்துமே, இந்த மண்ணில் அவர்களின் தலைமையான அரசியல் செல்வாக்கு எனும் ஆற்றல்மிக்க காரணக்கூறினால் நிகழ்ந்தன. அவர்கள் பழைய நினைவுகளுடன் விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அது வசதியையும், ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அளித்தது. ஆனால், அதன் எதிர் மறையான கூறு அவர்களை விரைவில் தாழ்வுறவும் செய்தது. வருங்காலத்திலும் தங்களது செயற்கறிய செயல்களை அவர்கள் செய்யமுடியுமா? ஒரு காலத்தில் ஆட்சியாளர்களாக இருந்ததை அவர்கள் அறிந்துக் கொள்வது நல்லதுதான். ஆனால், இப்போது அவர்கள் எப்படி இருக்கின்றனர்? வரலாறு அவர்களது மனச்சான்றைக் கொட்டி நோவுறுத்த ஆரம்பித்து விட்டது. அவர்கள் வாழ்வற்றவர்களாகி விட்டனர். எதிர்கால வாய்ப்புகள் அவர்களைத் துயர்மிக்கவர்களாக்கிவிட்டன. இந்தக் குழப்பத்தில் தங்களது சமநிலையை அவர்கள் இழந்துவிட்டனர். கீழ்நிலைவாதப் போக்கிலிருந்து பிரச்னைகளை அவர்கள் மதிப்பிட்டனர். நீண்டகாலமாக பிரிட்டிஷாரின் குடிகளாக அவர்கள் இருந்து வந்தனர்; நாளை இந்துக்களின் குடிகளாகக்கூடும். விடுதலை என்பது அனைவர்க்குமானது என்பதை அவர்கள் நினைத்துப்பார்க்கவில்லை. பொது அக்கறைகளில் அவர்களும் கூட பங்குபெறவேண்டும். தேசத்தின் மகிழ்ச்சி, துயரங்களின் பங்குதாரராகவும் அவர்கள் இருக்கவேண்டும். ஒரே குடும்பத்து உறுப்பினர்களாக அவர்கள் இருக்க முடியும். நிதானமான இந்த அறிவுரையை வழங்கியவர் ஜாகிர்சாகிப்தான்.

துரதிருஷ்டவசமாக, ஜாகிர்சாகிப் நீங்கலாக இஸ்லாமிய ஆசான்கள் பிறரும் இருந்தனர். உயர்நிலைவாதப்போக்கு அவர்களுக்கு கவர்ச்சியூட்டவில்லை. கடந்த காலத்தைப் புத்தாக்கம் செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் பழம்பெருமைபற்றிப் பேசினார்கள். அடிக்கடியும்

மீண்டும்மீண்டும் சுழன்று வருவதைக்காட்டிலும், நேரானதாக நிகழ்வது வரலாறு என்ற உண்மையை அவர்கள் மறந்துவிட்டனர். மக்கள் விரும்பும் அதே வழியில் வரலாறு மீண்டும் நிகழ்வதில்லை. ஜாகிர்சாகிப், மௌலானா ஆசாத், அஜ்மல்கான், அன்சாரி, மௌலானா முகமதலி, கான்அப்துல்கபார்கான், போன்ற பிற தேசியவாதிகள் மட்டுமே முஸ்லீம்களுக்கு உகந்தவை எவை என்பதைப்பற்றி அறிந்திருந்தனர். ஆனால், அவர்களோ சிறுபான்மைக் குழுவினராக இருந்தனர். ஜின்னாவால் வழிநடத்தப்பட்ட பெரும்பான்மையினர் தவறான உளவியலைக்கொண்டு முஸ்லீம் மக்களை உணர்ச்சிவயப்படச்செய்தனர். "பழங்களைப் பறிப்பதற்காக மரத்தை வெட்டாதீர்கள்" என்ற மான்டெங்குவின் மேற்கோளுரையை அறியாதவர்களாக அவர்கள் இருந்தனர். "தியாகமே புதிய வாழ்விற்கான விதையாகும்" எனும் சார்த்தரின் கூற்றையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. "கடவுளிடத்தே வாழ்வதற்கு உங்களை நீங்களே கொன்றழித்துக்கொள்ள வேண்டும்" எனும் சூபி போதனையையும் அவர்கள் புறக்கணித்தனர். குறுகியகால நலன்களுக்காக தங்களது எதிர்காலத்தை அவர்கள் புறக்கணித்தனர். குறுகியகால நலன்களுக்காக தங்களது எதிர்காலத்தை அவர்கள் தியாகம் செய்துவிட்டனர். இது போன்ற சூழல்களைக் கருதியே ஒரு உருதுக் கவிஞர் கூறுகிறார்: கண நேரத்தில் இழைக்கப்பட்ட தவறுகளுக்காக பல நூற்றாண்டுகள் தண்டனை அனுபவித்த கட்டங்களையும் வரலாறு கண்டுள்ளது.

தேசியம் பற்றிய கோட்பாடு எங்குமே காணப்பெறாத இஸ்லாமிய மரபில், பிற்போக்காளர்கள் தங்கள் பாதுகாப்பிற்காகத் தஞ்சம் புகுந்தனர். எல்லா தேசத்து எல்லா இனத்தவரும் செமாடிக், ஹெமிட்டிக், நீக்ரோ, ஐபீரியர். காவ்காசியர், கிரானியர், துரானியர் அல்லது இந்தியர் எவராயினும் அனைவருமே ஒரே குடும்பத்து உறுப்பினர்கள், அவரவர் நம்பிக்கைகளின் அடிப்படையில் அவர்கள் நடத்தப்படவேண்டும். ஒரு வரையறுக்கப்பட்ட பூகோள எல்லைக்குள் வாழ்ந்து இருந்து பொதுவான அரசியல் வாழ்க்கையொன்றின் பங்குதாரர்களாக வாழ்வதை இஸ்லாம் வலியுறுத்துவதில்லை. இஸ்லாம் புவியியல் எல்லைகளுக்கு முதன்மையளிக்கவில்லை என்பதால் இதே தர்க்கம் பிரிவினைக் கோரிக்கையைத் தகர்க்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற போதிலும் கூட பிரிவினைவாதிகள் தனிமாநிலம் கேட்பதற்கு இது ஒரு பிடிப்பை தந்துவிட்டது. இஸ்லாம் தோன்றியபோது தேசியக்கொள்கை தோன்றியிருக்கவில்லை. மேலும், பயனுள்ள எந்தக் கொள்கையைக் கடைபிடிப்பதற்கும் இஸ்லாம் தடைவிதிக்கவில்லை. தேசியக் கோட்பாட்டால் உலகமே பரவசப்பட்டு நின்ற

வேளையில், பிற்காலத்தில் பாகிஸ்தானின் தந்தை என்று ஆன கவி அல்லாமா இக்பால் "ஒரு கற்சிலையைக் கடவுள் என்று நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால் இந்த மண்ணின் தூசுகளின் ஒவ்வொரு அணுவும் எனக்கு தெய்வீகமே" என்று கிளர்ச்சியுற்று உரைத்தபோதும், தேசியம் இஸ்லாமின் எல்லைக்கு அப்பற்பட்டது என்று முஸ்லிம்கள் இடைவிடாது பேசிக்கொண்டிருந்தனர்.

முஸ்லீம்களின் சிந்தனையில் இருந்த கடும்பழுதை ஜாகிர்சாகிப் உணர்ந்தார். இதனை சரிசெய்ய தனது வல்லமைக்கு உகந்தவரை முயற்சித்தார். அரசியல் செயலரங்கில் தான் இல்லாதிருந்ததுதான் அவருக்கிருந்த இடர்ப்பாடு, தன்னுடைய விருப்பத்தை பிறர்மீது திணிக்க எந்தவிதப்பிரமாணமும் இல்லாத ஒரு சிந்தனையாளராகவும், ஆசிரியராகவும் மட்டுமே அவர் இருந்தார்.

ஜாகிர்சாகிப்பின் தேசியவாதம் முஸ்லீம்களின் மற்றொரு கடும் பிரச்னையான பொருளாதாரப் பின் தங்கிய நிலைக்கும் பதிலளிக்க வேண்டி இருந்தது. அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ற வீதப்படி வறுமையும் அதிகரித்துக்கொண்டே வந்தது. வறுமை, அறியாமை, மூடநம்பிக்கை, அக்கறையற்ற நிலை, கேடான செல்வம் என்பன அவர்களது இடும்பையை மிகுவித்தன. பிரிட்டிஷார் கையாண்ட நடவடிக்கைகள் முஸ்லீம்களுக்கு எதிரான பாதிப்புகளை ஏற்படுத்தின. காரன்வாலிசின் நிலையான குடியேற்றம், இந்தியாவின் அரசியல் ஒன்றாக்கம், நிலச் சீர்த்திருத்தங்கள், நிர்வாக மாற்றங்கள், கல்விக்கொள்கை, பிரிட்டிஷார் இந்தியாவில் அறிமுகப்படுத்திய நீதி, தொழில், வணிகம் மற்ற பிற சீர்திருத்தங்கள் அனைத்தும் பெரும்பான்மை சமூகத்திற்கே அதிகம் உதவியிருந்தன. கல்வித்துறையில் இந்துக்களோடு தொடர்ந்து உடன்செல்லாததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது என்று ஜாகிர்சாகிப் பகுப்பாய்வு செய்தார். அவர் தனது வாழ்நாள் முழுவதையும் முஸ்லீம் மக்களுக்குக் கல்வியளிப்பதற்கு அர்ப்பணித்துக் கொண்டது இதன் காரணமாகத்தான். இந்தவகையில் அதிக கவனம் முஸ்லீம்களுக்குத் தேவைப்படுகிறது. மக்களின் கல்வியில் அலிகர் போதிய கவனம் செலுத்தாமல் இருந்தது. ஜாமியா அந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டது. முஸ்லீம் மக்களுக்குக் கல்வியளிப்பதென்பது அவர்களைப் பட்டதாரிகளாக்குவது என்று பொருள்படாது. அவர்களது அடிப்படைக்கல்வியில் கவனம் செலுத்தப்படவேண்டும். ஜாகிர்சாகிப், இந்த நோக்கத்திற்காகவே முதியோர் கல்வித்திட்டத்தைப் பற்றி எண்ணினார். அது அந்த வட்டார அளவில் குறிப்பிடத்தக்க வெற்றிக் கண்டிருந்தது. அதன் குறிப்பிடத்தக்க

மிகப்பெரிய சிறப்பு அதன் தேசிய குணாம்சமேயாகும். அதன் நோக்கம் மக்கள் சிறந்த குடிமக்களாக இருப்பதற்குப் பயிற்சியளிப்பதேயன்றி வெறுமனே அரசுப்பணிகளைப் பெறுவதல்ல. நட்புறவு கொண்டு இசைவுற்று வாழும் தேவை, பண்பாடு, ஒற்றுமை, பல்வகைத் தன்மை, இடைவிடாத் தொடர்பு, நெகிழ்வுத்தன்மை, மனிதநலம் ஆகியவற்றின் அடிப்படைத் தோற்றத்தை அவர்கள் அறிந்துகொள்ளச் செய்வது ஆகியவை இத்தகைய முதியோர் கல்வி முனைப்பு இயக்கங்களில் வலியுறுத்தப்பட்டன.

ஜாகிர்சாகிப்பின் தேசியம் அவரது கல்விச் சிந்தனைகளில் விளக்கமுறுகிறது. ஒரு முஸ்லீம் உண்மையான இந்தியனாக இல்லாதவரை அவன் உண்மையான முஸ்லீம் ஆக ஆடியாது. உண்மையான இந்தியனாக இருப்பதால் சிறந்த முஸ்லீம் அல்லன் என்றும் ஆகிவிடாது. தன்னைப் பின்பற்றுவோர் சிறந்த இந்தியர்களாக இருப்பதற்கு இஸ்லாம் குறுக்கே நிற்கவில்லை. கேரளாவில், ஒரு கூட்டத்தில் பேசியபோது இந்தக்கருத்தை அவர் தனது சொந்த வாழ்க்கையை குறிப்பிட்டு விளக்கினார். எனது உடலின் ஒவ்வொரு அங்குலமும் முஸ்லீமே. அதே உடலின் ஒவ்வொரு அங்குலமும் இந்தியனும் கூட என்றார் அவர். மகவுரிமை சார்ந்த பிணைப்பை ஒரு மனிதன் கொண்டிருப்பது போன்றது இது. ஒரே மனிதன் ஒருவருக்கு தந்தையாகவோ, வேறொருவருக்கு சகோதரனாகவோ, கணவராகவோ, நண்பனாகவோ அல்லது மகனாகவோ இருக்க முடியும். அத்தகைய உறவுமுறைகளினால் முரண்பாடு ஏதுமில்லை. அதுபோலவே, ஒரு மனிதனின் நம்பிக்கை தேசியம் எனும் புனிதமான உளப்பாட்டுடன் முரண்பாடு கொள்ள நேருமோ என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை. இஸ்லாமின் சமூக அறவியலும், தேசியத்தின் வழிகாட்டு நெறிகளும் ஒப்பானவை. சமூக நன்மை ஒன்றே இரண்டிலுமுள்ள மனித இலட்சியம், ஆகவே, ஜாகிர்சாகிப் கருத்துப்படி இஸ்லாமுக்கும் தேசியத்திற்கும் முரண்பாடு எதுவும் இருந்தது இல்லை. மரபு ரீதியான பண்பாட்டுடன் நவீனத்துவத்தை இணக்கம் செய்வித்தது, அவரது மிகபெரிய பங்களிப்பாகும். நவீன அறிவியல் தொழில்நுட்பம், தொழில் மயமாதல், புதுவழிச் சிந்தனை, புதியன புனைதல், புதிய கண்டுபிடிப்பு மற்றும் நவீன காலத்துப் பரிவாரங்கள் அனைத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். மரபு ரீதியான பண்பாட்டுடன் அவற்றை ஒட்டுதல் செய்தார். ஆனாலும் அப்படிச் செய்யும்போது, கடந்தகாலம் நிகழ்காலத்தினது எதையுமே அவர் கண்மூடித்தனமாக ஏற்கமாட்டார். அறிவாராய்ச்சி எனும் திரைவழியே வடிகட்டிய பின்னரே ஏற்பார். சிறந்ததாக எது வரினும் அதை அவர் எடுத்துக் கொள்வார்.

ஜாகிர்சாகிப்பின் தேசியம் அவரது அறிவுத் திறப்பயின்முறையின் வெளிப்பாடாக இருந்தது. முஸ்லீம்களின் நலன்களைப் பாதுகாக்கும்

பாவனையின்கீழ், சமூகத்தின் மிகை நலன்களைப் பற்றிச் சிந்திக்கும் அளவுக்கு முற்போக்கானதாக முஸ்லிம் தலைமை இல்லை என அவரது மனதுக்குத் தோன்றியது. காங்கிரசின் கோட்பாடுகள் நிறை நலம் வாய்ந் திருப்பதாக அவருக்குப் பட்டது. முஸ்லிம்களுக்கு உரியதைவிடவும் மிகையாகத் தரகாங்கிரஸ் விரும்பாவிட்டாலும் உரியதை வழங்கிட மறுக்காது. சமஉரிமை, சமநீதி, சரிநிகர் வாய்ப்பு என்ற பார்வையில், சிறுபான்மையினருக்கு ஆதரவாக சமநிலையைச் சரித்தாற்போன்று அது தென்படும் என்பதால் தனிவாக்காளர் தொகுதிகள், பாதிப்புகள், ஒதுக்கீடுகள், உத்திரவாதங்கள், தனிமதிப்பு போன்றவற்றை அது ஆதரிக்க வில்லை. காலனி ஆதிக்கக்காரர்களை நீக்குவதில் மிகுந்த மும்முரத்துடன் அது ஈடுபட்டிருந்தது. உள்நாட்டிலுள்ள பிரச்னைகளைப்பிறகு வகைசெய்து கொள்ளலாம் என்று அது கருதிற்று. தனக்கே உரிய தேசிய குணாம்சத்தைக் கைவிட அது தயாராக இல்லை. மறுபக்கத்தில் "லீக்"கானது சட்ட சபைகள் அமைச்சரவைகள், அலுவல்களில் ஒதுக்கீடு தேவை என வலியுறுத்தி வந்தது. ஒன்றை விரும்பும் முன்னர் முஸ்லிம்கள் அதற்குத் தகுதி உடையவர்களாக இருக்கவேண்டும் என்றும், அரசியலில் ஆழ்ந்து ஈடுபடுவதற்கு முன்னர் அவர்கள் தங்களது சமூக, பண்பாட்டு, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஜாகிர்சாகிப் கருதினார். கோடிக்கணக்கான மனிதர்கள் ஒன்றுகூடி பல நூற்றாண்டுகளாக வசித்த ஒரு தேசத்தைத் துண்டாடுவது சரியான அறுதியுரையாகாது என்று அவருக்குத் தோன்றியது. போட்டி மனப்பான்மையயன்றி ஒத்துழைப்பை, முரண்பாடுகளையன்றி உடன்பாட்டை, பிரிவுகளையன்றி ஒற்றுமையை அவர் பரிந்துரைத்தார். குடியாட்சி என்பது பெரும்பான்மையினரின் ஆட்சி என்பதால், முஸ்லிம்கள் கீழ்ப்படியானவர்களாகவே எப்போது இருக்கும்படி முடிவுக்கட்டப்படு வார்கள். மத்தியில் ஒருபோதும் அவர்கள் தங்களது அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று லீக்வேறு வகையாக வாதாடியது. முஸ்லீம்களின் விண்ணப்பங்களுக்குச் செவிசாய்க்க பிரிட்டிஷார் நாட்டமுடையவராக இருக்கும்போது தனிப்பாதுகாப்புகளை ஏன் கேட்கக் கூடாது. தனித்தொகுதிகள், சட்ட சபைகளில், வேலைகளில் ஒதுக்கீடுகளுக்கு பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டனர். முஸ்லீம்களின் தனி அந்தஸ்தை அங்கீகரித்து அவர்களது கடுஞ்சிக்கலான பிரச்னைகளுக்கு இயலக்கூடிய எவ்வகைத் தீர்வையும் காண தடுப்புமுறை அதிகாரத்தையும் கூட அளித்தனர். ஆனால், பிரிட்டிஷார் இவற்றையெல்லாம் முஸ்லீம்களின் மீதிருந்த அன்பினால் செய்யவில்லை. தங்களது பேராசை நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே செய்தனர் என்பதை முஸ்லீம்கள் உணரவில்லை என்பது இதிலுள்ள ஒரே சோகமாகும். மத வேறுபாட்டை முதலில் தீர்ப்பது என்ற மாயத்தோற்றத்தை எழுப்புவதன்மூலம்

தேசியவாதிகளின் சுயாட்சி கோரிக்கையைத் தோல்வியுறச் செய்வதற்காக மட்டுமே இந்த நாடகம் என்பதை ஜாகிர்சாகிப் உய்த்துணர்ந்தார்.

1937ல் மாகாண கவுன்சில்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றபிறகு அரசியல் சூழ்நிலை மிகவும் சிக்கலானதாக ஆனபோது ஜாகிர்சாகிப் அதிக மனக்கலக்கம் கொண்டவராக ஆனார். எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் பெருத்த வெற்றிபெற்றது. லீக் ஒன்றிலுமே வெல்லவில்லை. இதன்விளைவாக அமைச்சரவையில் முஸ்லீம் பிரதிநிதித்துவம் பற்றி எழுந்த வாத எதிர்வாதம் ஒன்றுபட்ட இந்தியாவின் அனைத்து நம்பிக்கைகளையும் அழித்துவிட்ட மதவாதக் கிருமியைப்போல செயல்பட்டது. காங்கிரசின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட முஸ்லீம்கள் மட்டும் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். லீக் அதன் உறுப்பினர்களை நியமிக்கும் உரிமையை பெற்றிருக்கவில்லை. பாகிஸ்தானுக்கான கோரிக்கைக்கு வித்தூன்றிய மிகக்கடுமையான பிரச்னையாக இது இருந்தது. உத்திர பிரதேச காங்கிரஸ் அமைச்சரவையில் சேருமாறு சௌத்ரி காலிகுசாமானை தன்னை கலந்தாலோசிக்காமல் அழைத்தது பற்றி ஜின்னா சீற்றம்கொண்டார். ஆர்.சி. மஜூம்தார் எழுதுகிறார்: "முஸ்லீம்கள் தனிப்பட்ட ஒரு சமூகம் என்றவகையில் தங்களுக்கு அரசியல் எதிர்காலம் இருக்கவில்லை என்று இப்போது முழுமையாக உணர்ந்து கொண்டனர். காங்கிரசின் இறுதி எச்சரிக்கை அவரவர் வழிகளில் பிரிந்து செல்வதற்கான முன் அறிகுறியாக இருந்தது. தவிர்க்கமுடியாத நிலையில் பாகிஸ்தான் உருவாக்கத்திற்கு இட்டுச் சென்றது."[1]

ஜாகிர்சாகிப் ஒரு ஆசிரியரே தவிர அரசியல்வாதியல்ல தீர்வு வழங்குவதற்கு. இணக்கமான செயல்பாட்டிற்கு இன்றியமையாதனவாகிய ஒற்றுமைப்பட்ட கருத்துப்பாங்கு, பரஸ்பர நம்பிக்கை தேவைப்படுகிற கூட்டுப் பொறுப்பை மரபு வழாத நாடாளுமன்ற முறைகள் வேண்டின என்று ஒரு அறிவு ஜீவியாக அவர் வாதிடுவார். லீக் உறுப்பினர்கள் தங்களது அடையாளத்தைத் தக்கவைத்துக்கொண்டால் அது விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அமைக்கப்படுகிற, கட்சிகள் கூட்டாக இணைந்து நடத்தும் ஒரு கூட்டணி அரசாங்கமாக இருக்கும். அவையில் காங்கிரஸ் ஆற்றல்மிக்க பெரும்பான்மை பெற்றிருந்த நிலையில் கூட்டணி அரசை விரும்பாமல் இருப்பதற்கான உரிமைகள் அனைத்தும் அதற்கு இருக்கவே செய்தன. இது சட்டரீதியான நிலை. ஆனால், இந்தக் காலச் சூழலில் தேசியக் கண்ணோட்டத்தில் இடர்மிகுந்திருந்த நிலையில் காங்கிரஸ் விட்டுக் கொடுக்கும் பண்புடையதாக இருந்திருக்க வேண்டும். ஆனாலும் கூட, முஸ்லீம் அமைச்சர்கள் காங்கிரஸ் கொள்கைகளில் ஆர்வம் காட்டுவதால் ஆகாயம் கீழிறங்கி தலைமேல் விழுந்துவிடும் என்று

ஜாகிர்சாகிப் நினைக்கவில்லை. அவரது சிந்தனையும் சரியானதுபோலவே தோன்றுகிறது. ஏனெனில், பிற்காலத்தில் 1946 ல் இடைக்கால அரசு அமைக்கப்பட்டபோது செய்துப் பார்க்கப்பட்டப் பரிசோதனையின் விளைவு என்னவென்பதை நாமறிவோம்.

தன்னை வரலாறு புறக்கணித்துவிட இசைவளிக்காத ஒரு தலைவராக ஜின்னா இருந்தார். உயிரற்றிருந்த லீகிற்கு அவர் புத்துயிரளித்தார். நம்பிக்கை இழந்த சூழலில் உள்ள ஒரு சமூகம் வீறாப்பு காட்டுகிற ஒரு மனிதரிடம் தன்னைத்தானே ஒப்படைத்துக் கொள்கிறது. காங்கிரஸ் அமைச்சரவையின் அடிக்கடி மாறுபடும் கொள்கைகளை அவர் தன் நலன்களுக்கு பயன்படுத்திக்கொண்டார். முஸ்லீம் மக்கள் சந்திப்பு, இந்தி–உருது வாத எதிர்வாதம், முஸ்லீம் அலுவலர்களின் பதவி உயர்வு மற்றும் நியமனம், வார்தா கல்வித்திட்டம், குத்தகைச் சட்டம், காங்கிரஸ் கொடி, "வந்தே மாதரம்" அனைத்தும் இஸ்லாமுக்கு ஆபத்து எனும் கூச்சலைத் தோற்றுவிப்பதற்காக வானளாவப் பெரிதாக்கப் பட்டன. ஜின்னா காங்கிரசை வீழ்த்த தன்னுடைய சிப்பத்தில் இருந்த ஆற்றல்மிக்க துருப்பு சீட்டைப் பயன்படுத்தினார். மதச் சொற்களை முதன் முறையாகப் பயன்படுத்த ஆரம்பித்தார். "குரான் உறுதியளித்திருப்பதும், இந்தியாவில் தங்களது மூதாதையர் திறம்படக் கையாண்டதுமான" அரசியல் அதிகாரத்தை அவர்களுக்குப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். முஸ்லீம்கள் மட்டுமிறிய வெறியூட்டப் பெற்றனர்.

ஜின்னாவைத் தவிர முஸ்லீம் தேசிய வாதம் பேசி நின்ற, ஒன்றுபட்ட இந்தியா எனும் கனவை இடையிட்டுக் குலைத்த அரசியல் செல்வாக்குள்ள தன்னலக் குழுக்களான உத்திரபிரதேச முஸ்லீம் ஜமீன்தார்கள், கல்வி கற்றுப் பணியில் இருந்த முஸ்லீம்கள் ஆகிய வேறு இரண்டு சக்திகளையம் அவர் எதிர்ப்பட நேர்ந்தது. நிலவுடைமையை ஒழிக்க விரும்பிய காங்கிரஸ்மீது ஜமீன்தார்கள் ஐயுறவு கொண்டிருந்தனர். அவர்களுக்கு மாகாண, நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகளில் முப்பது விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்து கொடுத்து பிரிட்டிசார் நட்பாதரவு அளித்தனர். குடும்ப தரும சொத்துக்களைக் கவனமாக உருவாக்குவதன் மூலம் தங்கள் நிலங்களை அவர்கள் கவனமாகத் தக்கவைத்துக் கொண்டார்கள். கல்வியின்மூலம் பணிகளைப் பெற்றார்கள். அரசியல் நெருக்கடிகளால் ஆளும்வட்டாரங்களில் ஏராளமான செல்வாக்கினைத் துய்த்து மகிழ்ந்தனர். 1937 ல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபோது இவை அனைத்துமே ஆபத்துக்குள்ளாயின. தனிப்பட்ட நிலையில் ஜாகிர்சாகிப் எப்போதுமே இந்த வல்லமைமிக்க சக்திகளுக்கு எதிராகவே இருந்தார்.

ஜாகிர்சாகிப்பின் தேசியம் அவரது ஆய்வுத்திறச் சூழமைவிலேயே பார்க்கப்பட வேண்டும் என்று நாம் முடிவாகக் கூறலாம். தனது

சிந்தனைகளைச் செயலாக மாற்றுவதற்கு விறுவிறுப்பாக அரசியல் வட்டரங்கில் செயலாற்றியவர் அல்லர் அவர். அவர் என்ன சிந்தித்தார், என்ன கூறினார் என்ன எழுதினார் என்பதை வைத்தே அவரை மதிப்பிடவேண்டும். தீவிரவாதி அல்லது மிதவாதி, புரட்சிக்காரர் அல்லது பிற்போக்கு வாதி என்று குணாம்சப்படுத்தக்கூடிய அளவுக்கு அவர் எந்த குறிப்பிட்ட வகையையும் சார்ந்த கொள்கையாளராக இருக்கவில்லை. தனக்கே உரித்தான மதிப்பீட்டு முறைகளை கொண்ட ஒரு தேசியவாதியாக அவர் இருந்தார். தனது தேசியத்தை அவர் தனது அறிவாராய்ச்சியின் அடிப்படையில் அமைத்துக்கொண்டார். அதனால் மனிதநலப் பயன் முடிவுகளை விளைவிக்கவும், தன்னோடு ஒத்த தேசத்தவரை சிறந்த மனிதர்களாக்கிடவும் முடிந்தது. ஒற்றுமை, ஒத்திசைவு பற்றிய லட்சியங்களுக்கு அவர்களைத் தூண்டமுடிந்தது. அதன் இயங்குமுறை அறிவு மற்றும் கல்வியின் வழியில் இருந்தது. மகிழ்ச்சியும், ஒருமைப் பாடும் உள்ள ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்குவது அதன் நோக்கமாக இருந்தது.

ஜாகிர்சாகிப் பொய்யான பெருமிதம், தப்பெண்ணம், அறியாமை, மூடநம்பிக்கைகளின் காலடியில் மிதிப்பட்டுக் கிடந்த நம்பிக்கை இழந்த ஒரு சமூகத்தின் சிதைவுக் களத்திலிருந்து நிமிர்ந்து வெளிப்பட்டார். அவரது சக மதவாதிகள் அவரை முஸ்லீம்களின் ஆக்கநலன்களைக் கைவிட்டவர் என்று அச்சுறுத்தியதால் அவர் நீரோட்டத்தை எதிர்த்து நீந்தவேண்டி இருந்தது. ஜாமியாவை நிர்மாணிப்பதிலும் கூட தீங்கு விளைவிக்கிற கூறாகச் செயல்பட்ட தனது தேசிய உணர்வை நிலைகுலையாது காத்துக்கொள்ள அவர் மிகப் பெருமளவு இடுக்கணுற வேண்டியிருந்தது. ஒரு உறுதியான தேசியவாதியாக விசுவாசமான காங்கிரஸ்காரராக இருந்தது அவரது சமூகத்திலிருந்து அவரை தனிமைப்படுத்திற்று. இருந்தபோதிலும், இந்திய மக்களுக்கு அவரவர் தாய்மொழி வாயிலாகவே கல்விகற்பிக்க வேண்டும் என்று உழைக்கக்கூடிய கூரிய நோக்கு கொண்டிருந்த முஸ்லீம் தலைவர் இவர் ஒருவரே. அவரது பார்வையில் கல்வி கற்ற அவரது மனிதர்கள் அரசுப் பணிகளைத் தேடக்கூடாது. சமூக நன்மையைச் செயல்படுத்துவதற்கு படைப்புத் திறனும் பண்பாடும் மிக்கவராக அர்ப்பணிப்பு மனம் கொண்ட குடிமக்களாக இருக்கவேண்டும். காலனி ஆதிக்க ஆட்சியை நிலைபேறுடையதாக ஆக்குவதை அவர் விரும்பவில்லை. அந்த ஆட்சி முடிவுக்கு வரவேண்டுமானால் அரசின் பெருத்த எந்திரத்தின் வெவ்வெறு பாகங்களுக்கு எண்ணெயிடும் கீழ்ப்பணியாளர்களாக இவர்கள் இருப்பதை ஜாகிர்சாகிப் விரும்பவில்லை. படைப்புப் பெருமுயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் தேசத்தின் பயனுள்ள மேன்மையான குடிமக்களாக அவர்கள் இருப்பதை விரும்பினார்.

ஜாகிர்சாகிப் ஒரு தேசியவாதியாக இருந்தார். அவர் முதலிலும் இந்தியர், முடிவிலும் இந்தியர். ஒருபோதும் அவர் பிரிட்டிஷாருடன் சமரசம் செய்துக்கொண்டதில்லை. இந்த மண்ணிலிருந்து அவர்களை அகற்றுவதற்காக அவர் போராடினார். இந்திய சுதந்திர போரின் முதன்மையோட்டத்தில் அவர் கலந்திருந்தார். அலிகர் இயக்கத்திற்கு எதிராகப் புரட்சிசெய்து தான் பயின்ற கல்விக்கூடத்தை விட்டகன்று ஜாமியாவை நிறுவதற்காக தில்லிக்கு வந்தார். அரசாங்கத்திடமிருந்து ஒரு காசுகூட அவர் ஒருபோதும் பெற்றதில்லை. தன்னிடமிருந்த அனைத்தையும் ஜாமியாவுக்காக அவர் தியாகம் செய்தார். துயருற்றார். சர். சையத்தின் கொள்கை இறுதியில் தேசப்பிரிவினைக்கு இட்டுச்சென்றிருக்க ஜாகிர்சாகிப்பின் கொள்கை இந்தியாவில் விடப்பட்ட முஸ்லீம்களின் துயருற்ற உள்ளத்தை நலம்பெறச் செய்த நறுமணமருந்தாக வந்து அமைவுற்றது. ஜாகிர்சாகிப் மனிதனுடைய இடும்பைக்காக வருந்தக்கூடிய இதயத்தைப் பெற்றிருந்தார். பட்டதாரிகளுக்கு நிகழ்த்திய ஒரு உரையில், இந்தியர்களின் இரங்கத்தக்க நிலைமைகள், அவர்களது வறுமை, பசி, அறியாமை, துன்பம், அவதி இவற்றைக் கருத்தில் எடுத்துக் கொண்டால் "நீங்கள் நிம்மதியாக உறங்கவே முடியாது" என்று அவர்களுக்கு நினைவூட்டினார். வாழ்க்கை ஒரு குறிக்கோளுடன் கூடியது. "வாழ்க்கை என்பது தொண்டு; வாழ்க்கை என்பது வழிபாடு என்று கூறி அவர்களை நற்செயல்களைக் செய்யுமாறு ஏவுவார். குறிக்கோள் உள்ள பணியைச் செய்திடவும், வழிபாட்டுணர்வுகளை நிறை வேற்றிடவும் கூடிய வகையில் இயற்கையாக உள்ளடங்கியிருக்கும் உங்களது ஆற்றலை நீங்கள் துருவித் தேடவேண்டும். அவைகளில் ஒத்திசைவையும் சமநிலையையும் ஏற்படுத்தவேண்டும். கள்ளங்கபடமற்ற சிந்தனைத் தீயில் அவற்றைத் தூய்மைப்படுத்துவதன் மூலமும் உங்களது வாய்மை தவறாத செயல் எனும் சம்மட்டிகொண்டு அடிப்பதன்மூலமும் அவற்றை வலுப்படுத்தி என்றுமுளதாக நீடிக்கசெய்வது அவசியமானதாக இருக்கும்."[2]

ஜாகிர்சாகிப்பின் தேசியவாதம் மிக உயர்ந்த இலக்கினை நிர்ணயப்படுத்திக்கொண்டது. இந்த தேசம் அந்த தேசம் என்றில்லாமல் மனித நலத்தைத் தழுவியது அது. இலேசாகக் கருதிவிட முடியாத அளவுக்கு மிகவும் புனிதமானதொரு உளப்பாடு தேசியம் என்று போதிப்பது அவரது பணியாக இருந்தது. மக்கள் ஒன்றுபடுவதற்கான உறுதியான ஒரு இணைப்புப்பூச்சாக தேசியம் இருந்தாகவேண்டும். எந்த நலிவையும் நீக்கி குணப்படுத்தக்கூடிய நல்மன மருந்தாக அது இருந்தாகவேண்டும். தேசத்திலிருக்கும் ஒவ்வொருவரையும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களாக மதிக்கக் கூடிய ஒன்றுபடுத்தும், சமாதானம்நாடும் சக்தியாக அது இருக்கவேண்டும். மனித குலப்பாரம்பரிய முழுமையை மிகுவிக்க ஒவ்வொரு

தேசமும் ஏதேனுமொன்றை அளித்து இணைவிக்கவேண்டும். ஐரோப்பா தேசியக்கோட்பாட்டை அளித்தது. பிரான்சு சமதர்மக் கோட்பாட்டைத் தந்தது. பிரிட்டன் முற்போக்குக் கொள்கைகளை வழங்கியது. அமெரிக்கா முதலாளித்துவத்தையும் ரஷ்யாபொதுவுடைமை தத்துவத்தையும் அளித்தன. பண்டிட்ஜியைப் போலவே ஜாகிர்சாகிப்பும் மனிதநலம், மதச்சார்பின்மை, உலக உய்திக் கோட்பாடு, பலவின் ஆக்கம் சேர்ந்த பண்பாட்டிற்கு எழில்நலமிக்க முன்மாதிரி இவற்றை இந்தியா மனித குலத்திற்குப் பரிசளிக்கவேண்டும் என்று விரும்பினார்.

பழங்காலத்து வளமிக்கப் பாரம்பரியத்தை அறிந்திருந்த நிலையில் இந்தியாவின் பண்புத்திறத்திலிருந்து அதனை எதிர்பார்ப்பது கடினமானதாக இருக்கவில்லை. ஐயாயிரம் ஆண்டுகள் பழமைஉடைய பல்வேறுபட்ட ஆன்றோர்களின் திகைக்கவைக்கும் சாதனைகளுடன் கூடிய பண்பாட்டை அது பெற்றிருக்கிறது. புத்தரும், மகாவீரரும், அசோகரும், அக்பரும், கபீர், நானக், விவேகானந்தர், தாகூர், காந்தி, நேருவும் பிறந்த மண் இது. சமயம், தத்துவம், கலை இலக்கியம், சமுதாயம், அரசியல் அனைத்துவகை படைப்புத்துணிவு வினைகளில் மனித அறிவாற்றலின் மேம்பாடு இவற்றில் இமாலயசிகரங்களை தொட்ட பூமி இது. இந்தியாவின் சிந்தனை அலைகள் காலம், நிலஎல்லைகள், இனம் ஆகிய தடைகளைக் கடந்த சென்று உலகளவில் ஆர்வமெழுப்பின. இந்தியப் பாரம்பரியத்தின் மதிப்பு அளபுருக்கள் அறிவாற்றலும், ஆன்மீக ஆற்றலுமாக இருப்பதால் இந்தியாவின் தேசியக் கோட்பாடு இணக்குவிக்க இயலாதவற்றையும் இசைவிக்கும் ஒரு கருவியாக வந்தாக வேண்டுமென்ற ஆர்வமிக்கவராக ஜாகிர்சாகிப் இருந்தார். சிந்தனைச்சாயல்கள் ஒவ்வொன்றையும் ஈர்த்துக்கொள்ளவும், ஒவ்வொரு வகை பண்பாட்டையும் தன்னோடு இசைவுப்படுத்திக்கொள்ளவும், ஒவ்வொருவகை நம்பிக்கையையும் இணைவித்துக்கொள்ளவும் கூடிய ஒரு இயக்கமாக அது இருக்கவேண்டும். அதன் ஒன்றாகும் தன்மை, அதன்பல்வகைமை, அதன் தொடர்ச்சி, அதன் நெகிழ்ச்சி, அதன் மனிதநலம் ஆகியவை ஓர் எழில்மிக்க பண்பாட்டு வகையின் தரக்குறியீடுகளாக வேண்டும். தேசத்தின் முன்பு ஜாகிர்சாகிப் கொணர்ந்து வைத்த அமைவு இதுதான். தேசியம்பற்றிய அவரது சிந்தனைகளின் வெளிப்பாடும் அதுவே. அவரது நம்பிக்கை உணர்வு, "வெவ்வேறு வகை மனித இனங்களின் கலவையானது புதியதொரு பண்பாட்டைப் பரிணமிக்கக் கூடிய புதியதொரு ஆதாமை உருவாக்கும். இந்தியாவின் அமைவு இது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை"[3] என்று அவரை அறிவிக்கும்படி செய்தது.

5. மனிதநேயப் போக்குகள்

ஜாகிர்சாகிப் ஒரு மாபெரும் கல்வியாளர், தேசியவாதி. ஆனால் அவர் தலை சிறந்த மனித நலவாதி. அவரது முதிர்ந்த அறிவின் மென்னயப் பண்பு, இரக்கம், மென்மையான இதயத்தின் அன்பு. அக ஆன்மாவின் மனிதநல முற்போக்குக்கொள்கைகள் அவரது வாழ்வின் எளிமை, தூய்மை, மேதகைமை ஆகியன இந்திய மறுமலர்ச்சியின் நேர்த்திமிக்க மலர்களில் ஒன்றாக அவரைத் தனித்து அடையாளம் காட்டுகின்றன. புத்தாக்கமுடைய மனிதநலம் மற்றும் அமைதிக்கான தேடலில் குறையற்ற ஒரு முழு நிறைவு மனப்பாங்கை வளர்த்துவந்த புகழ்மிக்க இந்தியர்களிடையே ஜாகிர்சாகிப்பின் பெயரும்கூட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தைப் பெறும். சமூகத்தில் புதிய மனப்பான்மைகள், மதிப்பீடுகளை உயர்த்து வதற்கும், நாட்டின் அனைத்து தரப்பு மக்களிடையேயும் அறிவையும் பண்பாட்டையும் பரப்புவதற்கும், தனது ஆன்மாவின் மேம்பாட்டு நாட்டத்திற்கும் வாழ்நாள் முழுவதுமான அவரது ஒப்படைப்பே அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். வாழ்க்கை அவருக்கொரு குறிக்கோள் திட்டம். அறிவுத்தேட்டத்திலும் வாழ்க்கையின் மேலான மதிப்பீடுகளை நாடியதிலும் அங்கே மனிதநலம் திரளுருக் கொண்டது. அவரது மனிதநலக்கொள்கை மனிதகுலத்தை ஒரு குடும்பமாக ஒருங்கிணைக்கும் நோக்கமுடையது. இந்த உலகம் முழுவதையும் தனது நாடாக அவர் கருதினார். பாரததேசம் முழுவதையும் தனது வீடாகக் கருதினார். மனிதகுலம் முழுவதையும் தனது குடும்ப உறுப்பினர்களாக நினைத்தார்.

அவரது மனிதநலம், அழகின்மீது அவர் கொண்டிருந்த அன்பினால் வெளிப்படும். இயற்கையின் அழகு, குன்றுகள், பள்ளத்தாக்குகளின் அழகு, ஆறுகள் ஓடைகளின் அழகு பசும்புல்வெளிகள் வயல்களின் அழகு அனைத்தும் அவரது மிகையான ஆர்வத்தைத் தூண்டின. மலர்கள் முதல் கற்கள்வரை கவிதை தொடங்கி கையெழுத்து நேர்த்திவரை, இசையிலிருந்து ஓவியம்வரை குழந்தைகளிலிருந்து விலங்குகள்வரை பொருட்களின் அழகை அவர் நேசித்தார். அழகை ஆராதிப்பதோடு மட்டுமின்றி அதனை உருவாக்கவும் நிலைபேறுடையதாக்கவும் செய்தார். பிரபஞ்சத்தின் கலைத்தன்மை நயநேர்த்தி அனைத்துமே அவரது நெஞ்சத்தில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியது. அது அவரது எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் அழகான வெளிப்பாடுகளைக் கண்டது.

அவரது மனித நலக்கொள்கையின் மற்றொரு கூறு அன்பு. "அன்பு நிலையற்ற மென்னுணர்வோ அல்லது உரமற்ற உணர்ச்சி வேகமோ அல்ல. மாறாக மனம், உணர்வு, விருப்பம் இவற்றைச் சேர்த்து இணைத்துக் கொண்டவலிமையான, ஆழமான, நிலைத்திருக்கக் கூடியவாழ்வின்

சாயல்". பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப் படைப்பாற்றலுக்கும் அன்பே தூண்டு சக்தி. அன்பு மண்ணுலகக் கவர்ச்சிகளிலிருந்து ஆன்மாவைத் தூய்மைப்படுத்துகிறது. அன்பு என்பது மனிதனிடமுள்ள தெய்வீக முழுமையின் வெளிப்பாடு. உண்மை உணர்ந்து அழகினைப் போற்றுதலே அன்பு. முழுநிறைவுச் சிந்தனையை நோக்கிய ஒரு இயக்கமது. மெய்ம்மையுடனான உள்ளார்ந்த உறவை அது வெளிப்படுத்துகிறது. மனிதர்களிடையேவுள்ள வேறுபாடுகளை அது களைகிறது. மனிதனை மதிப்பதை அது தூண்டுகிறது. மனிதனின் அமைவை நிறைவு படுத்துகிறது. மனிதனுக்கு அமைதியை, வசதியை, மகிழ்ச்சியை, அது அளிக்கிறது. ஜாகிர்சாகிப்பின் மனிதநலம் அன்பின் இத்தகைய கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டது. மனிதகுலத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் தொகுத்து நோக்குவது அவரது நோக்கமாக இருந்தது. மனித மேன்மையையும், மனிதகுலம் முழுமைக்கும் மகிழ்ச்சியையும் வலிவுறுத்துவது அவரது இலக்காக இருந்தது.

ஜாகிர்சாகிப்பின் மனிதநலம் அழகுமற்றும் அன்பிலிருந்து அறிவை மேம்படுத்தி, விவேகத்தை ஆழமாக்கி, அழகை மிகுவித்து, அன்பைப்பெருக்கி, ஒழுக்கத்திற்கு வலிவூட்டி உணர்வுத்திறனை மேம்படுத்தும் தொண்டு மற்றும் தியாகத்திற்கு அவரை இட்டுச் சென்றது. சேவையானது அன்பை மெய்ம்மையாக மாற்றுகிறது. பிற ஒழுக்கங்கள் அனைத்திற்கும் பொறிகளுக்குப் புலனாகும் உருவத்தை வழங்குவது சேவை. பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிடவும் உதவிசெய்யும் கரங்களே புனிதமிக்கவை. சேவை மனப்பான்மை இல்லாதிருக்கும் சமுதாயம் வளமையுறாது. ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உதவி செய்து கொள்வதிலிருந்து விசையூட்டுப்பட்டே எல்லாவகையான முன்னேற்றங்களும் தோன்றுகின்றன. சேவையும் உதவியும் ஜாகிர்சாகிப்பின் மனிதநலக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளாக இருந்தன. ஜாகிர்சாகிப்பின் மனிதநலம் பழங்கால விவேகத்தின் விளைபொருளாக இருந்தது. அனைவரிடமிருந்தும் சுதந்திரமாக அவர் திரட்டிக்கொள்வார். கிரேக்கத்தின் நல்லறிவு நிலை, புத்தமத்தினரின் பொறுமை, இந்துக்களின் நிலை, கிறிஸ்தவர்களின் கருணை, இஸ்லாமிய சகோதர உணர்வு, சுபிஅன்பு, அராபிய சொல்நடை, இந்திய அறிவாற்றல், பாரசீக வேலைப்பாடுகள், ஜெர்மனியின் கருத்தியல் கோட்பாடு, மேற்கத்திய பயனீட்டுவாதம் அனைத்துமே அவரது மனித நலத்திற்கு உருக்கொடுக்கச் சென்றன. வாழ்க்கை, இன்பம் அல்லது துன்பமெனும் அச்சின்மீது சுழல்வதில்லை; முன்னேற்றம், அழி வு எனும் அச்சிலேயே சுழல்கிறது என்று அவர் கூறுவார். லாபநஷ்டம் வாழ்க்கையின் ஆராய்ச்சியாக இருத்தலாகாது, சுயத்தை முன்னேற்றுவதாக அது இருக்கவேண்டும்.

இடையில் ஒரு பிரிவுறுதல் இருந்தது. ஓய்வும், அறிவு வளர்ச்சியும் உள்ள மேல் தட்டினர் கல்வியைப் பெற்றனர். ஆனால், தமது இருகரங்கள் கொண்டு உழைத்திட மறுத்தனர். ஒரு சிறிது கற்ற அல்லது கல்வியே கற்காத மக்கள் தங்கள் விரல்கள் தொடங்கி எலும்புகள்வரை அனைத்தும் தேய உழைத்தனர். இது வருமானத்தில் மட்டுமின்றி சமூக அந்தஸ்திலும் ஏற்றத்தாழ்விற்கு இட்டுச் சென்றது. மேல் அடுக்கினர் பெரும்பாலும் ஒட்டுண்ணிகளாகிவிட்டனர்.

உண்மையான ஜனநாயக சமுதாயத்தில் மூளை உழைப்பு, உடலுழைப்பு இவற்றிடையேயான வேறுபாடு அகன்றாக வேண்டும் என்று ஜாகிர்சாகிப் நினைத்தார். கைகளால் செய்யப்படும் உழைப்பினது பெருமை அங்கீகரிக்கப்படவேண்டும். தமக்குரித்தானவற்றை ஒவ்வொருவரும் முழுமையாகப் பெறவேண்டும். ஒவ்வொருவரும் மதிக்கப்படவும் வேண்டும். சமூக ரீதியான உற்பத்திப்பணியின் ஒரு வடிவத்தைக் கல்விமுறையின் மையக் கருத்தாகக் கொண்டு அமைந்த, ஜாகிர்சாகிப் மிகுந்த அக்கறையுடன் ஈடுபட்ட அடிப்படைக்கல்வியானது, அவரது பாணியில் ஒரு புதிய சமூக ஒழுங்கை உருவாக்கவிருந்தது. அப்படிப்பட்ட கல்வித்திட்டம் உயர்ந்தோர் குழாமுக்கும் அதுவல்லாதோர்க்கும் இடையில் பாகுபாட்டை உருவாக்காது.

இரண்டாவதாக, மேம்பட்ட உரிமை பெற்றிருக்கும் சிலரால் மக்கள் சுரண்டப்படுவது நிறுத்தப்பட்டாகவேண்டும் என்று ஜாகிர்சாகிப் நினைத்தார். உழைப்பைப் பற்றிய மக்களின் மனப்பான்மையில் அடிப்படை மாற்றம் நிகழவேண்டும். தன்னில் ஒரு தனித்த ஆற்றலோ, அரிய திறமோ உள்ள ஒரு மனிதன் தன்னை உயர்ந்தவனாக நினைத்துக் கொள்வான். தன் நலன்களுக்குப் பிறரைப் பயன்படுத்திக் கொள்வான். மனித நடவடிக்கைகளின் பழைய மரபாக இது இருந்தது. அத்தகைய மனிதன் தனது செயல் திறம் அல்லது கைத்திறத்தை கடவுளிடமிருந்து பெற்ற அடைக்கலப் பொருளாகக் கையாண்டு பிறர்க்கு உதவ வேண்டும் என்று ஜாகிர்சாகிப் நினைத்தார். தனது வல்லமைக்கு ஏற்றவகையில் மிகச் சிறந்த முறையில் பரப்ப முயற்சித்த அவரது சமூகத் தத்துவத்தின் ஒரு பகுதி இது. ஏழைகளின்மீது அக்கறையும் கருணையும் கொள்ளும் சிந்தனையைப் போற்றி வளர்க்க தன்னாலியன்ற உச்ச அளவு முயற்சிகளில் அவர் ஈடுபட்டார். மனிதனின் கௌரவத்தை வலியுறுத்தி மனித அவலங்களை அகற்றும் சமூகசேவையின் தேவையை வலியுறுத்துவது அவரது ஆசிரியவாழ்வின் பணியாக இருந்தது. நன்மதிகூறும் ஆதாரப்பொருளாக எல்லாத் தருணங்களிலும் அமைந்திருந்தது இதுவே. வல்லமைக்கொண்ட மேலோரைப் போலவே அடித்தளத்திலுள்ள மெலிந்தோரும் ஒத்த மேன்மைபெறும் சமூக ஒழுங்கை அடைய உழைப்பது என்னும் முக்கியமான

உந்துகையைக் கொண்ட அடிப்படை சமூக மதிப்பீடுகளையே அவர் வலியுறுத்துவார்.

மூன்றாவதாக, மனிதநலத்தில் சமூகவியல் நோக்கம் ஒழுக்கவிதிகளோடு தொடர்புடையது என்று ஜாகிர்சாகிப் உணர்ந்தார். அடிப்படுத்துதலையும், சுரண்டலையும் நீக்கும் வகையில் நீதி, சமத்துவம் இவற்றை விரும்பும் ஒழுக்க விதிகளைக் கைவிட்டு, எந்த மக்களும் தேசமும், வாழவோ, வளமையுறவோ இயலாது. ஜாகிர்சாகிப்பின் புதிய சமூகக் கொள்கை ஒழுங்குமுறையும், சுயக்கட்டுப்பாடும், அமைதியான ஜனநாயகத்திற்கு ஆக்கம் சேர்க்கக்கூடிய காந்திய சர்வோதய சிந்தனைக்கு நெருக்கமாகவும் வருகிறது. ஜனநாயகமும் அஹிம்சையும் உலக அமைதிக்குத் தேவைப்படக்கூடிய, உயர் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு கொள்கைகள் என்று அவர் நினைத்தார். "நமது நாகரிகத்தின் உய்வும், பலவின் ஆக்கம் சேர்ந்த நமது பண்பாடு மனித குலத்தினுடையதும் இந்தியாவினுடையதுமான தலைசிறந்த அமைவினை நோக்கி நடையிடுவதும் ஆகிய இரண்டும் ஜனநாயகம் அஹிம்சை ஆகியவற்றின் விரிந்த மனப்பாங்குடைய கூட்டிணைப்பையே சார்ந்துள்ளது" என்று அவர் உணர்ந்தார்.

ஜாகிர்சாகிப் வன்முறையற்ற செயல்களில் பெருத்த நம்பிக்கை கொண்டிருந்தார். அஹிம்சை வினையை ஒரு கருவியாகக் கொண்டு பழங்காலத்தில் மக்கள் பலவற்றை சாதித்துள்ளனர். அவர்கள் பல பெரிய வெற்றிகளையும் பெற்றனர். அரசுகளை மாற்றினர். படைஎடுத்து நுழைந்தோரை மலைக்கச் செய்தனர். பேரரசுகளை முடமாக்கினர். சர்வாதிகாரத்தை தேய்ந்து மறையச் செய்தனர். சமூகத்தடைகளைத் தகர்த்தெறிந்தனர். பொருளாதார சமத்துவத்தைப் பெற்றனர். பழங்கால ரோமில் இருந்த பிலிப்பியன்கள் பாட்ரீசியன்கள் மீது அஹிம்சை வழியிலேயே வெற்றி கொண்டனர். டச்சு சுதந்திரப்போர், இங்கிலாந்தில் இரத்தமின்றி நடந்த புரட்சி, இந்தியாவின் பக்தி இயக்கம், இஸ்லாமின் சூபி இயக்கச் சார்பு, அன்பு பற்றிய கிறிஸ்தவ தத்துவம், அஹிம்சையில் இந்து புத்த ஜைன மதங்கள் கொண்டிருந்த நம்பிக்கை இவை அனைத்தும் வன்முறையற்ற செயல்களின் அடிப்படையில் அமைந்தவை. இவைஅனைத்திற்கும் மேலாக பிரிட்டிசாரிடமிருந்து விடுதலை பெற இந்தியா கைக்கொண்டவழி உடல்வலுவைவிட அறவலுவே சக்திமிக்கது என்பதை ஐயத்திற்கு இடமின்றி நிரூபித்திருக்கிறது. ஒரு அரசாங்கத்தின் அரசியல் அதிகாரம் அடித்தளத்திலிருந்து வருகின்ற நொய்மை வாய்ந்த சமநிலை ஆதரவைச் சார்ந்தது. மக்களின் அரசியல் மனத்திட்பத்தால் அந்த ஆதரவு ஒருவேளை திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டால் இந்த அரசாங்கம்

கவிழும். ஜாகிர்சாகிப் மிகுதியும் வலியுறுத்திய வன்முறையற்ற செயல்பாடு உறுதியாக மனிதநலத்தின் பாற்பட்ட ஒரு கூறேயாகும்.

மனித நலத்தோடு தொடர்புகொண்டுள்ள மற்றொரு சமூகம் மற்றும் அரசியல் வாழ்வின் கூறு மதச்சார்பின்மை. ஒவ்வொரு இந்தியனின் மனசாட்சியிலும் ஜாகிர்சாகிப் ஊறிச்செறியவைக்க விரும்பிய நமது பண்பாட்டு ஒழுங்கமைதியின் விளைபயனே அதுவும். பரந்த சமுதாயக் குழுக்களுடன் பழகக்கூடிய, ஆணவ வீறாப்பில்லாத, சடங்குமுறையாற்று கையற்ற. மரபு சாராத, மதம் சாராத மனித நலமாக மதச்சார்பின்மை இருக்கிறது அது வேற்றுமையில் ஒற்றுமையையும், பலவான தன்மையில் முழுமையான ஒருமையையும் ஏற்றுக்கொள்கிறது. சமூகத்தின் ஒவ்வொரு பகுதியும் தனது பண்பாட்டுப் பாரம்பரியத்தை வளர்த்துக்கொள்ள முழுமையான சுதந்திரமான வாய்ப்பை அது அனுமதிக்கிறது. அது ஒரு ஆதிக்கக் கொள்கைஉடைய கருதுகோளன்று. மாறாக உதவும் போக்குடையது. ஒரு பண்பாட்டின் உயர்வை மற்றொன்றின்மீது நிலைநாட்டுவதற்கான போட்டிக்குரிய ஒரு சிந்தனையல்ல அது. அனைத்து பண்பாடுகளையும் ஒரே மரத்தின் கிளைகளாகச் கருதக் கூடிய ஒரு கூட்டுறவு மனநிலைப்பாங்கு. அது பிரச்னைகளை ஒதுக்கித்தள்ளும் பாங்குடைய தனிவகையான அணுகுமுறையல்ல. மாறாக அனைத்து வகைகளும் அமைவுற்றுத் தோன்ற அனுமதிக்கும் அகன்ற அடிப்படைகொண்ட கருதுகோள். பன்னிற மணி ஒட்டு அல்லது ஓவியத் திரைச்சீலை போன்று ஆக்கக்கூறுகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள, பலவின் ஆக்கம் சேர்ந்த காட்சியை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாக அது இருக்கிறது. வேறு வார்த்தைகளின் கூறுவோமாயின், பல்வேறு வகைப்பட்ட நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்ட முற்போக்கான ஒரு கருதுகோளாக இருக்கிறது. இந்து, சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம், சிக்கியம் ஆகிய அனைத்தும் ஒன்றனருகே ஒன்று அமைவுற்று இருந்து இந்தியாவின் பெருமைக்கு வளமூட்டுகின்றன. அனைத்து மதங்கள், மாநிலங்கள், மொழிகள், பண்பாடுகள், வழக்காறுகள் வேறு பிற திறமைகள் அனைத்திற்கும் இடமிருக்கக்கூடிய வெளிப்படையான சமூகத்தை ஆதரித்து அது வாதாடியது.

மத சார்பின்மை பண்டிட்ஜியால் மிகுதியும் வலியுறுத்தப்பட்டது. இந்தியாவில் அது ஆழமாக வேரூன்ற தன்னால் இயன்ற அனைத்தையும் ஜாகிர்சாகிப் செய்தார்.

மதவெறி, சாதிக் கட்டிறுக்கம் எனும் இரண்டு கூறுகளுக்கு எதிராக மட்டுமே ஜாகிர்சாகிபின் மனிதநலம் போராட்ட ஏற்பாட்டை தொடங்கச் செய்திடவில்லை. நம் நாட்டிலுள்ள பிரிவினைக் கூறுகள் அவை இரண்டு

மட்டிலும் அன்று. செல்வவளமும், அதிகாரமும் மொழியும், பரப்பெல்லையும், கருத்துப்பாங்குகள், பொருளாதாரச் சமமின்மை, சமூகக் கொடுமைகள், பண்பாட்டு ஒவ்வாமைகள், கல்வி வாய்ப்புகள் இவை அனைத்துமே பிரிவினைக் கூறுகளாக இருக்கின்றன. இருப்போர், இல்லாதவர், முதலாளி வேலைக்காரர், பணக்காரர், ஏழை, பின்தங்கியோர் முன்னேறியோர், பெரும்பான்மையோர், சிறு பான்மையோர், புதுமைப்பாங்கினர் மரபுசார்ந்தோர் எனும் இவை அனைத்துமே எதிரெதிர் திசைகளில் இழுத்துக்கொள்கிற தன்னலக் குழுக்களாக ஆகிவிட்டன. அரசியல் செயற்களத்தின் கருத்துப்பாங்குகளின் சமதர்மம், பழம்பண்பு மீட்பியக்கம், புதுமைவெறுப்பு, முற்போக்குக் கொள்கை, பொதுவுடமை, வகுப்புவாதம் இவை அனைத்தும் நம்மைக் கூறுகளாகப் பகுத்து விட்டன. இந்த இழுவை வடப்போட்டியில், பிணிக்கும் கயிறான தேசிய ஒருமைப்பாடு எந்தநேரத்திலும் அறுந்துபோகும் அபாய நேர்வு உடையதாக இருக்கிறது. இந்த தனித் தன்மைகள் முன்னேற்றத்துக்குத் தடையாக அமைகின்றன. தனிமைநிலை, சிறப்புரிமைத் தன்மை, சிதைவுறுதல், பிரிவினை மனப்பான்மை விதைகளை அவை விதைக்கின்றன. அவைகள் தோழமை கொண்டு விளங்க மனிதநலம் எனும் மேடையை மட்டுமே ஜாகிர்சாகிப் வழங்கினார். ஒரு அழகிய உயர்ந்த தேசத்தை வளர்ச்சிக்கான சரியான பாதையின்மீது மீண்டும் இருக்கச் செய்யும் வகையில் சிறப்பில்லாத பண்புகளைப் புறந்தள்ளவும், கருத்து வேறுபாடு கொண்டுள்ள பரப்பை இயன்றவரை குறைத்துக்கொண்டு. உடன்பாடு கொள்ளும் பரப்பை மிகுதியாக்கிக்கொள்ளவும், ச மூகத்தின் அனைத்து பிரிவினரையும் மனமேற்கும்படிச்செய்யவும் ஒரு தீவிரமான பிரச்சாரத்தை அவர் மேற்கொண்டார்.

பிறரின் துன்பங்களை அறிந்துக்கொள்ளும் உணர்ச்சி மென்மையை மனித நேயம் குறிப்பாகச் சுட்டுகிறது. உலகின் அனைத்துத் துயரங்களையும் நமது சொந்தத் துயரம்போல சுமக்கவேண்டும் என்பதில் ஸ்கோபென்ஹருடன் ஜாகிர்சாகிப் உடன்படுவார். மருட்டும் பிரச்னைகளை கடும் சோதனையான சூழ்நிலைகளில் சந்தித்துக்கொண்டு 20 ஆண்டுகளுக்கும் மேலான தனது வாழ்வின் மிகச் சிறந்தபகுதியை ஜாமியாவில் செலவிட்டார். ஆனாலும், ஒருபோதும் வாட்டத்தையோ, மலைப்பையோ அவர் உணர்ந்ததில்லை. ஒவ்வொரு இடையூறும் அவரிடமிருந்த மிகச் சிறந்தவற்றை வெளிக்கொணரும். தேவைப்படும் தூண்டுதலையும் படைப்புச் சிந்தனையுள்ள வழிகாட்டுதலையும் அவர் வழங்குவார். முனைப்பான அரசியல் என்னும் கரடுமுரடான பாதையைவிட்டு அவர் விலகி இருந்த போதிலும், காந்திஜியின் செல்வாக்கால் ஆழமான மாறுதல்கள் உண்டாகப் பெற்றார். காந்திஜியைப்

போலவே இவர் சேற்றினை ஒருபோதும் சேற்றினால் கழுவமுடியாது என்று நம்பினார். தூய நீரினைக்கொண்டே அவ்வாறு செய்ய முடியும். இருட்டை இருட்டினால் ஒருபோதும் நீக்கமுடியாது. வெளிச்சத்தைக்கொண்டே அகற்ற முடியும். வெறுப்பு ஒருபோதும் வெறுப்பை அகற்றாது. அன்பு ஒன்றே வெறுப்பை அகற்ற முடியும். 1947 ல் ஜலந்தர் புகைவண்டி நிலையத்தில் அவரை கிட்டத்தட்ட கொன்று போட்டவர்களைப் பற்றிக் கூட மோசமான வார்த்தைகளை அவரது உதடுகள் ஒருபோதும் உச்சரித்ததில்லை. சிந்தனை த்தூய்மை, செயல் தூய்மை, நோக்கத்தூய்மை ஆகியவை அவரது மனித நலத்தின் முக்கியமான கொள்கைகளாக இருந்தன.

அவருடைய மனித நலத்தின் நோக்கம் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, அமைதியான, படைப்புத்திறனுள்ள, அறிவு கொளுத்தப்பெற்ற சமுதாயத்தைக் கட்டமைப்பது."நியதியும் ஒளியும் கருணையும் பொருந்திய வாழ்க்கையைக் கட்டமைக்கும் ஈர்ப்புமிக்க கடும்பணியில் ஈடுபட்டுள்ள பெருமக்களுக்கான போற்றத் தகுந்த ஒரு இல்லமாக"[1] பாரதம் முழுவதையும் ஆக்க அவர் விரும்பினார். இந்த மாபெரும் கடும்பணிக்கு தாய் தனது குழந்தைகளுக்கு வழங்குவது போன்ற அல்லது தந்தை தனது குடும்பத்திற்கு வழங்குவது போன்ற தன்னலமின்மையும் தியாகமும் தேவைப்பட்டன. மனிதன் தெய்வத்தன்மை வாய்ந்த உயிருருவின் எதிர் நிழலாக இருக்கிறான். அவனது ஊழ்விதியின் நாயகன் அவனே. அவன் அறிவு கொளுத்தப் பெற்ற ஒரு அமைவை அடைந்திட உறுதி கொண்டிருப்பானாயின் எங்கெங்கும் நன்மையையும், அனைத்திலும் அழகையும், எல்லா மனிதரிலும் புனிதத்தையுமே அவன் காணவேண்டும். "நான் சந்தித்த ஒவ்வொரு மனிதனும், ஒரு வகையில் எனக்கு மேலானவன். அத்தகைய மேன்மையை நான் அவனிடமிருந்து கற்றுக் கொள்கிறேன்" எனும் எமர்சனின் கருத்துடன் அவர் உடன்படுகிறார். மகிழ்ச்சி பொருட்களில் இருந்து பெறப்படுவதில்லை சேவையிலிருந்தே பெறப்படுகிறது. தான் வேறொருவருக்காக வாழ்கிறோம் என்று ஒருவன் உணர்ந்து கொண்டால் ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்தும் திறனுடையவனே. ஜாகிர்சாகிப் இந்த கருத்தை விரிவுப்படுத்திக் கூறுகிறார். விலங்குலகிலும் கூட ஒவ்வொன்றும் மற்றொன்றுக்காக இருக்கிறது. உயிரற்ற ஜடப்பொருள் ஒவ்வொன்றும்கூட வேறொன்றிற்காகவே இருக்கிறது. தனக்காக எதுவுமே இருப்பதில்லை. பிறர்க்கு ஒளிதருவதற்காக மெழுகுவர்த்தி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறது. பிறர்க்கு உணவு சமைப்பதற்காக தீப்பிழப்பினுள் விறகு கனன்று எரிகிறது. பிறர்க்கு நிழல் தருவதற் காகவே மரம் வெயிலில் நிற்கிறது. மரம் வெட்டிக்குக்கூட அது நிழல்தர மறுப்பதில்லை. பசு, பிறர்க்கு பால்தருவதற்காகப் பசும் புல்வெளிகளில் மேய்கிறது. பிறர்க்கு ஒளியும்

வெப்பமும் தருவதற்காக சூரியன் காய்கிறான். மனிதன் மட்டுமே வேறுபட்டவனாக இருக்கிறான். சீசருடன் புரூட்டஸ் அமர்ந்து இரவு உணவை உண்கிறான். மறுநாள் அவன் முதுகில் வாளைச் செருகுகிறான். ஜாகிர்சாகிப், மனித இயல்புகைளப் பற்றி நுட்பமான சிந்தனை செய்தார். பெரும்பாலான நோய்களுக்குத் தீர்வு மனிதநேயமே என்று அவர் எடுத்துரைக்கிறார்.

ஜாகிர்சாகிப்பின் மனிதநலம் செயல்திறமுடையது. மந்தமானதல்ல. செயல்படுமுறைமையிலும், செயலிலும் அது நம்பிக்கை கொண்டது. அவரே ஒரு செயல்வீரர். மனிதன் நிலவில் அடியெடுத்து வைக்க உதவி நவயுக விந்தைகளைத் தோற்றுவித்தது இயக்காற்றல் விதியேயாகும். வாழ்க்கையின் சவால்களை தைரியமாகவும், வெற்றிகரமாகவும் எதிர் கொண்டால் மட்டுமே மனிதன் ஒரு சிறந்தவாழ்க்கையை நடத்த முடியும் என்று ஜாகிர் சாகிப் நம்பினார். மனிதனின் செயல்களை சரியான திசை நோக்கி அவர் கொண்டு செலுத்தினார். ஒரு சூபியைப் போல அவர், தனது முறைபாடுகளை வென்று ஆட்சிசெய்யுதன்னுடனேயே ஒரு போர் நடத்துவார். வார்த்தைகள் பிறரைப் புண்படுத்தும்போது அவர் அமைதியாக இருந்தார். பிறர் தன்னிடம் மட்டுமதிப்பின்றி நடந்துகொள்ளும்போது அவர் பொறுமையுடன் இருந்தார். அவதூறுகளுக்கு அவர் செவிமடுக்கமாட்டார். பிறருடைய துன்பங்களைப் பற்றி அவர் அன்பாதரவுடன் சிந்திப்பார். பிறருக்கு போதித்த ஒழுக்கங்களை அவரே கடைபிடித்தார், நிலைபேறுடைய சிறந்தவற்றையே அவர் நாடிச்சென்றார். அவர் மானுடசேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். பிறரை மூழ்காமல் காப்பாற்ற சூறாவளிக்குள் தான் விரைந்து புகுவார். ஜாமியா, அகதிகளின் தாக்குதலுக்குள்ளாகும் ஆபத்திலிருந்தபோது, பிறரின் வேதனைகளைப் போக்கும் நிவாரண முகாம்களை ஜாகிர்சாகிப் ஏற்பாடு செய்தார். அவரது வியர்வை, கண்ணீர், இரத்தத்தின் விளைவே ஜாமியா. அலிகர் ஒரு சிக்கலில் இருந்தது. அதனைச் சரிப்படுத்த இவர் அங்குசென்றார். பாட்னா அரசியல் குழப்பத்தில் இருந்தது. அந்தப் பூசலை அமைதிப்படுத்த அங்குச்சென்றார். அவரது குடியரசுத் தலைவர் தேர்தல் ஒரு புயலின் வருகையை முன்னறிவித்தது. அந்தச் சவாலை அவர் நாகரிகத்துடன் எதிர்கொண்டார். குடியரசுத்தலைவராக, கட்சியில் உள்ள வேறுபட்ட பிரிவினரை ஒன்றிணைக்கும் சக்தியாக அவர் இருந்தார். மனித நேயத்தின் காரணமாக அவரொரு வலிமைமிக்க தூணாக, அறிவார்ந்த வழக்குரைஞராக, நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாக, ஒழுக்கத்தின் விசைத்திறமாக எங்ஙெங்கும் இருந்தார். அவரது தலையாய சிறந்த பண்புகள், பெருந்தன்மை, வாய்மை என்பன தேசத்தின் உள்வலியை உறுதியுடையதாக்கின. பிரச்னைகளை கையாளும் அவரது திறமை

எந்தப்பிளவையும் நீக்கிவிடும். தேசமாயினும் சரி, தனிமனிதனாயினும் சரி, சுய தியாகமும், தன்னல மறுப்புமே சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சிக்கு தவறுதல் இல்லாத ஒரே வழிகாட்டுதலை வழங்குகிறது என்ற கருத்தை அவர் உண்மையாக நம்பினார். ஜாகிர் சாகிப் தனது வாழ்நாள் முழுவதும் ஏதோ ஒரு வழியில் துன்பப்பட்டார். துன்பங்களும், துயரங்களும் அவரது ஆன்மாவைப் பலப்படுத்தின. செயற்கரிய செயல்களுக்கு அவர் தூண்டுதல் அளிக்கப் பெற்றார். தன்னுடன் வதியும் மனிதர்களுக்கு சேவைபுரியும் மும்முரமான விருப்பத்தோடும், எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற கருணையுடனும், மனித குலத்தின்மீது உணர்ச்சிமிக்க அன்பு கொண்டிருந்த மனிதநலவாதியாக அவர் இருந்தார்.

ஜாகிர்சாகிப்பின் மனித நேயக்கூறுகளை ஆராய்ந்து கண்ட நிலையில் அவரை நமது நாட்டின் ஒப்பற்ற மனித நலவாதிகளான தாகூர், காந்திஜி, பண்டிட்ஜி, மௌலான ஆசாத், அல்லமா இக்பால் போன்றோருடன் ஒப்பிடுவது ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாக இருக்கும். தாகூரும் ஜாகிர்சாகிப்பும் இயற்கையை நேசித்தவர்கள். இலக்கிய இயக்கம், சமூக மத இயக்கம், தேசிய இயக்கமென மூன்று முக்கிய இயக்கங்களைக் கண்ணுற்ற, இந்திய மறுமலர்ச்சியின் விளைபயன்கள். இன்னமும் உருவாகாத தோட்டத்தின் குயில் ஒன்று தன்னைத்தானே ஜாகிர்சாகிப் என்று அழைத்துக் கொள்ளும் அளவுக்கு இருவருமே குறிக்கோள் கற்பனையாளர்கள், இருவருமே மனித குலத்தை பெரிதும் நேசித்தவர்கள், அமைதியின் தூதுவர்கள், உலக சகோதரத்துவத்தின் வழிபாட்டாளர்கள். "இப்போது தொடங்கி, தனது சொந்த பாதுகாப்பிற்காக புறத்தொடர்பற்ற ஒதுக்கநிலைப் பார்வையை எந்த தேசம் கொள்ளுமாயினும் அது புதுயுகத்தின் பொது இயல்பிற்கு எதிராக செயல்படும். எந்த அமைதியையும் அது காணாது. தனது சொந்த பாதுகாப்பிற்காக ஒவ்வொரு தேசமும் கொண்டிருக்கும் அக்கறை இப்போதிருந்து உலக நலத்தைத் தழுவ வேண்டும்".[2] இருவரும் மனிதனின் மேன்மையை உலகு தழுவிய மனிதன் என்ற அளவுக்கு உயர்த்தினர். இருவருமே மனிதனைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் பிரபஞ்சம் அதன் படைப்பாளி பற்றியும் ஆழமாக சிந்தித்தவர்கள். கிழக்கு மற்றும் மேற்கத்திய பண்பாட்டுக் கூட்டிணைப்பால் ஒரு புதிய சமுதாய அமைப்பை இருவரும் எண்ணிப்பார்த்தனர். கிழக்கு வாழ்க்கையை இயற்கையுடன் ஒத்திசைவித்தது. மேற்கோ மனிதனின் அனுகூலங்களுக்காக இயற்கையை அடிப்படுத்தி வைத்தது. ஒன்று கருத்தியல் கோட்பாடாக இருந்தது, மறறது பயனீட்டுக்கொள்கையாக இருந்தது. இருவரும் கிழக்கின் ஆன்மீகக் கொள்கையை மேற்கின் முற்போக்குக் கொள்கையோடு இன்கலவை செய்விக்க விரும்பினர். மனிதன் அவனது அமைவை அடைய அறிவு, கைத்திறம், விவேகம்

ஆகியவை உதவவேண்டும் என்று இருவரும் விரும்பினர். அந்த அமைவு தாகூரின் கூற்றுப்படி "பிரபஞ்சத்தின் உண்மை மனிதகுல உண்மையாக இருக்கிறது" என்று நிருபணம் செய்யவேண்டும். ஜாகிர்சாகிப் குழந்தைகளுக்காக எழுதிய பலகதைகளிலும் உள்ள அடிக்கருத்து தாகூர் தமது கவிதைகளில் தொகுத்துரைத்திருப்பவையே. "எங்கே உழவன் கடின நிலத்தை உழுது கொண்டிருக்கிறானோ, எங்கே பாதை அமைப்பவன் கற்களை உடைத்துக்கொண்டிருக்கிறானோ அங்கே அவன் இருக்கிறான். வெயிலிலும் மழையிலும் அவன் அவர்களுடன் உடனிருக்கிறான். அவனது உடைகள் தூசு படிந்து இருக்கின்றன. புனித மூடாக்கைத் தள்ளிப்போடு. அவன் கீழிறங்கி தூசி போன்ற மண்ணுக்கு வருவதையும் கூட விரும்பு"[3] ஜாகிர்சாகிப்பிற்கும் தாகூருக்கும் இடையே நெருக்கமான சிந்தனை ஒப்புமை இருக்கிறது. மனித மகிழ்ச்சிகள், துயரங்களைப்பற்றி பாடிய கவிஞராக தாகூர் இருந்தார். ஜாகிர்சாகிப் மனித உணர்ச்சிகளின் தலைமை குருவாக இருந்தார்.

காந்திஜி மனித நேயத்தில் மிக சிறந்தவராக இருந்தார். ஜாகிர்சாகிப் அவரால் மிகுதியும் செல்வாக்கு செலுத்தப்பெற்றார். அவரது கொள்கைககளில் ஐயுறா பற்றுறுதிப்பாடுடைய நம்பிக்கை கொண்டிருந்தார். காந்திஜியின் மனிதநலம் உண்மையை அடித்தளமாகக் கொண்டது. உண்மை மனிதகுலத்தை கடவுளிடம் நேரடியாக இட்டுச்செல்லும். உண்மையே கடவுள் என்று அவர் கூறினார். ஜாகிர்சாகிப் உண்மையை நாடும் வழியை வழங்கினார். உண்மைக்கான வழியை ஒளியூட்டிக்காட்டுவது அறிவேயாகும். உண்மை மாற்ற முடியாத அமைவாக இருக்கிறது. அந்த அமைவுக்கு வழிகாட்டியாக அறிவு இருக்கிறது. காந்திஜி உண்மையைப்பற்றி பேச மட்டும் செய்யாமல் உண்மையை அடையும் வழியில் தவறாது நடையிடவும் செய்தார், உண்மையைக்கான பாதை அமைத்தார். இதனால்தான் 1920 வாக்கிலேயே அவர் தேசிய கல்வி மையங்களைப்பற்றி சிந்தித்தார். அதன் ஆரம்பவிளைவுகளில் ஒன்று ஜாமியாவாகும். காந்திஜியும், ஜாகிர்சாகிபும் உண்மை என்ற கருதுகோளை அன்பு, கருணை, தொண்டு, தியாகம், அஹிம்சை என்ற பொறிபுலன்களுக்கு புலனாகும் வடிவத்தில் பொருளாக்கிக்காட்ட முயற்சித்தனர்.

உண்மையுடன், மனிதநலமும் சேர்ந்த காந்திஜியின் மனித சேவை அஹிம்சை செயலில் தன்னைத்தானே வெளிப்படுத்திக்காட்டியது. அவரது சத்தியாக்கிரகம், அஹிம்சை சர்வோதயம் மூன்றும், ஒரு நோக்கத்தை சாதிக்க உதவும் வழிமுறையை நோக்கத்தைப் போலவே அதனை தூய்மையானதாக்க உறுதிகொண்ட அவரது சமூக தத்துவத்தின் மூன்று சக்தி மிக்க கருதுகோள்களாக இருந்தன. ஜாகிர்சாகிப் இத்தகைய கருதுகோள்களுடன் முழுமையாக ஒத்துப்போனது மட்டுமின்றி இந்த

கருதுகோள்களின் கண்கூடான வாழும் உருவமாக தன்னை நிலைநாட்டிக்காட்டினார். காந்திஜியின் சமூக சேவை அவரது இந்து – முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, சுதேசிப் பொருட்களை மக்கள் விரும்பும்படி செய்தல் குடிசைத்தொழில்களுக்கு உதவுதல் ஆகிய நிர்மாணத்திட்டங்களாக வெளிப்பட்டது. ஜாகிர்சாகிப், இந்த திட்டங்கள் முழுமையிலும் பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தார். சூழ்நிலையை மேலும் பகுத்தாய்ந்து நம்முடைய அனைத்து பிரச்னைகளையும் தீர்க்கும் திறவுகோல் நமது தேசத்தின் அறியாமையை நீக்குவதே என்று ஜாகிர்சாகிப் கண்டார். காந்திஜி போதித்த உண்மை, அன்பு, ஆகிய நல்வாழ்வுக்கோட்பாடு, அறவுரைகளில் கூட மக்கள் அதன் பொருளைப் புரிந்துக்கொள்ளும்போது மட்டுமே ஒரு சிறிதளவேனும் பலனை உண்டாக்கும். ஆகவே, ஜாகிர்சாகிப் கல்விக்கு முதல் முன்னுரிமையை உறுதிப்படுத்தினார். ஜனநாயகம், சுதந்திரம், தொழில்மயம், நவீனமயம், தேசிய வாதத்தின் இன்னபிற கவர்ச்சிகரமான தோற்றங்களின் புழுக்கத்தில் இந்திய மக்களுக்கு கல்வியறிவூட்டும் கடமைப்பொறுப்பை நாம் புறக்கணித்துவிட்டோம். இந்தப் போக்கு மாற்றமின்றி நிலைத்திருக்குமாயின் இன்னுமொரு பத்தாண்டுக்குள் உலகின் அறியாமைமிகுந்த தேசம் என்ற இழிவான சிறப்புப்பட்டத்தை நாம் பெற்றுவிட நேரிடும்.

ஜாகிர்சாகிப்பின் மனிதநலம் பண்டிட் ஜவஹர்லால் நேருவினுடைய மனித நலத்துடன் சிறந்த ஒப்புமைக்கொண்டு விளங்குகிறது. அனைவருக்கும் சம வாய்ப்பு வறுமை ஒழிப்பு, சுரண்டல் ஒழிப்பு, மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு, சொத்து, சமூகம், கல்வியோடு தொடர்புடைய தொண்டூழியம், அனைத்தையும், அனைவர்க்கும் சமமாக வழங்குதல் எனும் சமதர்ம சிந்தனை ஆகியவற்றை இருவரும் ஏற்றுக்கொண்டனர். உலக அரங்கில் மனிதவளம் ஒரு சக்திமிக்க செயல்விளைவைப்பெறக்கூடிய வகையில் இந்தியமக்களின் இயக்கத்தை ஒரு படைவலியாகத் தூண்டி எழுப்புவதை இருவரும் ஏற்றுக் கொண்டனர். வகுப்புவாதம், சாதியம், மொழிசார் உணர்வு, பிராந்திய உணர்வுகளுக்கு எதிரான அறப்போரில் இருவரும் இணைந்து கொண்டனர். இருவருமே முற்போக்குவாதம், மனிதநலம், சமதர்மம், ஜனநாயகம், பலவின்ஆக்கம் சேர்ந்த கூட்டுப்பண்பாடு இவற்றின் வழிபாட்டாளர்களாக இருந்தனர். "நான் சமதர்மத்தினால் கவரப்பட்டேன். ஏனெனில் அது எண்ணற்ற தனிமனிதர்களைப் பொருளாதார பண்பாட்டுத் தளைகளில் இருந்து விடுவிக்கும்" என்ற பண்டிட்ஜியின் கருத்துடன் ஜாகிர்சாகிப் ஒத்துப் போகிறார். பெரும்பாலான தேசப் பிரச்சினைகளுக்கு ஜாகிர்சாகிப்பும், பண்டிட்ஜியும் ஒரேமாதிரியான அணுகுமுறையைக் கொண்டிருந்தனர்.

ஜாகிர்சாகிப்பின் சிந்தனைகளை சர். சையத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஆர்வமூட்டும் முடிவுகளை வழங்குகிறது. இருவருமே முஸ்லீம்களின் நிலைமைகளில் ஒரு சமூகமாற்றத்தை வேண்டி நின்றனர். இருவருமே மனநிலை திரிந்த முஸ்லீம் சமுதாயத்தை மீண்டும் உணர்வு பெறச்செய்ய விரும்பினர். இருவருமே அந்த சமூகத்திற்கு சுயமரியாதையையும் மேன்மையையும் தர விரும்பினர். இருவரும் கல்வியின்மூலம் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என விரும்பினர். இருவருமே மிகப்பெரிய கல்வி நிறுவனங்களை (இப்போது அவை மத்திய பல்கலைக்கழகங்களின் அந்தஸ்ஸதைப் பெற்றுள்ளன) கட்டி எழுப்பினர். முஸ்லீம்கள் பெருமை கொள்ளத்தக்கவை இவை இரண்டு மட்டுமே. இருவருமே தேசத்தினுடைய மரியாதையை செயற்படும்படி செய்தனர். வேறுபட்ட அளவுகளில் என்றாலும், இருவருமே தங்களது உரிமை வகையில் பெரும்புலமையாளர்களாக இருந்தனர். இருவருமே இஸ்லாமிய பண்பாண்மையின் படைப்புகள். இருவருமே தங்களது பண்பாட்டுச் சிறப்புகளைக் குறித்து பெருமிதம் உடையவர்களாக இருந்தனர். இருவருமே மனிதநல ஆர்வலர்கள், சீர்திருத்தக்காரர்கள், ஆனால், ஒப்புமைகள் இத்தோடு முடிந்து, விலகிச் செல்வதற்கான தனிக்கூறுகள் தொடங்குகின்றன. சர். சையத் முஸ்லீம்கள் மீது மட்டுமே முழு கவனத்தையும் ஒருங்கே செலுத்தினார் ஜாகிர்சாகிப்பின் பார்வையோ பரந்த தன்மையது. சையத், முஸ்லீம்கள் அரசியலில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்று விரும்பியபோது முஸ்லீம்கள் தேசியப்போராட்டம் எனும் முதன்மை ஓட்டத்தில் சேரவேண்டும் என்று விரும்பிய முழு பற்றுறுதியுள்ள தேசியவாதி ஜாகிர்சாகிப். விடுதலை இயக்கத்தின் புதல்வராக அவர் இருந்தார். காலனி ஆதிக்கத்தாரை நாட்டைவிட்டு வெளியேற்றவேண்டும் என்று விரும்பினார்: சர். சையத்சாகிப் காலனியாளர்களுடன் ஒரு சமரசம் செய்துகொண்டார்; ஜாகிர்சாகிப் இந்தப்போக்கை கடுமையாக எதிர்த்தார். 1959 ஜுலை 28ம் நாள், ஏறத்தாழ 15000 முஸ்லீம்கள் டெல்லி மசூதி ஒன்றில் சர். சையத்தின் தலைமையின் கீழ், பிளாசி போரில் தொடங்கி முஸ்லீம்கள்மீது பிரிட்டிஷார் விளைவித்த பேரழிவுகளை மறந்துவிட்டு, அரசியார் அறிவித்த பொது மன்னிப்புக்கு நன்றி கூறுவதற்காக கூடினர். ஆனால் 1920 அக்டோபர் 20 ல் அலிகர் மசூதியில் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து வெளியேற்றும் வரை ஓய்வதில்லை என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட முஸ்லீம் இளைஞர்களின் முன்னணிப் படையில் ஜாகிர்சாகிப் இருந்தார்.

சமுதாய வாழ்விலும், பண்பாட்டு வாழ்விலும் சர். சையத் மதச்சார்பற்றவராக இருந்தார். இந்துக்கள் – முஸ்லீம்கள் இருவரையும் அழகிய மணமகளின் இருகண்களாகக் கருதினார் என்பதை நாம் விரைந்து

குறிப்பி ட்டாக வேண்டும். இரண்டில் எதற்கு காயம் பட்டாலும் யாருடைய முகமும் உருக்குலைந்தவிடும். சர். சையத் இப்படிக் கூறியதாகப் பதிவு உள்ளது : "இப்போது நாம் இருவரும் இந்தியக்காற்றை சுவாசித்து வாழ்கிறோம். கங்கை யமுனை நதிகளின் புண்ணிய நீரைக் குடிக்கிறோம். நாமிருவரும் இந்திய மண்ணில் விளையும் பொருட்களை உண்கிறோம். வாழ்விலும் சாவிலும் நாம் ஒன்றாக இருக்கிறோம். இந்தியாவில் வாழ்ந்து கொண்டு நாம் இருவருமே மாறிவிட்டோம். பகைமை உணர்வு நிச்சயம் நம்மை அழித்துவிடும்"[4] அவர் வேறொரு இடத்தில் மேலும் கூறுகிறார். "இந்து எனும் சொல் ஒரு குறிப்பிட்ட மதத்தைக் குறிக்காது. ஆனால், அதற்கு மாறாக இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொருவரும் இந்து என்று தன்னைத்தானே அழைத்துக்கொள்ள உரிமை பெற்றுள்ளனர். ஆகையால், இந்தியாவில் வசித்தபோதிலும் நீங்கள் என்னை இந்து என கருதாமைக்கு நான் வருந்துகிறேன்". சர். சையத் மேலும் கூறுகிறார்: இந்துவோ அல்லது முஸ்லீமோ அல்லது கிறிஸ்தவரோ அவர்கள் அனைவரும் ஒரே தேசத்தவரே. ஏனெனில், *மதத்தின் அடிப்படையில் ஒரு நாட்டில்* வசிப்பவர்களை வெவ்வேறு இரண்டு தேசங்களின் உறுப்பினர்களாக கருதப்பட்ட காலம் கடந்துவிட்டது. இரண்டு சமூகங்களும் ஒற்றுமையாக நிற்கவேண்டும். இல்லையெனில் ஒருவருக்கு எதிராக மற்றொருவர் என்பதன் விளைவு இரண்டினது அழிவையும், வீழ்ச்சியையும் நாடி இயங்கிவிடும் என்ற கருத்துடையவர் சையத்.

ஜாகிர்சாகிப் மேற்கூறிய கருத்துப்போக்கிற்கு முழுமையான இசைவுடையவராக இருந்தார். பிரிட்டிஷாருடன் சமரசம் என்ற விலக்கி வைக்கப்பட்ட கனியைத் தொட்ட ஒரு பாவத்தால் அறவியல், சமூகவியல் மற்றும் பண்பாட்டு ஒத்திசைவு முழுதும் அழிக்கப்பட்ட சக்திமிக்க அரசியல் துறைதான் இதில் ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. ஜாகிர்சாகிப் அந்த பாவத்தை ஒருபோதும் செய்யவில்லை. மும்முனைத்தாக்குதல் நடத்தவேண்டி இருந்ததால் அவரது கடமைப்பொறுப்பு சர். சையத்தினுடையதைவிடவும் மிகவும் கடுமையானதாக இருந்தது. சிறந்ததை நோக்கி மாறுமாறு தூண்டுவதற்காக தனது சொந்த மதத்தவருக்கு எதிராக மட்டுமே சர். சையத் போரிட வேண்டியிருந்தது. ஜாகிர்சாகிப்போ தனது சொந்த மதத்தவர்களுக்கு எதிராக மட்டுமின்றி வாழ்வின் எதார்த்தங்களைச் சந்திக்கவும், காலனியாதிக்கத்திற்கு எதிராகவும், ஜாமியாவின் மீதிருக்கும் பகைமையை மாற்றவும், முஸ்லீம்களின் பண்பாட்டு தனித்துவத்தை முக்கியமாக உருதுமொழியைக் குறித்த அளவில் தனித்துவத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்குப் பெரும்பான்மை சமூகத்தாரிடம் ஜாகிர்சாகிப் போராட வேண்டியிருந்தது. அரசியலில் திடப்பற்று, கல்வியில் நவீனத்துவம் குறித்து மட்டுமே

ஜாகிர்சாகிப் சர். சையத்துடன் மாறுபடவில்லை. முஸ்லீம்கள் அனைவரையும் கல்வியறிவுடையவர்களாக்குவதிலும், உடலுழைப்பை அடிப்படை உட்செறிவாகக் கொண்ட மதிப்பீட்டு மையக்கல்வியிலும், தாய்மொழி வழிக்கல்வியிலும், குழந்தையின் அறிவாற்றல் வளர்ச்சி யுடன் பண்பாட்டுச் சிறப்புகளை ஒருங்கிணைத்தலிலும், கல்விக்கும் அரசுபணிகளுக்கும் இடை யே தொடர்பறச் செய்வதிலும் ஜாகிர்சாகிப்பின் எண்ணங்கள் சர். சையத்தின் எண்ணங்களிலிருந்து மாறுபட்டிருந்தன.

அல்லமா இக்பால் இந்திய துணைக்கண்டத்தின் மிகச்சிறந்த மற்றுமொரு சிந்தனையாளர். அவர் 19 ம் நூற்றாண்டு இந்திய மறுமலர்ச்சியின் விளைபயனும்கூட. அவரது மனிதநலம், ஜாகிர்சாகிப் போன்றே, ஜெர்மன் கருத்தியற்கோட்பாட்டாலும் இஸ்லாமிய தத்துவத்தாலும், செல்வாக்கு பெற்றவை. இருவருமே இஸ்லாமிய இனப் பண்புகளை மேற்கத்திய அறிவாராய்ச்சி ஒளியில் செயலுருப்படுத்திக்காட்ட முயற்சித்தனர். இருவருமே இஸ்லாமிய போதனைகள், மதிப்பீடுகள், பண்பாடுகளின் விருப்பார்வலர்களாக இருந்தனர். இருவருமே இஸ்லாமியக் கல்வியில் தேர்ந்த பெரும் புலமையாளர்கள், இருவருமே இந்தப் பொருளில் ஏராளமாக நினைக்கவும் பேசவும், எழுதவும் செய்தவர்கள். இஸ்லாமிய சிந்தனை, வாழ்க்கை, சமூகம் இவற்றை நவீனகாலத்தின் மெய்மைகளைக் கருத்தில் கொண்டு மறுசீரமைக்க இருவரும் விரும்பினர். காலம் எனும் மணலில் இருவருமே அழிக்க முடியாத அடையாள முத்திரைகளை விட்டுச்சென்றுள்ளனர். இருவருமே தத்துவவியலாளராக, ஆசிரியர்களாக, தலைவர்களாக, நிர்மாணிகளாக, சிந்தனையாளர்களாக, எழுச்சியூட்டுப வர்களாக, பல லட்சக்கணக்கானோரின் ஊழ்விதியின் சிற்பியாக இருந்தனர். இருவருமே மிகச்சிறந்த அறிவு ஜீவிகள், இருவருமே, இறந்துவிட்ட சமூகம் ஒன்றுக்கு உயிர்கொடுக்க முயற்சித்தனர். அந்த ச மூகம் சிறந்த எதிர்காலத்தைக் காணவேண்டும் என்ற அக்கறையுடன் இருந்தனர். இருவருமே காலனியாளர்களின் சூழ்ச்சிகளுக்கு எதிராக இருந்தனர்.

இங்கே ஒப்புமைகள் முடிந்து வேறுபாடுகள் தொடங்குகின்றன. இக்பால் அரசியலில் முற்றார்வம் கொண்ட தேசியவாதியாகத்தொடங்கி ஒரு பிரிவினையாளராக முடிந்திருக்கையில், ஜாகிர்சாகிப் ஆர்வமிக்க ஒரு தேசியவாதியாகவே தன் வாழ்நாள் முழுவதும் இருந்தார். இக்பாலின் தத்துவம் இஸ்லாமிய சிந்தனைப் புத்தெழுச்சி இயக்கவேடத்தை அணிந்துக்கொண்டிருக்கையில், ஜாகிர்சர்கிப்பின் சிந்தனை வழிமுறை உலகளாவிய மனித நலத்தின்மீது அக்கறை கொண்டு மாறாத உறுதியுடன் இருந்தது. இக்பால் தனது சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஊடகமாக கவிதைகளை விரும்பிய நிலையில், அகன்ற பரிமாணமளித்து நடப்பு

போக்கைப் பெற்றுள்ள ஒரு சக்திமிக்க ஊடகமாக இருக்கும்வகையில் உருது உரை நடையின் வேகத்தை முறைப்படுத்தியவராக ஜாகிர்சாகிப் இருந்தார்.

இக்பால் அறிவு ஜீவிகளின் ஆன்மாவைத்தொட்டு அவர்களை மாபெரும் உயரங்களுக்கு எழுச்சி கொள்ள வைத்தவராக இருக்கையில், ஜாகிர்சாகிப் அடித்தளத்து மக்களுக்கு கல்வியறிவூட்டும் முன்னொருக்க வேலையைச் செய்யவேண்டியிருந்தது. இக்பால் பழம்பெருமைகளைக் கொண்டு மக்களின் கற்பனைத்திறத்தைத் தூண்டிக்கொண்டிருக்கையில் ஜாகிர்சாகிப் ஜாமியாவை நிர்மாணிப்பதற்கு சொல்லொண்ணா துயரங்களை அனுபவிக்கவேண்டியிருந்தது. ஒரு சமயம், தனது கல்விக் கோயிலுக்காக பம்பாய் தெருக்களில் காசு சேகரித்துக்கொண்டிருந்தபோது "ஹாரிஸ் சாகிப்... இதற்கு மேல் என்னால் நடக்க முடியாது. எனது பாதங்களில் இருக்கும் புண்களைப்பாருங்கள் கடவுளின் நிமித்தம் இப்போதாவது ஒரு டாக்சியை ஏற்பாடு செய் யுங்கள்"[5] என்று தனது மாணவனை ஜாகிர்சாகிப் கேட்டுக்கொண்டார். இக்பால் எவரிடத்தும் இப்படி கூற நேர்ந்திருக்கவில்லை.

இருவரும் தத்தமது துறைகளில் பெருமைக்குரியவர்கள் என நாம் ஒப்புக்கொள்கிறோம். ஜாகிர்சாகிப் இக்பாலை மிகவும் வியந்து பாராட்டக்கூடியவராக இருந்தார். இக்பால் அவரது நாயகன். அவரது கவிதைகள் பலவற்றை அவர் நினைவில் வைத்திருந்தார். அரசியலில் வேறுபட்டபோதிலும், அவரது அறிவாற்றல் திறமைகளை மதித்தார். இக்பாலின் தத்துவம் ஜெர்மானிய அறிவாராச்சித்திரையில் வடிகட்டப்பட்ட இஸ்லாமியச் சிந்தனைகளின் சாரமாகும். அவரது தத்துவத்தின் மையக்கொள்கைகள் சுயத்தின் விழிப்புநிலை (குதி), செயல் (அமல்) படைப்பாற்றல் (தக்லிக்) தீவிர அன்பு (இஸ்க்) முன்னேற்றம், சக்தி நோக்கத்திற்குப் பயன்படல், விடுதலை மற்றும் சுதந்திரமான விருப்பம் ஆகியவை. ஜாகிர்சாகிப் தனது வாழ்க்கையிலும், பேச்சுக்கள் எழுத்துக்களிலும் இந்த கருதுகோள்கள் அனைத்தின் சாரத்தையும், உள்வாங்கிக்கொண்டவராகத் தோன்றுகிறார்.

மௌலானா அப்துல் கலாம் ஆசாத் மற்றொரு அறிவுஜீவி. அவருடன் ஜாகிர்சாகிப் குறிப்பிட்ட சிலவற்றில் ஒப்புமைக்கொண்டும், சிலவற்றில் வேறுபட்டும் திகழ்கிறார். மௌலானாவும் இஸ்லாமியக்கல்வியில் ஒரு மிகச்சிறந்த புகழ்சான்றவர். ஜாகிர்சாகிப், மௌலானா இருவரும் தத்தமது பாதைகளில் இருந்து விலகாத சிறந்த தேசியவாதிகளாக இருந்தனர். முஸ்லீம்கள் மேன்மையான வாழ்வுநடத்த இட்டுச்செல்வது, பலவின் ஆக்கம் சேர்ந்த கூட்டுப்பண்பாட்டை தேசத்தில் உருவாக்க உதவுவது என்ற

ஒரேவித குறிக்கோளை இருவரும் கொண்டிருந்து மிகப்பெரிய படி நிலைகளுக்கு உயர்ந்தனர். தேசத்திற்கு மிகுந்த பங்களிப்பு செய்தனர். இருவரும் தேசத்திற்காக தங்களை வருத்திக் கொண்டனர். இருவருமே தங்கள் சமூகத்தின் வெறுப்பிற்கு உள்ளாயினர். இருவருமே தனிச்சிறப்பு வாய்ந்த திறமை கொண்ட தலைவர்கள். ஆனால், அவர்கள் வேறு சிலவற்றில் வேறுபடுகின்றனர். மெக்காவில் பிறந்த மௌலானா அரபு மொழியிலும் இஸ்லாமிய கல்வியிலும், பெரும்புலமை உடையவராக மேற்கத்திய சிந்தனை மற்றும், தத்துவத்தில் விளிம்பளவு பிடிப்பு மட்டும் கொண்டிருக்கையில் ஜாகிர்சாகிப் கிழக்கத்திய மேற்கத்திய கல்வி இரண்டிலும் கைதேர்ந்த வல்லுநராக இருந்தார். ஜெர்மனியில் அவர் தங்கியிருந்தது மேற்கத்திய சிந்தனை மற்றும் அறிவுலகக் காட்சி வரிசையைத் திறந்துவிட்டது. அதன் சாராம்சத்தை பசி மிகுந்த அவரது ஆன்மா மிகப் பெருமளவில் தன்னோடு இணைவித்துக்கொண்டது. மௌலானா வேறுபட்ட ஒரு பாதையைச்செதுக்கி உருவாக்கினார். அவர் அரசியலில் விறுவிறுப்பாக செயலாற்றுபவராக இருந்தார். அவருடைய எழுதுகோல் காலனியாளர்களை விழுங்குவதற்கு ஒரு புதிய அழல் வீச்சை கொளுத்திவிட்டது. ஜாகிர்சாகிப் ஒரு அரசியல் செயல்பாட்டாளர் அல்லர். அவர் திரைக்குப் பின்னால் இருந்து, நாடகத்துக்கான நடிகர்களை தயார்செய்தார். போருக்கான துப்பாக்கி மருந்தை அவர் வழங்கினார். அறியாமையை அகற்றுவது தேசியப் போராட்டத்தில் ஒரு மேலான அறப்போர் ஆக இருந்தது. மௌலானா ஒரு அரசியல்வாதியும், இராச தந்திரியுமாக இருந்தார். ஜாகிர்சாகிப் ஒரு தேச பக்தராகவும் மனிதநலவாதியாகவும், இருந்தார். மௌலானா கவுன்சில்கள், குழுக்கள், கூட்டங்கள், அரசாங்கம், மக்கள் தொடர்பு சாதனம், வைசிராய்கள் மற்றும் தலைவர்களுடன் அரசியல் எருவிடுதல் என்னும் அடர்ந்த காட்டுக்குள் மறைந்துவிடுவார். ஜாகிர்சாகிப், இளைஞர்கள் பயனுள்ள குடிமக்களாக வளர அவர்களுக்குக் கற்பிப்பது, உதவுவது, வழி காட்டுவது இவற்றில் மூழ்கிவிடுவார். மென்மையான ரோசா மொட்டுக்கள் பூத்துக்குலுங்க உதவிக்கொண்டு கல்வித்துறையில் அவர் இருந்தார்.

அறிவாற்றல் தளத்திலும்கூட இருவருக்குமிடையில் லேசான வழிதிறம்புதல் இருந்தது. இஸ்லாமியக் கல்வியை மறுதிடமாக்குவதில் (டாசிஸ்) நம்பிக்கை கொண்டிருந்த மௌலானா, தேவைப்படுவது மேற்கத்திய வெளிச்சத்தில் நமது சிந்தனையைப் பொருள் விளங்கிக் கொள்வதல்ல மாறாக, நமக்கேயுரிய, கிழக்கத்திய விவேகத்தின் ஒளியுடன் நமது அடிப்படை உண்மைகளை திடமாக்குவதே தேவை என்று வாதிட்டார். இஸ்லாமிய மதிப்பீடுகளை மதிப்பிடுவதற்கு பகுத்தறிவையும் மேற்கத்திய

நுட்பங்களையும் ஜாகிர்சாகிப் பயன்படுத்துவார். பழமைப்பற்றாளர், ஒதுக்கநிலையை விரும்புபவர்கள் கொள்கைபிடிவாத மானவர்கள் பக்கம் சாய்ந்துவிட்ட இஸ்லாமிய புலமையாளர்களின் பாரம்பரியம் ஏற்கனவே: போதுமான அளவு இருக்கிறது என்ற மனப்பாங்கை ஜாகிர்சாகிப் எதிர்த்தார். அதனைப் பரந்த அடித்தளம் கொண்டதாக, பண்பு நயமுடையதாக, உலகுதழுவியதாக ஆக்கிட அவர் விரும்பினார். மௌலானாவின் கருத்தமைவு தருக்கமுறைப்பட்டது. இயல்புகடந்த கனா நிலையார்ந்தது. மரபும் பற்றுடைய அணுகுமுறையைக் குறித்தது. ஜாகிர்சாகிப் ஒரு பெருந்தன்மைவாய்ந்த, பகுத்தறிவு சார்ந்த, பயனீட்டு அணுகுமுறையை விரும்பித் தேர்ந்தெடுப்பார். மௌலானா சிரியா, இராக், மற்றும் ஹிஜாஸில் பயின்றார், ஆனால், ஜாகிர்சாகிப்பின் இந்தியாவிலும், ஜெர்மனியிலும் பயின்ற கல்வி அவரது பார்வையை விரிவாக்கியது. மௌலானா வாழ்க்கைப் பிரச்னைகள் அறவியல் நன்னடத்தைகளுக்கான அனைத்து விடைகளையும் குரானில் தேடினார். ஜாகிர்சாகிப் மனித குலத்தின் அனுபவம் என்ற ஒரு பரந்த விருப்பத் தெரிவைப்பெற்றிருந்தார். இருந்தபோதிலும், தனி மனிதனை அறிவு கொளுத்தப்பெற்ற மனிதனாக்கும் மனிதநல நோக்கத்திற்கு தேவைப்படும் மொத்தக் கூடுதலான கூறுகளை பரஸ்பரம் இணைந்து முழுமையாக்க வல்லவர்களாக இருவரும் இருந்தனர்.

ஜாகிர்சாகிப்பின் மனிதநலம் அவர் வாழ்க்கை நட த்திய வகையில் காணப்படவேண்டும். உண்மையின் ஒளியை தங்களது வாழ்வில் காட்டுபவர்களே கடவுளுடைய சிறந்த சாட்சியங்கள். பிழைபடமுடியாத சில ஒழுக்கங்கள், மதிப்பீடுகள், உளவியல் சாட்சிகளை, உபதேசங்களி னாலன்றி, கடைபிடித்து செயல்படுவதன் மூலமாகவே மேம்படுத்திட அவர் விரும்பினார். பிறர் பார்த்து பின்பற்றக்கூடிய ஒரு முறையாக தன்னைத்தானே அவர் ஆக்கிக் கொண்டார். அவருடைய மேதகைமை பிரசாரம் எதுவும் தேவைப்படாத தன்மையது. அவருடன் ஒரு சில கணங்கள் தோழமையில் இருப்பது பார்வையாளரிடம் மாயாமான ஒரு உருத்திரிபு மாற்றத்தை ஏற்படுத்தும். அவர் காந்திஜியைப் போல இளைஞர்களின் கவர்ச்சிகரமான தலைவராக இருந்தார். சமூக நன்மையை கவனத்தில் கொள்ளாத இப்போதுள்ள கல்விமுறைக்கு எதிராக அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். அனைத்து சீர்திருத்தங்களுக்கும் திறவுகோலாக இருக்கக்கூடிய சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை அவர் வலியுறுத்தினார். நாம் பழங்காலத்திலிருந்து விலைமதிப்பற்ற ஒன்றை மரபுரிமையாகப் பெற்றிருக்கிறோம். அதுவே மனிதநலம், அன்பு,

அர்ப்பணிப்பு, பகுத்தறிவு, சாதனங்களை அழகுடையதாகப் படைப்பது என்று அவர் நமக்கு நினைவூட்டினார். பழங்கால முனிவர்களின் உண்மை நாட்டம் இந்த தேசத்து தூய்மையின் குறியீடாக இருந்து கொண்டிருக்கிறது. தத்துவம் அதன் ஆன்மாவாக, சமயம் அதன் குறியீடாக, சகிப்புத்தன்மை அதன் நுட்பமாக பக்தி அதன் சத்தாக இருந்தது கொண்டிருக்கிறது. அதன் சிந்தனை மையம் கடவுள் வழிபாட்டின் ஆராதனைப் பொருளாக, அழகு என்பதாக இருந்துக்கொண்டிருக்கிறது. அறிவு, மகிழ்ச்சியின் தோற்றுவாயாக மனிதநலம் அதன் பெருமிதமாக இருந்து கொண்டிருக்கிறது. நவீனமயம் நமது பண்பாட்டுப் பெட்டகங்களை புறந்தள்ளிவிட்டது என்று ஜாகிர்சாகிப் நினைத்தார். இந்த மதிப்பீடுகளுக்கு புத்துயிர் தரப்பட வேண்டும் என்று அவரது மனிதநேயம் விரும்பியது.

அவரது இதயம் அவருடைய தேசத்திற்காக இரத்தம் சிந்தும். காசிவித்யாபீட பட்டதாரிகளிடம் பேசும்போது அவர் சொன்னார், "நீங்கள் புகுந்து செல்லவிருக்கும் தேசம் மிகப்பெரிய இன்னல்களும், இடையூறுகளும் உள்ள ஒரு தேசம். அது அடிமைகளின் நாடு, அறியாமை நிறைந்த மக்களின் நாடு, கடுமனத்தன்மைக் கொண்ட நாடு, சகோதரர்களுக்கிடையிலேயே கூட வெறுப்புள்ள நாடு, சோம்பலின் ஏழைகளின் நாடு, தன்செயல் மங்கிய நாடு, கொடூரமான ஒழுகலாறுகளைக் கொண்ட நாடு, கருத்தும் கவலையுமற்ற குருமார்களின் நாடு, பசியும், துன்பங்களும் நிறைந்த ஒரு நாடு. சுருங்கக்கூறின், மிகப்பெரிய இன்னல்கள் நிறைந்த ஒரு தேசம். அதற்கு என்னசெய்ய வேண்டும்? இது உங்களுடையதும் எங்களுடையதுமான நாடு. நாம் அதில்தான் வாழ்ந்தாக வேண்டும். அதில்தான் மகிழ்ந்தாகவும் வேண்டும். ஆகையால், உங்களுடைய தைரியம் வலிமை அன்பு இவற்றை சோதிக்கக் கூடிய நாடு இது"[6]. மென்மையான கூருணர்ச்சியுள்ள இதயம் மட்டுமே இந்த தேசத்திற்காக மிக்க வலுவான உணர்ச்சி கொள்ளமுடியும். மென் நரம்பின் மேல் அவர் விரல் வைத்தார். இந்த அமைப்பு முறைக்குள் இருக்கும் கோளாறைக் காட்சிப்படுத்தினார். ஒரு அழகிய தேசம் புற்றுநோய்க் கிருமிகளுக்குப் பலியானது. அவரது மென்மையான இதயம் இந்த அவலநிலையை ஏற்கவில்லை. இரங்கத்தக்க நிலைமைகளை அமைதியாக வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பவராக அவர் இருந்துவிடவிடவில்லை. மாறாக, புண்களை ஆற்றிட முற்பட்டார். பசி, அறியாமை, கொடூரம், சோம்பல், சுயநலம், பொறாமை, மதவெறி, இறுமாப்பு, பிறர்பொருள்மேல் மோகம் ஆகியவற்றை அகற்றிட என்ன செய்யப்பட வேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார். அவர் கூறினார்:

நமது கழுத்துகளில் இருந்து வெதுவெதுப்பான இரத்தம் வெளிக்கொட்டுவதை நமது தேசம் வேண்டவில்லை, மாறாக ஆண்டு முழுவதும் பெருக்கெடுத் தோடக்கூடிய நெற்றி வியர்வையை வேண்டுகிறது. உழைப் புக்கான, கருத்தார்ந்த உழைப்புக்கான தேவை மிகுதியாக இருக்கிறது. உழவனின் சிதறிய குடிசை, கைவினைஞரின் இருண்ட மேற்கூரை, வைக்கோல் வேயப்பட்ட ஒரு கிராமத்துப்பள்ளிக்கூடம் இவற்றால் நமது எதிர்காலம் உருவாக்கப்படவோ அன்றி முற்றிலும் பாழ்படுத்தி அழிக்கப்படவோ முடியும். அரசியல் பூசல்களில் உள்ள கருத்து வேறுபாடுகளை மாநாடுகளிலோ அல்லது மாமன்றங்களிலோ ஓரிரு நாட்களில் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் நான் முன்னர் குறிப்பிட்டுக்காட்டிய அந்த இடங்கள் அனைத்தும் பற்பல நூற்றாண்டுகளாக நமது ஊழமைவின் மையமாக இருந்து வந்துள்ளன. இந்தப் பகுதியில் பணியாற்றுவதற்கு பொறுமையும் விடாமுயற்சியும் தேவைப்படுகிறது. எனவே அது உங்களை மிகுதியாகச் சோர்வடையச் செய்துவிடுகிறது. அது நன்றி மறப்பதாகவும் கூட இருக்கிறது. உடனடியான பயன்களையும் விளைவிக்காது, ஆனாலும் யாரேனும் ஒருவர் நீண்டகாலம் தாங்கி நீடித்து உழைப்பாராயின் அது இனிப்பான கனியையே தரும்.

ஜாகிர்சாகிப் நம்முடைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விடை நமக்குரிய வியர்வையே என்பதைத் தீர்வாக அறிவித்தார். அவரது இதயம் ஏழை உழவனின் கடும் துயருக்காகவும், புறக்கணிக்கப்பட்ட ஆசிரியரின் அறிவாற்றலுக்காகவும் இரத்தம் சிந்துகிறது. உழவர், பொறியியல் பகுதிகளை இணைப்போர் மற்றும் ஆசிரியர்கள் மூவரும் மனதையும், உடலையும் ஆன்மாவையும் உண்பிக்கும் மூன்று செயல் இயக்கிகளாவர். உங்களது தலையும் இதயமும் கைகளுமாக அவர்கள் இருக்கின்றனர். அவர்களைக் கவனித்துப் பேணுங்கள். அனைத்தும் சிறப்பாக அமையும். அவரது மனிதநலம் நமக்கு ஒரு செய்தியையும் தந்துள்ளது. உங்களுக்கு என்னுடைய செய்தி இது : "உங்களது பண்பைக் கட்டிவளர்க்கும் திட்டத்தை உங்களது கைகளிலேயே வைத்திருங்கள். அதன் கூறுகள் அனைத்தையும் சுயக்கட்டுப்பாடு, தன்னலமற்ற சேவை இவற்றால் வளரச்செய்யுங்கள். நல்ல பண்புகளை முயன்று பேணி வளர்த்திடுங்கள். முழுமையான உயர்ந்த மதிப்புகளைப் பெறுவதற்கான கருவியாக அதனைச்

செய்திடுங்கள். நம்பிக்கைக்குரிய மனிதன் (பண்டா -இ-மொமின்), போராடும் மனிதன் (மர்த்-இ-முஜா உறித்) எனும் நிலைக்கு உயர்த்துங்கள். இது ஒரு கடினமான வேலை. வாழ்நாள் முழுவதும் செய்யப்பட வேண்டிய வேலை, ஆனால் அதற்காக உழைப்பதனால்தான் நீங்கள் வாழ்வைப் பெறமுடியும். சோம்பி உட்கார்ந்து கொண்டு இதனை எப்படி சாதிக்கமுடி யும்? வாழ்க்கை தன்னையே இதில் முதலீடாகப் போட வேண்டும்."

ஜாகிர் சாகிப்பின் மனித நலம் வாழ்க்கைப் போரை வெல்லக்கூடிய இளைஞர்களின் ஆளுமையை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது. பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கிய போது அவர் கூறினார்: "சரிசமநிலை உடைய நுண்ணறிவாற்றலையும், அனைத்து மெய்ந்நிகழ்வுகளையும், சான்றுகளையும் சரியாகத் துருவி உணரும் திறனையும் கல்வி மட்டுமே உங்களுக்கு வழங்கும். நீங்கள் எந்த அரசியல் மாயையிலும் உங்களை இழந்து விடக்கூடாது. மதமாயக்காரரின் கூடாரத்தைப் பின்பற்றக் கூடியவர்களாக நீங்கள் இருத்தலாகாது. மக்களை சோதித்தறியவும், தங்கத்திற்கும் இன்னும் பிறவற்றிற்குமுள்ள வேறு பாடுகளைப் பிரித்தறியவும் நீங்கள் திறன் பெற்றிருக்க வேண்டும். உடனடி ஆதாயத்தினைக் கருதி நிலைபேறுடையதை நீங்கள் மறந்துவிடக் கூடாது." வறுமையை ஒழிப்பதற்கு என்ன செய்யப்பட வேண்டும் என்ற கேள்விக்கு அவர் சொன்னார்: கடவுள் நமக்கொரு வாயைக் கொடுத்திருக்கிறார் என்றால் அவர் நமக்கு இரண்டு கைகளையும் கூட கொடுத்திருக்கிறார்.

ஜாகிர் சாகிப், பழைய பாரம்பரியத்தின் சாராம்சத்தைப் பாதுகாக்கவும், தற்போதையை மதிப் பீட்டு முறையுடன் அதனை ஒருங்கிணைக்கவும் விரும்பினார் என நாம் முடிவாகக் கூறலாம். அவரது மனித நலம் எனும் வடிவில் கெட்டியான உருவெடுத்த விழுமிய தோற்றமுடைய தீரமிக்க உருவரைபடமாக அது இருந்தது.

அவருடைய கல்வி, சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டுச் சிந்தனைகள் யாவும் அவரது வாழ்க்கையின் குறிக்கோளைத் தழுவிக் கொண்ட மனித நலவெளிப்பாட்டிற்கான இடுபொருட்கள் அனைத்துப் பெரிய மதங்களின் பண்பாட்டு மதிப்பீடுகளையும், அனைத்து சாதுக்களின் தத்துவவியலாரின் விவேகத்தையும், மனிதகுலம் அனைத்தின் அனுபவத்தையும் தன்னுள் அது பெற்றிருந்தது. வாழ்க்கையின் நோக்கத்தையும், வாழ்வின் பொருளையும் அது விளக்கிற்று. எப்படி வாழ்வது? மகிழ்ச்சியோடு இருப்பது எப்படி? என்று அது விளக்கிக்காட்டியது. மனித குலத்தை ஒரே உயிர்ப்பொருள் முழுமையாக

ஒன்றுபடுத்தவும் பொதுவான தோழமை உணர்வு கொண்ட மனிதப் பிணைப்பிற்குள் கொணரவும் உளங்கொண்டிருந்தது. அனைவரிடமிருந்தும் தியாகத்தை அது கோரியது. அரசியல் சமூக மனத்திட்பத்தை உரிமையுடன் அது கோரியது. சீர்திருத்தப்பாங்குள்ள கல்வியை கோரியது. மனித நலத்திற்கும் கற்பித்தலுக்கும் இடையேயுள்ள உள்ளார்ந்த உறவு நிலையை ஜாகிர்சாகிப் மனதால் உணர்ந்தார். உறவுடைய மதிப்பீடுகளான அதிகாரம், பதவி, மகிழ்ச்சி, பகட்டாரவாரம், சொத்து, ஆடம்பர வாழ்க்கை இவற்றிற் கெதிரானதாக இருந்து உண்மையும் நீதியும், அன்பும் அழகும் , நற்குணமும் நேர்மையுமாகிய முழுமையான மதிப்பீடுகளை நோக்கி மனித நலம் நன்மை வழிநடத்துகிறது. மனிதாபிமானம் மனிதனை உலகளாவிய மனிதன் என்ற நிலைக்கு உயர்த்துகிறது.

6. ஆளுமைத்திறம்

ஜாகிர்சாகிப்பின் முழு வாழ்வும் வழக்கத்திற்கு மாறான எளிமை, நேர்மை, தூய்மை, உயர்பண்பு, சேவை, தியாகம், அன்பு இவற்றால் தனிச்சிறப்பு பெற்று அமைந்தது. அவருடைய வாழ்க்கை தன்னுடைய தேசத்தின் உயர்ந்த மதிப்பீடுகளுக்கு பணிக்கடன் பூண்ட ஒரு மனிதனின் கதையாகும். இந்திய நாட்டுச் சிறப்புப் பண்புகள் அனைத்தும் அறிவு கொளுத்தப்பெற்ற ஒரு வாழ்விற்கானதாக, மேன்மையானவற்றின் உண்மை உணர்ந்து போற்றுதற்கும் ஈடுபாடுகொள்வதற்குமான திட்டமாக வாழ்க்கையை உருவாக்குவதற்கான வேணவாவாக இருக்கின்றன. புதிய மனப்பான்மைகள், மதிப்பீடுகளை சமூகத்தில் வளர ஊக்கமளிக்கவும், எல்லாதரப்பு மக்களிடையேயும் அறிவும், பண்பாடும் பெருகிடவும், வாழ்வின் மிகச்சிறந்த பண்புக்கூறுகளில் முதன்மையான நிலையை குறிக்கோளாகக் கொள்வதற்கும் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் ஒப்படைத்து கொண்டது தேசத்திற்கு ஜாகிர்சாகிப்பின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். வேற்றுமையில் ஒற்றுமையும், பன்மையில் ஒருமையும் வெளிப்படும் பாங்குடைய பலவின் ஆக்கம் சார்ந்த பண்பாட்டின் படைப்புத்திறனுள்ள ஒருமைப்பாட்டை காண்பதற்கு அவர் வாழ்நாள் முழுவதும் போராடினார். அவர்களது சக மனிதர்களுடன் ஒத்திசை வோடும், கனிவோடும் வாழ வேண்டிய மனப்பாங்கின் உடனடித் தேவையை தனது மக்களிடத்தில் தோற்றுவிப்பது அவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது. கடந்த காலத்தின் சிறந்தனவற்றை நிகழ்காலத்தின் மேன்மைகளோடு ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு மகத்தான சமூக மாற்றத்திற்கு தான் ஒரு இயக்கியாக இருக்க அவர் விரும்பினார்.

தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் ஜாகிர்சாகிப் மதிப்பீடுகளின் வகைமுறை ஒன்றை உருவாக்கிக் கொண்டார். நேர்மையான சிந்தனைகள் அவரது சொத்தாக இருந்தன. அன்பு அழகு, சார்பிற்கான நிலைத்த தேடுதல் அவரது ஆன்மாவின் பெருவேட்கையாக நிலைபெற்றிருந்தது. சேவையும் கடும் முயற்சியும் அவரது பண்பின் சாயல் கூறுகளைச் குறித்தன. பொறுமையும், விடாமுயற்சியும் எந்த நேரத்திலும் அவரைக்கைவிட்டதில்லை. பணிவு, அவரது பண்பின் அணிமுடியாக இருந்தது. பெருந்தன்மை அவரது நல்லொழுக்க பாணிக்கு பொலிவு சேர்த்தது. அறச்செயல் விருப்பமும், தாராளமனப்பான்மையும், அவரது மகிழ்ச்சியின் இரகசியங்கள்."கடவுளை எய்தப்பெறுவதற்கான நன்நிலையில் நீங்கள் கொடுக்கும் ஒரு சிறிதும் மிகுதியான பயனைத் திரும்பத் தரும்". " மன்பதை அன்பில் முன்னேற்றம் காண்பதே உண்மையான முன்னேற்றமாகும், மற்ற முன்னேற்றங்கள் அனைத்தும்

இரண்டாந்தரமானதே" எனும் கருத்துக்களை அவர் நம்பினார். தூய்மையான உள் எண்ணங்கள், தூய்மையான வாழ்க்கை, தூய்மையான மனம், ஆகியவற்றில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவர் ஒரு மென்மையான இதயத்தவராக அன்பிலும், இரக்கத்திலும், கருணையிலும் நம்பிக்கைக்கொண்டவராக இருந்தார். மென்மையான அவருடைய இதயம் உலகனைத்தின் துக்கங்களையும், துன்பங்களையும் தன்னுடைய சொந்த துயரம்போல சுமக்கும். அவர் தன்னுடைய தனித்திறமை, அறிவு, விவேகத்தை தனது சகமனிதர்களுக்கு நன்மைசெய்வதற்கான ஒரு தர்மசொத்தாகக் கையாண்டார். அனைவரின் பக்கமும் நோக்கிய அன்புடைமை, எவர்க்கெதிராகவும் மனக்காழ்ப்பு இன்மை, ஒவ்வொருவரின், ஒவ்வொருவகை வாழ்க்கைக்கும் மரியாதை ஆகியவற்றில் அவரது மனித நலம் தன்னைத்தானே வெளிப்படுத்திக்காட்டியது. "நீ இறக்க நேர்ந்தால் உன்மீது அழுது புலம்பவும், நீ வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலத்தில் உனது தோழமையை ஆர்வத்தோடு அவாவவும் கூடிய வகையில் மக்களை பாவித்து நடத்தி மக்களிடையே வாழ்ந்திடு" எனும் ஹெஸ்ரத் அலியின் வாழ்க்கை எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர் காட்சியளித்தார்.

ஒவ்வொரு வெற்றியடைந்த மனிதனின் பின்னாலும் ஒரு பெண் எப்போதும் இருக்கிறாள் என்று செல்லப்பட்டிருக்கிறது. ஜாகிர்சாகிப்பிற்கும் கூட இது பொருத்தமாக அமைந்தது. ஒருமுறை அவரே இதனை ஒப்புக்கொண்டு தனது மகள் சாயிதா குர்ஷித்திடம், அவளுடைய தாயார் அவ்வளவு எளிமையாக, நல்ல இயல்புகளோடு, பெருந்தன்மையாக, வீட்டு வேலைகளை திறம்பட நிர்வகித்து வருபவராக இருந்திருக்க வில்லையென்றால், தான் எதுவாகவும் இருந்திருக்க முடியாது என்று கூறினார். ஜாகிர்சாகிப்பின் சேவையும், தியாகமுமான வாழ்வில் செல்வக்காலத்தும் அல்லற்காலத்தும் பேகம் சாஹிபா ஒரு கொள்கை ஆதரவுத்தூணாக, குடும்ப வேலைச்சுமைகள் அனைத்தையும் தாங்கிக்கொண்டு இருந்தார் என்பது உண்மை. துன்பங்களை அவர் அமைதியாக ஏற்றுக்கொண்டார். ஜாமியாவின் கடும் சோதனைமிக்க நாட்களில் கிடைத்த அற்பமான தொகையை வைத்துக்கொண்டு குடும்ப அமைப்பை எப்படி சமாளித்தாள் என்பதை ஜாகிர்சாகிப் அறியாவண்ணம் அனைத்து பிரச்னைகளையும் இன்முகத்தோடு எதிர்கொண்டார். மற்றபடி, தனது சொந்த பிரச்னைகளையும், கவலைகளையும் புறந்தள்ளிவிட்டு ஜாமியாவின் உடன்பிறப்பாளர் நிலையில், இருந்து அவர்களின் பிரச்னைகளை பங்கிட்டுக் கொள்ளவும், தீர்க்கவும் அவர் எப்போதும் தயாராக இருந்தார் என்பது பொதுவாக அறியப்பட்ட செய்தியாகும். உண்மையில், அவரது பெருந்தன்மை நட்புணர்வு அனைவரின் மகிழ்ச்சியையும் துயரத்தையும் பங்கிட்டுக்கொள்ளும் விருப்பம் இவற்றால் அவர் ஜாமியாவின் தாயார் என்றே கருதப்பட்டார்.

அக்டோபர் 2, 1990 ல் அவர் தனது கடைசி மூச்சை சுவாசிக்கும்வரை ஜாமியாவின் அலுவல்களிலும், ஜாமியாவோடு தொடர்புடையவர்களின் நலன்களிலும் அக்கறை கொண்டிருந்தார். அவர் ஜாமியாவிற்கு செய்த இறுதிச் சேவையை ஒரு சிலரே அறிந்திருப்பர். ஜாமியாவிற்கு மையப்பல்கலைக்கழகத் தகுநிலை வழங்கப்படுவதற்கு சூழல்கள் சாதகமின்றித் தோன்றியபோது, தனது மகள் சாயிதா குர்ஷித்தை, "ஜாமியா, மையப்பல்கலைக்கழகத் தகுதியைப் பெறுவதை என் கண் மூடுவதற்கு முன்னர் நான் காண விரும்புகிறேன். இது என் இறுதிவிருப்பம்" என்று பிரதமர்க்கு ஒரு கடிதம் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். சாதகமான மறுமொழி உடனடியாகக் கிடைத்தது.

பேஹம் ஜாகிர் உசைன், அவரது உடைகளில், பழக்க வழக்கங்களில் வாழ்க்கை இயல்பில், நாகரீகப் பண்பில், அவர் ஒக்லாவில் வாழ்ந்தபோதோ அல்லது அலிகாரில் துணைவேந்தர் குடியிருப்புக்கு மாறியபோதோ அல்லது பாட்னா ராஜ்பவனுக்கு சென்றபோதோ இறுதியாக ஜனாதிபதி மாளிகைக்கு புதுதில்லிக்கு வந்தபோதோ எவரும் எந்தவிதமான மாற்றத்தையும் கண்டிருக்க முடியாது. ஜாகிர்சாகிப்பின் பதவி நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அவரை கொஞ்சமும் பாதிக்கவில்லை, அவரது வாழ்க்கையை எப்போதும்போல் அவர் வாழ்ந்து வந்தார். வாழ்க்கையில் அவருடைய ஒரே ஆர்வம் ஜாகிர்சாகிப்பின் வசதிகளையும் தேவைகளையும் கவனித்துக் கொள்வதும் தனது புதல்வியர் மேல் தனது அன்பையும், கவனத்தையும் செலுத்துவதுமாகவே இருந்தது. ஜாகிர்சாகிப்பின் தேவைகளும் முன்னுரிமைகளும் அவரது மனதில் மேலோங்கி நிலைபெற்றிருந்தன. அவர் இறந்தபோதுகூட, ஆழ்ந்த மனத்துயரமும், துக்கமும் சூழ்ந்திருந்த தருணத்தில், ஜாகிர்சாகிப் தனது வாழ்நாள் முழுவதும் காதியையே பயன்படுத்திவந்தார், அதனால் சவப்போர்வையும் காதியாகவே இருக்கவேண்டும் என்று நினைவூட்டினார். ஜாகிர்சாகிப் உண்மையில் இப்படி ஒரு தேவதையின் இயல்புடைய வாழ்க்கைத் துணைவியாரைப் பெற்ற நல்வாய்ப்பினர். இயற்கை அவர்கள் இருவரையும் ஒருவருக்கு ஒருவர் பொருத்தமாக ஆக்கி வைத்திருந்தது போல் அது தோன்றியது.

நேரிய காரணங்களுக்காக போராடுபவராக, தவறுகளுக்கு எதிரான கலகக்காராக, நிறுவனங்களை அமைத்தவராக இளைஞர்களின் ஊழைமைவுச் சிற்பியாக, மிகுந்த நன்மதிப்புபெற்ற எழுத்தாளராக, சக்திமிக்க பேச்சாளராக, கல்வியியலில் புதிய போக்குகளின் தந்தையாக, புனிதமான எண்ணங்கள் கொண்ட மனிதாபிமானியாக, நெறிதிறம்பாத பற்றுறுதி கொண்ட தேசியவாதியாக சமூகமாற்றத்தின் ஒரு செயல் இயக்கியாக, அழகின் ஆர்வமிக்க ஒரு நேசராக ஒரு நயநாகரிகப் பண்பாளராக, உயர்ந்த எண்ணங்கள் கொண்ட பொதுநல மேதகையாக

ஒரு மனக் கவிஞராக கவர்ச்சிக்குள்ளாக்கும் பலகூறுகளை அவரது வாழ்க்கை உள்ளடக்கி இருந்தது. அவருடைய ஆளுமை தன்னளவில் பொது நோக்கத்திற்கான ஒரு அமைப்பாகவே இருந்ததில் வியப்பில்லை.

செழுமைமிக்க ஒரு குடும்பத்தில் பிறந்த, தனது இறுதி மூச்சை குடியரசுத் தலைவர் மாளிகையில் விட்ட ஜாகிர்சாகிப் ஒரு மனிதராக, ஒரு புலமையாளராக, ஒரு தேசியச் சிற்பியாக, ஒரு ஆசிரியராக, ஒரு தலைவராக தனது வரலாற்றுப் பங்கைக் செயலாற்றிடுவதற்கு வாழ்க்கையில் ஏராளமான பாதிப்புகள் அடைந்து தியாகமும் செய்தார். தாவரங்களை மலர்களை, தோட்டங்களை நேசித்தவராக, "ஒரு தாய் தனது குழந்தையின் கைகளையும், முகத்தையும் கழுவுவது போன்ற விதத்தில் இலைத்திரள்களை அவர் தூய்மை செய்வார்", தங்கம், பணம் போன்ற பொதுவாக எல்லோருக்கும் ஆர்வமுண்டாக்கும் பிற பொருட்களை சேகரிக்க அவர் ஆர்வம் கொண்டதில்லை. மாறாக ஓவியங்கள், அரியகற்கள், அரிய தாவரங்கள், அரிய கையெழுத்துகள், புத்தகங்கள், புதைபடிவங்கள் புறா வகைகள், பதிவேடுகள், இந்தியஇசை இடங்கிய மேற்கத்திய அராபிக், பாரசீக ஒலி நாடாக்கள் இவற்றையே சேகரிப்பார். அவர் இலக்கியத்தைப் பெரிதும் நேசித்தவர். அவரே ஒரு இலக்கியவாணர், பெருவேட்கையுடைய படிப்பாளி, அவரது குறிப்பேடுகளில் தனக்கு விருப்பமான கவிதைகளை எழுதிவைத்திருந்து, எங்கெங்கு சென்றாலும் அதை தன்னுடன் கொண்டு சென்றார். தனது பேச்சுக்கள், எழுத்துக்களில் அவற்றை பொருத்தமாக அவர் பயன்படுத்தினார். புதிய மொழிகளைக் கற்க அவர் விருப்பம் கொண்டார். உருது, பாரசிகம், ஆங்கிலம், ஜெர்மன், அராபிய மொழிகளில் அவருக்கு சிறந்த தேர்ச்சி இருந்தது. ரஷ்யாவில் யூரல் எனும் அரிய கற்களால் அணி செய்யப்பட்ட ஒரு மரத்தை அவருக்குப் பரிசளித்தனர். குடியரசுத் தலைவர் மாளிகையின் பல அறைகள் அவருடைய திரட்டுகளால் நிறைந்திருந்தன. அவர் கூறினார்: "இந்தக் கற்களைவிடவும் வேறெந்த ஒன்று மதிப்புமிக்க பொருளாக இருக்கமுடியும்? இவை எவரொருவரையும் ஏமாற்றுவதில்லை, எவரைப்பற்றியும் புகார் கூறுவதுமில்லை. அவைகளுக்கு எதிரிகள் யாருமில்லை, எவருடைய உரிமையையும் வற்புறுத்தவும் செய்யாது. அவை தங்களின் உண்மையான சுயத்தை மறைத்து எவரொருவரின் இரகசியங்களையும் வெளியிடுவது இல்லை". கற்களின்மீது காதல்கொண்டிருப்பது எதனால் என்று யாரோ ஒருவர் அவரை வினவியபோது, அவர் மலர்கள் தங்களது குறுகியகால வாழ்வினால் உங்களை ஏமாற்றமடைய செய்துவிடும், கற்கள் அப்படிசெய்யாது தேவை ஏற்பட்டால், பிறரை விரட்டியடிக்கவும் அது பயன்படுத்திக்கொள்ளப்படலாம் என்று நகைச் சுவையோடு பதில் கூறினார்.

அவர் குழந்தைகளை நேசித்தார். அவரது வாழ்க்கை குழந்தைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. குழந்தைகளை பயனுள்ள குடிமக்களாக வளர்ப்பது அவருடைய பணியாக இருந்தது ; அவர்களுக்கு கல்வியறிவூட்டுவது அவரது வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது; அவர்களை நேசிப்பது அவரது மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களின் தோழமை அவருக்கு இன்பமளிப்பதாகவும், சோர்வகற்றுவதாகவும் இருந்தது. அவரது பேரக்குழந்தைகள் அவரை வேலை செய்யவிடாமல் அடிக்கடி தொல்லைதருவார்கள், ஆனால் அவர்களை யாராவது தடுப்பார்களாயின் அவர் கூறுவார்: இறைத்தூதர் தொழுகையில் இருந்தபோது குழந்தைகளின் விளையாட்டுத் தொந்தரவுக்கு தடைசொன்னது கிடையாது. உலகச் செய்கைகளில் ஈடுபட்டிருக்கும்போது ஒருவன் ஏன் கோபம் கொண்டவனாக வேண்டும்? குழந்தைகளின் இயல்பு, உணர்ச்சிகள், உளவியல், மனப்பாங்கு, பழக்க நடக்கை பற்றிய அவருடைய உய்த்தறியும் ஆற்றலுக்கு குழந்தைகள் பற்றிய அவரது கதைகள் போதுமான ஆதாரமாக இருக்கின்றன.

அவர் எப்போதும் பிறருடனான நடைமுறைத்தொடர்புகளில் பண்பார்ந்தவர். பிறருடைய பிரச்சனைகளை பொறுமையுடன் கேட்பார். சில சமயங்களில் அவர்களுக்கு எப்படி உதவுவது என்று சிந்தித்துக்கொண்டே இரவு முழுவதும் உறங்காமலும் இருப்பார். யாரேனும் உடல்நலமற்று இருந்தால் இவர் மனக்கலக்கங்கொண்டு மகிழ்ச்சியின்றி இருப்பார். தனிக்கேஉரிய தனி பாணியில் பேச்சாற்றலை வளர்த்துக்கொண்டார். பேசிக்கொண்டிருக்கும் போதே அவர் பயன்படுத்தும் வார்த்தைகளை நீங்கள் எண்ணிவிட முடியும். ஒரு இனிமையான, இன்னிசையோடு ஒலிக்கின்ற தெரிந்தெடுக்கப்பட்ட தக்க சொற்களைக் கொண்டு அவரது பேச்சு அமைந்து கேட்போரைப் பிணிக்கும். அவர் எந்த நேரத்திலும் ஒருபோதும் வாய் அதிரச்சிரித்தது கிடையாது. எளிய முறுவலே ஆயினும் வறண்ட சிரிப்பில்லை. எப்போதும் இன்முகமான நகைத்திறமுள்ள, மகிழச்செய்கிற சிரிப்பு. பேச்சில் மெய்சிலிர்க்கச் செய்கிற ஆர்வமும் ஆற்றலும் மிக்கவராக அவர் இருந்தார். குறிப்பாக உணவு உண்ணும்நேரத்தில் மக்கள் அவரது வார்த்தைகளை மூதுரைகள் போல நினைவிற்கொண்டிருப்பார்கள். அவர் ஒருபோதும் யாருடைய உணர்ச்சியையும் காயப்படுத்தியதில்லை. உடல் உளப்பாங்கிற்குரியவாறு அமைதியாக மதிநுட்பமுடைய நேர்மை வாய்ந்த கருணையுள்ள பாசமிக்கதும் விட்டுக் கொடுக்கும் பண்புடையவருமான அவர் பிறரது உணர்வுகளைப் புண்படுத்துவதை ஒரு குற்றம் எனக் கருதினார். "ஒரு மகத்தான புனிதப் பயணம் செய்வதைக் காட்டிலும் மேலானது ஒருஇதயத்தை வெற்றிகொள்வது" என்ற தத்துவத்தில் வாழ்நாள்

முழுவதும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவரது மனமார்ந்த வாழ்த்துக்களும், பளபளக்கும் முன்நெற்றியும், முறுவலிக்கும் உதடுகளும், இனிய பாங்கும் அவரது குடும்பமோ அல்லது நண்பர்களோ அல்லது உடனுழைப்பாளர்களோ அல்லது முதியவர்களோ இளைஞர்களோ அல்லது குழந்தைகளோ எவராயினும் எந்த வட்டத்திலும் மகிழ்ச்சியைப் பரப்பகூடியவை.

அவரது நல்லொழுக்க போதனைகளுக்கும் நன்முறை செயல்களுக்கும் எந்த மாறுபாட்டையும் ஒருபோதும் தான் கண்டதில்லை என்று சாயிதா சாகிபா கூறுகிறார். அவர் பிறரிடத்து கருணையுடனும் தனக்குத்தானே உரிமையை இழப்பித்துக் கொண்டும் இருந்தார். பயனுள்ள எதனுடைய மதிப்பையும் அவர் குறைவாக எண்ணியதில்லை. பயனுடைய செயல் செய்தல் என்பது மனநிறைவளிக்கத்தக்க வகையில் சிறப்பாக செய்தலே என்பதில் அவர் நம்பிக்கை கொண்டார். நாம் செய்யும் செயல்களில் முழுநிறைவை எட்டுவது மனித வாழ்வின் லட்சியமாகும். ஒவ்வொருவரும் தான் பிறக்கும் போது கண்டதை விடவும் ஒரு சிறிதேனும் சிறப்பாக உலகை விட்டுச் செல்வதை நோக்கமாகக் கொள்ளவேண்டும். அவர் ஊழமைவில் மாற்றமில்லா திடப்பெற்று கொண்டிருந்தார். ஆனாலும் ஒருபோதும் அவர் நம்பிக்கையை கைவிட்டதில்லை, மிகவும் கேடான சூழ்நிலைகளிலும்கூடவாழ்நாள் முழுவதும் தனது இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக அவர் பாடுபட்டார். நேர்மை, சகமனிதரை நேசித்தல், நாட்டுப்பற்று, தனது நண்பர்கள் உடன்பணியோற்றுவோர் மீது மாறாத திடநம்பிக்கை, எல்லா பெரிய மதங்களிலும் அவர் நெஞ்சார நேசித்த மதிப்பீடுகள் ஆகியவை அவரது குணநலன்களின் தனிச்சிறப்புகள். தனக்கு மூத்தவர்கள், தனது ஆசிரியர்களை அவர் மதித்தார். தன்தாய், ஈடாவா தலைமையாசிரியர், மௌல்வி அல்டாஃப்உசைன், காந்திஜி ஆகிய மூன்று பேர் தான் தன் வாழ்க்கையில் மாறுதல் உண்டாக்கியவர்கள் என்று அவர் ஏற்றுக்கொண்டார். காந்திஜியின் காலவரையற்ற உண்ணாநோன்பின் போது ஜனவரி 13, 1948 ல் அவர் வழங்கிய அறிக்கையானது அவரது மெய்யான உளப்பாட்டையும், காந்திஜியின்மீது அவர் கொண்டிருந்த உணர்ச்சிப்பூர்வமான பிணைப்பையும் பிரதிபலிக்கிறது. அவர் கூறுகிறார்:

நீங்கள் ஒரு மேனிலை சார்ந்த ,விவேகத்தால் வழிநடத்தப் படுகிறீர்கள் என்பதில் எங்களுக்கு ஒரு ஐயமும் இல்லை, உங்களது மக்கள் தங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளத் தூண்டுவதற்கு சரியான தருணத்தைத் நீங்கள் தோந்தெடுத்தும் இருக்கிறீர்கள். தளர்வுறாத வலிமையையும், தன்னம்பிக்கையையும், கேடான சூழ்நிலைகளும் அசைக்க வியலாத ஒரு திடப்பற்றையும் கடவுள்

உங்களுக்கு அளித்திருக்கிறார். கடவுள் உங்களோடு இருக்கிறார். நீங்கள் வெல்லவேண்டும். சுதந்திர இந்தியா உங்களுக்கு வழங்குவதற்கு என்று கசப்பையும் கடும் வேதனையும் தவிர வேறெதையும் கொண்டிருக்கவில்லை எனும் இழிவினால் நாங்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறோம். எதற்காக நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்களோ, எங்களுடைய எல்லா கண்மூடித் தனங்கள் பழிச்செயல்களையும் பொருட்படுத்தாமல் நீங்கள் எங்களை எதற்குத் தகைமை உடையவர்கள் என்று இன்னமும் நம்புகிறீர்களோ அந்த உயர்ந்த விடுதலையின் பொருட்டு எங்களை முன்னோக்கி வழிநடத்திச் செல்வதற்காக கடவுள் உங்களை காத்தளிப்பாராக. ஏதேனும் ஒன்று எங்களைத் தோற்றம் மாறுபடச் செய்ய வியலுமெனில், அது எங்களில் இருக்கும் உயர்ந்த தன்மைகள் தாமே உறுதியுடன் செயலாற்றி எங்கள் இயல்பை மாற்றிவிடும் எனும் உங்களது நம்பிக்கையே.

ஜாகிர்சாகிப், கொள்கை நிகழ்வுகள் அடிப்படை செயல் முறைகள் தொடர்புடையவற்றில் ஆற்றலும், பிடித்தபிடியை வலியுறுத்தும் இயல்பும் உடையவராக காணப்படுகிறார். அலிகார் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் 1951 ல் இந்தியக்குடியரசுத்தலைவர் டாக்டர். ராஜேந்திரபிரசாத் தலைமை விருந்தினராக இருந்தபோது. தனது அறிக்கையை வெளியிட்டு அவர் வெளிப்படையாக கூறினார், "நமதுநாடு, அதற்கே உரியதான தேசிய வாழ்விற்குள் நுழையவும் அதனைப் பயனுடையதாக எழுப்பவுமான மிகப்பெரிய கடமைப் பொறுப்பில், இருக்கக்கூடிய மனித ஆற்றலின் ஒவ்வொரு மிகச்சிறு அளவினுடையதுமான களிப்பு மிக்க அர்ப்பணிப்பை வேண்டுகிறது. அலிகர் பணியாற்றும் விதம், அது சிந்திக்கும் விதத்திலும் இந்திய வாழ்வின் பல்வேறான கூறுகளுக்கு அலிகரின் பங்களிப்பு எதிர்கால இந்தியவாழ்வில் முஸ்லீம்கள் பெறப்போகும் இடத்தை பெரிதும் நிர்ணயிக்கும். இந்தியா அலிகருடன் செயல்தொடர்பு கொண்டிருக்கும் முறையானது எதிர்கால தேசிய நிலையின் போக்கினைப் பெரிதும் நெறிப்படுத்தும்". ஜாகிர் சாகிப்பின் வெளிப்படையான துணிவுமிக்க பேச்சுப்பாங்கு இதுவாகும். அவர் எப்போதும் பிரச்சனைகளின் அனைத்து அம்சங்களையும் நியாயமாகவும் அறிவுக்கூர்மையுடன் எடைபோட்டு ஆராய்ந்து பார்த்து அதற்கு முன்னுரிமை தந்தார். அதே நேரத்தில் ஒரு முடிவுக்கு வரும் முன்னர் மற்றவர்களின் நோக்குநிலையையும் பார்க்கும் நலமிக்க உணர்வு கொண்டிருந்தார். விவாதத்திற்குரிய கூறுஒன்றில் வெறுமனே வெற்றி பெறுதற்காக மட்டும் ஆர்வம் கொண்டவராக அவர் ஒருபோதும் இருந்ததில்லை, பேராசிரியர் முஜிப், ஜாகிர்சாகிப் எதார்த்தில் வெற்றிபெற்றிருந்த போதிலும் தோற்கடிக்கப்பட்டது போல் காணப்பட்டார் என்று எழுதியது ஒருவேளை சரியாகவே இருக்கக்கூடும்.

ஜாகிர்சாகிப் நமது பலவின் ஆக்கம் சார்ந்த பண்பாட்டில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். வாழ்வின் ஒவ்வொரு களப்பகுதியிலும், வழக்காறுகள், ஒழுகலாறுகள், இசை, அறநோக்கம் கொண்ட காட்சி விழாக்கள், பண்டிகைகள், உணவு, உடை, குடும்பவாழ்வின் பிறவகை நுணுக்கங்களில் இந்துக்கள் முஸ்லீம்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மிக நெருக்காமாக வருகின்றனர். இந்தியாவின் கூட்டுப்பண்பாடு என அறியப்படும் ஒரு பொதுவான புதிய பண்பாடு தாமாகவே மலர்ச்சியுறுவதாக அவர் உணர்ந்தார். இந்தக் கூட்டிணைவுப் பண்பாட்டின் நுட்பமான கூறுகளின் கலவை கலை, கட்டடக்கலை, மொழி, இலக்கியம், இசை, தத்துவம், மதம் அறிவியல் ஆகியவற்றில் கண்டுணரப்படுகின்றன. ஜாகிர்சாகிப் ஒருமுறை இதனைப்பற்றி சரியாக கருத்துரைத்தார்.

நம்மை ஒன்றுவிப்பதும், ஒன்றாய் வைத்திருப்பதும் எதுவெனில் ஒத்ததரத்திலுள்ள உயர்தர வாழ்க்கையன்று. மாறாக, நமக்குநாமே உண்மையுடன், சகிப்புதன்மை உடைய வாழ்க்கை வழிமுறைகள், ஆண்கள் பெண்கள் என்ற அளவில் சரி நிகர் உணர்வு எனும் தரமேம்பாடுடைய இவையேயாகும். அதன் பின் நாம் கடவுளின் முன்னர் நிற்கமுடியும். அடக்கத்திலும் கருத்து உறுதியிலும் நமது உளச்சான்று ஒன்றுபட்டு நமது வாழ்வையும் செயலைவும் முழுநிறைவுக்கான ஒருமனமார்ந்த முயற்சியின் வெளிப்பாடாக உருவாக்கும்.

ஜாகிர்சாகிப் ஆழ்ந்த சமயப்பற்று கொண்ட மனிதர், ஆனால் அவரது சமயஉணர்வுடைமை ஒரு வேறுபட்ட வகையினது, பகட்டுடையதல்ல. அவரது மனதின் உள்ளே மூலைமுடுக்குகளிலிருந்து கடவுளின் புகழ்வீறினை ஏற்றுக்கொண்டு எழும் உறுதியான நம்பிக்கையினுடையது. அவர் குரானை படிப்பார். அவரது நமாசை தனது குடும்பத்து உறுப்பினர்கள்கூட அறியா விதத்தில் அவ்வளவு ரகசியமாக செய்வார். தனது முன் நெற்றியை மூடக்கூடிய தொப்பி ஒன்றைத் தைக்குமாறு ஒருமுறை சாயிதா சாஹிபாவை அவர் கேட்டுக் கொண்டார். கடவுளுக்கு முன்னால் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குவதன் அடையாளம் எதுவும் காணவியலாத படிக்கு அது உதவும் என அவர் நம்பினார். கடவுளது விருப்பம் நிறைவேற்றப்படவேண்டும். "அவரது விருப்பத்தில்தான் எனது அமைதி இருக்கிறது!" என்று எப்போதும் பிரார்த்தித்த அவரது ஆன்மத் தூய்மையை யார் ஊகிக்கமுடியும்? உண்மையில் அவர் தன் இதயத்தைக் கடவுளுக்கும், கைகளை உழைப்பிற்கும் அளித்தார். "ஒவ்வொரு விரற்கடையும் நான் ஒரு முஸ்லீம்மாக தான் இருக்கிறேன் அதற்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால் அதே நேரத்தில் என்னுடைய ஒவ்வொரு விரற்கடை அளவிலும் நான் ஒரு இந்தியனே அதற்கு நான் சரிநிகரான

பெருமை கொள்கிறேன்" என்று அவர் பெருமிதத்துடன் பறைசாற்றியதன் காரணம் அதுவே.

ஜாமியாவில் அவருடன் பணியாற்றியவர்கள் அவருடைய தலைமையின் கீழ் இருந்த அற்புதமான காலத்தை பழைய பெருமித நினைவுகளோடு மீண்டும் நினைவுக்கு கொணர்வார்கள். ஒரு மனிதன் தன்னுடைய பணிமுதல்வரை தான் பின்பற்றத்தக்க நாயகனாகக் கொள்ளமாட்டான், என ஆங்கிலப் பழமொழி ஒன்று கூறுகிறது, ஆனால், ஒவ்வொரு இதயத்திலும் மரியாதையைத்தூண்டிய ஜாகிர்சாகிப் ஒரு விதிவிலக்காக இருந்தார். அருட்தொண்டர்கள் கடவுளை நம்புவதுபோல இவரிடம் பலர் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவருடைய நற்குணம் அன்புச் செயலின் காரணமாகவே இது இருந்தது.

அவரைச் சுற்றியிருந்தவர் அனைவரும் தனக்குத் தானே அவர் அமைவு செய்து கொண்ட அதே வாழ்க்கைப் பணித்திட்ட செயல்நோக்கத்துடன் செயல்பட்டு மனமார்ந்த நிலையில் ஈடுபாடு காட்டினர். அவர் நற்குணவிதைகளை ஒவ்வொரு மனதிலும் விதைத்தார். அது ஒருபோதும் அவரை எதிர்பார்த்தபடி நடவாமல் ஏமாற்றமடைய செய்யவியலாத பெருவலி கொண்ட ஒரு அழைப்பாக நயம்படத் தோன்றியது. அவருள் ஒரு நண்பரை, ஒரு தத்துவவாதியை, ஒரு வழிகாட்டியைத் தாங்கள் கண்டு கொண்டதற்காக பிறர் மகிழ்ச்சி அடைந்தனர். அவர் சிந்தனையில் கொண்டிருந்த புனித செயல்நோக்கங்களுக்காக இவர்களும் துன்பப்படவும், தியாகம்செய்யவும் வைத்தது. அவரது வாய்மை வாய்ந்த ஆண்மநலம் ரஷீத் சாகிப்பிற்கு அவரை ஒரு புனிதராகவும் பிறருக்கு பின்பற்றத்தக்க ஒரு பெருந்தலைவராகவும் அமைந்ததில் வியப்பில்லை. பழிவாங்கும் செயல்தரும் மகிழ்ச்சியை நிலையற்ற ஒன்றாகவும், அமைதியை உருவாக்குபவரின் மகிழ்ச்சி எப்போதும் நீடித்திருக்கக்கூடிய பேருவகை என்றும் கருதக்கூடிய ஒரு அறவோர் அவர். சமயப்பணியார்வமுடைய ஒருவருக்கும் (அபிட்) அறிவுகொளுத்தல் பெற்ற ஒரு மனிதனுக்கும் (அவிம்) உள்ள வேறுபாட்டை அவர் அறிந்தவர். ஒரு பக்திமான் சூறாவளியின் போது தனது மேலங்கியைக் காப்பாற்றிக் கொள்கிறான். மாறாக அறிவு கொளுத்தப்பெற்ற ஒருவனோ பிறர் மூழ்கிப்போகாமல் காப்பாற்றுகிறான்.

ஜாகிர்சாகிப்பின் எளிமையும் தூய்மையும் அவரது ஆடைகளிலும் கூட பிரதி பலித்தன. 1921 ல் ஒத்துழையாமை இயக்க நாட்கள் தொடங்கி அவர் எப்போதும் கறையற்ற தூய்மையான வெண்ணிற கதராடையையே உடுத்தினார். பேஹம்சாகிபா அவருடைய உடைகளைத் தானே தைத்துத்தருவார். தனது எளிமைக்கு முரணாக தனது தகுதியும்

செயற்பாங்கும் எந்தவழியிலும், எந்த நேரத்திலும் பாதிக்கப்பட அவர் ஒரு போதும் விட்டதில்லை. அவருடைய இல்லம் அவரது பண்பட்ட தலையாய உணர்வை விளக்கிக்காட்டும். அங்கே அத்தனையும் வகைமுறையில் இருந்தன. அவரது உணவு எளியது. ஆனால் அவர் நல்ல உணவையும் விரும்பினார். ஜாமியாவில் குழந்தைகளுக்கு வாழ்க்கைக் கலையை கற்பிப்பதில் தனக்கே உரிய கற்பித்தல் வழியை அவர் கொண்டிருந்தார். காகிதத் துண்டுகள் சுற்றிலும் கிடக்குமாயின் அதை எடுக்குமாறு யாரிடமும் அவர் சொல்லமாட்டார். தானே அதனைச் செய்வார். குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் அவரது கலை தனித்தன்மையானது. அவர்களுக்கு அவர் அறிவுரை கூறவோ, கடிந்துரைக்கவோ மாட்டார். மாறாக அவர்களது இதயத்தைத் தொடும் வண்ணம் சிலவற்றைச் சொல்லவோ செய்யவோ செய்வார். ஒருமுறை சிறுவர்கள் சீட்டாடிக் கொண்டு நேரத்தை வீணடித்ததை அவர் கண்ணுற்றார். அந்த இடத்திற்கு வந்து நின்று சாதாரணமாகச் சொன்னார், "நானும் கூட உங்களுடன் சேர்ந்து சீட்டு விளையாடியிருப்பேன், ஆனால் எப்படி விளையாடுவது என்பது எனக்குத் தெரியாது, என் வாழ்க்கையில் ஒருபோதும் நான் சீட்டாடியதில்லை" என்று. அங்கிருந்த அனைவரையும் வெட்கித் தலைகுனியச் செய்வதற்கு அந்தக் குறிப்பே போதுமானதாக இருந்தது. ஒருமுறை, வகுப்பிலிருந்த ஊக்கமில்லாச் சிறுவன் ஒருவனால். அவர் என்ன சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஜாகிர்சாகிப் அவனிடமிருந்து சரியான மறுமொழியைப் பெறுவதற்கு விடாப்பிடியாக முயன்று பார்த்தார். இருந்தும் ஒரு பயனுமில்லை. இதன் இறுதி முடிவாக ஏற்பட்ட ஒரே விளைவு ஜாகிர்சாகிப்பின் கண்களில் இருந்து கண்ணீர் உருண்டோடியதுதான். அந்தச் சிறுவனிடம் வியக்கதக்க விளைபயனை அது ஏற்படுத்திற்று. அந்தநாள் தொடங்கி அவன் இயல்புமாறியவனாக இருந்திருக்கவே வேண்டும். அவரது தனித்திறக்கூறுகளுள் ஒன்று தன்னை குறை கூறுபவர்களுக்கு பதில் அளிக்காமல் விட்டு விடுவது. தனக்கு எதிராகக் கூறப்பட்ட எதனையும் அவர் இலகுவாகப் புறக்கணித்துவிடுவார். வாதப்பொருள் பற்றி உள்முகமாக தன்னை நுணுகிக்காணச் செய்யக்கூடிய எந்த மறுப்புரையையும் திறனாய்வையும் அவர் வரவேற்பார். தன்னைப் பற்றிச் சிறப்பாக பேசும் நண்பர்களை ஒருவன் தவிர்க்க வேண்டும், ஒருவரின் தவறை கண்ணாடியைப் போல் முகத்திற்கு நேரே வெளிப்படுத்தக்கூடிய வெளிப்படையான ஒருநபரை விரும்பித் தேர்ந்டுெக்க வேண்டும் என்ற கஸலிவுடன் அவர் உடன்படுவார். ஜாமியாவை உருவாக்குவதில் அவர், குறைகூறுவோர் எண்ணற்றோரை எதிர்ப்பட வேண்டி இருந்தது. பேராசிரியர் முஜீப், ஜாகிர்சாகிப்பின் வாழ்க்கை

வரலாற்றைத்தான் எழுதிக் கொண்டிருந்தேபோது, ஜாமியாவில் 40 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற ஒரு உடனுழைப்பாளர், ஜாகிர்சாகிப் ஜாமியாவை பேணி வளர்ப்பதற்கு பதிலாக தன்னைத்தானே வளர்த்துக் கொண்டார் என்று தனக்கு எழுதியிருந்தார் என்று குறிப்பிடுகிறார். வேறு சில நண்பர்களின் கருத்தும் இதுவாகவே இருந்தது என்றும் கூட அவர் குறிப்பிட்டுள்ளார். நன்றி கெட்ட தன்மைக்கு மிகக்கொடிய ஒரு எடுத்துக்காட்டு என இதனை எளிதாக கூறிவிடலாம். தனது வாழ்வில் எதையும் சாதித்திருக்கக்கூடிய தருணத்தில், அவர் தானே வலிந்து வறுமையை ஏற்றுக்கொண்டார். கற்பனைக் கெட்டாத இன்னல்களை ஏற்றுக்கொண்டு தான் கனவுகண்ட ஜாமியாவிற்கு தொண்டு செய்யவும் அதனை உருவாக்கவும் தன்னை அவர் முழுமையாகத் தியாகம் செய்தார் என்பதை உலகம் முழுதும் அறியும்.

அதுபோலவே 1948ல் அலிகார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை ஜாகிர் சாகிப் ஏற்க ஒப்புக்கொண்ட போது சிலர் குறை கூறினார்கள். ஜாகிர்சாகிப் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்று பண்டிட் ஜவகர்லால் நேருவும் மௌலானா ஆசாத்தும் எவ்வளவு ஆர்வமுள்ளவர்களாக இருந்தனர் என்பதை அறியாதவர் யார்? அந்த நேரத்தில் கொஞ்சமும் இரக்கமற்ற குறைகூறல்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் நடப்பிலிருந்த நிலைமைகளிலிருந்து அலிகரை ஜாகிர்சாகிப் மட்டுமே காப்பாற்ற முடியும் என்ற கருத்தில் அவரை இந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ளுமாறு அவர்கள் இணங்கவைத்தனர். அலிகார் பல்கலைக்கழகம் அதன் மூலமுதலான தகுதியை மீண்டும் அடைவதற்கும், ஆன்றமதிப்புடைமையோடு மக்கள் மத்தியிலும் அறிவுலகத்திலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தன்மையை பெறுவதற்கும் உதவியதன் மூலம் அலிகர் பல்கலைக்கழகத்திற்கு புத்துயிர் அளித்ததில் ஜாகிர்சாகிப்பின் பங்களிப்பை யார்தான் மறுக்கமுடியும்?

ஜாகிர்சாகிப் அரிதான, புலனுணர்வு பெற்றிருந்தார். எந்தச் சூழ்நிலையையும் அதனுடைய காரணங்களின் எல்லைவரை பகுத்தாய்ந்து துளைத்துச் செல்கிற அத்தகைய தொரு சிந்தனையுடன் ஏறத்தாழ வருவது உணர்த்தும் வகையில் அவரது வார்த்தைகள் இருக்கும். பாகிஸ்தான் கோரிக்கைப் பிரசார நெருக்கடியில் உ. பி பீகார் இரு மாநில மக்களையும், இத்தகைய கோரிக்கைகளால் அவர்கள் எதையுமே பெறமுடியாது, இந்த பேரம் அவர்களுக்கு அழிவாகவே வந்து விடிவுறும் என்று அவர் எச்சரித்தார். இன்றைய வங்கதேசமான முந்தைய கிழக்கு பாகிஸ்தானுக்குச் சென்ற பிகாரிகளுக்கு என்ன நேர்ந்தது என்பது அனைவரும் அறிந்ததே. இத்தகைய பெரிய பிரச்சனைகளில் மட்டுமின்றி வாழ்க்கையின் மிக நுண்ணிய சிறுகூறுகள் வரை அவரது கூர்த்த அறிவு,

உணர்ச்சி மென்மை எதிர் வரக்கூடியவற்றை முன்னறிவிக்கும் அவரது பகுத்தறிவு, மனிதர்கள் காரியங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவு, கடந்த காலத்திலிருந்து பெற்ற விவேகத்தின் சிறந்த பிடிமானம் ஆகியவற்றினால் இது சாத்தியமானது. அதனால் அவரது நண்பர்கள், உடனுழைப்பாளர்கள் அவரை என்றும் உதவுகிற ஒரு வழிகாட்டியாகவும் தத்துவஞானியாகவும் கருதினர்.

ஜாகிர்சாகிப் மிகப்பரந்த இதயம் கொண்டவர். நற்செயலாற்றும் விருப்பமும் அறச்சிந்தனையும் கொண்டவராக இருந்தார். ஒரு பொறியாளர் அவரை ஏமாற்றிய போது, "நல்ல மனிதர்களுக்கு நண்பர்கள் பலர் இருக்கின்றனர், மோசமான மனிதர்களுக்கும்கூட யாரேனும் ஒருவர் இருந்தாக வேண்டுமே" என்று சொன்னது மட்டுமே அவரது எதிர் வினையாக இருந்தது. தனது வீட்டில் ஏதோ சில களவு போனபோதுபற்றி அவரது மகன் அவரிடம் தெரிவித்தபோது அவர் சொன்னார் " ஒருவேளை நீ ஸாகத்தை அளிக்காமல் இருந்திருப்பாய்."[1] அவர் உடல் நலமின்றியும் பேஹம் சாஹிபா வெளியில் சென்றிருந்த நிலையிலும் பழக்கமில்லாத புதியவர் ஒருவர் திடீரென வந்து பணம் கேட்டபோது ஜாகிர்சாகிப் அவருக்கு உதவ முடியாத தன் இயலாமையை ஒப்புக்கொண்டார். ஆனால் அந்த மனிதரோ, "நீங்கள் சொல்வது சரியானதுதான். நீங்கள் உடல்நலம் குன்றிஇருப்பதை நான் காண்கிறேன். பேகம் சாஹிப் வெளியில் சென்றிருக்கிறார் என்று நீங்கள் சொல்லும்போது அதுவும்கூட உண்மையாகத்தான் இருக்கவேண்டும். உங்களிடம் பணம் கேட்கிறேன். நான் என்ன விரும்புகிறோனோ அதை எனக்கு எப்படி நீங்கள் தரமறுக்கலாம்?" என்று கேட்டார். இதன்பிறகு, அந்த அந்நியரை தனது செயலாளரிடம் அனுப்பி அவர் விரும்பும் தொகையை ஏற்பாடு செய்த தருவதைத் தவிர வேறு வழி ஜாகிர்சாகிப்பிற்குத் தோன்றவில்லை. கஞ்சன், பேராசைக்காரன் என அறியப்பட்ட ஒருவன் உண்மையில் ஈகைக்குணமுள்ளவனாக இருந்தான் எனவரும் அக்ஹிரிகாதம் என்ற குழந்தைக்கதையொன்றை அவர் எழுதியிருந்தார். தனது மரணத்திற்குப்பிறகு ஒருநாள் உலகம் உண்மையை அறியும் என்ற நம்பிக்கையில் தான் ஈகையாக அளித்த அனைத்தையும் ஒரு பதிவேட்டில் அவர் குறித்து வைத்திருந்தார். இறக்கும் தருவாயில் அப்படியொரு முக்கியமற்ற யோசனையை கல்லறைக்கு அனுப்பும் நிலை அவருக்கு நேரிட்டது. வாழ்வில் தனது இறுதிச் செயலாக அந்தப்பதிவேட்டை திடீரென அவர் தீயினில் எறிந்தார். ஜாகிர்சாகிப் வாழ்க்கையிலும் கூட இந்தக் கதை பெருமளவு உண்மையாயிற்று. நன்மதிப்பின் பொருட்டே நாம் அறியப்படுகிறோம்.

மனத்துயரும் பின்னடைவும் ஏற்பட்ட கணங்களில் எதன் ஆதரவை நாடினார் என்பதை அவர் ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. கடந்துசென்ற ஒவ்வொரு பொழுதுக்கும் நன்றியறிதலுள்ளவர்களாக இருந்து தங்களது கடைமைகளை செய்யவேண்டும் என்று மக்களை அவர் வேண்டிக்கொண்டார். ஒரு செயல் நோக்கத்திற்காக அவர்கள் வாழ்ந்தால் அதுவே போதுமானது. அவரது மகள் சபியா ஜாகிர்சாகிப்பினுடைய சிறுகுழந்தை ரெஹானா இறக்கும் தருவாயில் நிலவிய துயரக்காட்சியை நினைவுகூர்கிறார். அப்போது அவர் பள்ளிக் குழந்தைகளுக்கு பாதுஷா வழங்கிக் கொண்டிருந்தார். வீட்டிற்கு திரும்பியபோது பேஹம் சாஹிபா துயரப்பட்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். அமைதியும் மனஉரமும் கொண்ட உருமாதிரியைப் போல அவர் தோற்றமளித்தார், சபியாவை தூக்கி கட்டித்தழுவி அவளுக்கு முத்தமிட்டார். பேஹம் சாஹிபாவுக்கு ஒரு தகவலைச் சொல்வதுபோல, "நீ இன்னமும் பெற்றிருப்பவை பற்றி நன்றியுடன் இரு. மதிப்புமிக்க சின்னஞ்சிறு உயிரொன்றை இறைவன் பறித்துக் கொண்டாலும் நம்முடன் இரண்டு உயிர்களை இன்னமும் விட்டு வைத்திருக்கிறான். கடவுளின் விருப்பத்திற்கு நம்மை ஒப்படைத்துவிடுவோம், அவரது விருப்பம் நம் மீது நிறைவேற்றிக் கொள்ளப்படவேண்டும் என்று பிரார்த்திப்போம்" என்றார். அவர் கூறுவார்: "சில நேரங்களில் நமக்கு சிலவற்றை அளித்தும், சிலநேரங்களில் சிலவற்றை நம்மிடருந்து பறித்துக் கொண்டும் கடவுள் நம்மைச் சோதிக்கிறார்".[2] பிரச்சினைகளுக்கு அவரது எதிர்ச்செயல்கள் பொது நிலையிலுள்ள பிறமக்களினின்றும் வேறுபட்டவை. ஒருவகை அரிதான, நீடமைதி மிகுந்த மனநிலை நெருக்கடிகளின் போதும் கூட அவரை ஒருபோதும் கைவிட்டு விலகியதில்லை நீங்கள் என்ன செய்தாக வேண்டுமோ அதை செய்திட உளவுறுதி கொள்ளுங்கள். மேற்கொண்ட உள்ளஉறுதியை நிறைவேற்றுங்கள். கசடுகளை சுட்டெரிக்கக்கொல்லனது மூசையில் இடப்படும் தீயைப்போல கவலைகளும் துன்பங்களும் நம்மைத் தூய்மைப்படுத்தும் என்ற கருத்துரையின்படி அவர் நடந்தார்.

ஜாகிர்சாகிப் மிகுந்த கருணையும் இரக்கமும் உள்ள இதயம் கொண்டவர். அவரது மகள் ஒரு பூனைக்குட்டியை வளர்க்க விரும்பியபோது அவர் கூறினார்: " நீ பூனையின் குட்டிவொன்றை அல்ல மனிதக்குழந்தை ஒன்றை வளர்க்க வேண்டும்"[3] மறுநாள் ஒரு அனாதை இல்லத்திலிருந்து அவளுக்கு ஒரு சிறு பெண் குழந்தையை கொண்டுவந்தார். பஷீரி எனப் பெயரிடப்பட்ட அந்தக் குழந்தை வீட்டில் ஒருவரைப்போலவே வளர்க்கப்பட்டாள். அவர் ஜாமியாவை உருவாக்கியபோது மிகவும் கடினமான சந்தர்ப்பங்களில் பாலைவனத்தில் அவர் கிணறு வெட்டிக் கொண்டிருப்பதாக யாரோ ஒருவர் குறிப்பிட்டார். அதே பாலைவனத்தி

லிருந்து ஒருநாள் அனைவரையும் வளப்படுத்தும் நீரோடை பெருக்கெடுக்கும் என்று ஜாகிர்சாகிப் பதிலுரைத்தார். இப்போது ஜாமியா ஒரு மையப் பல்கலைக்கழகமாக, அனைவரின் அறிவுதாகத்தையும் தீர்த்து வைத்துக் கொண்டு தேச உடைமையாக இருக்கிறது. ஜாகிர் சாகிப்பின் உயிருக்கு குறிவைத்து ஜலந்தர் நிலையத்தில் நடத்தப்பட்ட துரதிருஷ்டவசமான தாக்குதலை விவரிக்கும் போது ரஷீத் சாகிப் ஒருமுறை கூறினார், "அந் நேரத்தில் அந்த நிலையத்தில் இருந்தவர்கள், ஜாகிர் சாகிப் கவலையற்ற தன்மையோடு கொந்தளிப்பின்றி படிக்கட்டுகளை நோக்கி சென்றுகொண்டிருந்ததைக்கண்டனர். இந்தியக் குடியரசின் தலைவர் ஒரு கல்வி அல்லது பண்பாட்டு நிலையத்தை துவக்கி வைக்கவோ அல்லது அதுபோன்ற விழாவிற்கோ சென்று கொண்டிருப்பபைப்போல தளராது மேற்சென்றார்" என்று குறிப்பிட்டனர்.

அவரது தத்துவத்தின் இரு முக்கிய கூறுகள் பயன்தரும் கடும் உழைப்பும், நேர்மையும் ஆகும். வாழ்கை ரோஜாப் படுக்கையல்ல, அதன்மையம், மகிழ்ச்சி துன்பம் இரண்டுமற்றது. முன்னேற்றமோ அழிவோ, லாபமோ நஷ்டமோ அதன் தூண்டலுணர்ச்சியாக இருக்கக்கூடாது. பிறரை நன்மை அடையச்செய்து நமக்கு சில நிறைவை ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணத்துடன் கூடிய சுய வளர்ச்சியாக அது இருக்கவேண்டும். தன்நினைவு, தன்முன்னேற்றம் இவை வாழ்க்கையின் நோக்கமாக இருக்கக் கூடாது. முன்னேற்றச் சக்கரத்தை சுழலச்செய்யும் சேவையும் தியாகமுமே நோக்கமாக வேண்டும். புனிதமான மதிப்பார்ந்த குறிக்கோள்களுக்கு துண்டுதுண்டான வழிவகையன்றி மனிதனின் முழுமையான அர்ப்பணமே முன்னேற்றத்திற்கு தேவைப்படுகிறது. இங்கு வாழ்க்கைத் தொழில், அங்கு ஒழுக்கநியதி, இங்கே அநியாயமான லாபம், அங்கே பிறர் கவனத்தைக் கவருவதற்காக பகட்டாராவார தியாகம். இங்கே இதயமற்ற கொடுஞ்செயல், அங்கே தெவிட்டுகிற கருணை, இங்கே மதிப்பீடுகளோடு தொடர்புள்ள கைத்திறங்கள், அங்கே கைத்திறனின் துணையில்லா மதிப்பீடுகள் என வாழ்க்கை இருக்கக்கூடாது என்று அவர் கூறுவார். ஒரு செயலில் மனம், சிந்தனை இவற்றோடு ஆன்மாவையும் நாம் ஈடுபடுத்த வேண்டும், மேம்பாட்டை இலக்காகக் கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தவார். "பொறுமையும், சுறுசுறுப்பான உழைப்பும் மேம்பாட்டு உணர்ச்சிக்கு பக்க வலிமை சேர்க்கிறது. மனிதனின் அழைப்பை கடவுளின் படைப்புச் செயலில் ஒரு பங்கேற்பாக அது ஆக்குகிறது" என்று அவர் கூறுவார் "சார்ந்திருக்கும் வாழ்க்கையானது ஒரு குறுகிய, வகுத்துரைக்கப்பட்ட வாழ்க்கை, சுதந்திரமான வாழ்க்கையோ விரிவுடையதாகவும், பரந்தகன்றதாவும் இருக்கிறது. நயமேம்பாடுகளின் ஒரு நீண்ட பவனியாகும் அது "என்று அவர் நம்மை எச்சரிப்பார். பிறரை

அழிக்க விரும்பும் எவரும் தங்களின் படைப்புச் சக்தியை முதலில் மெய்ப்பிக்கவேண்டும் என்று அவர் நினைவூட்டுவார். "சமயம் ஒரு ஆன்மீக அனுபவம். மெய்யான சமயஈடுபாடு கொண்டிருப்போர் அகநிலை மாற்றத்திற்கு ஆளாகி அமைதி, ஒத்திசைவு, நல்லெண்ணத்தைப் பரவச் செய்வர்" என்று அவர் கூறுவார். உண்மையான சமய ஈடுபாட்டை மதிப்பிட்டறிய அவர் ஒரு கட்டளைச் சட்டத்தை முடிவுசெய்தார். "கொள்கையளவேயான மனிதனுக்கு உண்மையும், கற்பனைத்திறம் வாய்ந்த மனிதனுக்கு அழகும், சமய ஈடுபாடுள்ள மனிதனுக்கு வீடுபேறும், வலிமைமிக்க மனிதனுக்கு ஆதிக்கமும், பொருளாதார மனிதனுக்கு லாபமும், சமூக மனிதனுக்கு அன்பு, பரிவு, பாங்கறிதலும் உயர்ந்த கொள்கைகள்"[4] அவரது கோட்பாடுகளை இது தொகையாக்கிக் காட்டுகிறது.

ஜாகிர்சாகிப் தீராப் பெருவேட்கையுடைய படிப்பாளியாக இருந்தார். மதிப்பீடுகள் பற்றி மிகுதியான கூருணர்வு பெற்றிருந்தார். அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா ஒன்றில் பேசிய போது அவர் கூறினார். "இந்தப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களும், மாணவர்களும் இந்தப்பாதையினூடே செல்லவும் தங்கள் மத்தியில் ஆழ்ந்த சுயமரியாதை உணர்வும் தனிமனித நாணயத்தையும் பேணி வளர்த்துக் கொள்ளவும் வேண்டுமென்று நான் எதிபார்க்கிறேன். அவர்களிடமிருந்து சமூக நன்மை தீமைகளை அறியும் நேர்மையுணர்வால் மிகுதியான அளவு பதப்பட்ட ஒழுக்கம் சார்ந்த பொறுப்புணர்வையும், நம்பிக்கைக்குரிய நிலையையும் நான் எதிர்பார்க்கிறேன். அவர்களிடமிருந்து நான் நெஞ்சுரத்தைப் படிப்படியான முதிர்ச்சியின் தெளிவை தன்னிடம் உறுதியாகவும் பிறருடன் கனிவாகவும் நடந்து கொள்ள ஒருவரை இயலச்செய்யக்கூடிய சுய ஒழுங்கை எதிர் பார்க்கிறேன்.

ஜாகிர்சாகிப் மிகுந்த சுறுசுறுப்புடைய மனிதராக இருந்தார் உழைப்பை வழிபாடாக அவர் கருதினார். கல்விப் பணியின் தரக் குறியாக உற்பத்தி உழைப்பின் சரிநிகர் நிலையை அவர் வலியுறுத்தினார். பயிற்சியும், விடாமுயற்சியும் அனைத்து செயல்களையும் எளிதாக்கும் என்று அவர் கூறுவார். மிடிமையையும் சோம்பலையும் அவர் வெறுத்தார். நாம் செறிவு மிக்க சோம்பல் எனும் பாறையை வெட்டிப் பிளந்தால் தான் வாழ்க்கை ஒருவெந்நீர் ஊற்றுப் போல துள்ளிஓடும் என்று அவர் நம்பினார். தங்களுக்கு உதவிக் கொள்வோர் யாரோ அவர்க்கே கடவுள் உதவுகிறார். "நமது சோம்பலின் அளவைப் போல இருமடங்கும் நமது பெருமிதத்தைப் போல மும்மடங்கும், நமது மூடப்பழக்கத்தைப்போல நான்குமடங்கும் நாம் திறை செலுத்தியிருக்கிறோம்".

ஜாகிர்சாகிப் ரோமானியப் பேரரசர் மார்கஸ் அரேலியசுடன் ஒப்பு நோக்கத்தக்கவர். அவரைப்பற்றி சொல்லப்பட கதை இது. அவர் இறந்தபோது பேரின்ப உலகத்தில் கிரேக்கக்கடவுளர்களால் பெரும் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது. விருந்துக்கு ரோமானியப் பெருந்தெய்வம் தலைமை தாங்கியது. உயர்பதவியாளர்கள் அகஸ்டஸ், டிபெரியஸ், ட்ரோஜான், உறட்ரியன் இவர்களுடன் நீரோவும் கலிகுலாவும் கூட கலந்துகொண்டனர். ஒவ்வொரு பேரரசரும் அவரது சாதனைகளையும் பூமியில் அவர் செய்த கீர்த்திமிக்க செயல்களையும் நினைவு கூர்ந்தவண்ணமிருந்தனர். மார்கஸ் அரேலியஸின் முறைவந்த போது அவர் எளிமையாக சொன்னார். "நான் பிறர்க்கு ஒருபோதும் துன்பம் தரக்கூடாது என்ற உயரவாவில் பற்றுகொண்டிருந்த தாழ்மையான ஒருதத்துவ சிந்தனையாளன்" மார்க்கஸ் அந்த நோக்கத்தைப் போற்றினார். ஆனால் ஜாகிர்சாகிப்போ அந்த குறிக்கோளை முயற்சியால் அடைந்துவிட்டார்.

இவ்வாறு ஜாகிர் சாகிப்பின் வாழ்க்கை விவேகத்தையும், அறிவாற்றலையும் அடைய வேண்டிய மனித வாழ்க்கையின் உயர்நோக்கத்தை செயற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. நம்மை மேலான மனிதர்களாக்குவதற்கும், புவியின் மீது மகிழ்ச்சியான வாழ்க்கை என்ற இலக்கை அடைவதற்கும் விவேகம் தேவைப்படுகிறது. ஒரு நோக்கத்திற்கு நம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதன் மூலமே உண்மையான மகிழ்ச்சி நம்மிடம் வருகிறது. இந்த நோக்கம் மனிதனுக்கு மனிதன் மாறுபடும். ஆட்சியுரிமையும் அதிகாரமும், செல்வவளமும் உடமைகளும் நேர்மையான நடத்தையும் கடமையுணர்ச்சியும் அல்லது நற்குணமும் மனிதத்தன்மையும் என அது இருக்கும். எந்த ஒரு எண்ணத்தையும் நடப்பியலாக மாற்றுவதற்கு ஒரு வழிமுறையை கடந்து சென்றாக வேண்டும். ஒருவனது உயிருருவின் ஒருபகுதியாகவே அது ஆகவேண்டும். மனதையும் ஆன்மாவையும் அது துளைத்துச் செல்லவேண்டும். ஜாகிர்சாகிப் தனது நற்குணம் அனைத்தையும் தனக்குள்ளேயே அமிழ்வுறச் செய்து கொண்டார். ஒரு மனிதனுடைய முகம் மற்றும் உடலின் கவர்ச்சிகரமான தோற்றங்கள் மனிதனின் நற்குணங்களுக்கு அடையாளமாக அமைவதில்லை. "அப்படியானால் சுவர் ஒன்றின் மீது அழகுற எழுதப்பட்டுள்ள சித்திரத்திற்கும் மனிதனுக்கும் என்ன வேற்றுமை இருக்கமுடியும்?" என்று ஒரு மறைஞானி கூறுகிறார். ஒரு நல்ல மனிதன் எல்லாத் தருணங்களிலும் ஆன்மநலத்தில் வாழ்வான். ஜாகிர்சாகிப்பின் நற்குணம், மனிதமகத்துவத்தை வற்புறுத்துவதிலும் மனிதகுல ஒற்றுமை மற்றும் ஒருமையிலும் மேவியதாக இருந்தது.

அவரது நற்குணமும், மனிதாபிமானமும் பல்வேறு வழிகளில் வடிவெடுத்தன. ஒன்று சாசுவதமான அறிவு நாட்டம், அது அவரது

ஆன்மப்பசியாக இருந்தது. அறிவு விவேகத்திற்கான வழியைப் பொலிவுறச்செய்கிறது. மனித முன்னேற்றத்துக்கு அது திறவுகோலாக இருக்கிறது. அது மகிழ்ச்சியை நோக்கி வழிநடத்துகிறது. ஆழ்ந்த துயர நிலையில் அது நம்மை நிலைகுலையாது தாங்குகிறது. நண்பர்களின் கூட்டுறவில் அது ஒரு ஆபரணம். பகைவர்க்கு எதிரான ஒரு காப்புக்கவசம், மனிதனின் அறிவின் துணைகொண்டு வாழ்வின் புதிர்நிலைகளை முடிச்சவிழ்த்து உண்மையைக் காட்சிப்படுத்தி, மூல இயல்புகளை வெளிக்கொணர்ந்து, சிறந்த மாற்றத்திற்கான ஒரு இயக்கியான அது ஆகத்தொடங்கியது. மனித நலம் மற்றும் முன்னேற்றத்தின் திறவுகோலை அறிவு வைத்திருக்கிறது. அது சமூகத்தின் மனசாட்சியாகவும் செயலாற்றுகிறது. அறிவுஜீவிகள் தேசத்தின் அகச்சார்பான ஆன்மாவை உருவாக்குகின்றனர். மனித நாகரிகத்தின் முன்னோடிகளாக அவர்கள் ஆகின்றனர். புதிய மனிதநலம், அமைதி ஆகியவற்றுக்கு வழிகாண்பவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

ஒருதேசத்தின் உண்மையான சொத்து அறிவு ஜீவிகளையும் கைத்திறன் உடையோரையும், கைவினைஞர்களையும் படைப்பு நுண்ணாய்வு கொண்ட சிந்தனையையும் பேணி வளர்ப்பதை உள்அடக்கி இருப்பது என்பதை ஜாகிர் சாகிப்பின் புலனுணர்வு மறுபடியும் உணரவைத்தது. மனிதநலம் மற்றும் நற்குணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மெய்க்கோள் அறிவுத்தோட்டமாக இருந்து அறிவை மேம்படுத்துவதற்கும், பரப்புவதற்கும், மலர்விப்பதற்கும் விரிவு செய்யவும், கூர்ந்து ஆராயுவும் தன் வாழ்க்கையை அவர் அர்ப்பணித்தார்.

அவரது நற்குணம், மனிதநலத்தின் இரண்டாவது நோக்கு. தான் செய்தவை சொன்னவை ஒவ்வொன்றிலும் மிகுநலம், அழகு தூய்மைப்பாடு இவற்றை அவர் கண்டார். அழகைக் கண்டெய்த விரும்புவது அவரது ஆன்மப்பசியாகவும் கூட இருந்தது. பண்புநல அழகை அவர் பெரிதும் பாராட்டுவார். அழகை வெறுமனே புலனால் உணரவும், பின்பற்ற வும், உயர்வுகொடுக்கவும் மாட்டார். மாறாக அழகை மறவாமல் பேணவும் உருவாக்கவும் செய்வார். மனிதன் தெய்வீக அழகின் பிரதிபலிப்பு என அவர் கருதினார். கடவுள் நிலைபேறுடைய அழகு என்று அவர் நம்பினார். அழகு எல்லாவிதமான அருவருப்புகளையும் புறந்தள்ளுகிறது. உணர்ந்து மகிழவும், பாராட்டவும், அந்த அழகிலிருந்து கற்றுணரவும் மட்டுமின்றி நாம் செய்யும், சிந்திக்கும் அனைத்திலும் அந்த அழகைப் போன்று நடக்கவும், பின்பற்றிச் செல்லவும் மதிப்பு கொள்ளவும் வேண்டி கடவுளின் அழகு பிரபஞ்சத்தில் சிறப்பாக வெளிப்பட்டு இருக்கிறது.

அவரது நற்குணம், மனிதநலத்தின் மூன்றாவது நோக்கு. அன்பு, பூமியின் மீது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் புனிதமான உளப்பாடாக

இருக்கிறது. அது ஒரு வலிமைமிக்க, ஆழமான, நீடித்திருக்கக்கூடிய மனக்கிளர்ச்சி. விலங்குலகிலும் கூட ஆதாரமாக இருந்து வாழ்வை ஒத்திருக்கச்செய்கிறது. அன்பு அகச்சார்பான கவர்ச்சியாகவும் அழகு முழு நிறைவின் வெளிப்பாடாகவும் இருக்கிறது. மனித குலத்தைப் பிணைக்கும் இடைப்பிணைப்பு அன்பு. அன்பிலிருந்து மனிதகுலம் தோற்றுவிப்பது அழகு. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையே அமைவுற்றுக் காணப் பெறும் ஒத்திசைவே அன்பு. அழகு அன்பின் மீது அணியப்படும் ஆடையாக இருக்கிறது. அன்பு மெய்ம்மையுடன் உள்ள அகஉறவை வெளிப்படுத்திக் காட்டி கடவுளிடம் நேரடியாக வெளிப்படுத்துகிறது. முழுநிறை அழகு எனும் இறைவனை நோக்கிச் செல்லும் இயக்கம் அது. மண்ணுலகக் கவர்ச்சிகளில் இருந்து ஆன்மாவை அது தூய்மைப்படுத்துகிறது. மனிதனை சட்டத்தின் ஆட்சி அரங்கிலிருந்து இரக்கஉணர்வும், அன்புச் செயலினுடைய உயர்ந்த நிலைக்கும் அது கொணர்கிறது. சாதி, சமயம் சமுதாயப்பிரிவுத் தடைகளை அகற்றி ஒருநிலைப்படுத்தும் முற்போக்கு எண்ணத்தை அன்பு விளைவிக்கிறது. மனிதகுலத்தை அவரது சமூக தத்துவத்தின் அடிப்படையான கொள்கையாக அவர் ஆக்கினார். யாரொருவர் சிறக்க அன்பு செலுத்துகின்றனரோ அவரே சிறந்த பிரார்த்தனை செலுத்திகின்றனர், என்ற கோல்ட்ரிஜின் கூற்றினை ஜாகிர் சாகிப் ஏற்றுக்கொள்கிறார்.

அவரது நற்குணம் மற்றும் மனிதாபிமானத்தின் நான்காவது நோக்கு அன்பைப் பெருக்குகிற பொறுப்புணர்வை மேம்படுத்துகிற ஒத்திசைவை வலுப்படுத்துகிற புரிந்துகொள்ளும் ஆற்றலை வளர்க்கிற சேவை மற்றும் தியாகம் பற்றிய கருத்துரு. அன்பு கருத்துருவமாக இருக்கிறது. ஊழியம் செயலாக இருக்கிறது. அழகு வெளிப்பாடாக இருக்கிறது. அன்புக்கு உருவம் கொடுக்கப்படும் போது, அது ஊழியமாகிறது. சேவையில்லாத நற்குணம் உயிரற்றது. அது திண்மையற்ற ஒரு எதிர் நிழலாகவே இருக்கும். மிகுந்த சேவை செய்பவரே மிகுந்த நன்மையடைகிறார். தொண்டு செய்யும் ஒருவரே தனக்கான ஒரு நிறைந்த கருவூலத்தை பெற்றிருப்பதைக் காட்டிலும் மிகுதியான மகிழ்ச்சி பெறுகிறார். சேவை இல்லாத சமூகம் நலிவுற்று இருக்கிறது. தனிமனிதனிடத் தாயினும் அல்லது ஒரு தேசத்திலாயினும் முன்னேற்றத்திற்கான மூலக்கருத்து ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதும் உதவிக் கொள்வதுமே. அவைகளே விடுதலைக்கும் மகிழச்சிக்கும் நிச்சயமான வழிகாட்டிகள். ஜாகிர்சாகிப்பின் முழுவாழ்க்கையும் சேவை தியாகத்தின் ஒரு முழுசகாப்தமாக இருக்கிறது.

நற்குணமும் கண்ணியமும் மிக்க சிந்தனைகள் ஜாகிர்சாகிப்பின் சொத்தாகவும், விவேகமும் அறிவும் அவரது நாட்டத்திற்கு உரியனவாகவும் இருந்தன. அன்பும் அழகும் அவரது வாழ்க்கைக் கொள்கைகளாக

இருந்தன. சேவையும் தியாகமும் அவரது அடிப்படை சமய கோட்பாடு ஆக இருந்தது. அவர் மனித குலத்திற்கு நன்மை செய்வதற்காகத் தனது செயல்வல்லமைகளை கடவுள் அளித்த அடைக்கலப்பொருளாகக் கருதி கைவிடாது வைத்திருந்தார். உயர்குணமுடைமை, இரக்கஉணர்ச்சி இவற்றை கடவுளுக்கு அணுக்கமான பண்புகள் என அவர் நம்பினார். சிந்தனை தூய்மையில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். "மனம் அதற்குரிய இடத்திலும் தன் நிலையிலும் ஒரு பேரின்ப உலகை நரகமாவோ ஒரு நரகத்தை பேரின்ப உலகமாகவோ ஆகும்படி செய்யும்". உலகளாவிய பரிவுணர்வும் அன்பும் அவரது அறநெறி முன்னொருக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தன. ஒவ்வொரு தனி மனிதனும் நிர்வாணம் அடைவதற்கான இன்றியமையாக் கூறுகளைப்பெற்றிருக்கிறான் என்று புத்தர் சொன்னதையும், கடவுளின் ராஜ்யம் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது என்று இயேசுநாதர் கூறியதையும், நமது கழுத்து நரம்புகளை காட்டிலும் மிக அருகில் கடவுள் நம்மிடம் இருக்கிறார் என்று முகமதுநபி குறிப்பிட்டதையும் ஜாகிர்சாகிப் ஏற்றுகொள்கிறார். ஜாகிர்சாகிப்பின் வாழ்க்கைத்திட்டம் எங்கே வெறுப்பு மேலோங்கி நிலவுகிறதோ அங்கே அன்பைப் பயிரிடுவதாகவும், எங்கே நம்பிக்கை இழப்பு மேலோங்கி இருக்கிறதோ அங்கே நம்பிக்கை விதைகளை விதைப்பதாகவும், எங்கே அறியாமை நிலவியதோ அங்கே கல்வி விளக்கை ஏற்றி வைப்பதாகவும், எங்கே இடும்பை நிலவுகிறதோ அங்கே சேவையும் தியாகமும் செய்வதாகவும் இருந்தது.

ஜாமியாவின் நிறுவனராக, அலிகரின் துணைவேந்தராக பீகார்மாநில ஆளுநராக, இந்திய குடியரசுத் தலைவராக நான்கு வேறுபட்டப் பதவிகளில் நான்கு வெவ்வேறு இடங்களில் அவருடைய வாழ்க்கை விரிவு முக்கிய பணிகளைக் கண்டது. அவரது வாழ்வின் மிகுந்த செழிப்பானதும், அறைகூவல் மிக்கதுமான பகுதி ஜாமியாவில் கழிந்தது. அது ஒரு சிறு பகுதியாக தோற்றமளிக்ககூடும். ஆனால் அது தேசத்திற்கு மிகுந்த விலைமதிப்பற்ற ஒரு பரிசாகும். கல்வியில் இந்தியா எப்போதும் கண்டிராத மாபெரும் முதல் பரிசோதனையாக அது இருந்தது. அவரது வியர்வை கண்ணீர் மற்றும் இரத்தத்தைக் கொண்டு அது கட்டி எழுப்பப்பட்டது. தனது சொந்த மதத்தவரின் எதிர்ப்பையும் கூட சமாளித்து உருவாக்கப்பட்டது. இஸ்லாமியக் கல்வியில் தேர்ந்த அறிஞர்கள்குழாம் இஸ்லாமியப் பண்பாட்டின் நேர்த்திமிக்க சாயல்களை மனிதகுலத்துக்கு ஒப்படைத்துச் சென்ற இடமாக, இந்திய மறுமலர்ச்சியின் நேர்த்திமிக்க வழித்தோன்றலாக அது இருந்தது. ஜாமியாவில் அவர் செய்திருப் பவைகளுக்காக ஜாகிர்சாகிப் எப்போதும் நினைக்கப்படுவார். இப்போதும் தூய்மையாகப் போற்றப்படும் அவரது பொருண்மையின் முப்பகுதிகளான

தலை, இதயம், உடல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டும் ஒருபள்ளி, ஒரு மசூதி, ஒரு நூலகம் இவற்றின் சூழமைவில் அவர் துயிலமைதி கொண்டிருக்கிறார். மனிதனுடைய சிந்தனை வளர்ச்சிக்காக அந்தப் பள்ளியை அவர் நிறுவினார். கடவுளின் கருணைத் திறத்தைப் பெற்றுக் கொண்டதை மனப்பூர்வமாகத் தெரிவிப்பதற்காக ஒரு மசூதியை அவர் கட்டினார். அறிவுத்திரளை சேமித்துப் போற்றி வைப்பதற்கு நூலகம் தேவைப்படும். ஜாகிர்சாகிப்பின் சீர்த்திக்கு அணி சேர்த்து நிற்கும் பிற சாதனைகள் எதுவாயிலும் அவை அனைத்தும் அவரது மிகப்பெரும் படைப்பான ஜாமியா என்ற நிறுவனத்தோடு ஒப்பிடும் போது ஒளிமங்கி சிறப்பற்றுப்போகின்றன.

ஜாகிர்சாகிப்பின் வாழ்க்கை டி.எஸ். எலியட்டின் கூற்றுக்கு ஒரு உருமாதிரியாக இருக்கிறது. வினையாற்றுதல் துன்பமானதாகவும் துன்பமே வினையாற்றலாகவும் இருக்கிறது. துன்பமும் வினையாற்றலுமின்றி உயர்வுடைய எதுவும் ஒருபோதும் செய்து முடிக்கப்பட்டதில்லை. எதுவுமின்றி ஜாமியாவைத் தொடங்கியது எளிதான செயலன்று. அலிகரில் ஒன்றுக்கொன்று ஒவ்வாத சூழ்ச்சியான சார்பு நிலையில் ஒழுங்கைக் கொண்டுவருவது எளிதன்று. கடந்த காலநோக்கில் அவருடைய வாழ்க்கையின் முக்கியத்துவம் பற்றி சிந்திக்கும்போது, மனித மனத்திட்பத்தைக் காட்டிலும் மேலான வேறெதுவும் இல்லை, அறிவை முயன்றுபெறுவதைக்காட்டிலும் புனிதமானது எதுவுமில்லை, விவேகத்தைக் காட்டிலும் மதிப்புமிக்கது எதுவுமில்லை, சேவை, அன்பு, இவற்றை விடவும் புனிதமானது வேறொன்றுமில்லை என்று மெய்ப்பிப்பதற்காக தோல்விகளையும் எதிர்த்து நின்ற ஒரு மனிதராக அவர் இருந்தார் என்று நாம் கூறலாம். நமது இளைஞர்களுக்கு படைப்புத் திறமுள்ள ஆளுமை, நுண்ணாய்வுச்சிந்தனை, பண்பட்ட ஆன்மா இவற்றை முயன்றுபெற உதவிடக்கூடிய ஒரேநம்பிக்கையாக கல்வியை அவர் கருதினார். அவர்களுக்கு மட்டுமின்றி சமுதாயம் முழுமைக்கும் உலகம் முழுமைக்கும் பயனுடையதாக இருக்கக்கூடிய, பெருக்க முற்றிருக்கும் கோடிக்கணக்கான நமது மக்களின் அறியாமையை அகற்றுவதற்கு உதவக்கூடிய முழு நலம் வாய்ந்த ஒரு கல்வி முறையை மறுசீரமைப்பதற்கும், புத்தமை வாக்குவதற்கும் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை அவர் அர்ப்பணித்தார். "மனித வரலாறு கல்விக்கும் பெருங்கேட்டிற்கும் இடைப்பட்ட ஒரு ஓட்ட பந்தயமாகவே மேலும்மேலும் ஆகிறது" என்ற கூறிய ஹெச்.ஜி. வெல்ஸ் உடன் ஜாகிர்சாகிப் உடன்படுவார்.

ஜாகிர்சாகிப் உண்மையாகவே ஒரு மாபெரும் மனிதர். அவர் தன்னுள் தத்துவஞானிகளின் விவேகத்தை, அறிவர்களின் அருள்இரக்கத்தை, அறிவியலாளரின் பகுத்தறிவை உள்வாங்கிக் கொண்டவர். அடிப்படையில் அவர் ஒரு ஆசிரியராக இருந்தார். உண்மையில் யாருமே ஒரு ஆசிரியர்

என்ற படிநிலைக்கும் மேலாக இருந்ததில்லை. ஒரு ஆசிரியராக அவர் மனிதகுலம் அனைத்தையும் ஒரேஉடன்பிறப்பாளர் நிலையாக கருதக்கூடிய மதிப்பீட்டு முறைமைகளை தனக்கு தானே கற்பித்துக்கொண்டார். பிரபஞ்சம் முழுவதிலும் அழகைக் கண்ட ஒரு கலைஞராக அவர் இருந்தார். அந்த அழகை, தானே அந்த அழகின் ஒரு அங்கமாக ஆகும் அளவுக்கு தீவிரமாக ஆழ்ந்து ஆராய்ந்தார். தகைநேர்ந்தி, கடமைஉணர்வு, உண்மை, நன்மதிப்பு, நீதியும் துணிவும் ஆகிய கருதுகோள்கள் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்த, தனது ஆன்மாவை விழப்பு நிலைக்கு உயர்த்தும் வகையில் பேருணர்வுக்கு ஆட்பட்டு தனது வாழ்க்கையில் ஈர்த்துக்கொண்ட ஒரு தத்துவஞானியாக அவர் இருந்தார். தனது சிந்தனைகள் அனைத்தையும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி அதன்வழியே வெளிவருவதை மட்டுமே ஏற்றுக்கொண்ட பகுத்தறிவுப் பார்வை உடைய அறிவியலாளராக அவர் இருந்தார். ஒவ்வொரு தனி மனிதரையும் தனது குடும்பத்தின் ஒரு உறுப்பினராகக்கருதிய மனிதகுலத்தின் மீதான உணர்ச்சிமயமான அன்புடன் கூடிய ஒரு மனிதாபிமானியாக அவர் இருந்தார். மகிழ்ச்சியான உலகம் பற்றிய அவரது நம்பிக்கை, தனது குழந்தை எல்லா சவால்களையும் அடுத்தூர்ந்து வாழ்வில் ஒருநாள் ஒரு மகத்தான மனிதனாக வெளிப்படுவான் என்ற ஒருதாயின் கனவிற்கு மிக நெருக்கமாக வரக்கூடிய அளவுக்கு இருந்தது. அனைத்திலும் நன்மையையே காணும் இயல்பினராக அவர் இருந்தார். சுருங்கக்கூறின், ஒருமுழுநிறை மனிதனைப் பற்றிய அன்சான் இ–காமில், அரிஸ்டாட்டிலியன் கருதுகோளின் எல்லைகளை அவர் தொட்டார் எனலாம்.

வாழ்க்கையில் பலபேர் அவர்கள் வகித்த பதவிகளால் பெருமைப்படுத்தப் படுகிறார்கள். ஆனால் ஜாகிர்சாகிப் தான் வகித்த பதவிகளுக்கு தனக்கே உரித்தான ஒரு மிகுபுகழைத் தருவித்து வழங்கினார். அவர் காலத்திய முதன்மையான மனிதர்களில் ஒருவராக தனக்குக்கைத்தூண்டுதல் அளித்த உயர்ந்த லட்சியங்களைக் கடைபிடித்து வாழ்ந்த ஒருவராக எப்போதும் அவர் நினைக்கப்படுவார். 1963 மே 3 ஆம் நாள் அவரது திடீர் மரணத்தின்போது திருமதி. இந்திராகாந்தி உணர்ச்சிபொங்கப் புகழுரை வழங்கினார். அவர் கூறினார், "சுதந்திரப் போரில் ஈடுபட்டதால் மட்டுமின்றி, அப்போருக்கு எழுச்சியூட்டிய வாழ்க்கைக்குறிக்கோளின் உயர்ந்த மனப்பாங்கினால் மேன்மையை நோக்கி வளர்ந்த ஒருதலைமுறையில் இறுதியாக வந்தவர் டாக்டர் ஜாகிர்உசேன்." மேலும் அவர் கூறினார், "இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஜாகிர் உசைனை குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் இந்திய மக்கள் தங்களைத்தாங்களே கௌரவித்துக் கொண்டுள்ளனர். அவரது குறுகிய பதவிக்காலத்தில் அவர் தனது பதவிக்குப் பொலிவைச் சேர்த்தார்.

வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்களத்திலும் இந்த தேசத்தின் ஒருமைப்பாட்டிற்காக எந்த மனிதரைக் காட்டிலும் அவர் உழைத்தார். இந்தியாவின் பலவின் ஆக்கம் சேர்ந்த பண்பாட்டுச் செழிப்பினைத் தன்னில் ஒருங்கிணைத்துக் கொண்டு, தனது சொல்லாலும் செயல்களாலும் நமது பொது வாழ்க்கையின் தரத்தை அவர் உயர்த்தினார். அவர் பேணிக்காத்த மதிப்பீடுகளும், ஒரு கல்வியாளராகவும் சமூகப்பணியாளராகவும் அவர் ஆற்றிய ஆக்கப்பூர்வமான பணியும், தேசிய அளவிலும் சர்வதேச செயற்களங்களிலும் அவர் வகித்த ஒவ்வொரு பதவிக்கும் அவர் கொணர்ந்து சேர்ந்த தனிச்சிறப்பும் வருங்காலத்தலை முறைகளுக்கு வழிகாட்டும்."[5]

நாடாளுமன்றத்தில் பண்டிட் ஆனந்த் நாராயன் முல்லாவால் பாடப்பட்ட "இறவாதநறுமணம்" கவிதை ஜாகிர்சாகிப்பிற்கு பொருத்தமான பாராட்டுரையாக இருக்கிறது. அக்கவிதை வரிகளில் சில:

ஒரேஒரு விளக்குதான் சாவின் கரங்களால் அணைக்கப்பட்டது
தேசத்தின் ஊழ்விதியே எத்துணை இருளில் மூழ்கிப் போனது!
ஒருசிறுபொழுது மணம்பரப்ப ஒரு மொட்டுவந்தது
முட்களின் திரட்சியை இருந்தபடியே விட்டுவிட்டு அது சென்றுவிட்டது.
மலர்களோடு நறுமணமும் சேர்த்து புதைக்கப்பட வேண்டாம்
மக்கள் மன்றத்தின் பேறு இந்த நறுமணம் மட்டுமே என்பதால்....

ஓ சாகி.

மேற்கோள்கள்

இயல் இரண்டு

1. எம்.முஜிப், டாக்டர் ஜாகிர் உசைன், ஒரு வாழ்க்கை வரலாறு புது தில்லி. 1972, ப. 69
2. அதே நூல், ப. 72
3. அதே நூல், பக். 11-13
4. ஜியாவுல் உறாசன் பரூக்கி, ஷாகித்-இ-ஜஸ்டுஜீ
5. ஜாகிர் உசைன், தாலிமி குத்பத், புதுதில்லி, 1988 (ஒன்பதாம் பதிப்பு)
6. ஜாகிர் உசைன், ஊக்கமிகு பல்கலைக்கழகம், பம்பாய், 1965 ப. 5
7. அதே நூல், ப. 35
8. அதே நூல், ப. 45
9. குடியரசுத்தலைவர் ஜாகிர் உசைன் உரைகள் 'வெளியீட்டுப் பிரிவு' புதுதில்லி, ப. 15
10. அதே நூல், ப. 34
11. இசட்.எச்.பரூக்கி, ஜாகிர் சாகிப், அப்ரீன அய்னா. இ-லாப்ஸ்-ஓ-மினிமி பக். 92-93
12. அதே நூல் ப. 102

இயல் மூன்று

1. கே.ஆர்.பி.சிங், இந்திய மக்களுக்குப் பயிற்றுவித்தல், ஜாகிர் உசைனின் கல்வி சிந்தனைகள் பற்றிய ஓர் ஆய்வு, 1987, ப. 29
2. ஜான்ரஸ்கின் அண்டு திஸ் லாஸ்ட் மற்றும் பிற கட்டுரைகள், இலண்டன் ப. 132
3. டி.ஆர்.பான், நவீன இந்தியச் சிந்தனை, புதுதில்லி, 1989, ப.176-ல் உள்ள மேற்கோள்.
4. எம்.முஜீப் பக் 137-138

இயல் நான்கு

1. ஆர்.சி.மஜூம்தார், விடுதலை இயக்க வரலாறு, தொகுதி 1, பக். 563-65.
2. ஜாகிர் உசைன், தலிமி குத்பத், பக் 199-200
3. சாயிதா குர்ஷித் ஆலம், ஜாகிர்சாகிப் கி கஹானி, தில்லி 1975 ப.94

இயல் ஐந்து

1. ஜாகிர் உசைன், குடியரசுத் தலைவரது உரைகள் ப.2.
2. டி.ஆர்.பால், நவீன இந்தியச் சிந்தனை, ப.14-ல் உள்ள மேற்கோள்
3. அதே நூல், ப.83
4. பி.என்.பாண்டே, அனைத்து மதங்களின் அடிப்படை ஓர்மை-சிறப்பாக இந்து முஸ்லீம் மதங்களைக் குறித்தது, ஒரிசா, 1988
5. இசட்.எச்.பரூக்கி, ஷாஹித் - இ - ஜஸ்ருஜீன் ப. 215
6. ஜாகிர் உசைன், தாலிமி, குத்பத் ப.24
7. அதே நூல், ப.25

இயல் ஆறு

1. எம். முஜீப். டாக்டர். ஜாகிர் உசைன், ப.66
2. இசட்.எட்.பரூக்கி, ஷாகித்-இ-ஜஸ்டூஜூ, பக்.589-90
3. அதே நூல், ப.590
4. ஜாகிர் உசைன் இந்தியக் குடியாட்சியின் குறியீடு, வெளியீட்டுப் பிரிவு, புதுதில்லி, 1969 ப.29
5. அதே நூல், ப.9

மாற்றவியலாத அமைவின் பெருஞ்செயற்பண்பாளரும், ஒரு கல்வியாளருமான, டாக்டர் ஜாகிர் உசைனின் வெளிப்படையான பண்போவியக்குறிப்பு, உருது மொழியில் இந்திய இலக்கிய செயற்களத்திற்கு அவரது முனைப்பான பங்களிப்பின் விஞ்சு புகழை அடிக்கடி வெளிப்படுத்தும் வண்ணம் மேன்மை வாய்ந்ததாக விளங்குகிறது. இந்திய இலக்கிய வரலாறு எதுவும் எவ்வகையிலும் புறக்கணித்துவிட வாய்ப்பற்ற ஒன்றாக இந்தப் பங்களிப்பு இருக்கிறது. ஒரு தத்துவவியலாளர், கல்வியாளர், பொருளியலாளர், சமூகவியலாளர், பொதுநல மேதகையாக அவருடைய புலமை அறிவுத்துறைகள் பலவற்றிலும் பல்கிப்பரவியிருக்கிறது.

மனிதனுடைய கலை, கட்டடப்பாங்கு, மொழி, இலக்கியம், மதம், தத்துவம், ஒழுக்க நியதிகள், ஒழுகலாறுகள், கடவுள்பற்று, நம்பிக்கை, ஒரு சமூகப் பொருண்மையாக அவன் முயன்று பெற்றிருக்கும் பிறதிறன்கள் இவற்றின் ஒட்டு மொத்தக் கூடுதலே பண்பாடு என இவர் வரையறை செய்கிறார். பண்பாட்டு மதிப்பீடுகளைப் பாதுகாக்கவும், நுணுகிக்காணவும் பரப்பவுமான ஜாகிர் உசைனின் முயற்சிகள் இலக்கிய உடலம் ஒன்றைக் கண்டன. படைப்புத்திறனுள்ள மரபுரீதியான எழுத்து வடிவங்களில் இருந்து மாறுபட்டிருந்தபோதிலும் இலக்கியச் சால்பிற்கு இது ஒரு முன் மாதிரியாக விளங்கிற்று.

ஒரு சுயசிந்தனையாளராக, புதிய மனித நலத்தின், பரந்த கொள்கைகளின் தூதுவராக ''இன்னமும் பிறவாத ஒரு தோட்டத்துக்குயிலாக" ஜாகிர் உசைன் பெரிதும் பரவலாகக் கருதப்படுகிறார்.

நூலாசிரியரான டாக்டர் குர்ஷித் ஆலம் கான் (பி.1919) ஓர் எழுத்தாளர். கர்நாடக மாநிலத்தின் ஆளுநராகவும் பணியாற்றியுள்ளார்.

உடனாசிரியரான பி.ஷேக் அலி பெரிதும் அறியப்பட்ட ஒரு வரலாற்றாசிரியர். கோவா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்.

Dr. ZAKIR HUSAIN (Tamil) Rs. 25

ISBN - 81-260-0579-3